# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - செப்டம்பர் 2022

www.tnpscthervupettagam.com


















SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy in India
SINCE 2004

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

**TNPSC துளிகள்** ........ 10
**தமிழ்நாடு செய்திகள்** ........ 17
புதுமைப் பெண் திட்டம் ........ 17
தகைசால் பள்ளிகள் திட்டம் ........ 17
பெரிய உயிரியல் பூங்காக்களில் சிறந்த□□ பூங்கா ........ 17
தமிழ்நாட்டின் புதிய பறவைகள் சரணாலயம் ........ 18
நரிக் குறவர்களுக்கு பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் அந்தஸ்து ........ 18
இலவச காலை உணவுத் திட்டம் ........ 19
ஜோயமாலா வழக்கு ........ 19
இந்தியாவின் முதல் கடல் பசு காப்பகம் ........ 20
4000 ஆண்டுகளுக்கு முன்பு பயன்படுத்தப்பட்டப் பழமையான தங்கம் ........ 20
இணையவழி சூதாட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கான அவசரச் சட்டம் ........ 21
TamiraSES திட்டம் ........ 21
**தேசியச் செய்திகள்** ........ 22
ஐஎன்எஸ் விக்ராந்த் ........ 22
புதிய கடற்படைக் கொடி ........ 23
SAREX-2022 ........ 23
Clear Skies for Tomorrow ........ 24
வஜ்ர பிரஹார் 2022 ........ 24
ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் 2022 ........ 24
இந்தியாவின் முதல் மெய்நிகர்ப் பள்ளி ........ 25
இந்திய இராணுவம் – QKD ........ 25
திணை மாநாடு 2022 ........ 26
‘இந்தியாவில் குற்றங்கள்’ அறிக்கை - தேசிய குற்ற ஆவணக் காப்பகம் ........ 26
ஒரு மூலிகை, ஒரு தரம் ........ 28
உலகின் மிகப்பெரிய கார்பன் இழை உற்பத்தி ஆலை ........ 28
கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கு எதிராக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்தியாவின் முதல் தடுப்பூசி – செராவாக் ........ 28
5வது ராஷ்ட்ரிய போஷான் மாஹ் (தேசிய ஊட்டச்சத்து மாதம்) ........ 29
அர்த் கங்கா ........ 30
பாம்புக்கடி குறித்த இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபையின் ஆய்வு அறிக்கை ........ 31
மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்தின் அறிக்கை ........ 31
25 வருட இந்திய-நாகா அமைதிப் பேச்சுவார்த்தை ........ 31
இந்தியாவில் மாருதி நிறுவனம் ........ 32
பெண்களுக்கு எதிரான இணையவெளி குற்றங்கள் ........ 32
இணையவெளி பாதுகாப்புப் பயிற்சி "சினெர்ஜி" ........ 33

குறை தீர்ப்புக் குறியீடு ........ 33
தெற்கு மண்டல சபைக் கூட்டம் ........ 34
தேசிய சட்ட சேவைகள் ஆணையம் ........ 34
ஐஎன்எஸ் விக்ராந்த் தொடக்க விழா ........ 34
கிராமப் பாதுகாப்புக் காவலர்கள் திட்டம் 2022 ........ 35
ஹைதராபாத் விடுதலை நாள் ........ 36
60 நாள் சிறப்பு மகப்பேறு விடுப்பு ........ 36
மொத்த மருந்து உற்பத்தி தொழில்துறைப் பூங்காக்களை மேம்படுத்துதல் ........ 37
கர்தவ்ய பாதை ........ 38
உலகின் 3வது பெரிய பொருளாதாரம் ........ 38
PM SHRI யோஜனா ........ 39
பட்டியலிடப்பட்ட சாதியினர் பட்டியல் ........ 39
2021 ஆம் ஆண்டில் முதியோர் கொலை நிலவரம் ........ 40
போஷன் அபியான் திட்டம் குறித்த 4வது முன்னேற்ற அறிக்கை ........ 41
சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ........ 41
2021 ஆம் ஆண்டில் தடுப்புக் காவல் நிலவரம் ........ 41
சமாஜிக் அதிகாரி ஷிவிர் ........ 42
WEST முன்னெடுப்பு ........ 42
பணைய தீநிரல் எனப்படும் மென்நிரலுக்கு எதிரான பயிற்சி ........ 43
7வது பெங்களூரு விண்வெளி சார்ந்த கண்காட்சி 2022 ........ 43
TB முக்த் பாரத் அபியான் ........ 43
மிரட்டிப் பணம் பறித்தல் தொடர்பான வழக்குகள் ........ 44
மனித மேம்பாட்டுக் குறியீடு 2021 ........ 44
உறுப்பு தானம் செய்வதற்கான முன்மாதிரி ஆளில்லா விமானம் ........ 46
மாந்தன் கண்காட்சி ........ 46
டிஜிட்டல் இந்தியா திட்டம் ........ 47
மாணவர் ஆசிரியர் விகிதம் ........ 47
தேசிய மின்சாரச் சரக்குத் தளம் ........ 48
இந்தியாவில் நிலையான கடற்கரை மேலாண்மைக்கான தேசிய மாநாடு ........ 48
மத்திய-மாநில அறிவியல் மாநாடு ........ 49
3 வர்த்தக அளவுருக்கள் ........ 49
பர்வத் பிரஹார் ........ 50
பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கான 10 சதவிகித இட ஒதுக்கீட்டின் செல்லுபடித் தன்மை ........ 50
இணையவெளிக் குற்ற விசாரணை மற்றும் புலனாய்வு உச்சி மாநாடு 2022 ........ 51
தேசிய அத்தியாவசிய மருந்துகளின் பட்டியல் 2022 ........ 51
தேசிய கடல்சார் பாரம்பரிய வளாகம் ........ 52
வந்தே பாரத் இரயிலின் புதிய வடிவம் ........ 52
தனிநபர் சுகாதார நலன் மீதான அரசின் செலவினம் ........ 53

இந்தியாவில் சிறைச்சாலைப் புள்ளி விவரங்கள் அறிக்கை - 2021 ........ 54
பசுமை முறையிலான கப்பல் மறுசுழற்சி & வாகன அழிப்புப் பற்றிய சர்வதேச மாநாடு ........ 55
இந்தியாவில் சிவிங்கிப் புலிகள் ........ 55
ரக்தன் அம்ரித் மஹோத்சவ் ........ 56
இந்தியாவின் முதல் வனப் பல்கலைக்கழகம் ........ 57
ஸ்வச் சாகர் சுரக்சித் சாகர் பிரச்சாரம் ........ 58
'திறன்மிகு முகவரிகளுடன்' கூடிய நகரம் ........ 58
ஹரப்பா கலாச்சாரத்தினை வெளிக் கொணரச் செய்யும் உலகின் மிகப்பெரிய அருங்காட்சியகம் ........ 58
பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் பட்டியலில் நான்கு பழங்குடியினர் சேர்க்கை ........ 59
இந்தியாவின் முதல் நெகிழித் திட்டம் ........ 60
இந்தியாவின் முதல் லித்தியம் செல் உற்பத்தி ஆலை ........ 60
உலகச் சுற்றுச்சூழல் மைய சிறு மானியத் திட்டம் ........ 60
உலகத் தண்ணீர் வள மாநாடு மற்றும் கண்காட்சி 2022 ........ 61
இந்தியப் பாகுபாடு அறிக்கை 2022 ........ 61
உணவு மற்றும் வேளாண்மைக்கான தாவர மரபணு வளங்களுக்கான சர்வதேச ஒப்பந்தத்தின் ஆளுகை அமைப்பு ........ 62
இந்தியாவின் மதிப்புமிக்கத் தயாரிப்பு நிறுவனம் ........ 63
இந்தியாவின் முதல் ஸ்வச் சுஜல் பிரதேசம் ........ 64
உயிரியல் பூங்கா மேலாண்மை செயல்திறன் மதிப்பீட்டு அறிக்கை 2022 ........ 64
கிருதக்யா 3.0 ........ 66
ஐஎன்எஸ் அஜய் கப்பல் படையிலிருந்து ஓய்வு ........ 66
பெண்களால் இயக்கப்படும் முதலாவது ஒட்டக படைப்பிரிவு ........ 66
இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய பட்டியலிடப்பட்ட சாதியினர் நிலை ........ 67
தேசியத் தொழில்நுட்ப ஜவுளித்துறை திட்டம் ........ 68
மாவட்ட மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு மையங்கள் ........ 69
சியாச்சினில் செயற்கைக்கோள் அடிப்படையிலான இணைய சேவை ........ 69
சமர்த் ரோந்துக் கப்பல் ........ 70
முக்கிய காரீஃப் பருவப் பயிர்களின் உற்பத்தி குறித்த முதலாவது முன்கூட்டிய மதிப்பீடுகள் ........ 70
மருத்துவச் சாதனங்களுக்கான ஏற்றுமதி மேம்பாட்டுச் சபை ........ 71
5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் ........ 72
இந்தியாவின் முதல் முழு கை மாற்று அறுவைச் சிகிச்சை ........ 73
லோக் மாந்தன் திட்டம் ........ 73
நிஸ்டார் & நிபுண் கப்பல்கள் ........ 73
தேசியச் சுற்றுச்சூழல் அமைச்சர்கள் மாநாடு ........ 73
மாதிரிப் பதிவு முறை (SRS) புள்ளியியல் அறிக்கை 2020 ........ 74
பாதுகாப்புப் படைகளின் புதியத் தலைவர் ........ 75
SRESTHA-குஜராத் திட்டம் ........ 76
**சர்வதேசச் செய்திகள் ........ 76**
பாராளுமன்றச் சங்க மாநாடு ........ 76

10வது பெரிய ஆயுள் காப்பீட்டு நிறுவனம் ........ 76
குஷியாரா நதி ........ 77
வோஸ்டாக் இராணுவப் பயிற்சி 2022 ........ 77
சீனாவின் சின்ஜியாங் பிராந்தியம் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்தின் அறிக்கை ........ 77
ஐக்கிய நாடுகள் சபையின் ஆழ்கடல் ஒப்பந்தம் ........ 78
சுகாதார நல வசதிகளில் WASH சேவையின் முன்னேற்றம் 2000-2021 ........ 79
ரமோன் மகசேசே விருது 2022 ........ 80
இந்தியாவில் கோவிட்-19 பெருந்தொற்று கால கொள்முதல்: சவால்கள், புத்தாக்கங்கள் மற்றும் அதன் மூலம் கற்ற பாடங்கள் ........ 81
உலக சமூகப் பாதுகாப்பு அறிக்கை 2020-22 ........ 82
ஐக்கிய இராஜ்ஜியத்தின் புதிய பிரதமர் ........ 82
உலகப் பொருளாதார மற்றும் காப்பீட்டுக் கண்ணோட்ட அறிக்கை ........ 83
யுனெஸ்கோ அமைப்பின் உலகளாவியக் கற்றல் நகரங்களின் வலையமைப்பு 2022 ........ 83
மைத்ரீ திறன்மிகு அனல் மின் நிலையத் திட்டம் ........ 84
7வது கிழக்குப் பொருளாதார மன்றம் ........ 84
சர்வதேச சுற்றுலா விருது 2023 ........ 84
உலகப் பால்வள உச்சி மாநாடு 2022 ........ 85
இராணி இரண்டாம் எலிசபெத் ........ 85
இந்தியா-வங்காளதேசம் விரிவான பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தம் ........ 86
கோக்ரா-வெந்நீர் ஊற்றுப் பகுதி ........ 86
IRENA அறிக்கை ........ 87
இலண்டன் பிரிட்ஜ் நடவடிக்கை ........ 88
ஐக்கியப் பேரரசின் அரியணை ........ 88
பயிர் மற்றும் உணவுப் பாதுகாப்பு மதிப்பீட்டுத் திட்ட அறிக்கை ........ 89
"நவீன கால அடிமைத்தனத்தின் உலகளாவிய மதிப்பீடுகள்" அறிக்கை ........ 90
JIMEX 2022 ........ 91
ககாடு பயிற்சி – 2022 ........ 91
22வது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு நாடுகளின் அரசத் தலைவர்களின் உச்சி மாநாடு ........ 92
கிரீன் ஃபின்ஸ் மையம் ........ 93
இந்திய பசிபிக் முத்தரப்பு மேம்பாட்டு கூட்டுறவு நிதி ........ 93
மேம்படுத்தப் பட்ட வேதி செல் ஆற்றல் சேமிப்புக்கான தேசியத் திட்டம் ........ 93
உலக ஆற்றல் வேலைவாய்ப்பு அறிக்கை ........ 94
முதலாவது முத்தரப்பு அமைச்சர்கள் சந்திப்பு ........ 95
ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 77வது அமர்வு ........ 96
கிழக்காசிய உச்சி மாநாடு ........ 96
இந்திய-பசிபிக் இராணுவ மேலாண்மை கருத்தரங்கம் ........ 96
உலக தூய்மை ஆற்றல் நடவடிக்கை மன்றம் ........ 96
வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு சாராத முக்கிய நட்பு நாடு அந்தஸ்து ........ 97

லச்சின் வழித் தடத்தில் மோதல் ........ 97
கிகாலி திருத்தம் ........ 98
மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண கூட்டாண்மை வழிகாட்டுதல்கள் ........ 99
பொருளாதாரச் செய்திகள் ........ 100
இந்திய அந்நியச் செலாவணி இருப்பு ........ 100
பணவீக்க அட்டவணை ........ 100
இந்தியாவின் முதல் காலாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி - 2022/2023 ........ 101
ஆகஸ்ட் மாதத்தில் சரக்கு மற்றும் சேவை வரி வசூல் ........ 102
மதிப்புமிக்க முதல் 10 இந்திய நிறுவனங்கள் ........ 103
15வது வருடாந்திரத் தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு ........ 103
இந்தியாவில் அட்டைச் சந்தை ........ 104
இந்தியாவின் விமானப் போக்குவரத்து ........ 105
உலகின் 5வது பெரிய பொருளாதாரம் ........ 105
அகில இந்திய வீட்டு விலைக் குறியீடு ........ 105
இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் - மார்ச் 2022 ........ 106
நொய்யல் அரிசி ஏற்றுமதிக்கு இந்தியாவில் தடை ........ 107
கிரித் பரிக் குழு ........ 107
வங்கி இல்லாத பகுதிகளில் 300 வங்கிக் கிளைகள் ........ 107
வாகனங்களில் வங்கிச் சேவை ........ 108
நிலக்கரி உற்பத்தி இலக்கு ........ 108
இந்தியாவின் முதல் மின்னணு வங்கி உறுதிப் பத்திரத் திட்டம் ........ 108
2022 ஆம் ஆண்டில் அதிகபட்ச தொழில்துறை முதலீடு ........ 108
தேசிய தளவாடக் கொள்கை 2022 ........ 109
நிகர நேரடி வரி வசூல் ........ 110
இந்தியாவிற்கு அதிகளவில் கச்சா எண்ணெய் விநியோகிக்கும் இரண்டாவது நாடு ........ 110
12வது மஹாரத்னா நிறுவனம் ........ 111
தாவர வகையினைச் சார்ந்த முதல் இறைச்சி வகை ........ 111
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ........ 112
தேஜாஸ் 2.0 ........ 112
HIP 65426 ........ 112
இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட முதல் வெடிமருந்து ........ 113
இரவு வான் சரணாலயம் ........ 114
வளிமம் நிரப்பப்பட்ட காற்றியக்க வேக ஒடுக்கி ........ 114
ஸ்மார்ட் பாக்ஸர் ........ 115
ஊசியின்றி நாசி வழி உட்செலுத்தக் கூடிய இந்தியாவின் முதலாவது கோவிட்-19 தடுப்பூசி ........ 115
கிமிங்சிங்-50 ........ 116
ஐன்ஸ்டீன் வளையம் ........ 116
இந்நூயி சூரியத் தொலைநோக்கி ........ 117
நாசாவின் MOXIE பரிசோதனை ........ 118

டரான்டுலா விண்மீன் முகிற்படலம் ....... 118
திட்டம் 17A - தாராகிரி ....... 119
முதல் வணிக செயற்கைக் கோள் அகலப் பட்டை அலைக்கற்றைச் சேவை ....... 119
இந்தியாவில் சோவா வைரஸ் தாக்குதல் ....... 120
வைரஸ் கண்டறியும் முகக்கவசம் ....... 120
நிலவில் புதிய வகை கனிமங்கள் ....... 121
ஐக்கிய அரபு அமீரகத்தின் முதலாலது சந்திர உலாவி ....... 122
சுற்றுச்சூழல் செய்திகள் ....... 123
காடியானா த்விவர்ணா ....... 123
அக்ரோகாந்தோசரஸ் ....... 123
பருவநிலை தொடர்பான உறுதிமொழிகள் குறித்த ஆய்வு ....... 124
இந்தியாவின் முதல் உயிரிக் கிராமங்கள் ....... 124
இந்திய நாட்டினை நிகர சுழிய உமிழ்வு நிலைக்குக் கொண்டு செல்தல் ....... 125
சீனாவில் வெப்பம் மிகுந்த ஆகஸ்ட் மாதம் ....... 125
உலகத் தொழில்துறை கார்பன் நீக்கக் கூட்டணி - GAID ....... 126
சிவிங்கிப் புலிகள் மறு அறிமுகம் ....... 126
காங்கோ வடிநிலக் காடுகள் – காடுகளின் நிலை குறித்த அறிக்கை 2021 ....... 127
தென்மேற்கு பருவக்காற்று மீதான அறிக்கை ....... 128
எல்லைக்கு அப்பாற்பட்ட செந்நிறப் பாண்டா பாதுகாப்பு ....... 129
ஜெர்மனியில் Fridays for Future பிரச்சாரம் ....... 130
மாநிலச் செய்திகள் ....... 131
உலகின் மிகப்பெரிய மத நினைவுச்சின்னம் ....... 131
ஆலப்புழா - முழுவதும் டிஜிட்டல்மயமாக்கப்பட்ட வங்கி முறையைக் கையாளும் 5வது மாவட்டம் ....... 131
68வது நேரு டிராபி படகுப் போட்டி ....... 132
மலைப்பகுதி சைக்கிள் பந்தயத்திற்கான முதலாவது உலகக் கோப்பை போட்டி ....... 132
கிராமப்புற பண்ணைமுறை பன்றி வளர்ப்பு திட்டம் ....... 132
ஒவ்வொரு வீட்டிலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ....... 132
100 நாட்கள் நகர்ப்புற வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் ....... 133
இந்தியாவின் மிக நீளமான இரப்பர் அணை ....... 133
நாக மிர்ச்சா திருவிழா ....... 133
முதலாவது சினிமா சுற்றுலாக் கொள்கை 2022-2027 ....... 134
மத சுதந்திர உரிமை மசோதா ....... 134
உணவுப் பாதுகாப்பு தொடர்பான வரைபடம் ....... 134
அம்ரித் சரோவர் திட்டம் ....... 135
சர்தார் சரோவர் அணை ....... 136
பட்டியலிடப்பட்ட சாதியினர் & பழங்குடியினர் மற்றும் இதரப் பிரிவினருக்கான இட ஒதுக்கீடு ....... 136
தௌலதாபாத் கோட்டையின் பெயர் மாற்றம் ....... 137
மகளிர் மட்டும் பேசும் தினம் ....... 137
பனிச்சரிவு கண்காணிப்பு ரேடார் கருவி ....... 138

உலக சுற்றுலா தின விருது ........ 138
**பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ........ 138**
அபிஜித் சென் ........ 138
மைக்கேல் கோர்பச்சேவ் ........ 139
திவா பிரபஞ்ச அழகி போட்டி 2022 ........ 139
ஜேம்ஸ் ஆண்டர்சன் ........ 140
திறன் மிக்க தீர்வுகள் சவால் & உள்ளார்ந்த நகரங்கள் விருது 2022 ........ 140
சைரஸ் மிஸ்திரி (54) ........ 140
31வது வியாஸ் சம்மான் ........ 141
சிறந்த சேவைக்கான பதக்கம் ........ 141
கமல் நாராயண் சிங் ........ 142
பணமோசடி தடுப்புச் சட்டத்தின் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைவர் ........ 142
அன்வி விஜய் ஜான்ஸாருகியா ........ 142
இந்தியத் தலைமை வழக்கறிஞர் ........ 143
'Water Heroes: Share Your Stories' போட்டி ........ 143
மலேசிய அமைச்சரவையின் அமைச்சர் சாமிவேலு ........ 143
உலகின் இரண்டாவது பணக்காரர் ........ 144
INSPIRE விருதுகள் ........ 144
மரபணு படியெடுத்தல் மூலம் பிறந்த உலகின் முதல் ஆர்க்டிக் ஓநாய் ........ 144
சோவியத் விண்வெளி வீரர் வலேரி பாலியகோவ் ........ 145
ஸ்மிதா பாட்டீல் நினைவு விருது ........ 146
சிறந்த பிரெஞ்சு குடிமகன் கௌரவ விருது ........ 146
ஆண்டின் 13வது சமூக தொழில்முனைவோர் விருது ........ 147
ஆசியாவில் உள்ள சிறந்தப் பணியிடங்கள் 2022 ........ 147
'ராஜ்பாஷா கீர்த்தி புரஸ்கார்' ........ 147
வடக்குக் கால்வாயைக் கடந்த முதுமையான இந்தியர் ........ 148
இலக்குக் காவலர்களுக்கான உலகளாவிய இலக்கு விருதுகள் ........ 148
முதலாவது இரண்டாம் எலிசபெத் இராணி விருது ........ 148
பிரேக்த்ரூ பரிசுகள் 2023 ........ 148
ஹெர்மன் கெஸ்டன் விருது 2022 ........ 149
**விளையாட்டுச் செய்திகள் ........ 150**
நீரஜ் சோப்ரா ........ 150
ஒளிப்படக் காட்சிப் பதிவு உதவி நடுவர் தொழில்நுட்பம் ........ 150
அகில இந்தியக் கால்பந்துக் கூட்டமைப்பு ........ 151
அபேக்சா பெர்னாண்டஸ் ........ 151
செரீனா வில்லியம்ஸ் ........ 151
36வது தேசிய விளையாட்டுப் போட்டிகள் ........ 152
துபாய் ஓபன் சதுரங்கப் போட்டி ........ 153
லிந்தோய் சனம்பம் ........ 153

UEFA விருதுகள் ........ 153
டயமண்ட் லீக் போட்டி ........ 154
நிகழ்ச்சி நிதியளிப்பு உரிமைகள் ........ 154
அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி 2022 ........ 154
3 ரஞ்சிக் கோப்பைப் போட்டிகள் ........ 155
உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி 2022 ........ 155
ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) ஓய்வு ........ 156
முக்கிய தினங்கள் ........ 157
உலக தேங்காய் தினம் – செப்டம்பர் 02 ........ 157
தேசிய ஊட்டச்சத்து வாரம் 2022 ........ 157
சர்வதேச கழுகு விழிப்புணர்வு தினம் - செப்டம்பர் 03 ........ 157
சர்வதேச அறக்கட்டளை தினம் - செப்டம்பர் 05 ........ 158
ஆசிரியர் தினம் – செப்டம்பர் 05 ........ 158
நீல வானத்துக்கான தூயக் காற்றிற்கான சர்வதேச தினம் – செப்டம்பர் 07 ........ 158
சர்வதேச எழுத்தறிவு தினம் – செப்டம்பர் 08 ........ 159
உலக முடநீக்க மருத்துவ தினம் – செப்டம்பர் 08 ........ 159
உலக மின்சார வாகன (EV) தினம் – செப்டம்பர் 09 ........ 159
மோதல் நிலைகளிலிருந்து கல்வியைப் பாதுகாப்பதற்கான சர்வதேச தினம் - செப்டம்பர் 09 ........ 160
இமயமலை தினம் – செப்டம்பர் 09 ........ 160
உலக தற்கொலை□□ தடுப்பு தினம் - செப்டம்பர் 10 ........ 160
உலக முதலுதவி தினம் - செப்டம்பர் 10 ........ 161
சர்வதேச சினைப்பை நீர்க்கட்டிகள் நோய் விழிப்புணர்வு மாதம் ........ 161
தேசிய வன தியாகிகள் தினம் - செப்டம்பர் 11 ........ 162
தெற்கு தெற்கு ஒத்துழைப்புக்கான சர்வதேச தினம் - செப்டம்பர் 12 ........ 163
இந்தி மொழி தினம் - செப்டம்பர் 14 ........ 163
உலக நிணநீர்ச் சுரப்பிப் புற்றுநோய் விழிப்புணர்வு தினம் - செப்டம்பர் 15 ........ 163
தேசியப் பொறியாளர் தினம் - செப்டம்பர் 15 ........ 164
சர்வதேச மக்களாட்சித் தினம் - செப்டம்பர் 15 ........ 165
ஓசோன் அடுக்கைப் பாதுகாப்பதற்கான சர்வதேச தினம் - செப்டம்பர் 16 ........ 165
உலக நோயாளிப் பாதுகாப்பு தினம் - செப்டம்பர் 17 ........ 165
மராத்வாடா விடுதலை நாள் - செப்டம்பர் 17 ........ 166
சர்வதேசக் கடலோரத் தூய்மை நாள் - செப்டம்பர் 17 ........ 167
உலக மூங்கில் தினம் - செப்டம்பர் 18 ........ 167
சர்வதேச சம ஊதிய தினம் - செப்டம்பர் 18 ........ 167
உலக தண்ணீர் வளக் கண்காணிப்பு தினம் - செப்டம்பர் 18 ........ 168
சர்வதேச உலக பாம்புக்கடி விழிப்புணர்வு தினம் - செப்டம்பர் 19 ........ 168
இரயில்வே பாதுகாப்புப் படையின் 38வது எழுச்சி தினம் ........ 168
சர்வதேச செந்நிறப் பாண்டா தினம் - செப்டம்பர் 17 ........ 169
உலக அல்சைமர் தினம் - செப்டம்பர் 21 ........ 170

உலக அமைதி தினம் - செப்டம்பர் 21 ....170
உலக மகிழுந்துப் பயன்பாடு இல்லா தினம் – செப்டம்பர் 22 ....170
உலக காண்டாமிருக தினம் – செப்டம்பர் 22 ....170
சர்வதேச சைகை மொழிகள் தினம் – செப்டம்பர் 23 ....171
தேசிய திரைத்துறை தினம் – செப்டம்பர் 23 ....171
சர்வதேச காதுகேளாதோர் வாரம் 2022 – செப்டம்பர் 19 முதல் 25 வரை ....171
அந்த்யோதயா திவாஸ் - செப்டம்பர் 25 ....172
உலக நுரையீரல் தினம் - செப்டம்பர் 25 ....172
உலக மருந்தாளுநர்கள் தினம் - செப்டம்பர் 25 ....172
சர்வதேச மகள்கள் தினம் - செப்டம்பர் 25 ....173
உலகக் கருத்தடை தினம் - செப்டம்பர் 26 ....173
அணு ஆயுதங்களை முற்றிலும் ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - செப்டம்பர் 26 ....173
உலகச் சுற்றுலா தினம் - செப்டம்பர் 27 ....173
உலக நதிகள் தினம் - செப்டம்பர் 25 ....174
உலக சுற்றுச்சூழல் சுகாதார தினம் - செப்டம்பர் 26 ....174
சர்வதேச பொதுத் தகவல் அணுகல் தினம் - செப்டம்பர் 28 ....174
உலக வெறிநாய்க்கடி நோய் தினம் - செப்டம்பர் 28 ....175
உலக இதய தினம் - செப்டம்பர் 29 ....175
சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் - செப்டம்பர் 30 ....175
இதரச் செய்திகள் ....176
நீர்வாழ்ப் பரிமாற்றச் செயல்திட்டம் (2022-2030) ....176
பாலினம் குறித்த அறிக்கை 2022 ....177
பார்ச்சூன் இந்தியா நிறுவனங்களின் பணக்காரர்கள் பட்டியல் 2022 ....178
உலகப் பாரம்பரியப் பட்டியலுக்கான பரிந்துரை ....179
முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட ஏவுகல எந்திரத்திற்கான காப்புரிமை ....179
IBM குவாண்டம் வலையமைப்பு ....180
முதுநிலை மேலாண்மைக் கல்வித் தரவரிசை 2022 ....180
உலகளாவிய இணையச் சங்கேதப் பண ஏற்புக் குறியீடு 2022 ....181
நாட்டின் சிறந்த உயிரியல் பூங்கா ....182
உலகப் புதைபடிவ எரிபொருள்கள் பதிவேடு ....183
நிஜாமின் வாள் ....183
தொற்றாத நோய்கள் பற்றிய உலக சுகாதார அமைப்பின் அறிக்கை ....184

# TNPSC துளிகள்

- சர்வதேசத் திமிங்கல வகை சுறா தினமானது ஆகஸ்ட் 30 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.
    - உலகில் இவ்வகை உயிரினங்களில் 400 மட்டுமே உள்ளதனால், அவை மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள உயிரினங்களில் ஒன்றாக உள்ளது.
- சர்வதேச ஆப்பிரிக்க வம்சாவளி மக்கள் தினமானது ஆகஸ்ட் 31 ஆம் தேதியன்று உலக அவில் கொண்டாடப்படுகிறது.
    - இந்தத் தினமானது முதன்முதலில், சர்வதேச ஆப்பிரிக்க வம்சாவளி மக்களுக்கான தசாப்தத்தின் மத்தியில் (2015-2024), 2021 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.
- ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட், ஜோத்பூரில் நடைபெற உள்ள ஒரு மாத கால ராஜீவ் காந்தி கிராமப்புற ஒலிம்பிக் போட்டிகளைத் தொடங்கி வைத்தார்.
- இந்திய ரிசர்வ் வங்கியினைச் சேர்ந்த டாக்டர் அசுதோஷ் ரவிகர், "Indian Banking in Retrospect – 75 years of Independence" என்ற புதியப் புத்தகத்தை எழுதியுள்ளார்.
- புகழ்பெற்ற பாரம்பரிய நடனக் கலைஞரும் சமூக ஆர்வலருமான மல்லிகா சாராபாய் தனது நினைவுக் குறிப்பான 'Free Fall: My Experiments with Living' என்ற புத்தகத்தை வெளியிட்டார்.
    - புகழ்பெற்ற இந்தியப் பாரம்பரிய நடனக் கலைஞர் மிருணாளினி சாராபாய் மற்றும் புகழ்பெற்ற விண்வெளி அறிவியலாளர் விக்ரம் சாராபாய் ஆகியோருக்குப் பிறந்த மல்லிகா, ஒரு சிறந்த குச்சிப்புடி மற்றும் பரதநாட்டிய நடனக் கலைஞர் ஆவார்.
- டாக்டர் ஜிதேந்திர சிங், கடற்கரையினைச் சுத்தப்படுத்தும் பிரச்சாரத்திற்கு ஒரு முத்திரையாக வாசுகி என்ற முத்திரையைத் தொடங்கி வைத்தார்.
    - இது நாட்டின் கடலோரத்தினைச் சுத்தப்படுத்தும் பிரச்சாரத்தில் இளைஞர்கள் மிகுந்த ஆர்வம் காட்டி வருவதால் அவர்களுக்காக என்று பிரத்தியேகமாக அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.
- மா-ஆன் என்ற வெப்பமண்டலப் புயலானது வடக்குப் பிலிப்பைன்ஸைத் தாக்கியது.
    - அட்லாண்டிக் பெருங்கடல் மற்றும் வடகிழக்கு பசிபிக் பெருங்கடலில் ஏற்படும் வெப்பமண்டலப் புயல் என்பது சூறாவளி எனப்படும் அதே சமயம், கடும் புயல் அல்லது டைபூன் என்பது வடமேற்கு பசிபிக் பெருங்கடலில் ஏற்படுகிறது.
- டாட்டா மோட்டார்ஸ் மார்கோபோலோ என்பது டாட்டா மோட்டார்ஸ் (இந்தியா) மற்றும் அதன் பிரேசிலியப் பங்குதார நிறுவனமான மார்கோபோலோ ஆகிய நிறுவனங்களுக்கு இடையேயான ஒரு கூட்டு முயற்சியாகும்.
- தாதர், தானே மற்றும் மும்பைக் கோட்டத்தின் பிற நிலையங்களில் இந்திய ரயில்வே 'மேக்தூத்' என்ற இயந்திரங்களை நிறுவியுள்ளது.
    - தனித்துவமிக்க 'மேக்தூத்' இயந்திரங்கள் காற்றில் உள்ள நீராவியைக் குடிநீராக மாற்ற ஒரு புதுமையான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றன.
- புது தில்லியில் நடைபெற உள்ள 8வது இந்திய சர்வதேச குறு, சிறு மற்றும் நடுத்தர புத்தொழில் நிறுவனக் கண்காட்சி & உச்சி மாநாட்டினை (2022) துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா அவர்கள் அதிகாரப் பூர்வமாகத் திறந்து வைத்தார்.

- டாடா எஃகு நிறுவனம் மற்றும் பஞ்சாப் அரசாங்கம் ஆகியவை இணைந்து ஆண்டிற்கு 0.75 மில்லியன் டன் என்ற அளவிற்கு எஃகு உற்பத்தியை மேற்கொள்ளும் ஒரு தயாரிப்பு ஆலையை நிறுவ ஒப்புக் கொண்டுள்ளன.
  - டாடா எஃகு நிறுவனம் லூதியானாவின் ஹைடெக் பள்ளத்தாக்குப் பகுதியில் உள்ள கடியானா குர்த் என்ற இடத்தில் பசுமை உற்பத்தி மையத்தினை நிறுவ உள்ளது.
- இந்தியத் தேசியப் பணக் கொடுப்பனவுக் கழகத்தின் ஒரு அறிக்கையின் படி ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகத் தளத்தில், ஆகஸ்ட் மாதத்தில் மொத்த மதிப்பு சுமார் 10.73 லட்சம் கோடி ரூபாய் என்ற மதிப்பிற்கு 657 பில்லியன் அளவிலான பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- நுவாகாய் என்பது ஒடிசாவில் ஆண்டுதோறும் நடைபெற்று வரும் ஒரு அறுவடைத் திருவிழாவாகும்.
  - புதியப் பருவத்தை வரவேற்பதற்காகவும், பருவத்தின் புதிய அரிசியை வரவேற்கச் செய்வதற்காகவும் நுவாகாய் திருவிழா கொண்டாடப்படுகிறது.
- நீரஜ் சோப்ரா தனக்குத் தங்கப் பதக்கம் பெற்று தந்த ஈட்டியை சுவிட்சர்லாந்தின் லொசானில் உள்ள ஒலிம்பிக் அருங்காட்சியகத்திற்குப் பரிசாக அளித்துள்ளார்.
- கனடாவின் மார்க்கம் நகரமானது அங்குள்ள ஒரு தெருவிற்கு இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானின் பெயரைச் சூட்டியுள்ளது.
  - இவர் 'மதராஸின் மொஸார்ட்' என்று அழைக்கப்படுகிறார்.
- அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி சபையானது நாடு முழுவதும் டிஜிட்டல் படைப்பாற்றல் திறன்களை மேம்படுத்தவதற்காக, அடோப் நிறுவனத்துடன் ஒரு கூட்டு ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது.
- ஆறு ஆண்டுகளுக்கும் மேலான சிறைத் தண்டனையுடன் கூடியக் குற்றங்களில் தடயவியல் ஆதாரங்களைச் சேகரிப்பதைக் கட்டாயமாக்கிய இந்தியாவின் முதல் காவல் துறை என்றப் பெருமையை டெல்லிக் காவல்துறை பெற்றுள்ளது.
  - டெல்லி ஒரு ஒன்றியப் பிரதேசம் என்பதால், டெல்லி காவல்துறையானது உள்துறை அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ளது.
- புலப்ரே பாலகிருஷ்ணன் எழுதிய 'India's Economy from Nehru to Modi: A Brief History' என்ற புதிய புத்தகமானது விரைவில் வெளியிடப்பட உள்ளது.
  - ஜவஹர்லால் நேரு அவர்களுடைய ஆட்சிக் காலத்திலிருந்து தற்போதைய பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் ஆட்சி வரையிலான இந்தியாவின் பொருளாதார முன்னேற்றம் பற்றி இப்புத்தகத்தில் எழுதப் பட்டுள்ளது.
- இந்தியாவின் நான்காவது தூயக் காற்று உச்சி மாநாடானது பெங்களூரு நகரில் நடைபெற்றது.
  - காற்று மாசுபாடு ஆய்வு மையம் (CAPS) மற்றும் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கொள்கை ஆய்வு மையம் (CSTEP), மற்றும் பல சிந்தனைக் குழுக்கள் ஆகியவை இணைந்து இந்த உச்சி மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளன.
- மேலாண்மைக்கான ஒருங்கிணைந்த கற்றல் பல்கலைக்கழக நிறுவனமானது, இந்தியாவின் முதல் 2020 ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கை நிறைவேற்றப் படும் சட்டப் பள்ளியைத் தொடங்கியுள்ளது.

- இது இந்தியாவில் ஹரியானா மாநிலத்தின் குர்கான் பகுதியில் அமைந்துள்ள ஒரு தனியார் பல்கலைக் கழகமாகும்.

❖ புனேவில் உள்ள சக்கான் எனுமிடத்தில் ப்ளூ எனர்ஜி மோட்டார்ஸ் எனும் நிறுவனத்தின் ஆதரவுடன் ஒரு புத்தொழில் நிறுவனமானது இந்தியாவின் முதல் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவினால் இயங்கும் ஒரு பசுமைச் சரக்கு வாகனத்தினை உருவாக்கி உள்ளது.

❖ அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பராக் ஒபாமா, நெட்ஃபிலிக்ஸ் ஊடகத்தின் ஒரு ஆவணப் படமான "Our Great National Parks" என்ற படத்தில் மிக நேர்த்தியான ஒரு விரிவுரை செய்ததற்காக எம்மி விருதை வென்றார்.

❖ முதலாவது சர்வதேச ஹோமியோபதி சுகாதார உச்சி மாநாடானது ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாய் நாட்டில் நடத்தப்பட்டது.

❖ வரலாற்றில் முதன்முறையாக இந்தியாவின் சார்பில் மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் மங்கோலியா செல்ல உள்ளார்.

- இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஒருவர் மங்கோலியாவுக்குப் பயணம் மேற் கொள்வது இதுவே முதல் முறையாகும்.

❖ இந்திய இராணுவத் தலைவர் ஜெனரல் மனோஜ் பாண்டேவுக்கு நேபாள அதிபர் பித்யா தேவி பண்டாரி காத்மாண்டுவில் நேபாள இராணுவத்தின் கௌரவ ஜெனரல் என்ற பட்டத்தை வழங்கினார்.

- தலைமை படைத் தளபதி ஜெனரல் K.M.கரியப்பா, 1950 ஆம் ஆண்டில் இந்தப் பட்டத்தைப் பெற்ற முதல் இந்திய இராணுவத் தளபதி ஆவார்.

❖ முற்றிலுமாக காகிதம் இல்லாத முதல் மாவட்டமாக பீகாரின் சஹர்சா மாறியுள்ளது.

- புதிய முறை தற்போது அமலில் இருப்பதால், விவசாயிகளுக்கு டீசல் மற்றும் உர மானியங்கள் வழங்குவதை இதன் மூலம் விரைவுபடுத்த முடியும்.

❖ குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், நாடு முழுவதிலும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 45 ஆசிரியர்களுக்குப் புது தில்லி விக்யான் பவனில் நடைபெற்ற விழாவில் தேசிய விருதுகள் வழங்கி கௌரவித்தார்.

- இந்தியாவில் 50வது தேசிய ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது.

❖ முன்னாள் இந்தியப் பேட்ஸ்மேன் சுரேஷ் ரெய்னா இந்தியன் பிரீமியர் லீக்கில் (ஐபிஎல்) போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

- அவர் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் தக்க வைக்கப்படவில்லை அல்லது ஐபிஎல் 2022 ஆம் ஆண்டு போட்டியின் எந்த அணியாலும் அவர் தேர்ந்தெடுக்கப் படவில்லை.

❖ தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியானது (TMB) அதன் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியாக கிருஷ்ணன் சங்கர சுப்ரமணியம் என்பவரை நியமித்து உள்ளதாக அறிவித்துள்ளது.

❖ தேசிய ஒத்துழைப்புக் கொள்கையை உருவாக்குவதற்காக ஒரு தேசிய அளவிலான குழுவினை நிறுவ உள்ளதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

- முன்னாள் மத்திய அமைச்சர் சுரேஷ் பிரபு தலைமையிலான இந்தக் குழுவில் நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த 47 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

- ஈரானின் தெஹ்ரான் நகரில் நடைபெற்ற 14வது ஆசிய 18 வயதிற்குட்பட்டோருக்கான சாம்பியன்ஷிப் போட்டியில் கொரியாவை வீழ்த்தி இந்திய ஆண்கள் கைப்பந்து அணி வெண்கலப் பதக்கம் வென்றுள்ளது.
    - இறுதிப் போட்டியில் ஈரானை வீழ்த்தி ஜப்பான் அணி தங்கம் வென்றது.
- ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெற்ற உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் பதக்கம் வென்ற முதல் இந்திய இணை சாத்விக் சாய்ராஜ் ராங்கி ரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி ஆகியோர் ஆவர்.
    - இது எந்தவொரு இரட்டையர் போட்டியிலும் இந்திய அணி வென்ற இரண்டாவது உலக சாம்பியன்ஷிப் பதக்கமாகும்; இதற்கு முன் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா வென்ற முதல் பதக்கம் 2011 ஆம் ஆண்டு மகளிர் இரட்டையர் பிரிவில் ஜுவாலா குட்டா மற்றும் அஷ்வினி பொன்னப்பா ஆகியோர் பெற்ற வெண்கலப் பதக்கம் ஆகும்.
- சமீபத்தில், சிலியில் நடந்த ஒரு பொது வாக்கெடுப்பானது, அதன் பழைய அரசியல் சாசனத்திற்குப் பதிலாக ஒரு புதிய முற்போக்கான அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்கான ஒரு முன்மொழிவை நிராகரித்தது.
    - ஜெனரல் அகஸ்டோ பினோசேயின் சர்வாதிகாரத்தின் கீழ் எழுதப்பட்ட 1980 ஆம் ஆண்டு சாசனத்திற்குப் பதிலாக ஒரு புதிய வரைவுத் தீர்மானம் வரைவு செய்யப் பட்டது.
- தேசிய வனவிலங்கு வாரியத்தின் நிலைக்குழுவானது, லடாக்கில் ஒரு புதிய விமானப் படைத் தளத்தை நிறுவுவதற்காக இந்திய விமானப்படைக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
    - இந்திய விமானப் படையின் புதிய விமானத் தளமானது மெய்க் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதிக்கு வெளியே அமைந்த சாங்தாங் சரணாலயப் பகுதியில் நிறுவப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- சுயெல்லா பிராவர்மேன் ஐக்கிய இராஜ்ஜியத்தின் புதிய உள்துறைச் செயலராக நியமிக்கப் பட்டுள்ளார்.
    - இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ப்ரீத்தி படேலுக்குப் பதிலாக சுயெல்லா பிரேவர்மேன் நியமிக்கப்பட்டுள்ளார்.
- புது டெல்லியில் ராஷ்டிரபதி பவனில் இருந்து இந்தியா கேட் வரையில் அமைக்கப் பட்டுள்ள சென்ட்ரல் விஸ்டாவின் (மத்திய எழில்முற்றம்) முழு நீள 'கர்தவ்யப் பாதையை' பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்.
    - புது டெல்லியில் உள்ள இந்தியா கேட்டில் அமைக்கப்பட்டுள்ள நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 28 அடி உயர கிரானைட் சிலையைப் பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்.
- தனியார் துறை கடன் வழங்கும் ஒரு வங்கி நிறுவனமான HDFC வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கு புதிய குறுஞ்செய்தி அடிப்படையிலான வங்கி வசதியை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையானது, சமீபத்திய மோதலின் போது நடந்ததாகக் கூறப்படும் துஷ்பிரயோகங்கள் மற்றும் பிற மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச விசாரணைக்கான கோரிக்கையைப் புறக்கணித்ததால் இலங்கை மீது ஒரு குறைபாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றியது.

- இந்தியா மற்றும் ஜப்பான் இடையிலான 2+2 அமைச்சர்கள் பேச்சுவார்த்தையில், சர்வதேசச் சட்டத்தின்படி, நாட்டின் பலத்தைப் பயன்படுத்தாமல் அல்லது ஒருதலைப் பட்சமாக நிலைமையை மாற்ற முயற்சி செய்யாமல், அனைவரும் அமைதியான முறையில் சர்ச்சைகளுக்குத் தீர்வு காண வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தப் பட்டது.
- ஆஸ்திரியாவின் வோல்கர் டர்க் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையராக ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளரான அன்டோனியோ குட்டரஸ் என்பவரால் நியமிக்கப்பட்டார்.
- இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் படி, அமெரிக்கா 2022 ஆம் ஆண்டில் மற்ற எந்த நாட்டையும் விட அதிகமாக இந்தியர்களுக்கு 82,000 மாணவர் நுழைவு இசைவுச் சீட்டுகளை வழங்கியுள்ளது.
- இந்திய இராணுவம் மற்றும் இந்திய விமானப்படை ஆகியவை இணைந்து பஞ்சாபில் 'ககன் ஸ்டிரைக்' என்ற கூட்டுப் பயிற்சியை மேற்கொண்டன.
- இலங்கை கிரிக்கெட் அணியானது பாகிஸ்தான் அணியைத் தோற்கடித்து 2022 ஆம் ஆண்டு ஆசியக் கோப்பையை வென்றது.
- இரண்டாவது இந்திய-ஜப்பான் 2+2 வெளியுறவுத் துறை மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் கூட்டமானது டோக்கியோ நகரில் நடைபெற்றது.
- துணீகர முதலீடு மற்றும் தனியார்ப் பங்கு முதலீடுகளை அதிகரிப்பதற்கான வழி முறைகளைப் பரிந்துரைப்பதற்காக வேண்டி இந்தியப் பங்குகள் மற்றும் பரிமாற்ற வாரியத்தின் முன்னாள் தலைவர் M. தாமோதரன் தலைமையில் ஒரு நிபுணர் குழுவை அரசாங்கம் அமைத்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் இணைவதற்கான ஒரு உறுதி மொழி ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திட்டுள்ளது.
- கர்நாடக மாநிலத்தின் பெங்களூரு நகரைச் சேர்ந்த பிரணவ் ஆனந்த் இந்தியாவின் 76வது செஸ் கிராண்ட் மாஸ்டர் ஆனார்.
- சமீபத்தில் அதானி குழுமமானது, அம்புஜா சிமெண்ட்ஸ் & ACC லிமிடெட் நிறுவனம் ஆகியவற்றின் கையகப்படுத்துதல் செயல்முறையினை நிறைவு செய்து நம் நாட்டின் இரண்டாவது பெரிய சிமெண்ட் உற்பத்தி நிறுவனமாக மாறியது.
- இலங்கையில் நடைபெற்ற 17 வயதிற்குட்பட்டோருக்கான SAFF கால்பந்து சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் இந்திய அணியானது நேபாள அணியினை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றது.
- இந்தியாவின் மிகப்பெரிய கடன் வழங்கும் நிறுவனமான பாரத ஸ்டேட் வங்கி முதல் முறையாகச் சந்தை மூலதனத்தில் ரூ.5 டிரில்லியன் மதிப்பினைத் தொட்டது.
- சென்னை உயர் நீதிமன்றத்தின் மூத்த நீதிபதியான T. ராஜாவை செப்டம்பர் 22 ஆம் தேதி முதல் அந்த நீதிமன்றத்தின் தற்காலிகத் தலைமை நீதிபதியாக மத்திய அரசு நியமித்தது.
- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு லண்டன் வெஸ்ட்மினிஸ்டர் மன்றத்திற்குச் சென்று, தனது சார்பாகவும் இந்திய மக்களின் சார்பாகவும் மறைந்த இராணிக்கு அஞ்சலி செலுத்தினார்.
    - அங்கு இரங்கல் புத்தகத்திலும் அவர் கையெழுத்திட்டார்.

- ❖ கொல்கத்தாவில் நடைபெற்ற துராந்த் கோப்பைக் கால்பந்துப் போட்டியின் இறுதிப் போட்டியில் பெங்களூரு FC அணியானது முதலாவது முறையாக மும்பை சிட்டி FC அணியினை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றது.
- ❖ உலக இளையோர் சதுரங்கச் சாம்பியன்ஷிப் போட்டியில், இந்தியாவின் பிரணவ் ஆனந்த் மற்றும் A.R. இளம்பரிதி, முறையே 16 வயதுக்குட்பட்டோருக்கான மற்றும் 14 வயதுக்குட்பட்டோருக்கான ஓபன் பிரிவுகளில் பட்டங்களை வென்றனர்.
- ❖ தெலுங்கானா அரசானது தனது புதியச் செயலகத்திற்கு டாக்டர் பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கரின் பெயரைச் சூட்ட முடிவு செய்துள்ளது.
- ❖ நிதி நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டுச் சபையின் (FSDC) 26வது கூட்டமானது மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரத் துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்றது.
- ❖ லிண்டா ஃப்ருஹ்விர்டோவா சென்னை ஓபன் போட்டியில் தனது முதல் ஹோலாஜிக் WTA போட்டியின் ஒற்றையர் பிரிவுப் போட்டியில் வெற்றி பெற்றுப் பட்டத்தைக் கைப்பற்றினார்.
- ❖ ஸ்ரீநகரில் நிறுவப்பட்டுள்ள காஷ்மீரின் முதலாவது பல திரைகள் கொண்ட ஒற்றை திரையரங்கத்தினை முப்பது ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு ஜம்மு & காஷ்மீர் துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா அவர்கள் திறந்து வைத்தார்.
  - ○ இதில் விக்ரம் வேதா மற்றும் பொன்னியின் செல்வன் ஆகிய திரைப்படங்கள் முதலில் வெளியிடப் படும்
- ❖ இந்திய தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் நீதிபதி (ஓய்வு) அருண் குமார் மிஸ்ரா ஆசியா-பசிபிக் மன்றத்தின் நிர்வாகக் குழுவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- ❖ கஜகஸ்தான் அரசானது அதன் தலைநகரின் பழைய பெயரான ஆஸ்தானாவை மீண்டும் கொண்டு வருவதற்காக ஒரு மசோதாவை நிறைவேற்றியது.
  - ○ அதன் பெயரானது 2019 ஆம் ஆண்டில் நூர்-சுல்தான் என மாற்றப்பட்டது.
- ❖ மகாராஷ்டிராவின் மும்பை நகரில் 2022 ஆம் ஆண்டு உலக நிதித் தொழில்நுட்பத் திரு விழாவானது நடைபெற்றது.
- ❖ முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள், 'Ambedkar and Modi: Reformer's Ideas Performer's Implementation' என்றப் புத்தகத்தினை வெளியிட்டார்.
- ❖ புற்றுநோயாளிகளின் நலனுக்கானத் தினம் என்றும் அழைக்கப்படும் உலக ரோஜா தினமானது செப்டம்பர் 12 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
- ❖ மொராக்கோவில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான உலகத் தடகள கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் இந்திய ஈட்டி எறிதல் வீரரான தேவேந்திர ஜஜாரியா வெள்ளிப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- ❖ மூன்றாவது LEADS சந்திப்பானது, "எதிர்காலத்திற்கானத் தலைமை" என்ற தலைப்பில் புது டெல்லியில் நடத்தப் பட்டது.
- ❖ ஆசிய-பசிபிக் ஒலிபரப்பு மேம்பாட்டு நிறுவனத்திற்கான இந்தியாவின் தலைமைப் பதவியாமானது மேலும் ஓர் ஆண்டிற்கு நீட்டிக்கப் பட்டுள்ளது.
- ❖ SAFF மகளிர் சாம்பியன்ஷிப் போட்டியில் வங்காளதேச மகளிர் கால்பந்து அணி தனது முதல் பட்டத்தை வென்றது.

- நேபாளத்தின் காத்மாண்டுவில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அந்த அணி நேபாள அணியினை வென்றது.

❖ குஜராத்திய மொழித் திரைப்படமான "செல்லோ ஷோ" 95வது அகாடமி விருதுகள் அல்லது ஆஸ்கார் விருதுகளுக்காக இந்தியா சார்பாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

❖ ஐஎன்எஸ் தர்காஷ் கப்பல் கடற்கொள்ளையர்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக கினியா வளைகுடாப் பகுதியில் ரோந்துப் பணிக்காக அனுப்பப் பட்டுள்ளது.

❖ 25 வயதான பருவநிலை ஆர்வலரான வனேசா நகேட் என்பவர் யுனிசெஃப் அமைப்பின் நல்லெண்ணத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய மாநாட்டின் முதலாவது அமர்வான உயர்மட்ட அமைச்சர்கள் கூட்டமானது சமீபத்தில் நியூயார்க் நகரில் நடைபெற்றது.

❖ தேசிய சுகாதார இயக்கத்தின் கீழான ஒரு மாபெரும் அளவிலான உயர் இரத்த அழுத்த இடையீட்டு நடவடிக்கையான 'இந்திய உயர் இரத்த அழுத்தக் கட்டுப்பாட்டு முன்னெடுப்பு (IHCI)' என்பதற்காக இந்தியாவிற்கு ஐக்கிய நாடுகள் சபையின் விருது என்பது வழங்கப் பட்டுள்ளது.

❖ 2023 ஆம் ஆண்டில், உத்தரப் பிரதேசத்தின் கிரேட்டர் நொய்டாவில் உள்ள புத்த சர்வதேசச் சுற்றுப்பாதை வழித்தட மைதானத்தில் தனது முதல் MotoGP உலக சாம்பியன்ஷிப் பந்தயத்தினை இந்தியா நடத்த உள்ளது.

❖ தொழிலதிபர் ரத்தன் டாடா, உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி K.T.தாமஸ், மக்களவையின் முன்னாள் துணை சபாநாயகர் கரியா முண்டா ஆகியோர் PM CARES நிதியின் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

❖ இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் கடலோரக் காவல்படையினர், சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற மாபெரும் அபியாஸ் பயிற்சி அல்லது அபயாஸ் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்றனர்.

❖ இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கும், அந்தச் சங்கத்தின் தேர்தல் குழுவினைத் தயாரிக்கச் செய்வதற்கும் வேண்டி ஓய்வு பெற்ற நீதிபதி L. நாகேஸ்வர ராவினை இந்திய உச்ச நீதிமன்றம் நியமித்துள்ளது.

❖ உலக சுகாதார அமைப்பின் அதிகாரியான டாக்டர் ராஜீவ் பால், இந்திய மருத்துவ ஆராய்ச்சிச் சபையின் தலைமை இயக்குநராகவும் (ICMR), சுகாதார ஆராய்ச்சித் துறையின் செயலாளராகவும் நியமிக்கப் பட்டுள்ளார்.

❖ இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) நிறுவனமானது ஒருங்கிணைந்த கிரையோஜெனிக் எந்திரத்திற்கான உற்பத்தி நிலையத்தினைப் பெங்களூரு நகரில் தொடங்கியுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்


## புதுமைப் பெண் திட்டம்

- செப்டம்பர் 05 ஆம் தேதியன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களின் முன்னிலையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 'புதுமைப் பெண்' என்ற தலைப்பிலான மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதி திட்டத்தினைத் துவக்கி வைத்தார்.
- புதுமைப் பெண் திட்டத்தின் கீழ், மாநில அரசுப் பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்த பெண் மாணவிகளுக்கு, அவர்கள் பட்டப்படிப்பு அல்லது பட்டயப் படிப்பு அல்லது தொழில் துறைப் பயிற்சிப் படிப்புகளை முடிக்கும் வரை மாதந்தோறும் 1,000 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்படும்.
- டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்கள் தமிழக அரசினால் அமைக்கப்பட்ட 26 சிறப்புப் பள்ளிகளையும், 15 மாதிரிப் பள்ளிகளையும் திறந்து வைத்தார்.
- இந்தப் பள்ளிகள் டெல்லியில் ஆம் ஆத்மி அரசாங்கத்தினால் நிறுவப்பட்ட பள்ளிகளின் மாதிரியைப் பின்பற்றுகின்றன.

## தகைசால் பள்ளிகள் திட்டம்

- தமிழக மாநிலத்தில் சிறப்புப் பள்ளித் திட்டம் மற்றும் மாதிரிப் பள்ளித் திட்டம் ஆகியவற்றை, டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களின் முன்னிலையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டமானது டெல்லி மாதிரிப் பள்ளித் திட்டத்தின் அடிப்படையிலானதாகும்.
- இந்தப் பள்ளிகளுக்குத் தகைசால் பள்ளிகள் என்றும், மாதிரிப் பள்ளிகள் என்றும் தமிழ் மொழியில் பெயரிடப்படும்.

## பெரிய உயிரியல் பூங்காக்களில் சிறந்தப் பூங்கா



- ❖ பெரிய உயிரியல் பூங்காக்களில் வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவானது நாட்டிலேயே சிறந்தப் பூங்கா என்ற இடத்தைப் பிடித்துள்ளது.
- ❖ இயற்கையான வாழ்விடத்திற்கு வெளியே உயிரினங்களைப் பாதுகாப்பதற்கு என்று சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றும் திறன் மற்றும் செயல்திறன் குறித்த ஒரு சோதனையில் இந்தப் பூங்கா 82% மதிப்பெண்களைப் பெற்றது.
- ❖ மொத்த ஆறு அளவுருக்களில், வண்டலூர் உயிரியல் பூங்கா மூன்றில் 85 சதவீதத்திற்கும் அதிகமான மதிப்பெண்களையும் மீதமுள்ள மூன்றில் 75 சதவீதத்திற்கும் அதிகமான மதிப்பெண்களையும் பெற்றது.

## தமிழ்நாட்டின் புதிய பறவைகள் சரணாலயம்



- ❖ திருப்பூர் மாவட்டத்தில் உள்ள நஞ்சராயன் ஏரிப் பகுதியில் ஒரு புதியப் பறவைகள் சரணாலயத்தினை அமைக்க தமிழக அரசு உத்தரவு ஒன்றைப் பிறப்பித்தது.
- ❖ இது தமிழ்நாட்டின் 17வது பறவைகள் சரணாலயமாகும்.
- ❖ இப்பகுதிக்கு புலம்பெயர்ந்த பறவைகள் உட்பட 130க்கும் மேற்பட்ட பறவை இனங்கள் வந்து சேர்கின்றன.
- ❖ இது பாசனத்திற்கான நீர் ஆதாரமாக நஞ்சராயன் என்ற அரசனால் கட்டமைக்கப் பட்டது.
- ❖ இது சர்க்கார் பெரியபாளையம் நீர்த்தேக்கம் என்றும் அழைக்கப்படுகிறது.

## நரிக் குறவர்களுக்கு பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் அந்தஸ்து

- ❖ நரிக் குறவர்களை பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் பிரிவின் கீழ் சேர்ப்பதற்கான பழங்குடியின அமைச்சகத்தின் முன்மொழிதலுக்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- ❖ தமிழ்நாட்டின் குருவிக் காரன் சமூகமும் இந்தப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது.
- ❖ 1950 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (பட்டியலிடப்பட்ட பழங்குடியினர்) ஆணையினைத் திருத்துவதற்கான ஒரு மசோதாவைப் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்துவதன் மூலம் இது மேற்கொள்ளப் பட உள்ளது.
- ❖ தமிழ்நாட்டின் மலைப்பகுதியில் வாழும் மிகவும் தாழ்த்தப்பட்ட மற்றும் எளிதில் பாதிப்பிற்குள்ளாகும் சமூகங்களில் நரிக் குறவர் சமூகத்தினரும் உள்ளிடங்குவர்.

- சத்தீஸ்கர், இமாச்சலப் பிரதேசம், கர்நாடகா மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த சில பழங்குடியினச் சமூகங்களை பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) பிரிவின் கீழ் அறிவிப்பதற்கான ஒரு முன்மொழிதலுக்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இமாச்சலப் பிரதேசத்தின் எல்லையைக் கடந்த பகுதியில் சிர்மவுரின் கிரி என்ற பகுதியில் உள்ள ஹட்டி சமூகமும் அறிவிக்கப்பட்ட பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளது.

## இலவச காலை உணவுத் திட்டம்

- 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையிலான அரசுப் பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டமானது செப்டம்பர் 15 ஆம் தேதியன்று மதுரையில் தொடங்கப்பட்டது.
- இத்திட்டத்திற்கு "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" என்று பெயரிடப் பட்டு உள்ளது.
- இத்திட்டம் ஏழை மக்களின் வாழ்வில் நன்மைமிக்க மாற்றத்தைக் கொண்டு வரும்.
- முதன்முதலாக, 1920 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிப் பள்ளியில் மேயர் பிட்டி தியாகராயர் அவர்களால் மதிய உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது.
- 1956 ஆம் ஆண்டில் முன்னாள் முதல்வர் K.காமராஜ் அவர்கள் மதிய உணவு திட்டத்தைத் துவக்கி வைத்தார்.

## ஜோயமாலா வழக்கு




- ஜோயமாலா என்ற யானையைப் பாதுகாப்புக் காவலில் வைக்கக் கோரி, அசாம் அரசு கௌகாத்தி உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளது.
- ஜோயமாலா என்பது தமிழக அரசிற்கு குத்தகைக்கு வழங்கிய கோயில் யானை ஆகும்.
- அசாமில் இருந்து கொண்டு வந்த யானைகளைத் தமிழக அரசு திருப்பி அனுப்ப மறுத்தது.
- ஜோயமாலா யானையானது தமிழகத்தில் உள்ள ஒரு கோவிலில் கொடுமைப் படுத்தப் படுவதாக விலங்குகள் உரிமை தொடர்பான ஒரு குழுவான PETA தெரிவித்ததைத் தொடர்ந்து இந்தச் சர்ச்சையானது தொடங்கியது.
- ஜோயமாலா உட்பட ஒன்பது யானைகளைத் தமிழகத்திற்குக் குத்தகைக்கு விட்டதாக அசாம் அரசு கூறுகிறது.

## இந்தியாவின் முதல் கடல் பசு காப்பகம்

- இந்தியாவின் முதலாவது 'கடல்பசு காப்பகமானது' தமிழகத்தில் அறிவிக்கப் பட்டு உள்ளது.
- இந்த உயிரினமானது கடல் விலங்கினங்களைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் உதவும் என்பதால், இந்த அழிந்து வரும் உயிரினங்களைப் பாதுகாக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டது.
- பாக் விரிகுடாவில் இந்தக் காப்பகம் நிறுவப்பட உள்ளது.
- கடல் பசுவானது முதன்மையாக கடல்பகுதியில் வளர்கின்ற புல் படுக்கைகளை நம்பி வாழ்கின்ற மிகப்பெரிய தாவர உண்ணி வகையிலான கடல் வாழ் பாலூட்டிகளாகும்.
- இந்தியாவில் சுமார் 240 கடல் பசுக்கள் மட்டுமே இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது.
- அவற்றில் பெரும்பாலானவை பாக் விரிகுடா பகுதியில் மட்டுமே காணப்படுகின்றன.




## 4000 ஆண்டுகளுக்கு முன்பு பயன்படுத்தப்பட்டப் பழமையான தங்கம்

- வடக்குப்பட்டு ஊராட்சியில் மேற்கொள்ளப்பட்ட ஒரு தொல்லியல் துறை அகழாய்வில் பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட தங்கம் கிடைத்துள்ளது.
- காஞ்சிபுரம் மாவட்டத்தை அடுத்த ஒரகடம் கிராமத்தில் அகழாய்வுக்கான இடம் தேர்வு செய்யப் பட்டது.



- கருப்பு மற்றும் சிவப்பு நிற மட்பாண்டங்கள், வர்ணம் பூசப்பட்ட மட்பாண்டங்கள் மற்றும் சின்னங்கள் பொறிக்கப்பட்ட மட்பாண்டங்கள் மற்றும் ரோமானிய மட்பாண்டங்களும் இங்கு கண்டுபிடிக்கப்பட்டன.

- மேலும் 1.5 கிராம் எடையுள்ள 2 தங்க ஆபரணங்களும் இங்கு கிடைத்துள்ளன.
- சிறு சிறு காதணிகள், தங்க ஆபரணங்கள், சிறு சிறு வட்ட வடிவச் சில்லுகள், இரும்புப் பொருட்கள் மற்றும் வளையல் துண்டுகள் ஆகியவையும் இங்கு கண்டுபிடிக்கப் பட்டு உள்ளன.
- இவை 4000 ஆண்டுகள் முதல் 10000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய பொருட்களாக இருக்கலாம்.

## இணையவழி சூதாட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கான அவசரச் சட்டம்

- இணையவழி சூதாட்டத்தை ஒழுங்குப்படுத்துவதற்கான ஒரு அவசரச் சட்டத்தை வெளியிட தமிழக அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளையாட்டு மற்றும் காவல்துறை திருத்தச் சட்டத்தினை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்ததையடுத்து ஒரு வருடத்திற்குப் பிறகு இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டது.
- இந்தச் சட்டமானது இணையவெளியில் பணயம் அல்லது பந்தயம் கட்டுவதற்காக ஒரு தடையை விதித்தது.
- முன்பு சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி K.சந்துரு அவர்களின் தலைமையின் கீழ் மாநில அரசு ஒரு குழுவை அமைத்தது.
- இந்தக் குழுவானது மாநிலத்தில் இணையவழி சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தச் செய்வதற்கான அவசரச் சட்டத்தை வெளியிடுவதற்குப் பரிந்துரை செய்தது.
- அமெரிக்காவில் 60-70% இணையவழி சூதாட்டப் பயனர்களை ஒப்பிடுகையில், இந்திய மக்கள் தொகையில் 20% பேர் இணையவழி சூதாட்டங்களை விளையாடுகிறார்கள்.

## TamiraSES திட்டம்

- தாமிரபரணி நதியை மறுசீரமைப்பதற்காக வேண்டி TamiraSES திட்டமானது செயல் படுத்தப் படுகிறது.
- இந்தத் திட்டமானது திருநெல்வேலி மாவட்ட நிர்வாகம் மற்றும் பெங்களூரு நகரில் அமைந்துள்ள தன்னார்வ தொண்டு நிறுவனமான அசோகா சூழலியல் மற்றும் சுற்றுச் சூழல் அறக்கட்டளைச் சங்கம் (ATREE) ஆகியவற்றினால் இணைந்து செயல் படுத்தப் படுகிறது.
- தாமிரபரணி நதியைப் புணரமைப்பதற்கு வேண்டி "கலப்பு முறை உள்நாட்டு அணுகுமுறை" என்ற முறையைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டமானது தாமிரபரணி மற்றும் அதன் ஆற்றுப்படுகைகளில் உள்ள அனைத்து நீர்நிலைகளையும் மீட்டெடுக்க உள்ளது.
- இத்திட்டத்தினுடைய முதல் கட்டத்தின் கீழ் ஐந்து சமூகச் சூழலியல் கண்காணிப்பு நிலையங்கள் அமைக்கப்பட உள்ளது.
- இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவதற்காக உதவும் முதன்மை திட்டங்களாக இவை செயல்படும்.
- திட்டத்தின் இந்தக் கட்டமானது திருநெல்வேலி மாவட்ட எல்லைகளுக்குள் மட்டுமே செயல்படுத்தப்பட உள்ளது.

***தாமிரபரணி ஆறு***

- ❖ தாமிரபரணி நதியானது மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்த பொதிகை மலையில் உள்ள அகஸ்தியர் கூடம் என்ற சிகரத்தில் இருந்து உருவாகிறது.
- ❖ தமிழ்நாட்டில் உள்ள ஒரே வற்றாத ஆறு இதுவாகும்.
- ❖ இந்த நதியின் மூலாதாரம் கோதையாற்றின் துணை நதிகளான கோதை மற்றும் மதுமலை ஆகியவற்றின் சங்கம இடமாகும்.
- ❖ இந்த நதியானது திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் பாய்கிறது.





# தேசியச் செய்திகள்

## ஐஎன்எஸ் விக்ராந்த்

- ❖ கொச்சினிலுள்ள கொச்சின் கப்பல் கட்டும் தளத்தில் உள்நாட்டிலேயே கட்டமைக்கப் பட்ட இந்தியாவின் முதல் விமானம் தாங்கிக் கப்பலை இந்தியா தனது படையில் இணைக்க உள்ளது.
- ❖ இது துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் பொதுத்துறை கப்பல் கட்டும் நிறுவனமான கொச்சின் கப்பல் கட்டும் நிறுவனம் மூலம் கட்டமைக்கப்பட்டது.
- ❖ இந்தியாவின் கடற்படை வரலாற்றிலேயே இதுவரை கட்டமைக்கப்பட்ட மிகப்பெரிய கப்பல் ஐஎன்எஸ் விக்ராந்த் ஆகும்.
- ❖ இதன் மதிப்பிற்குரிய முன்னோடியாக திகழ்ந்த, 1971 ஆம் ஆண்டு போரில் முக்கியப் பங்கு வகித்த இந்தியாவின் முதல் விமானம் தாங்கி கப்பலின் பெயரை, உள் நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்த விமானம் தாங்கி கப்பல் கொண்டுள்ளது.
- ❖ எனினும் ஐஎன்எஸ் விக்ராந்த் கப்பல் அதன் சொந்தத் தளத்தில் தன் சொந்தப் போர் விமானங்களை கொண்டு இருக்காது.
- ❖ இது இந்தியாவின் ஒரே விமானம் தாங்கி கப்பலான ஐஎன்எஸ் விக்ரமாதித்யா கப்பலிடமிருந்துப் பெறப்பட்ட ரஷ்ய நாட்டினால் வடிவமைக்கப்பட்ட சில போர் விமானங்களை இயக்கும்.

## புதிய கடற்படைக் கொடி

- இந்தியக் கடற்படையின் புதிய கொடியை (புதிய கடற்படைக் கொடி) ஐஎன்எஸ் விக்ராந்த் எனும் விமானம் தாங்கி கப்பலில் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அறிமுகப் படுத்த உள்ளார்.
- சுதந்திரத்திற்கு முந்தைய காலத்தில் ஆங்கிலேயர்கள் இந்த அடையாளத்தினை அறிமுகப் படுத்தியதில் இருந்து, முதல் முறையாக இந்தியக் கடற்படையின் கொடியில் இருந்த செயின்ட் ஜார்ஜ் சிலுவை இல்லாமல், இந்தியக் கடற்படை தனது புதிய கடற்படைக் கொடியை செப்டம்பர் 2 ஆம் தேதியன்று பெற உள்ளது.
- 2001 மற்றும் 2004 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் அடல் பிஹாரி வாஜ்பாய் பதவியில் இருந்த போது கொடியிலிருந்து சிலுவை அடையாளம் அகற்றப்பட்டது.
- ஆனால் மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மீண்டும் ஆட்சியைப் பிடித்தவுடன் அது மீண்டும் கொடியில் சேர்க்கப்பட்டது.




## SAREX-2022

- சென்னையில் உள்ள இந்தியக் கடலோரக் காவல்படையினரால் இந்தப் பயிற்சி மேற் கொள்ளப் பட்டது.
- இது 10வது தேசிய கடல்சார் தேடல் மற்றும் மீட்புப் பயிற்சியாகும்.
- இது தேசியக் கடல்சார் தேடல் மற்றும் மீட்பு வாரியத்தின் (NMSARB) கீழ் மேற் கொள்ளப் படுகிறது.
- மற்ற வெளிநாட்டுப் பங்கேற்பாளர்களுடன், இந்தியக் கடலோரக் காவல்படையின் தலைவர் V.S.பதானியா, "SAREX-2022" என்ற இந்தப் பயிற்சியை ஆய்வு செய்தார்.
- இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்தப் பயிற்சியின் குறிக்கோள் கடல் பயணிகளின் பாதுகாப்பை நோக்கிய திறன் மேம்பாடு என்பதாகும்.

## Clear Skies for Tomorrow

- இது உலகப் பொருளாதார மன்றம் (WEF) தலைமையிலான ஒரு சுற்றுச்சூழல் நிலைத் தன்மை முயற்சியாகும்.
- இந்தியாவின் மிகப்பெரிய விமான நிறுவனமான இண்டிகோ இந்த முன்முயற்சியில் கையெழுத்திட்டு இணைந்துள்ளது.
- இது 2050 ஆம் ஆண்டிற்குள் விமானப் போக்குவரத்து வழித் தடத்தினை ஒட்டு மொத்த நிகர-சுழிய உமிழ்வு கொண்ட பாதையாக உருவாக்கும் குறிக்கோளை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## வஜ்ர பிரஹார் 2022

- இந்தியா மற்றும் அமெரிக்கா இடையிலான கூட்டு சிறப்புப் படைப் பயிற்சியான 13வது வஜ்ர பிரஹார் 2022 என்ற பயிற்சியானது இமாச்சலப் பிரதேசத்தின் பக்லோவில் நிறைவடைந்தது.
- இந்த வருடாந்திரப் பயிற்சியானது இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே மாறி மாறி நடத்தப் படுகிறது.
- 12வது பயிற்சியானது அமெரிக்காவின் வாஷிங்டனில் 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நடத்தப்பட்டது.




## ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் 2022

- இது சில நெருக்கடி மிக்கப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான ஒரு தளத்தை மாணவர்களுக்கு வழங்குவதற்கான நாடு தழுவிய ஒரு முயற்சியாகும்.
- இந்த ஆண்டு, ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் - இளையோர் முன்னெடுப்பானது பள்ளி மாணவர்களுக்கான முன்னோடித் திட்டமாகவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் (SIH) 2017 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- இது கல்வி அமைச்சகம், அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி சபை, பெர்சிஸ்டண்ட் சிஸ்டம்ஸ் மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான உள்ளடக்கப் புத்தாக்க மையம் (i4C) ஆகியவற்றின் முன்னெடுப்பாகும்.
- 2022 ஆம் ஆண்டு ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் போட்டியின் இறுதிப் போட்டியில் IGNOU மாணவர்களின் குழு முதல் பரிசை வென்றது.

## இந்தியாவின் முதல் மெய்நிகர்ப் பள்ளி

- டெல்லி அரசானது மெய்நிகர்ப் பள்ளியைத் தொடங்கியுள்ளது.
- நாடு முழுவதும் உள்ள மாணவர்கள் இந்தப் பள்ளியில் சேர்வதற்குத் தகுதி பெறுவர் என்று அது அறிவித்தது.
- இது இந்தியாவின் முதல் மெய்நிகர்ப் பள்ளி என்றும் கூறப்படுகிறது.
- இருப்பினும், தேசிய திறந்தநிலைப் பள்ளிக்கல்வி நிறுவனம் (NIOS) ஆனது நாட்டின் முதல் மெய்நிகர்ப் பள்ளியானது கடந்த ஆண்டு மத்திய அரசினால் தொடங்கப்பட்டது என்றும் அது டெல்லி அரசால் அல்ல என்றும் கூறியுள்ளது.

## இந்திய இராணுவம் – QKD




- இந்திய ராணுவம் குவாண்டம் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்துடன் கூடிய ஆயுதம் ஏந்தியப் படைகள் மற்றும் உயர்தர பாதுகாப்பு அமைப்பினைக் கொண்டிருப்பதால் இந்தியா உலகளவில் ஒரு உயர்தரக் குழுவில் இணைகிறது.
- சிறந்தப் பாதுகாப்பு அமைப்பிற்கான புத்தாக்கம் (iDEX), பாதுகாப்புப் புத்தாக்க அமைப்பு ஆகியவற்றின் ஆதரவுடன், பெங்களூரைச் சேர்ந்த ஆழ்ந்தத் தொழில்நுட்பப் புத்தொழில் நிறுவனமான QNu Labs, குவாண்டம் விசை வழங்கீடு (QKD) மூலம் மேம்படுத்தப் பட்ட பாதுகாப்புத் தொடர்பு அமைப்பினை உருவாக்கியுள்ளது.
- QKD அமைப்புகளில் முன்னணியில் உள்ள நாடுகள் சீனா, அமெரிக்கா, கனடா மற்றும் பிற ஐரோப்பிய நாடுகள் ஆகியனவாகும்.
- இது பல குவாண்டம் இயந்திரக் கூறுகளை உள்ளடக்கிய மறை குறியீட்டியல் என்ற ஒரு நெறிமுறையைப் பயன்படுத்தி பாதுகாப்பான தகவல்தொடர்புகளை மேற்கொள்ளச் செய்வதாகும்.

- ஒரு QKD அமைப்பானது, நிலப்பரப்பு ஒளியிழை உள்கட்டமைப்பில் ஒரு குறிப்பிட்ட தூரத்தால் பிரிக்கப்பட்ட இரண்டு புள்ளிகளுக்கு இடையில் ஒரு குவாண்டம் பாதுகாப்பு மிக்க இரகசிய இணை சமச்சீர் விசைகளை உருவாக்க வழி வகை செய்கிறது.
- முக்கியமான தரவைக் குறியாக்கப் பயன்படும் முடக்க முடியாத மறை குறியாக்க விசைகளை உருவாக்கச் செய்வதற்கு முடக்க முடியாத குவாண்டம் அமைப்பினை உருவாக்க QKD உதவுகிறது.

## தினை மாநாடு 2022

- கர்நாடக மாநிலம் ராய்ச்சூரில் இந்த மாநாடானது நடைபெற்றது.
- தேசிய வேளாண் மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கியின் தலைமையின் கீழ் கர்நாடகாவின் ராய்ச்சூரில் உள்ள வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்தால் இந்த மாநாடானது ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்த மாநாட்டின் கருத்துரு, " தினை உற்பத்தியில் பல ஈர்ப்புப் பகுதிகளை உருவாக்குதல் - தினை உற்பத்தியில் பல தொழில்முனைவோரை உருவாக்குதல்" என்பதாகும்.
- இது 2023 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட உள்ள சர்வதேச தினை ஆண்டிற்கான ஒரு தொடக்க விழா போன்றதாகும்.
- 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பெங்களூருவில் சர்வதேச தினைக் கண்காட்சி நடைபெறும் என்று கர்நாடக முதல்வர் பசவராஜ் பொம்மை அவர்கள் தெரிவித்தார்.
- தினை ஏற்றுமதியில் உலக அளவில் 5வது பெரிய நாடாக இந்தியா மாறியுள்ளது.

## 'இந்தியாவில் குற்றங்கள்' அறிக்கை - தேசிய குற்ற ஆவணக் காப்பகம்

- இது தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தினால் (NCRB) வெளியிடப்படும் ஒரு வருடாந்திர அறிக்கையாகும்.
- ஒட்டு மொத்தமாக, 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப் படும் போது, 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 7.6 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் மக்கள்தொகைக்கு 487.8 என்ற அளவாக இருந்த குற்ற விகிதமானது 2021 ஆம் ஆண்டில் 445.9 என்ற அளவாகக் குறைந்துள்ளது.
- உத்தரப் பிரதேச மாநிலத்தில், சாலைப் போக்குவரத்து விபத்துக்களில் அதிக அளவில் உயிரிழப்புகள் (24,711) பதிவாகியுள்ளது.
- தமிழகத்தில் சாலை விபத்து வழக்குகள் அதிகபட்சமாக பதிவாகியுள்ளன.
- தற்கொலை விகிதமானது ஒரு மில்லியன் மக்கள் தொகைக்கு 20 உயிரிழப்புகள் ஆக பதிவாகியுள்ளது (எப்போதும் பதிவு செய்யப்படாத மிக உயர்ந்த அளவு).
- 2021 ஆம் ஆண்டில் தற்கொலைக்கு உள்ளாக்கப்பட்டவர்களில், தினசரி ஊதியம் பெறுபவர்கள் தொழில் வாரியாக மிகப்பெரிய குழுவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.
- 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்தத் தற்கொலைகளில் "வேளாண் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின்" ஒட்டு மொத்தப் பங்கு 6.6 சதவீதமாக இருந்தது.
- மகாராஷ்டிராவில் அதிகபட்சத் தற்கொலைகள் (22207) பதிவாகியுள்ளன.

- தமிழ்நாடு (18,925), மத்தியப் பிரதேசம் (14,965) மற்றும் மேற்கு வங்காளம் (13,500) ஆகியவை தற்கொலைப் பதிவுப் பட்டியலில் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.
- ஜம்மு மற்றும் காஷ்மீரில் சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் கீழ் (UAPA) வழக்குகள் அதிகமாகப் பதிவு செய்யப் பட்டுள்ளன.
- ஜார்க்கண்ட் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் கடந்த ஆண்டு அதிக அளவில் வகுப்புவாதக் கலவர வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.
- 2020 ஆம் ஆண்டில் 56.5 சதவீதமாக இருந்த பெண்களுக்கு எதிரான குற்றங்களின் விகிதமானது (1 லட்சம் மக்கள் தொகையில் நடக்கும் சம்பவங்களின் எண்ணிக்கை) 2021 ஆம் ஆண்டில் 64.5 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- பெண்களுக்கு எதிரான பெரும்பாலான குற்றங்களில், 31.8 சதவீத வழக்குகள் 'கணவன் அல்லது அவரது உறவினர்களால் மேற்கொள்ளப்படும் கொடுமை' என்ற பிரிவின் கீழும், 20.8 சதவீத வழக்குகள் 'பெண்களின் கண்ணியத்தைச் சீர்குலைக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டவை' என்ற வகையின் கீழும், கடத்தல் வழக்குகள் 17.6 சதவீதம் என்றும், மற்றும் 7.4 சதவீதம் கற்பழிப்பு வழக்குகள் என்றும் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் ஆகும்.
- 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் உண்மையான ஒரு எண்ணிக்கையின் அடிப்படையில் உத்தரப் பிரதேசம் (56,083) இந்த அறிக்கையில் முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து ராஜஸ்தான் (40,738) மற்றும் மகாராஷ்டிரா (39,526) ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- கடந்த மூன்று ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட பெண்களுக்கு எதிரான குற்றங்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையுடன் நாகாலாந்து மாநிலம் ஒரு தனித்த இடத்தினைப் பெற்றுள்ளது.
- டெல்லி நகரானது மிகவும் பாதுகாப்பற்ற ஒரு பெருநகரமாகும்.
- அதைத் தொடர்ந்து மும்பை (12.76 சதவீதம்) மற்றும் பெங்களூரு (7.2 சதவீதம்) ஆகிய நகரங்கள் உள்ளன.
- ராஜஸ்தானில் அதிகக் கற்பழிப்பு வழக்குகள் பதிவாகியுள்ளன
- 2021 ஆம் ஆண்டில், குடும்ப வன்முறைச் சட்டத்தின் கீழ் இந்தியாவில் 507 வழக்குகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது இவ்வகையில் குறைவான வழக்குப் பதிவு மேற்கொள்ளப் பட்டுள்ளதை இந்த அறிக்கை எடுத்துக் காட்டுகிறது.

***தேசியக் குற்ற ஆவணக் காப்பகம்***

- தேசியக் குற்ற ஆவணக் காப்பகமானது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- தேசியக் குற்ற ஆவணக் காப்பகமானது, குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலையமைப்பு மற்றும் அமைப்புகள் மற்றும் மத்தியக் கைரேகை ஆய்வு வாரியம் ஆகியவற்றினை இயக்குகிறது.
- இதனால் வெளியிடப்படும் அறிக்கைகளாவன; இந்தியாவில் குற்றங்கள், இந்தியாவில் சிறைச்சாலைப் புள்ளிவிவரங்கள், இந்தியாவில் விபத்து மரணங்கள் மற்றும் தற்கொலைகள் ஆகியனவாகும்.

## ஒரு மூலிகை, ஒரு தரம்

- ஆயுஷ் அமைச்சகமானது, "ஒரு மூலிகை, ஒரு தரம்" என்ற ஒரு முன்னெடுப்பினை ஊக்குவித்து அதனை மேம்படுத்தச் செய்வதற்காக வேண்டி அமைச்சகங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பினை கொண்டு வரச் செய்வதற்காக ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையை எடுத்துள்ளது.
- இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதிக்கான மருந்தியல் ஆணையம் (ஆயுஷ் அமைச்சகம்) மற்றும் இந்திய மருந்தியல் ஆணையம் (சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்) ஆகியவற்றுக்கு இடையே இதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தானது.
- இணக்கமான மூலிகை மருந்துத் தரங்களை மேம்படுத்தச் செய்வதன் மூலம் பொது சுகாதாரத்தை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இந்தியாவில் எளிதாக வணிகம் செய்வதை மேம்படுத்துவதையும், இந்தியத் தாவரவியல் துறையின் ஒட்டு மொத்த வர்த்தகத்தையும் மேம்படுத்தச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உலகின் மிகப்பெரிய கார்பன் இழை உற்பத்தி ஆலை

- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனமானது குஜராத்தின் ஹசிரா நகரில், இந்தியாவின் முதலாவது மற்றும் உலகின் மிகப்பெரிய கார்பன் இழை உற்பத்தி ஆலையைக் கட்டமைக்கத் திட்டமிட்டுள்ளது.
- அந்நிறுவனத்தின் 45வது ஆண்டு பொதுக் கூட்டத்தில் அதன் தலைவர் முகேஷ் அம்பானி இது குறித்து அறிவித்தார்.
- இந்த ஆலை என்பது எண்ணெயிலிருந்து இரசாயனத்தினைப் பிரித்தெடுக்கும் அந்த நிறுவனத்தின் (O2C) ஒரு பகுதியாக உருவாக்கப்படும்.
- கார்பன் இழை என்பது தொழில்துறை மற்றும் வாகனத் துறையில் பல பயன்பாடுகளைக் கொண்டுள்ள ஒரு நவீன காலப் பொருளாகும்.
- இது அதிக கடத்துத்திறன் கொண்ட ஓர் இலகுரக ஆனால் வலுவான பொருளாகும்.
- மேலும், ஆட்டோமொபைல், கட்டுமானம் மற்றும் இராணுவத் துறைகளில் எஃகுக்கு ஒரு மாற்றாக இதன் தேவை அதிகரித்து வருகிறது.

## கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கு எதிராக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்தியாவின் முதல் தடுப்பூசி – செராவாக்

- இந்திய சீரம் நிறுவனம் (SII) மற்றும் உயிரித் தொழில்நுட்பத் துறை (DBT) ஆகியவை இணைந்து கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கு எதிராக உள்நாட்டிலேயே தயாரிக்கப் பட்ட இந்தியாவின் முதல் தடுப்பூசியை அறிமுகப் படுத்தியது.
- இந்தத் தடுப்பூசியை மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் (சுயாதீனப் பொறுப்பு) ஜிதேந்திர சிங் அறிமுகப்படுத்தினார்.
- இந்தத் தடுப்பூசிக்கு நான்கு மாற்றுருக்களுக்கு எதிராகச் செயல்படும் மனித பாப்பிலோமா வைரஸ் தடுப்பூசி (qHPV) என்று அதிகாரப் பூர்வமாகப் பெயரிடப் பட்டு உள்ளது.

- இது இந்திய சீரம் நிறுவனத்தினால் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டு அதற்கு ஜூலை மாதத்தில் இந்தியாவின் மருந்துக் கட்டுப்பாட்டு வாரியத்தால் அனுமதி வழங்கப் பட்டது.
- உலக சுகாதார அமைப்பின் (WHO) தரவுகளின்படி, உலகளவில் பதிவாகியுள்ள கர்ப்பப் பை வாய்ப் புற்றுநோய் பாதிப்புகளில் ஐந்தில் ஒரு பங்கிற்கும் அதிகமான பாதிப்புகள் இந்தியாவிலேயே பதிவாகியுள்ளது.




## 5வது ராஷ்ட்ரிய போஷான் மாஹ் (தேசிய ஊட்டச்சத்து மாதம்)





- மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது போஷான் அபியான் திட்டத்தின் ஒரு பகுதியாக 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 01 முதல் 30 வரை 5வது ராஷ்ட்ரிய போஷான் மாஹ் எனப்படும் தேசிய ஊட்டச்சத்து மாதத்தினைக் கொண்டாட உள்ளது.
- 2022 ஆம் ஆண்டு போஷான் மாஹ் கொண்டாட்டத்தின் மையக் கருத்துரு, "மஹிலா அவுர் ஸ்வஸ்த்யா" மற்றும் "பச்சா அவுர் ஷிக்சா" என்பதாகும்.

- போஷான் அபியான் என்ற திட்டமானது 6 வயதிற்குட்பட்டக் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து நலத் திட்ட வழங்கீடுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 2018 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினமான மார்ச் 08 ஆம் தேதியன்றுப் பிரதமர் அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டது.
- போஷான் என்பதன் விரிவாக்கம் "முழுமையான ஊட்டச்சத்து வழங்கீட்டிற்கான பிரதம மந்திரியின் உயர்நோக்குத் திட்டம் அல்லது அபியான்" என்பதாகும்.
- ஊட்டச்சத்து உள்ளடக்கம், விநியோகம், பரவல் மற்றும் உடல்நலம், ஆரோக்கியம் ஆகியவற்றை மேம்படுத்தும் திட்டப் பலன்கள், நோய் மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாட்டிற்கான நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்தும் திட்டப் பலன்களை வலுப்படுத்துவதற்கான ஒரு ஆதரவு முயற்சியாக மிஷன் போஷான் 2.0 திட்டத்தினை அரசாங்கம் தொடங்கியுள்ளது.

## அர்த் கங்கா

- ஜல் சக்தி அமைச்சகமானது நமாமி கங்கை திட்டத்தின் கீழ் 'அர்த் கங்கா' என்ற புதிய முன்னெடுப்பினைச் சமீபத்தில் தொடங்கியது.
- இது கங்கை நதிக்கரையில் அமைந்தப் பகுதிகளில் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சுழிய அளவு செலவினம் இன்றி மேற்கொள்ளப்படும் இயற்கை வேளாண்மை அதன் முதல் நிலையாகும்.
- ஆற்றின் இரு கரைகளிலும் 10 கி.மீ தொலைவிற்கு இரசாயனமற்ற வேளாண்மை மற்றும் கோவர்தன் யோஜனா மூலம் பசுவின் சாணத்தை உரமாக மாற்றுதல் ஆகியவை இதில் அடங்கும்.
- இது விவசாயிகளுக்கு 'ஒவ்வொரு சொட்டிலும், அதிக வருமானம்' மற்றும் 'கோபர் தன்' ஆகியவற்றின் பலன்களைப் பெற வழி வகை செய்யும்.
- நமாமி கங்கை திட்டம் ஜல் சக்தித் துறை அமைச்சகத்தின் கீழ் இயக்கப்படுகிறது.
- இது தேசியத் தூயக் கங்கை திட்டத்தினால் செயல்படுத்தப்படுகிறது.



## பாம்புக்கடி குறித்த இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபையின் ஆய்வு அறிக்கை

- இந்திய மருத்துவ ஆராய்ச்சிச் சபையானது (ICMR) நாட்டின் அனைத்துப் புவியியல் பகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் அமைந்த 14 மாநிலங்களில் பாம்புக்கடியால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த முதல் ஆய்வை நடத்தி வருகிறது.
- இமாச்சல பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், அருணாச்சலப் பிரதேசம், ராஜஸ்தான், மகாராஷ்டிரா, கேரளா, தமிழ்நாடு, ஒடிசா, மேற்கு வங்காளம், உத்தரகாண்ட், மேகாலயா, மிசோரம் மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்கள் இந்த ஆய்வில் சேர்க்கப் பட்டுள்ளன.
- புவியியல் ரீதியாக, பாம்பு கடித்தால் ஏற்படும் பாதிப்புகளானது, இந்தியாவில் அதிகமாக காணப்படும், வெப்பமண்டல மற்றும் துணை வெப்பமண்டலப் பகுதிகளில் அதிகளவில் தாக்கத்தினை விளைவிக்கின்றன.
- உலகெங்கிலும் உள்ள மிகப் பழமையான மற்றும் மிகப்பெரிய மருத்துவ ஆராய்ச்சி அமைப்புகளில் இந்திய மருத்துவ ஆராய்ச்சிச் சபையும் ஒன்றாகும்.
- உயிரி மருத்துவ ஆராய்ச்சியை உருவாக்குதல், ஒருங்கிணைத்தல் மற்றும் ஊக்குவித்தல் ஆகியவற்றுக்கான உயர்நிலை அதிகாரம் கொண்ட ஒரு அமைப்பு இது ஆகும்.





## மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்தின் அறிக்கை

- ஊழல் செய்யும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு எதிராக மத்திய ஊழல் தடுப்பு ஆணையம் வழங்கியப் பரிந்துரைகளைப் புறக்கணித்த சில அரசு நிறுவனங்களின் பட்டியலில் இரயில்வே அமைச்சகம் முதலிடத்தில் உள்ளது.
- இரயில்வே நிர்வாகத்துடன், இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கி (SIDBI), பாங்க் ஆஃப் இந்தியா மற்றும் டெல்லி ஜல் வாரியம் ஆகியவற்றில் தலா நான்கு வழக்குகள் பதிவாகியுள்ளன.
- மகாநதி நிலக்கரிச் சுரங்க நிறுவனம் அதன் மூன்று அதிகாரிகளை வழக்கிலிருந்துப் பாதுகாத்துள்ளது.

## 25 வருட இந்திய-நாகா அமைதிப் பேச்சுவார்த்தை

- 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 01 ஆம் தேதியன்று NSCN (I-M) அமைப்பானது “இந்திய-நாகா” போர் நிறுத்தத்தின் 25வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது.
- 1997 ஆம் ஆண்டு ஜூலை 25 ஆம் தேதியன்று இந்திய அரசுடன் NSCN-IM அமைப்பு ஒரு போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

- இந்தியாவிற்கும் மியான்மருக்கும் இடைப்பட்டப் பகுதியில் நாகா பழங்குடி இனத்தவர் வசிக்கின்றனர்.




## இந்தியாவில் மாருதி நிறுவனம்

- மாருதி சுசுகி நிறுவனம் இந்தியாவில் 40 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.
- மாருதி உத்யோக் லிமிடெட் நிறுவனமானது இந்தியாவில் 1981 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- இது ஒரு பொதுத்துறை நிறுவனமாக இருந்தது.
- 1982 ஆம் ஆண்டில், ஜப்பானிய வாகனத் தயாரிப்பு நிறுவனமான சுசுகி, மாருதி நிறுவனத்துடன் ஒரு கூட்டு முயற்சியைத் தொடங்கியது.
- இது நாட்டின் மிகப்பெரிய கார் தயாரிப்பு நிறுவனமாகும்.
- இந்த சமயத்தில், குஜராத்தில் உள்ள ஹன்சல்பூரில் அமைக்கப்பட்டுள்ள இந்த நிறுவனத்தின் மின்சார வாகன மின்கல அடுக்குகள் தயாரிப்பு ஆலையையும், ஹரியானாவின் கார்கோடாவில் அமைக்கப்பட்டுள்ள பயணிகள் வாகனத் தயாரிப்பு ஆலையையும் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் திறந்து வைத்தார்.

## பெண்களுக்கு எதிரான இணையவெளி குற்றங்கள்

- பெண்களுக்கு எதிரான இணையவெளி குற்றங்களின் எண்ணிக்கையானது 2021 ஆம் ஆண்டில் 18.4 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- பெண்களுக்கு எதிரான இணையவெளி குற்றங்களில் 61 சதவீத பங்கைக் கொண்டு உள்ள முதல் ஐந்து மாநிலங்களில் 2021 ஆம் ஆண்டில் 2,243 வழக்குகளுடன் கர்நாடகா முதலிடத்திலும், 1,687 வழக்குகளுடன் மகாராஷ்டிரா இரண்டாம் இடத்திலும், 958 வழக்குகளுடன் உத்தரப் பிரதேசம் மூன்றாம் இடத்திலும் உள்ளன.
- பெண்களுக்கு எதிரான இணையவெளி குற்றங்கள் உட்பட அனைத்து இணையவெளி குற்றங்களிலும் தெலுங்கானா மாநிலம் தான் அதிக பங்கைக் கொண்டுள்ளது.
- தெலுங்கானாவுக்கு அடுத்த படியாக உத்தரப் பிரதேசம் (8,829), கர்நாடகம் (8,136), மகாராஷ்டிரம் (5,562), மற்றும் அஸ்ஸாம் (4,846) ஆகியவை இடம் பெற்றுள்ளன.

- இது தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்ட ஒரு அறிக்கையாகும்.
- பெண்களுக்கு எதிரான இணையவெளி குற்றங்களில் இணைய வெளி சார்ந்த அச்சுறுத்தல் மற்றும் மிரட்டல், இணைய வெளி ஆபாசப் படங்கள், ஆபாசமான விஷயங்களை உள் இடுகையிடுதல், பின்தொடர்தல், அவதூறு செய்தல், உருமாற்றம் செய்தல் போன்றவை அடங்கும்.

## இணையவெளி பாதுகாப்புப் பயிற்சி "சினெர்ஜி"

- மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் இந்தியக் கணினி அவசரநிலைச் செயல்பாட்டுக் குழுவானது (CERT-In), சிங்கப்பூரின் இணையவெளிப் பாதுகாப்பு முகாமையுடன் இணைந்து, 13 நாடுகளுக்கான "சினெர்ஜி" என்ற ஒரு இணையவெளிப் பாதுகாப்புப் பயிற்சியினை வெற்றிகரமாகத் திட்டமிட்டு நடத்தியது.
- தேசியப் பாதுகாப்புச் சபைச் செயலகத்தின் தலைமையில் இந்தக் குழு இந்தியா தலைமையில் வழி நடத்தப் படுகிறது.
- இப்பயிற்சியின் கருத்துரு, "பிணைத்தொகை தொடர்பான தாக்குதல்களை எதிர்க்கச் செய்வதற்கான இணைய நெகிழ்திறன் வலையமைப்பினை உருவாக்குதல்" என்பது ஆகும்.




## குறை தீர்ப்புக் குறியீடு

- 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்கான குறை தீர்ப்புக் குறியீடானது நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொது மக்கள் குறை தீர்ப்புத் துறையால் (DARPG) வெளியிடப் பட்டுள்ளது.
- இந்த அறிக்கையின் படி, இந்தியத் தனித்துவ அடையாள ஆணையமானது அனைத்து அமைச்சகங்கள்/ துறைகளில் பொதுமக்கள் குறைகளைத் தீர்ப்பதில் முதலிடத்தில் உள்ளது.
- இந்தியத் தனித்துவ அடையாள ஆணையம் என்பது 2016 ஆம் ஆண்டு ஜூலை 12 ஆம் தேதியன்று நிறுவப்பட்ட ஒரு சட்டப்பூர்வ ஆணையமாகும்.

- இது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் அதிகார வரம்பிற்குக் கீழ் செயல்படுகிறது.
- இந்தியாவில் வசிப்பவர்கள் அனைவருக்கும் 12 இலக்க ஒரு தனிப்பட்ட அடையாள எண்ணை (ஆதார்) வழங்க இந்திய தனித்துவ அடையாள ஆணையத்திற்குக் கட்டளை இடப் பட்டுள்ளது.

## தெற்கு மண்டல சபைக் கூட்டம்

- 30வது சபைக் கூட்டமானது கேரளாவின் தலைமையில் நடத்தப் பட்டது.
- மத்திய உள்துறை அமைச்சர் இந்தச் சபையின் தலைவர் ஆவார்.
- மத்திய-மாநில உறவுகள் மற்றும் உறுப்பினர் மாநிலங்களுக்கிடையேயான உறவுகள் குறித்த விவாதங்களுக்கான ஒரு தளத்தினை இந்தக் கூட்டம் வழங்குகிறது.
- இது ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி ஒன்றியப் பிரதேசம் ஆகியப் பகுதிகளை உள்ளடக்கியது.


## தேசிய சட்ட சேவைகள் ஆணையம்

- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், நீதிபதி சந்திரசூட் அவர்களைத் தேசிய சட்ட சேவைகள் ஆணையத்தின் (NALSA) செயல் தலைவராக நியமித்துள்ளார்.
- நீதிபதி U.U.லலித் இந்தியாவின் 49வது தலைமை நீதிபதியாக (CJI) பதவி உயர்த்தப் பட்டதையடுத்து, காலியான அப்பதவியை இவர் ஏற்கிறார்.
- தேசிய சட்ட சேவைகள் ஆணையமானது 1987 ஆம் ஆண்டு சட்ட சேவைகள் அதிகாரச் சபைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.
- சமூகத்தின் நலிந்தப் பிரிவினருக்கு இலவச சட்ட சேவைகளை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியத் தலைமை நீதிபதி அவர்கள் தேசிய சட்ட சேவைகள் ஆணையத்தின் தலைமைப் புரவலராகவும் இந்திய உச்ச நீதிமன்றத்தின் இரண்டாவது மூத்த நீதிபதி இந்த ஆணையத்தின் நிர்வாகத் தலைவராகவும் உள்ளார்.

## ஐஎன்எஸ் விக்ராந்த் தொடக்க விழா

- கொச்சி தளத்தில், ஐஎன்எஸ் விக்ராந்த் கப்பல் இந்தியக் கடற்படையில் இணைக்கப் பட்டதைக் குறிக்கும் வகையில் அங்கு அமைக்கப்பட்டுள்ள ஒரு நினைவுப் பலகையை பிரதமர் மோடி அவர்கள் திறந்து வைத்தார்.
- இந்தக் கப்பலானது, இந்தியக் கடற்படையின் உள்நாட்டுப் போர்க்கப்பல் வடிவமைப்பு வாரியத்தினால் (WDB) வடிவமைக்கப்பட்டு, துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள பொதுத்துறை கப்பல் கட்டும் நிறுவனமான கொச்சின் ஷிப்யார்ட் லிமிடெட் மூலம் கட்டமைக்கப்பட்டது.
- இந்தியாவின் கடற்படை வரலாற்றில் இதுவரை கட்டமைக்கப்பட்ட, இரண்டு கால்பந்து மைதானங்களின் அளவிலான மிகப்பெரிய கப்பல் இதுவாகும்.

- இது 7,500 கடல் மைல்கள் தொலைவு வரை பயணிக்கும் திறனுடன், அதிகபட்சமாக 28 நாட் வேகம் இயங்கக் கூடிய வகையில் (ஒரு மணி நேரத்திற்கு 52 கி.மீ.) வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இது 20,000 கோடி ரூபாய் செலவில் கட்டமைக்கப்பட்டுள்ளது.
- இது 262 மீட்டர் நீளமுடையக் கப்பலாகும்.
- 45,000 டன் எடை கொண்ட இந்தப் போர்க்கப்பலானது ரூ. 20,000 கோடி செலவில் கட்டமைக்கப் பட்டுள்ளது.
- இது 18 மாடிகளைக் கொண்ட ஒரு மிதக்கும் நகரம் என்று அழைக்கப்படுகிறது.
- அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, ரஷ்யா, பிரான்ஸ் மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் இத்தகையப் பெரிய போர்க் கப்பல்களை உருவாக்கும் திறன் பெற்றுள்ளன.





## கிராமப் பாதுகாப்புக் காவலர்கள் திட்டம் 2022

- இது பாதுகாப்புக் கூறுகளைக் கொண்ட ஒரு திட்டமாகும்.
- இது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவுடன் இணைந்து தொடங்கப்பட்டது.
- இது ஜம்மு & காஷ்மீர் பகுதியில் தான் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது ஜம்முவின் எல்லைப் பகுதிகளில் பாதுகாப்பை மேம்படுத்தும் ஒரு முயற்சியாகும்.
- உள்ளூர்ச் சமூகங்களைச் சேர்ந்த தன்னார்வலர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக இந்திய இராணுவம் மற்றும் காவல்துறை ஆகிய இரண்டும் இந்தத் திட்டத்தில் ஈடுபட்டு உள்ளன.

## ஹைதராபாத் விடுதலை நாள்

- இந்திய அரசு 2022 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையில் ஆண்டு முழுவதும் "ஹைதராபாத் விடுதலை நாளினை" நினைவு கூருவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- கலாச்சார அமைச்சகமானது இந்தத் தொடக்க நிகழ்வை ஏற்பாடு செய்யும்.
- மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் இந்தத் தினத்தினை முறையே மராத்வாடா விடுதலை நாளாகவும், ஹைதராபாத்-கர்நாடகா விடுதலை நாளாகவும் ஏற்கனவே அங்கீகரித்திருந்தாலும், இந்த நாளை அந்த மூன்று மாநிலங்களிலும் கடைப்பிடிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- 1948 ஆம் ஆண்டு போலோ என்ற நடவடிக்கை மூலம் ஹைதராபாத்தை இந்தியா கைப்பற்றியதை இத்தினம் கௌரவப் படுத்துகிறது.
- ஹைதராபாத் சமஸ்தானத்தின் கடைசி நிஜாம் ஆன ஒஸ்மான் அலி கான் அசஃப் ஜா VII, 1947 ஆம் ஆண்டில் இந்திய ஒன்றியத்தில் சேர முன்வந்தாலும், பின்னர் அவரே அதை நிராகரித்தார்.
- சர்தார் படேலின் வழிகாட்டுதலின் கீழ் இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப் பட்டது.




## 60 நாள் சிறப்பு மகப்பேறு விடுப்பு

- மத்திய அரசில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கு 60 நாட்கள் சிறப்பு மகப்பேறு விடுப்பு வழங்கப்பட உள்ளது.
- பிரசவத்திற்கு முன் அல்லது பிரசவத்தின் போது குழந்தை இறந்தால் அல்லது பிறந்த சிறிது நேரத்திலேயே குழந்தை இறந்துவிட்டால் விடுப்பு வழங்கப்படும்.
- இரண்டுக்கும் குறைவான குழந்தைகளைக் கொண்ட மத்திய அரசின் பெண் ஊழியர்களுக்கு மட்டுமே இந்த விடுப்பானது வழங்கப்படும்.

- பணியாளர், பொதுக் குறைகள் மற்றும் ஓய்வூதியத் துறை அமைச்சகத்திற்கு இணங்க, பணியாளர் மற்றும் பயிற்சித் துறையால் இது தொடர்பான உத்தரவானது வெளியிடப் பட்டது.




## மொத்த மருந்து உற்பத்தி தொழில்துறைப் பூங்காக்களை மேம்படுத்துதல்

- இமாச்சலப் பிரதேசம், குஜராத் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களில் மொத்த மருந்து உற்பத்தி தொழில்துறைப் பூங்காக்களை அமைப்பதற்கான சில முன்மொழிதல்களுக்கு மருந்துத் துறை சமீபத்தில் 'கொள்கை சார்ந்த' ஒப்புதலை அளித்துள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், 13 மாநிலங்களில் இருந்து மொத்த மருந்து உற்பத்தி தொழில் துறைப் பூங்காக்களை அமைப்பதற்கான முன்மொழிவுகள் பெறப்பட்டன.
- இந்தத் திட்டம் அதிகளவு மருந்து உற்பத்தியின் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கச் செய்வதோடு, இறக்குமதியினைச் சார்ந்திருக்கும் ஒரு நிலையை மாற்றுவதற்காக ஒரு தரமான சோதனை மற்றும் உள்கட்டமைப்பை எளிதாக அணுகுவதற்கான வழி வகையினைச் செய்கிறது.



## கர்தவ்ய பாதை

- ராஜ்பாத் மற்றும் மத்திய எழில்முற்ற வளாகப் பாதைகளின் பெயரை கர்தவ்ய பாதை என்று உள்ளதாக மாற்ற இந்திய அரசு அறிவித்துள்ளது.
- முன்னதாக, ரேஸ்கோர்ஸ் சாலை என்று இருந்த, பிரதமர் இல்லம் அமைந்துள்ள சாலையின் பெயரை லோக் கல்யாண் மார்க் என்று மோடி அவர்களின் அரசு மாற்றியது.
- கர்தவ்யா பாதையில், நேதாஜி சிலை முதல் இராஷ்டிரபதி பவன் வரையிலான முழு நிழற்சாலை மற்றும் இதரப் பகுதிகளும் அடங்கும்.
- இந்தப் பாதையானது, ரைசினா மலையில் உள்ள இராஷ்டிரபதி பவனில் இருந்து விஜய் சௌக் மற்றும் இந்தியா கேட் வழியாக டெல்லியில் உள்ள தேசிய மைதானத்தினைச் சென்றடைகிறது.




## உலகின் 3வது பெரிய பொருளாதாரம்

- இந்திய நாடானது 2029 ஆம் ஆண்டிற்குள் உலகின் மூன்றாவதுப் பெரியப் பொருளாதாரமாக மாற உள்ளது.
- தற்போதைய வளர்ச்சி விகிதத்தில், இந்தியா 2027 ஆம் ஆண்டில் ஜெர்மனியையும், 2029 ஆம் ஆண்டில் ஜப்பானையும் மிஞ்சும் என்று பாரத ஸ்டேட் வங்கி அறிக்கை கூறியுள்ளது.
- உலக அளவில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கு தற்போது 3.5 சதவீதமாக உள்ளது.
- 2027 ஆம் ஆண்டில் இந்தியாவின் பங்கு, உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஜெர்மனியின் தற்போதையப் பங்கான 4 சதவீதத்தை விஞ்ச வாய்ப்புள்ளது.
- இருப்பினும், தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில், இந்தியா இன்னும் உலகின் பெரும்பாலான பொருளாதாரங்களை விட பின்தங்கியே உள்ளது.
- உலக வங்கியின் தரவுகளின்படி, 2021 ஆம் ஆண்டில் இந்தியாவின் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2,277 டாலராக இருந்த அதே சமயம் ஐக்கிய ராஜ்ஜியத்தின் தனிநபர் வருமானம் 47,334 டாலராக இருந்தது.
- சீனாவின் தனிநபர் வருமானம் ஆனது, 2021 ஆம் ஆண்டில் இந்தியாவின் 12,556 டாலர் என்ற மதிப்பை விட கிட்டத்தட்ட ஆறு மடங்கு அதிகமாக இருந்தது.

## PM SHRI யோஜனா

- ஆசிரியர் தினத்தையொட்டி, எழுச்சி பெறும் இந்தியாவிற்கான பிரதான் மந்திரி பள்ளிகள் (PM-SHRI) யோஜனா திட்டத்தின் கீழ் இந்தியா முழுவதும் 14,500 பள்ளிகள் மேம்படுத்தப் படும் என்றும், அவற்றின் தரம் உயர்த்தப்படும் என்றும் பிரதமர் அவர்கள் அறிவித்துள்ளார்.
- PM-SHRI பள்ளிகள் கல்வியை வழங்குவதற்கான நவீன முறையில், பல மாற்றங்கள் நிறைந்த மற்றும் ஒரு முழுமையான முறையைக் கொண்டிருக்கும்.
- சமீபத்தியத் தொழில்நுட்பம், திறன்மிகு வகுப்பறைகள், விளையாட்டு மற்றும் பலவற்றை உள்ளடக்கிய நவீன உள்கட்டமைப்புகளிலும் சேர்த்து இந்தத் திட்டத்தின் கீழ் கவனம் செலுத்தப்படும்.





## பட்டியலிடப்பட்ட சாதியினர் பட்டியல்

- உத்தரப் பிரதேசத்தில் 17 இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைப் பட்டியலிடப்பட்ட சாதியினராக அறிவிக்கும் உத்தரப் பிரதேச அரசின் ஒரு உத்தரவைச் சமீபத்தில், அலகாபாத் உயர் நீதிமன்றம் ரத்து செய்தது.
- அரசியலமைப்பின் 341வது சட்டப்பிரிவின் விதிகளின்படி, பாராளுமன்றத்தால் உருவாக்கப் பட்ட சட்டத்தைத் தவிர, எந்தவொரு சாதியையும் அல்லது குழுவையும் ஒரு மாநிலத்தின் பட்டியலிடப்பட்ட சாதியினர் பட்டியலில் சேர்க்க முடியாது என்று அந்தநீதிமன்றம் கூறியது.
- குடியரசுத் தலைவரின் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு மாற்றத்தினைச் சட்டப் படி பாராளுமன்றத்தால் மட்டுமே மாற்றச் செய்ய முடியும் என்று 341வது சட்டப்பிரிவு கூறுகிறது.

## 2021 ஆம் ஆண்டில் முதியோர் கொலை நிலவரம்

- ❖ சமீபத்தில் தேசியக் குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்ட இந்தியக் குற்ற அறிக்கையின் படி இத்தகவலானது கூறப்படுகிறது.
- ❖ 2021 ஆம் ஆண்டில் நாட்டிலேயே அதிக முதியோர் கொலைகள் நடந்த மாநிலமாக தமிழ்நாடு உள்ளது.
- ❖ முதியவர்கள் சம்பந்தப்பட்ட கொலைகளில் இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான கொலைகள் மகாராஷ்டிராவில் பதிவாகியுள்ளன.
- ❖ சமீப ஆண்டுகளில் முதல் முறையாக 2021 ஆம் ஆண்டில், முதியோர் கொலைகளில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது.




- ❖ முதியோர்களின் கொலைகளைப் பொறுத்த வரையில் தமிழகம்தான் குற்ற விகிதத்திலும் முதலிடத்தில் உள்ளது.
- ❖ ஒரு இலட்சம் மக்கள்தொகையில் எத்தனை குற்றங்கள் நிகழ்கின்றன என்பதை மதிப்பிட்டுக் குற்ற விகிதம் கணக்கிடப்படுகிறது.
- ❖ தமிழ்நாட்டில் கணிக்கப்பட்ட முதியோர்களின் சதவீதமானது இந்திய நாட்டிலேயே இரண்டாவது அதிகபட்ச அளவாக 13.6 % ஆக இருந்தது.
- ❖ கேரளாவில் 60 வயதுக்கு மேற்பட்டோர் அம்மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 16.5% ஆக அதிக அளவில் உள்ளனர்.
- ❖ இத்தகவலானது, மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தினால் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டிற்கான இந்தியாவில் முதியோர் என்ற அறிக்கையின் படி கூறப்பட்டுள்ளது.

## போஷன் அபியான் திட்டம் குறித்த 4வது முன்னேற்ற அறிக்கை

- 'இந்தியாவில் ஊட்டச்சத்து முன்னேற்றத்தைப் பாதுகாத்தல்: தொற்றுநோய்க் காலங்களில் போஷன் அபியான் திட்டம்' என்ற தலைப்பில் நிதி ஆயோக் ஓர் அறிக்கையினை வெளியிடப்பட்டது.
- 17 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் மட்டுமே 12-23 மாத வயதுடைய குழந்தைகளில் 75 சதவீதத்திற்கும் அதிகமானோர் முழு நோய்த் தடுப்பு மருந்து பெற்று உள்ளனர்.
- அதே சமயம் 11 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் 25 சதவீதத்திற்கும் குறைவாகவே அது உள்ளது என்று இந்த அறிக்கை கூறியுள்ளது.
- மத்திய அரசின் போஷன் அபியான் திட்டத்தைச் செயல்படுத்துவதில் மகாராஷ்டிரா அனைத்து மாநிலங்களிலும் முதல் இடத்தைப் பெற்றது.
- இதில் ஆந்திரப் பிரதேசம் இரண்டாவது இடத்தையும், குஜராத் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன.
- இதில் தமிழ்நாடு 4வது இடத்தினைப் பெற்றது.
- கோவிட் பெருந்தொற்று காலத்தில் போஷன் அபியான் திட்டத்தினை செயல் படுத்துவதற்குத் தேவையான மனித வளங்களை 100 சதவீதம் முழுமையாக ஆட் சேர்ப்பு செய்த மாநிலங்களில் ஆந்திரப் பிரதேச மாநிலம் முதலிடத்தில் உள்ளது.
- அங்கன்வாடி பணியாளர்களுக்கு அலைபேசி வழங்குதலிலும் ஆந்திரப் பிரதேச மாநிலம் முதலிடத்தில் உள்ளது.
- சமூக சுகாதார மையங்களிலும், குழந்தைகள் மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கான சேவைகள் மற்றும் துணை செவிலியர் மருத்துவச்சிகள் ஆட்சேர்ப்பு ஆகியவற்றிலும் ஆந்திரப் பிரதேச மாநிலம் அதிக மதிப்பெண் பெற்றுள்ளது.


## சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி

- இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள், நீதிபதி M.துரைசாமி அவர்கள் தற்காலிகமாக தற்காலிகத் தலைமை நீதிபதி பதவியை வகிப்பார் என்று அறிவித்தார்.
- முனீஸ்வர் நாத் பண்டாரி அவர்கள் ஓய்வு பெறும் தேதியான செப்டம்பர் 13 ஆம் தேதி முதல் இந்த நியமனம் அமலுக்கு வரும்.

## 2021 ஆம் ஆண்டில் தடுப்புக் காவல் நிலவரம்

- 1.1 லட்சத்துக்கும் அதிகமானோர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பதன் மூலம், முந்தைய ஆண்டை விட இந்த ஆண்டு இதன் அளவு 23.7% உயர்ந்துள்ளது.
- தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தால் வெளியிடப்பட்ட சமீபத்திய குற்றப் புள்ளி விவரங்களின் படி இத்தகவலானது கூறப்பட்டுள்ளது.
- தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள மொத்தம் 24,500 பேர் கடந்த ஆண்டு இறுதி வரை காவலில் வைக்கப்பட்டுள்ளனர் அல்லது இன்னும் அதிகமாக தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ள நிலையில் இது 2017ஆம் ஆண்டிலிருந்து மிக அதிகமாக உள்ளது.

❖ குண்டர் சட்டம் (மாநிலம் மற்றும் மத்திய அளவில்) (29,306) மற்றும் போதைப் பொருட்கள் மற்றும் உளவியல் சார்ந்த போதைப் பொருள்கள் ஆகியவற்றில் சட்ட விரோதமாக கடத்துதலைத் தடுத்தல் சட்டம், 1988 (1,331) ஆகியவற்றின் கீழ் தடுப்புக் காவலில் வைப்பது குறித்தத் தரவுகளை தேசியக் குற்ற ஆவணக் காப்பகம் பதிவு செய்துள்ளது.




## சமாஜிக் அதிகாரி ஷிவிர்

❖ இது ALIMCO, நாக்பூர் மாநகராட்சிக் கழகம் (NMC) மற்றும் நாக்பூர் மாவட்ட நிர்வாகம் ஆகியவற்றுடன் இணைந்து சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையால் ஏற்பாடு செய்யப் பட்டது.

❖ இது 'ராஷ்ட்ரிய வயோஸ்ரீ யோஜனா' (RVY திட்டம்) மற்றும் 'திவ்யங்ஜன்' ஆகியவற்றின் கீழ் முதியோர்களுக்கு உதவிகர மற்றும் துணை உபகரணங்களை விநியோகம் செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது.

## WEST முன்னெடுப்பு

❖ முதன்மை அறிவியல் ஆலோசகர் பிரவீந்தர் மைனி, அறிவியலில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்துவதற்காக வேண்டி மகளிர் பொறியியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னெடுப்பினை (WEST) தொடங்கி வைத்துள்ளார்.

❖ WEST என்பது ஆராய்ச்சிப் பகிர்வு மற்றும் ஆராய்ச்சி & மேம்பாட்டில் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்காக ஒரு வலையமைப்பினைப் பயன்படுத்துகின்ற ஒரு புதிய I-STEM (இந்திய அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் பொறியியலின் ஆய்விடல்) ஆகும்.

❖ I-STEM அமைப்பானது PM-STIAC திட்டத்தின் கீழ் வருகிறது (அறிவியல் பூர்வமாக பல பிரிவுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டை அனுமதிக்கிறது).

❖ மற்ற திட்டங்கள்: KIRAN (பெண் அறிவியலாளர்களை ஊக்குவித்தல்); CURIE (மகளிர் பல்கலைக் கழகங்களில் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்); விக்யான் ஜோதி (உயர் நிலைப் பள்ளியில் படிக்கும் பெண்கள் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணித அறிவைப் பெற முயற்சித்தல்) ஆகியனவாகும்.

## பணைய தீநிரல் எனப்படும் மென்நிரலுக்கு எதிரான பயிற்சி

❖ தேசியப் பாதுகாப்புச் சபைச் செயலகம் (NSCS) மற்றும் ஐக்கிய இராஜ்ஜிய அரசு ஆகியவை இணைந்து 26 நாடுகளுக்கான காணொளி வாயிலான இணையவெளிப் பாதுகாப்புப் பயிற்சியை நடத்தின.

❖ இந்தப் பயிற்சியானது, பிரிட்டிஷ் வான்வெளி (BAE) அமைப்புகளால் உருவாக்கப்பட்ட, இந்தியா தலைமையிலான சர்வதேசப் பணைய தீநிரல் எனப்படும் மென்நிரலுக்கு எதிரான முன்னெடுப்பு நெகிழ்திறன் செயற்குழுவின் ஒரு பகுதியாகும்.

## 7வது பெங்களூரு விண்வெளி சார்ந்த கண்காட்சி 2022

❖ இது இஸ்ரோ, இந்திய தேசிய விண்வெளி மேம்பாட்டு மற்றும் அங்கீகார மையம் (IN-SPACE) மற்றும் நியூஸ்பேஸ் இந்தியா லிமிடெட் ஆகியவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

❖ இந்த நிகழ்வின் போது ஒரு சர்வதேச மாநாடும் நடத்தப்படும்.

❖ இந்த மாநாட்டின் கருத்துரு, 'இந்தியாவில் புதிய விண்வெளி நடவடிக்கைகளை மேம்படுத்துதல்' என்பதாகும்.

❖ பங்குதாரர் நாடு - ஆஸ்திரேலியா; முக்கிய நாடு - ஐக்கிய இராஜ்ஜியம்; விருந்தினர் நாடு – நெதர்லாந்து.




## TB முக்த் பாரத் அபியான்

❖ குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் பிரதான் மந்திரி TB முக்த் பாரத் அபியான் திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.

❖ பிரதான் மந்திரி TB முக்த் பாரத் அபியான் திட்டமானது 2025 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவில் இருந்து காசநோயை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- நிலையான மேம்பாட்டு இலக்கில் (SDG) குறிப்பிடப்பட்டுள்ள 2030 ஆம் ஆண்டிற்கு பல ஆண்டுகள் முன்னதாகவே இந்தியாவில் காசநோய்க்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் ஒரு தனித்துவமான அழைப்பினை விடுத்துள்ளார்.
- முர்மு அவர்கள் நி-க்சய் மித்ரா முன்னெடுப்பினையும் தொடங்கி வைத்தார்.
- நி-க்சய் மித்ரா முன்னெடுப்பானது, சிகிச்சையில் இருக்கும் காசநோயாளிகளுக்கு உதவ முன்வரும் நன்கொடையாளர்களுக்கு ஒரு தளத்தை வழங்கும்.
- நன்கொடையாளர்கள் நி-க்சய் மித்ராக்கள் என்று அழைக்கப்படுவார்கள்.
- மேலும் இந்த நன்கொடையில் ஊட்டச்சத்து சார்ந்த, கூடுதல் நோய் கண்டறிதல் மற்றும் முழு அளவிலான ஆதரவு ஆகியவை அடங்கும்.





## மிரட்டிப் பணம் பறித்தல் தொடர்பான வழக்குகள்

- 2014 ஆம் ஆண்டு முதல், அதிக தேசத்துரோக வழக்குகள் பதிவில் அசாம் முதல் இடத்திலும், மிரட்டிப் பணம் பறித்தல் மற்றும் அச்சுறுத்திப் பணம் பறித்தல் போன்ற குற்றங்களின் விகிதத்தில் நாகாலாந்து முதலிடத்தில் உள்ளது.
- இதில் அசாம் மாநிலத்தினைத் தொடர்ந்து ஹரியானா, ஜார்க்கண்ட், கர்நாடகா ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- தேசியக் குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்ட ஒரு அறிக்கையின்படி இத்தகவலானது தெரிவிக்கப் பட்டுள்ளது.

## மனித மேம்பாட்டுக் குறியீடு 2021

- ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்ட அமைப்பானது சமீபத்தில், மனித மேம்பாட்டுக் குறியீட்டினை வெளியிட்டது.
- முதன்முறையாக, உலக மனித மேம்பாட்டுக் குறியீடு (HDI) ஆனது தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக வீழ்ச்சியடைந்துள்ளது.
- நிலையான மேம்பாட்டிற்கான 2030 ஆம் ஆண்டுச் செயல்பாட்டு நிரல் மற்றும் பாரீஸ் உடன்படிக்கையை ஏற்றுக் கொண்ட பிறகான போக்கில் உலகை மீண்டும் இது கொண்டு சென்றது.

- 2020 அல்லது 2021 ஆம் ஆண்டில் சுமார் 90 சதவீத நாடுகள் தங்கள் மனித மேம்பாட்டுக் குறியீட்டின் மதிப்பில் சரிவு பதிவாகியுள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- 2021 ஆம் ஆண்டு மனித மேம்பாட்டுக் குறியீட்டில் சுவிட்சர்லாந்து, நார்வே மற்றும் ஐஸ்லாந்து ஆகிய நாடுகள் முதலிடத்தில் உள்ளன.
- 2021-2022 ஆம் ஆண்டில் 191 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் இந்தியா 132வது இடத்தில் உள்ளது.
- கடந்த ஆண்டு இந்தியா 131வது இடத்தில் இருந்தது.
- இந்தியாவின் சமீபத்திய மனித மேம்பாட்டுக் குறியீட்டு மதிப்பானது (0.633) 2020 ஆம் ஆண்டு அறிக்கையின் 0.645 என்ற மதிப்பை விடக் குறைவாக, இந்திய நாட்டினை நடுத்தர மனித வளர்ச்சிப் பிரிவில் வைத்துள்ளது.
- இது உலகச் சராசரியான 0.732 என்ற மதிப்பை விடக் குறைவாகும்.
- 1990 ஆம் ஆண்டில், பாகிஸ்தானியப் பொருளாதார நிபுணர் மஹ்பூப்-உல்-ஹக் மனித மேம்பாட்டுக் குறியீட்டை (HDI) உருவாக்கினார்.
- இது மனித மேம்பாட்டின் மூன்று அடிப்படைப் பரிமாணங்களில் சராசரிச் சாதனைகளை அளவிடுகிறது.
    - நீளமான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை
    - கல்விக்கான அணுகல் மற்றும்
    - முறையான வாழ்க்கைத் தரம்.
- இது பின்வரும் நான்கு குறிகாட்டிகளைப் பயன்படுத்திக் கணக்கிடப்படுகிறது
    - பிறப்பு நிலையில் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம்
    - சராசரி பள்ளிக்கல்வி ஆண்டுகள்
    - எதிர்பார்க்கப்படும் பள்ளிக் கல்வி ஆண்டுகள், மற்றும்
    - மொத்தத் தனிநபர் தேசிய வருமானம்.



## உறுப்பு தானம் செய்வதற்கான முன்மாதிரி ஆளில்லா விமானம்

- மனித உறுப்புகளை வேறு இடங்களுக்குக் கொண்டுச் செல்வதற்கான இந்தியாவின் முதல் முன்மாதிரி ஆளில்லா விமானம் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ஒவ்வொரு ஆண்டும் அதிகபட்சமாக 17,000-18,000 என்ற அளவில் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைகளை இந்தியா மேற்கொள்வதுடன், அமெரிக்கா மற்றும் சீனா ஆகியவற்றிற்கு அடுத்த இடத்தில் மூன்றாவது இடத்தில் இந்தியா உள்ளது.
- மனித உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைக்கு உதவும் ஆளில்லா வான்வழி வாகனங்களின் முன்மாதிரியானது MGM ஹெல்த்கேர் நிறுவனத்தினால் இணைந்து உருவாக்கப் பட்டது.
- மனித உறுப்புகளை கொண்டுச் செல்லும் இந்த ஆளில்லா விமானங்கள் அதிக பட்சமாக 20 கிலோமீட்டர் தூரம் வரை பயணிக்கும் திறன் கொண்டது.



## மாந்தன் கண்காட்சி


- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்காரி பெங்களூருவில் நடைபெறுகின்ற 'மாந்தன்' கண்காட்சியினைத் தொடங்கி வைத்தார்.
- இது மூன்று நாட்கள் அளவிலான மாநாடு மற்றும் பொதுக் கண்காட்சி ஆகும்.
- சாலைகள், போக்குவரத்து மற்றும் தளவாடத் துறையில் பல சிக்கல்கள் மற்றும் வாய்ப்புகளைப் பற்றி விவாதித்து மாநிலத்துடன் செயலில் ஈடுபடுவதை மாந்தன் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மாந்தன் கண்காட்சியின் கருத்துரு, 'நடவடிக்கைக்கான கருத்துகள்: திறன்மிகு, நிலையான, சாலை உள்கட்டமைப்பு, போக்குவரத்து மற்றும் தளவாடச் சுற்றுச்சூழல் அமைப்பினை நோக்கி' என்பதாகும்.



## டிஜிட்டல் இந்தியா திட்டம்

- ❖ இணைய வழிக் குற்ற வழக்கு தளம் மூலம் வழக்குகளை தீர்ப்பதிலும், வழக்குப் பதிவு செய்வதிலும் உத்தரப் பிரதேச மாநிலம் முதலிடத்தில் உள்ளது.
- ❖ இது மத்திய அரசின் டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் கீழ் நிர்வகிக்கப் படுகிறது.
- ❖ உத்தரப் பிரதேச மாநிலமானது இந்தத் தளம் மூலம் 9.12 மில்லியன் வழக்குகளைக் கையாண்டது.
- ❖ இதைத் தொடர்ந்து மத்தியப் பிரதேசம், பீகார், குஜராத் மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- ❖ இந்தத் தளத்தில் இணையவழி வழக்குகளைத் தீர்ப்பதில் உத்திரப் பிரதேச மாநிலம் முதலிடத்தில் உள்ளது.
- ❖ இதைத் தொடர்ந்து மத்தியப் பிரதேசம் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள் உள்ளன.

## மாணவர் ஆசிரியர் விகிதம்



HOW THE STATES FARED

No. of students per teacher

| | Math | Science | Social Studies | language |
|---|---|---|---|---|
| Chandigarh | - | 51 | 43 | 131 |
| Punjab | 55 | 51 | 58 | - |
| Goa | 58 | 42 | 91 | 24 |
| Assam | 90 | 62 | 44 | 30 |
| Andhra Pradesh | 66 | 46 | 97 | 33 |
| Haryana | 71 | 67 | 93 | 24 |
| Karnataka | 86 | 89 | 88 | - |

- ❖ 2010-11 ஆம் ஆண்டில் தொடக்கப் பள்ளிகளில், மாணவர் ஆசிரியர் விகிதம் 43 ஆக இருந்தது.
- ❖ 2020-21 ஆம் ஆண்டில் இது 26.3 ஆகக் குறைந்துள்ளது.
- ❖ 2010-11 ஆம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளிகளில் 33 ஆக இருந்த மாணவர்-ஆசிரியர் விகிதம் ஆனது 2020-21 ஆம் ஆண்டில் 18.9 ஆகக் குறைந்துள்ளது.
- ❖ இந்தியாவில் 1.1 இலட்சம் பள்ளிகள் ஒற்றை ஆசிரியர் நிறுவனங்களாகும்.
- ❖ நாட்டில் இன்னும் 11.16 லட்சம் ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன.

- கல்வியின் பல்வேறு நிலைகளில் உள்ள மாணவர் ஆசிரியர் விகிதம் வெவ்வேறு வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளக் குழந்தைகளுக்கு வேண்டி கற்பிக்கப் போதுமான எண்ணிக்கையில் ஆசிரியர்கள் பணியிடம் இருப்பதை இது காட்டுகிறது.
- பள்ளிகளில் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரிப்பானது அதிக கவனம் செலுத்தப் பட்ட முறையிலான கல்வியை வழங்குவதற்குப் பங்களிக்கிறது.

## தேசிய மின்சாரச் சரக்குத் தளம்

- நிதி ஆயோக் மற்றும் உலக வளங்கள் நிறுவனம் (WRI) ஆகிய இரண்டும் இணைந்து, E-FAST இந்தியா எனப்படும் இந்தியாவின் முதல் தேசிய மின்சாரச் சரக்குத் தளத்தினை அறிமுகப் படுத்தியது.
- E-FAST இந்தியா என்பது நிலையானப் போக்குவரத்து வசதி கொண்ட இந்தியாவிற்கான மின்சாரச் சரக்கு விரைவாக்கி என்பதனைக் குறிக்கிறது.
- இந்தத் தளமானது, தரைவழி விளக்க முன்னோட்டம் மற்றும் ஆதாரம் அடிப்படையிலான ஆராய்ச்சி மூலம் மேம்படுத்தப்பட்ட சரக்கு மின்மயமாக்கல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலகப் பொருளாதார மன்றம், CALSTART மற்றும் RMI இந்தியாஅமைப்பு ஆகியவற்றின் ஆதரவுடன் இந்தத் தளம் பல்வேறு பங்குதாரர்களை ஒன்றிணைக்கிறது.




## இந்தியாவில் நிலையான கடற்கரை மேலாண்மைக்கான தேசிய மாநாடு

- இந்தியாவில், ஒடிசாவின் புவனேஸ்வர் நகரில் நிலையான கடற்கரை மேலாண்மை குறித்த முதல் தேசிய மாநாடானது தொடங்கப்பட்டது.
- இந்தியாவின் கடலோரச் சமூகங்களின் பருவநிலை சார்ந்த நெகிழ்திறனை மேம்படுத்துவதில் இந்த மாநாடு கவனம் செலுத்தியது.
- இதில் இந்தியாவின் 13 கடலோர மாநிலங்களைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.
- இது கடலோர மற்றும் கடல்சார் பல்லுயிர், பருவநிலை தணிப்பு மற்றும் ஏற்பு மற்றும் கடலோர மாசுபாடு ஆகிய மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புடைய கருத்துருக்களில் கவனம் செலுத்துகிறது.

## மத்திய-மாநில அறிவியல் மாநாடு

- ❖ இந்தியப் பிரதமர் அவர்கள் அகமதாபாத்தில் நடைபெற்ற 'மத்திய-மாநில அறிவியல் மாநாட்டினை' தொடங்கி வைத்தார்.
- ❖ இது இந்தியாவின் ஒரு பெரிய சாதனையாவதோடு, இது இந்திய அறிவியலாளர்களின் சாதனைகளைக் கொண்டாட இந்தியக் குடிமக்களை அரசாங்கம் வலியுறுத்துகிறது.
- ❖ மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே ஒருங்கிணைப்பை வலுப்படுத்தவும், புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவுகளை ஊக்குவிப்பதில் ஒத்துழைப்பு வழி முறைகளை வலுப்படுத்தவும் இந்த மாநாடானது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 3 வர்த்தக அளவுருக்கள்

- ❖ அமெரிக்கா தலைமையிலான இந்திய-பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பின் அமைச்சர்கள் கூட்டமானது லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் சமீபத்தில் நிறைவடைந்தது.
- ❖ இந்திய நாடானது இந்திய-பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பின் மற்ற மூன்று அளவுருக்களுடன் இசைந்த நிலையில், வர்த்தகப் பேச்சுவார்த்தைகளில் இருந்து மட்டும் விலகி இருக்க இந்தியா முடிவு செய்ததுள்ளது.
- ❖ இந்திய-பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பானது வர்த்தகம், விநியோகச் சங்கிலிகள், தூய ஆற்றல் மற்றும் நியாயமானப் பொருளாதாரம் ஆகிய நான்கு அளவுருக்களை அடிப்படையாகக் கொண்டது.
- ❖ வர்த்தகம் தொடர்பான கூட்டுப் பிரகடனத்திற்கு இந்தியா தற்போது உடன்படவில்லை.
- ❖ சுற்றுச்சூழல், தொழிலாளர், டிஜிட்டல் வர்த்தகம் மற்றும் பொதுக் கொள்முதல் ஆகியவற்றில் தேவைப்படும் உறுதிப்பாடுகள் மீதான கவலைகள் இதற்குக் காரணம் ஆகும்.
- ❖ இந்திய-பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பில் உலக நாடுகளின் 40 சதவீதத்திற்கும் மேலான பொருளாதாரங்கள் பிரதிநிதித்துவம் கொண்டுள்ளன.
- ❖ இந்திய-பசிபிக் பிராந்தியமானது உலக மக்கள்தொகையில் பாதியளவு மற்றும் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 60 சதவீதத்திற்கும் அதிகமான அளவினை உள்ளடக்கியது.



## பர்வத் பிரஹார்

- இந்திய இராணுவத்தின் முதல் நடவடிக்கை மேற்கொள்ளும் படைப் பிரிவினரால் லடாக் பகுதியில் பர்வத் பிரஹார் பயிற்சியானது மேற்கொள்ளப்படுகிறது.
- நடவடிக்கை மேற்கொள்ளும் படைப்பிரிவினர் என்றால் சீனா அல்லது பாகிஸ்தான் எங்காவது தாக்குதலில் ஈடுபட்டால் முதலில் உள்ளே நுழைந்து போரிட்டு அவர்களை எதிர்கொள்ளும் படையினர் ஆவர்.
- பர்வத் பிரஹார் என்பது இந்திய இராணுவத்தின் 20 நாட்கள் அளவிலான நீண்ட காலப் பயிற்சியாகும்.




## பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கான 10 சதவிகித இட ஒதுக்கீட்டின் செல்லுபடித் தன்மை

- இந்தியத் தலைமை நீதிபதி தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு அமர்வானது, 103வது திருத்தத்தின் செல்லுபடியாகும் தன்மையினை உறுதி செய்ய மூன்று முக்கிய விடயங்களை ஆய்வு செய்ய முடிவு செய்தது.
- பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கான இட ஒதுக்கீட்டினை எதிர்த்து தொடரப் பட்ட வழக்கானது 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு பரிந்துரைக்கப்பட்டது.
- 103வது திருத்தம் ஆனது 15(6) மற்றும் 16(6) ஆகிய பிரிவுகளை அரசியலமைப்பில் சேர்த்தது.
- உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு வேலைவாய்ப்பு போன்றவற்றில் ஆரம்பகட்ட ஆட்சேர்ப்பு ஆகியவற்றில் பிற்படுத்தப்பட்டோர், பட்டியலிடப்பட்ட சாதியினர், மற்றும் பட்டியலிடப் பட்ட பழங்குடியினர் தவிர மற்றப் பொருளாதார ரீதியாக பின் தங்கிய நபர்களுக்கு 10 சதவீதம் இடஒதுக்கீடு வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையின் அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்க மாநில அரசுகளுக்கு இந்தத் திருத்தம் அதிகாரம் அளித்தது.
- மேஜர் ஜெனரல் (ஓய்வு) S.R. சின்ஹோ என்பவர் தலைமையிலான ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கான இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.





## இணையவெளிக் குற்ற விசாரணை மற்றும் புலனாய்வு உச்சி மாநாடு 2022

- 4வது இணையவெளிக் குற்ற விசாரணை மற்றும் புலனாய்வு உச்சி மாநாடு (2022) ஆனது மத்தியப் பிரதேசக் காவல்துறையால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- இது இணையவெளிக் குற்றங்களைத் திறம்பட தடுக்கும் வகையில் காவல் துணை ஆய்வாளர்கள் மற்றும் மூத்த விசாரணை அதிகாரிகளின் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தேசிய அத்தியாவசிய மருந்துகளின் பட்டியல் 2022

- இந்தப் பட்டியலில் 34 மருந்துகள் கூடுதலாக சேர்க்கப்பட்டதுடன் மொத்தமாக 384 மருந்துகள் சேர்க்கப் பட்டுள்ளன.
- முந்தையப் பட்டியலில் இருந்து 26 மருந்துகள் விலக்கப் பட்டுள்ளன.
- இந்த மருந்துகள் 27 சிகிச்சை வகைகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன.
- இதன் மூலம், பல நுண்ணுயிர் எதிர்ப்பிகள், தடுப்பூசிகள் மற்றும் புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகள் இந்தப் பட்டியலில் சேர்க்கப்படுவதன் மூலம் மிகவும் மலிவு விலையில் கிடைக்கும்.
- தேசிய அத்தியாவசிய மருந்துகளின் பட்டியல் ஆனது அனைத்து நிலை சுகாதாரப் பாதுகாப்புகளிலும் மலிவு விலையில் தரமான மருந்துகளை அணுகுவதை உறுதி செய்வதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.
- இந்தப் பட்டியல் தேசிய மருந்தியல் விலை நிர்ணய ஆணையத்தால் வெளியிடப்படும் ஒரு பட்டியல் ஆகும்.
- சுகாதார மற்றும் குடும்பநலத் துறை அமைச்சகம் முதன்முதலில் 19996 ஆம் ஆண்டில் 279 மருந்துகளின் பட்டியலைத் தயாரித்து வெளியிட்டது.
- இந்தப் பட்டியல் அடுத்து 2003, 2011, 2015 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் திருத்தப் பட்டது.




## தேசிய கடல்சார் பாரம்பரிய வளாகம்




- துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித் துறை அமைச்சகம் தேசிய கடல்சார் பாரம்பரிய வளாகத்தைக் கட்டமைத்து வருகிறது.
- குஜராத்தில் உள்ள லோத்தல் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க சிந்து சமவெளி நாகரிகப் பகுதியில் இது நிறுவப்பட உள்ளது.
- இந்தியாவிலேயே முதல்-வகையான இந்த வளாகமானது இந்தியாவின் வளமான மற்றும் பன்முகத் தன்மை வாய்ந்த கடல்சார் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும்.

## வந்தே பாரத் இரயிலின் புதிய வடிவம்


- இந்திய இரயில்வே நிர்வாகமானது புதிய வந்தே பாரத் விரைவு இரயிலினை அறிமுகப் படுத்த உள்ளது.
- பயணிகளுக்குச் சிறப்பான வசதிகளை வழங்குவதற்கான அதன் தொடர் முயற்சியில் இரயில்வே நிர்வாகம் அதிவேக இரயிலாக இதனை மாற்ற உள்ளது.
- முதல் வந்தே பாரத் விரைவு இரயில் ஆனது 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 15 ஆம் தேதி அன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

- தற்போது, இந்திய இரயில்வே நிர்வாகமானது இரயில் 18 என்றும் அழைக்கப்படும் வந்தே பாரத் விரைவு இரயிலினை இரண்டு குறிப்பிடத்தக்க வழித்தடங்களில் மட்டுமே இயக்க உள்ளது.
- ஒன்று புது டெல்லியிலிருந்து ஸ்ரீ மாதா வைஷ்ணோ தேவி கத்ராவிற்கும் மற்றொன்று புது டெல்லியிலிருந்து வாரணாசி வரையிலும் இயக்கப்படுகிறது.




## தனிநபர் சுகாதார நலன் மீதான அரசின் செலவினம்

- 2013-14 ஆம் ஆண்டிலிருந்து அரசின் தனிநபர் மருத்துவச் செலவினமானது 74 சதவீதம் அதிகரித்துள்ளது.
- 2018-19 ஆம் ஆண்டிற்கான தேசியச் சுகாதாரக் கணக்கு மதிப்பீடுகளின் படி 2013-14 ஆம் ஆண்டில் அரசின் தனிநபர் செலவினம் 1042 ரூபாய் ஆகும்.
- இது ஆயிரத்து எண்ணூற்றுப் பதினைந்து ரூபாயாக அதிகரித்துள்ளது.
- நாட்டில் சுகாதாரத்திற்கான ஒட்டு மொத்தச் செலவினத்தில் அரசின் பங்கு படிப் படியாக அதிகரித்து வருகிறது.
- 2013-14 ஆம் ஆண்டில் 23.2 சதவீதமாக இருந்த நடப்பு சுகாதாரச் செலவினத்தில் அரசின் பங்கு 2018-19 ஆம் ஆண்டில் 34.5 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- இந்தக் காலகட்டத்தில் ஆரம்பச் சுகாதார மையத்திற்கான அரசின் சுகாதாரச் செலவினம் 51 சதவீதமாக இருந்தது.
- 2018-19 ஆம் ஆண்டில் இது 55 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்துள்ளது.
- 2013-14 ஆம் ஆண்டில் இருந்து நாட்டில் தனிநபர் செலவினம் எட்டு சதவீதம் குறைந்து உள்ளது.



## இந்தியாவில் சிறைச்சாலைப் புள்ளி விவரங்கள் அறிக்கை - 2021

- தேசியக் குற்ற ஆவணங்கள் காப்பகமானது (NCRB) சமீபத்திய அகில இந்தியச் சிறைச் சாலைப் புள்ளி விவரத்தினை வெளியிட்டது.
- 2020 ஆம் ஆண்டில் இந்தியாவில் உள்ள மொத்த சிறைச் சாலைகளில் 20.2 சதவீதமாக இருந்த முஸ்லிம்களின் பங்கானது 2021 ஆம் ஆண்டில் 18.7% ஆகக் குறைந்துள்ளது.
- அதே காலக்கட்டத்தில் 72.8% ஆக இருந்த இந்துக்களின் சதவீதம் 73.6% ஆக உயர்ந்து உள்ளது.
- 2020 ஆம் ஆண்டின் இறுதியில் நாட்டின் சிறைச்சாலையில் உள்ளவர்களில் 3.4% ஆக இருந்த சீக்கியர்களின் சதவீதம் 4.2% ஆக அதிகரித்துள்ளது.
- அந்தக் காலக்கட்டத்தில் 2.6% ஆக இருந்த கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையானது 2.5% ஆக குறைந்துள்ளது.
- 36 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள 19 சிறைகளில் சிறை வாசிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது.
- இந்த விகிதமானது உத்தரகாண்டில் அதிகபட்சமாக 185 சதவீதமாகவும், ராஜஸ்தானில் 100.2 சதவீதமாகவும் இருந்தது.
- பெரும்பாலான கைதிகள் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினைச் சேர்ந்தவர்கள் என்பதோடு அதில் 25.2 சதவீதம் பேர் படிப்பறிவில்லாதவர்கள் ஆவர்.
- 51.7 சதவீத ஒட்டு மொத்தக் குற்றவாளிகளில், 21.69 சதவீதம் பேர் பட்டியலிடப்பட்ட சாதியினரைச் சேர்ந்தவர்கள், 14.09 சதவீதம் பேர் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மற்றும் 15.9 சதவீதம் பேர் முஸ்லிம்கள் ஆவர்.
- வழக்கு விசாரணையில் உள்ள 49 சதவீத நபர்களில், 21.08 சதவீதம் பேர் பட்டியலிடப் பட்டச் சாதியினர், 9.88 சதவீதம் பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் மற்றும் 18 சதவீதம் முஸ்லிம்கள் ஆவர்.
- 56.4 சதவீதக் கைதிகளில், முஸ்லிம்கள் 27.7 சதவீதம், பட்டியலிடப்பட்டச் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ஆகியோர் முறையே 23.05 மற்றும் 5.62 சதவீதம் ஆவர்.



## பசுமை முறையிலான கப்பல் மறுசுழற்சி & வாகன அழிப்புப் பற்றிய சர்வதேச மாநாடு

- மத்தியக் கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் நீர்வழித் துறை அமைச்சகம், குஜராத் கடல்சார் வாரியம் மற்றும் இந்திய வணிகம் மற்றும் தொழில்துறை சங்கக் கூட்டமைப்பு ஆகியவை இணைந்து காந்திநகரில் இந்த சர்வதேச மாநாட்டை ஏற்பாடு செய்தன.
- இது கப்பல் மறுசுழற்சித் தொழில் துறையின் நிலையைக் காட்சிப்படுத்துவதையும், கப்பல் மறுசுழற்சித் தொழில் துறையுடன் வாகன அழிப்புத் தொழிற்துறையினை ஒருங்கிணைப்பு செய்வதை ஆராய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.





## இந்தியாவில் சிவிங்கிப் புலிகள்

- இந்தியாவில் இருந்து முழுவதும் அழிந்து போன சிவிங்கிப் புலிகள் மீண்டும் இந்திய மண்ணில் 70 ஆண்டுகளுக்குப் பிறகு அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.
- செப்டம்பர் 17 ஆம் தேதியன்று மத்தியப் பிரதேசத்தின் குனோ பால்பூர் தேசியப் பூங்காவில் (KPNP) உள்ள இந்திய வனவிலங்குகளுள் எட்டு சிவிங்கிப் புலிகள் பிரதமர் அவர்களால் தமது 72வது பிறந்த தினத்தின் போது விடுவிக்கப்பட்டன.
- கடந்த காலத்தில் இந்தியா ஆசிய சிவிங்கிப் புலிகளின் தாயகமாக இருந்தாலும் 1952 ஆம் ஆண்டில் இந்த இனம் இந்தியாவில் அழிந்து விட்டதாக அறிவிக்கப் பட்டது.
- 1947 ஆம் ஆண்டில் சத்தீஸ்கரின் கோரியா மாவட்டத்தில் கடைசிச் சிவிங்கிப் புலி கொல்லப் பட்டது.
- நமீபியாவிலிருந்து எட்டு சிவிங்கிப் புலிகள் கொண்டு வரப்பட்டது வரலாற்றில் மிகப் பெரிய வனவிலங்கு இடமாற்றத் திட்டமாகும்.
- குனோ தேசியப் பூங்காவானது, இந்த அழிந்து வரும் விலங்கினமான சிவிங்கிப் புலிகளுக்கான இரைகள் நிறைந்த வாழ்விடத்தினைக் கொண்டுள்ளதால் அவற்றை அறிமுகப் படுத்துவதற்கு இது உகந்த இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இந்தப் பூங்காவில் சிவிங்கிப் புலிகள் காடுகளில் வேட்டையாடி உயிர் வாழுகின்ற இனங்களான இந்தியச் சிறுமான், புள்ளி மான்கள் மற்றும் புல்வாய்கள் ஆகியவை அதிக எண்ணிக்கையில் உள்ளன.

- சிவிங்கிப் புலிகள் சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் (IUCN) சிவப்பு நிறப் பட்டியலின் கீழ் பாதிக்கப்படக்கூடிய இனமாகக் கருதப் படுகிறது.
- முதன்மையாக ஆப்பிரிக்கச் சவன்னா பகுதிகளில் மட்டுமே காணப்படுகின்ற இவை உலகம் முழுவதும் 7,000க்கும் குறைவான அளவில் மட்டுமே உள்ளன.
- இதன் வரம்பு நமீபியா, போட்ஸ்வானா, தென் ஆப்பிரிக்கா, ஜிம்பாப்வே, அங்கோலா, ஜாம்பியா, தான்சானியா மற்றும் கென்யா ஆகிய எட்டு நாடுகளை உள்ளடக்கியது ஆகும்.
- இந்தியாவில் 'ஆப்பிரிக்கச் சிவிங்கிப் புலிகள் அறிமுகம் திட்டம்' ஆனது முதன்முதலில் 2009 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், இந்தியாவும் நமீபியக் குடியரசும் சிவிங்கிப் புலிகளைப் பாதுகாப்பது தொடர்பான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டன.




## ரக்தன் அம்ரித் மஹோத்சவ்



- பிரதமர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் 15 நாட்கள் அளவிலான இரத்தத் தான இயக்கத்தை மத்திய சுகாதார அமைச்சர் தொடங்கி வைத்தார்.
- இந்த இரத்தத் தான இயக்கமானது 'ரக்தன் அம்ரித் மஹோத்சவ்' என்று அழைக்கப் படுகிறது.
- இது தேசியத் தன்னார்வ இரத்தத் தான தினமான 2022 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதி வரை தொடரும்.
- குடிமக்கள், ஆரோக்யா சேது செயலி அல்லது இ-ரக்த்கோஷ் இணைய தளம் மூலம் இரத்தத் தானம் செய்வதற்குத் தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

## இந்தியாவின் முதல் வனப் பல்கலைக்கழகம்

- 2022 ஆம் ஆண்டு வனவியல் பல்கலைக்கழகங்கள் சட்டத்தினைத் தெலுங்கானா மாநிலச் சட்டமன்றம் அங்கீகரித்துள்ளது.
- இந்தியாவில் இது போன்ற முதல் வகை பல்கலைக்கழகம் இதுவாகும்.
- உலகளவில், ரஷ்யா மற்றும் சீனாவுக்குப் பிறகு நிறுவப்பட்ட மூன்றாவது வனவியல் பல்கலைக் கழகமாக இது திகழும்.
- தெலுங்கானா மாநில அரசானது ஹைதராபாத்தில் உள்ள வனவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தை (FCRI) விரிவுபடுத்த முடிவு செய்துள்ளது.



## ஸ்வச் சாகர் சுரக்சித் சாகர் பிரச்சாரம்

- இது உலகிலேயே முதல்-வகையான, அதிக எண்ணிக்கையிலான மக்கள் பங்கேற்ற மற்றும் நீண்ட நாட்களாக நடைபெற்று வரும் ஒரு கடற்கரையோரத் தூய்மையாக்கல் பிரச்சாரமாகும்.
- இந்தப் பிரச்சாரமானது "சர்வதேசக் கடற்கரையோர தூய்மையாக்கல் தினத்தன்று" (17 செப்டம்பர் 2022) நிறைவடைந்தது.
- பெருங்கடல்கள், கடற்கரையோரங்கள் மற்றும் அதன் கடற்கரைகளில் குப்பைகள் குவிந்து கிடப்பது மற்றும் அதனால் ஏற்படும் எதிர்மறையான தாக்கங்கள் குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வை அதிகரிக்கச் செய்வதை இந்த தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 'திறன்மிகு முகவரிகளுடன்' கூடிய நகரம்

- இந்தூர் நகரம் முழுவதுமாக டிஜிட்டல் முகவரியிடல் முறையைச் செயல்படுத்தி அப்பகுதி ஒரு வரலாற்றை உருவாக்க உள்ளது.
- இதன் மூலம் இது போன்று நடவடிக்கை மேற்கொண்ட இந்தியாவின் முதல் நகரமாக இது திகழ்கிறது.
- படா நேவிகேஷன்ஸ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தான போது திறன்மிகு நகரங்கள் குறிப்பிடத்தக்க அளவில் மேம்படத் தொடங்கின.
- படா நிறுவனமானது காப்புரிமை பெற்ற ஒரு தொழில்நுட்பத்தை உருவாக்கச் செய்து, நாட்டிற்கான ஒரு டிஜிட்டல் முகவரியிடல் அமைப்பினை உருவாக்கச் செய்வதற்காக வேண்டி இஸ்ரோவுடன் இணைந்து செயல்படுகிறது.




## ஹரப்பா கலாச்சாரத்தினை வெளிக் கொணரச் செய்யும் உலகின் மிகப்பெரிய அருங்காட்சியகம்

- ஹரப்பா கலாச்சாரத்தினை வெளிக்கொணரச் செய்யும் உலகின் மிகப்பெரிய அருங்காட்சியகமானது ஹரியானாவில் உள்ள ராகிகார்ஹி என்ற நகரில் நிறுவப்பட உள்ளது.

- இங்கு சுமார் 5,000 ஆண்டுகள் பழமையான, சிந்து சமவெளி நாகரிகத்தினைச் சேர்ந்த கலைப் பொருட்கள் காட்சிப் படுத்தப்படும்.
- ராகிகார்ஹி கிராமம் ஆனது கி.மு. 2600 முதல் 1900 வரை சிந்து சமவெளி நாகரிகத்தின் ஒரு பகுதியாக இருந்தது.
- இந்தியத் தொல்லியல் துறையானது 1963 ஆம் ஆண்டில் முதல் முறையாக இந்தக் கிராமத்தின் அடித்தளத்தை ஆராயத் தொடங்கியது.




## பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் பட்டியலில் நான்கு பழங்குடியினர் சேர்க்கை

- பின்வரும் நான்கு பழங்குடியினரைப் பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
  - இமாச்சலப் பிரதேசத்தின் சிர்மௌர் மாவட்டத்தின் எல்லையை ஒட்டிய கிரி என்ற பகுதியின் ஹட்டீ சமூகம்.
  - தமிழ்நாட்டைச் சேர்ந்த நரிக்குறவர் மற்றும் குருவிக்காரர் சமூகம்
  - சத்தீஸ்கர் மாநிலத்தினைச் சேர்ந்த பிஞ்சியா சமூகம்
  - உத்தரப் பிரதேசத்தின் 13 மாவட்டங்களில் வசிக்கும் கோண்ட் சமூகம்
- சத்தீஸ்கரில் உள்ள 11 பழங்குடியினர் சமூகத்தினையும், கர்நாடகாவில் உள்ள ஒரு பழங்குடியினர் சமூகத்தினையும் ஒத்தச் சொற்கள் இந்தப் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளன.

### *பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கான அளவுருக்கள்*

- பழங்குடியினரைப் பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கான செயல்முறையானது அந்தந்த மாநில அரசுகளின் பரிந்துரையுடன் தொடங்குகிறது.
- பழமையான பண்பு அடையாளங்கள், தனித்துவமான கலாச்சாரம்; புவியியல் சார்ந்து தனித்துக் காணப்படுதல், சமூகத்துடன் தொடர்பு கொள்ளத் தயங்குதல் மற்றும் பின் தங்கிய நிலை.
- எனினும், இந்த அளவுருக்கள் அரசியலமைப்பில் குறிப்பிடப்படவில்லை.

## இந்தியாவின் முதல் நெகிழித் திட்டம்

- ❖ கார்பன் மதிப்பு உருவாக்கம் மற்றும் விற்பனையாளர் நிறுவனமான EKI எனர்ஜி சர்வீசஸ் உலகளாவிய அங்கீகாரத் தரத்தின் கீழ் இந்திய நெகிழித் திட்டத்தைப் பட்டியலிட்ட முதல் நிறுவனமாகத் தன்னை அறிவித்தது.
- ❖ எனவே, இந்த நிறுவனம் இந்தியாவின் முதல் சர்வதேச நெகிழி மதிப்புகளை உருவாக்கும் குறிக்கோளுடன் இந்தியா சார்பாக ஒரு நெகிழித் திட்டத்தைப் பட்டியலிட்ட முதல் நிறுவனம் என்ற பெருமையினைப் பெற்றது.
- ❖ EKI எனர்ஜி சர்வீசஸ் நிறுவனத்தின் இந்தத் திட்டமானது, நெகிழிக் கழிவுகள், முதன்மையாக பாலி எத்திலீன் டெரெப்தாலேட் (PET) கழிவுகள், பாலி எத்திலீன் டெரெப்தாலேட் படிவுகள் மற்றும் சில்லுகள் ஆகியவை முறையாகப் பெறப்பட்டு மறு சுழற்சி செய்யப்பட்டு, மறுசுழற்சி செய்யப்பட்ட பாலியஸ்டர் அடிப்படை இழையாக (RPSF) மாற்றப் படுவதை உறுதி செய்கிறது.
- ❖ பாலிஎஸ்டர் அடிப்படை இழையானது பின்னர் ஜவுளித் தொழிலில் ஆடை மற்றும் நூல் இழைகளால் செய்யப்பட்டப் பிற பயன்பாட்டுப் பொருட்களுக்குப் பயன்படுத்தப் படலாம்.

## இந்தியாவின் முதல் லித்தியம் செல் உற்பத்தி ஆலை

- ❖ இந்தியாவின் முதல் லித்தியம் செல் உற்பத்தி ஆலையானது ஆந்திரப் பிரதேசத்தின் திருப்பதியில் உள்ள அதன் தொழிற்சாலையில் தனது உற்பத்திக்கான ஒரு முன்னோட்டத்தை ஆரம்பித்துள்ளது
- ❖ இது அடுத்த மாதம் முதல் வணிக ரீதியான மின்கல அடுக்குச் செல்களின் உற்பத்தியைத் தொடங்க உள்ளது.
- ❖ சென்னையைச் சேர்ந்த முனோத் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனம் மூலம் இந்த அதி நவீன ஆலையானது நிறுவப் பட்டுள்ளது.
- ❖ தற்போது நிறுவப்பட்டுள்ள இந்த ஆலையின் திறன் 270 Mwh ஆகும்.
- ❖ தினசரி 10Ah திறன் கொண்ட 20,000 செல்களை இந்த ஆலை உற்பத்தி செய்ய முடியும்.




## உலகச் சுற்றுச்சூழல் மைய சிறு மானியத் திட்டம்

- ❖ சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் (MoEFC), ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட அமைப்பு மற்றும் எரிசக்தி மற்றும் வள நிறுவனம் (TERI) ஆகியவை இணைந்து உலகச் சுற்றுச்சூழல் மைய சிறு மானியத் திட்டத்தைத் தொடங்கியுள்ளன.

- சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் ஒரு நிலையான மேம்பாட்டினை அடையச் செய்வதற்கும் கூட்டு நடவடிக்கை எடுப்பதற்கும் வேண்டி தேவையான உள்ளூர்ச் சமூகத்தினரின் திறனை மேம்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- இது உள்ளூர்ச் சமூகங்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதோடு, சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் மறுசீரமைத்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் திட்டங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குகிறது.
- 2022 ஆம் ஆண்டானது இந்தத் திட்டத்தின் 7வது செயல்பாட்டுக் கட்டத்தைக் குறிக்கிறது.
- குறிப்பிட்ட நிலப்பரப்புகளில் செயல்படும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு இதன் மூலம் மானியங்கள் வழங்கப் படுகின்றன.

## உலகத் தண்ணீர் வள மாநாடு மற்றும் கண்காட்சி 2022

- இது செப்டம்பர் 01 முதல் 15 ஆம் தேதி வரை டென்மார்க் நகரில் ஏற்பாடு செய்யப் பட்டது.
- நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொள்வதற்கும், வலையமைப்பினை நிறுவுதல் மற்றும் வணிகம் செய்வதற்காகவும் நிபுணர்களை ஒன்றிணைப்பதற்காக உலகம் முழுவதும் சில ஆண்டுகளுக்கு ஒரு முறை இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இது தற்போதையச் சிக்கல்கள் மற்றும் போக்குகளில் கவனம் செலுத்துவதற்கான வாய்ப்பை வழங்கச் செய்வதோடு, இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்படும் இடத்தின் வலிமையையும் இது பிரதிபலிக்கிறது.
- 2022 ஆம் ஆண்டின் மாநாடானது கோபன்ஹேகனில் திறன்மிக்க வகையில் வாழக் கூடிய நகரங்களுக்கான தண்ணீர் என்ற ஒரு கருத்துருவின் அடிப்படையில் ஏற்பாடு செய்யப் பட்டது.
- இது டென்மார்க் மற்றும் பிற நார்டிக் நாடுகளிலும் மற்றும் உலகின் பிற பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் சிறந்த நடைமுறைகளைக் காட்சிப்படுத்தியது.
- இந்நிகழ்ச்சியின் போது, இந்தியா மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் இணைந்து 'இந்தியாவில் நகர்ப்புறக் கழிவு நீர் மேலாண்மை நிலை' என்ற தலைப்பில் ஒரு கூட்டு வெள்ளை அறிக்கையை வெளியிட்டன.
- இந்த வெள்ளை அறிக்கையானது, இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் கழிவு நீர்ச் சுத்திகரிப்பு முறையின் தற்போதைய நிலைமையினை விரிவாக எடுத்துரைக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியப் பாகுபாடு அறிக்கை 2022

- ஆக்ஸ்ஃபாம் இந்தியா என்ற அமைப்பானது, 2022 ஆம் ஆண்டு இந்தியப் பாகுபாடு அறிக்கையினைச் சமீபத்தில் வெளியிட்டது.
- இந்தியாவில் பெண்களின் தொழிலாளர் பங்கேற்பு விகிதமானது 2021 ஆம் ஆண்டில் வெறும் 25 சதவீதமாக உள்ளது.
- இது 2004-05 ஆம் ஆண்டில் இருந்த 42.7 சதவீதத்தை விடக் குறைவு என்பதோடு பிரிக்ஸ் நாடுகள் மத்தியில் மிகக் குறைவான அளவாகும்.
- இந்தியாவில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் நிலவும் 98 சதவீத வேலை வாய்ப்பு இடைவெளிக்குப் பாலினப் பாகுபாடு தான் முக்கியக் காரணமாகும்.

- ஒரு ஆணின் சராசரி ஊதியம் என்பது ஒரு பெண்ணின் ஊதியத்தை விட 2.5 மடங்கு அதிகமாகும்.
- 2019-20 ஆம் ஆண்டில் 15 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஆண்களில் 60 சதவீதம் பேர் தினசரி அடிப்படையில் ஊதியம் வருகின்ற மற்றும் சுயதொழில் வேலை வாய்ப்புகளைக் கொண்டுள்ளனர்.
- அதே காலக்கட்டத்தில், அந்த வயதினரில் 19 சதவீதப் பெண்களுக்கு மட்டுமே வேலை கிடைத்தது.
- பாலின அடிப்படையிலான ஊதிய இடைவெளிகளைத் தவிர, சாதி அடிப்படையிலான ஊதிய வேறுபாடுகளையும் இந்த அறிக்கை கண்டறிந்துள்ளது.
- நகர்ப்புறங்களில் உள்ள பட்டியலிடப்பட்டச் சாதிகள் அல்லது பழங்குடியினரைச் சேர்ந்த தினசரி வேலைகளில் இருப்பவர்களின் சராசரி வருமானம் ரூ.15,312 ஆகும்.
- பொதுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் பெற்ற ரூ.20,346 என்ற ஊதியத்தினை விட இது மிகக் குறைவாகும்.
- பொதுப் பிரிவினரின் வருவாயானது பட்டியலிடப்பட்டச் சாதிகள் அல்லது பழங்குடிப் பிரிவினரைச் சேர்ந்த சமூகங்களை விட 33 சதவீதம் அதிகமாகும்.
- 2019-20 ஆம் ஆண்டில், நகர்ப்புறங்களில் வாழும் ஊதியம் பெறும் தொழிலாளர்களாக ஈடுபட்டுள்ள முஸ்லீம் மற்றும் முஸ்லீம் அல்லாத தொழிலாளர்கள் இடையே நிலவும் 68% வேறுபாட்டிற்குப் பாகுபாடு தான் முக்கியக் காரணமாக உள்ளது.


LE 2 - DISCRIMINATION IN WAGES/EARNINGS, IN PERCENTAGES

| RIABLES | 2019-20 | | | 2018-19 | | | 2004-05 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | RS | SE | CL | RS | SE | CL | RS | CL |
| /ST | 20.7 | 58.1 | 76.6 | 10.9 | 49.7 | 72.7 | 19.4 | 63.5 |
| ISLIMS | 2.0 | 2.6 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 9.1 | 0.0 |

## உணவு மற்றும் வேளாண்மைக்கான தாவர மரபணு வளங்களுக்கான சர்வதேச ஒப்பந்தத்தின் ஆளுகை அமைப்பு

- உணவு மற்றும் வேளாண்மைக்கான தாவர மரபணு வளங்களுக்கான சர்வதேச ஒப்பந்தத்தின் ஆளுகை அமைப்பின் ஒன்பதாவது அமர்வு தேசிய தலைநகரில் நடைபெற்றது.
- உணவு மற்றும் வேளாண்மைக்கான தாவர மரபணு வளங்களுக்கான சர்வதேச ஒப்பந்தத்தின் (ITPGRFA) 19வது பிரிவின் படி இந்த ஆளுகைக் குழு கூட்டப்பட்டது.
- இந்த அமர்வானது, "பயிர் வகைகளின் பன்முகத்தன்மையின் பாதுகாவலர்களைக் கொண்டாடுதல்: 2020 ஆம் ஆண்டிற்குப் பிந்தைய உள்ளார்ந்த உலகளாவியப் பல்லுயிர்க் கட்டமைப்பை நோக்கி" என்ற கருத்துருவின் கீழ் ஏற்பாடு செய்யப் பட்டு உள்ளது.
- இந்தச் சந்திப்பானது முதலில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடத்தப்பட திட்டமிடப்பட்டது, ஆனால், முதலில் மே மாதம் மற்றும் பிறகு செப்டம்பர் மாதம் என இரண்டு முறை அது ஒத்தி வைக்கப் பட்டது.

- ஆளுகைக் குழுவின் எட்டாவது அமர்வானது 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ரோம் நகரில் நடைபெற்றது.
- உணவு மற்றும் வேளாண்மைக்கான தாவர மரபணு வளங்களுக்கான சர்வதேச ஒப்பந்தம் என்பது 2001 ஆம் ஆண்டில் ரோம் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் 31வது அமர்வின் போது கையெழுத்தான சட்டப் பூர்வமானப் பிணைப்பு விதிமுறைகள் கொண்ட பலதரப்பு ஒப்பந்தமாகும்.
- இந்த ஒப்பந்தமானது 2004 ஆம் ஆண்டு ஜூன் 29 ஆம் தேதி முதல் அமலுக்கு வந்தது.
- தற்போது இந்தியா உட்பட 149 நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் பங்கேற்றுள்ளன.
- இது உயிரியல் பன்முகத்தன்மை தொடர்பான உடன்படிக்கைக்கு இணங்கச் செய்யும் வகையில் உருவாக்கப் பட்டது.




## இந்தியாவின் மதிப்புமிக்கத் தயாரிப்பு நிறுவனம்




- தகவல் தொழில்நுட்பச் சேவை நிறுவனமான டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் நிறுவனம் 2022 ஆம் ஆண்டில் இந்தியாவின் மதிப்புமிக்க நிறுவனமாக மாறியது.

- காந்தார் எனப்படும் சந்தை தரவு மற்றும் பகுப்பாய்வு நிறுவனமானது இந்த அறிக்கையை வெளியிட்டது.
- இந்த அறிக்கையில் அந்த நிறுவனத்தினைத் தொடர்ந்து HDFC வங்கி மற்றும் இன்ஃபோசிஸ் ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- 2014 ஆம் ஆண்டில் இந்தத் தரவரிசை வெளியிடப்படத் தொடங்கியதிலிருந்து HDFC வங்கி முதலாவது இடத்தைத் தக்க வைத்து வந்தது.

## இந்தியாவின் முதல் ஸ்வச் சுஜல் பிரதேசம்


- அந்தமான் நிக்கோபார் தீவுகளானது இந்தியாவின் முதல் ஸ்வச் சுஜல் பிரதேசமாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- இதன் மூலம், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் உள்ள அனைத்துக் கிராமங்களும் ஹர்கர் ஜல் சான்றிதழைப் பெற்றுள்ளதோடு அது திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத கிராமம் உள்ள பிரதேசம் என்றும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான குடிநீர் விநியோகம் மற்றும் அதன் மேலாண்மை என்பது சுஜல் மற்றும் ஸ்வச்சின் ஒரு முக்கிய அம்சமாகும்.
- மேலும் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் உள்ள அனைத்துக் கிராமப்புற குடும்பங்களுக்கும் 100% குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டது.
- கோவா மற்றும் தெலுங்கானாவிற்குப் பிறகு கிராமப்புறக் குடும்பங்களுக்கு 100% குடிநீர் குழாய் இணைப்பு வழங்கிய நாட்டின் மூன்றாவது மாநிலம்/ஒன்றியப் பிரதேசம் இதுவாகும்.




## உயிரியல் பூங்கா மேலாண்மை செயல்திறன் மதிப்பீட்டு அறிக்கை 2022

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகமானது சமீபத்தில் 2022 ஆம் ஆண்டிற்கான உயிரியல் பூங்கா மேலாண்மை செயல்திறன் மதிப்பீட்டு அறிக்கையினை (MEE-ZOO) வெளியிட்டது.
- இது இந்தியா முழுவதும் உள்ள உயிரியல் பூங்காக்களில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்கெடுப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது.

- இந்தியாவில் தற்போது 147 அங்கீகரிக்கப்பட்ட உயிரியல் பூங்காக்கள் உள்ளன.
- அவை பெரிய (17), நடுத்தர (23), சிறிய (33), குறு உயிரியல் பூங்காக்கள் (60) மற்றும் மீட்பு மையங்கள் (14) என வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- சமீபத்திய உயிரியல் பூங்கா மேலாண்மை செயல்திறன் மதிப்பீட்டு அறிக்கையானது 39 உயிரியல் பூங்காக்களைப் பெரிய மற்றும் நடுத்தர வகைகளின் கீழ் மதிப்பீடு செய்தது.
- வண்டலூர் உயிரியல் பூங்காவானது "மிகச் சிறந்தப் பூங்கா" என்று மதிப்பிடப் பட்டு உள்ளதோடு, பெரிய உயிரியல் பூங்கா என்ற பிரிவில் அது மிகச் சிறந்த செயல்திறன் கொண்டதாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- மேற்கு வங்காளத்தின் பத்மஜா நாயுடு இமயமலை விலங்கியல் பூங்காவானது நடுத்தர உயிரியல் பூங்கா என்ற பிரிவில் சிறந்த செயல்திறன் கொண்டதாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- அலிப்பூர் விலங்கியல் பூங்கா, தேசிய விலங்கியல் மற்றும் நவாப் வாஜித் அலி ஷா விலங்கியல் பூங்கா ஆகியவை சூழல் கூறுகளில் சிறந்த செயல்திறன் கொண்டதாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
    - திட்டமிடல் கூறுகளில் சிறந்து விளங்கும் பூங்கா: வண்டலூர் உயிரியல் பூங்கா.
    - உள்ளீட்டுக் கூறுகளில் சிறந்து விளங்கும் உயிரியல் பூங்கா: வண்டலூர் உயிரியல் பூங்கா, பத்மஜா நாயுடு இமயமலை விலங்கியல் பூங்கா மற்றும் மைசூர் உயிரியல் பூங்கா.
    - செயல்முறைக் கூறுகளில் சிறந்து விளங்கும் பூங்கா: கான்பூர் விலங்கியல் பூங்கா மற்றும் மைசூர் உயிரியல் பூங்கா.
    - வெளியீட்டுக் கூறுகளில் சிறந்து விளங்கும் பூங்கா: வண்டலூர் உயிரியல் பூங்கா மற்றும் பத்மஜா நாயுடு இமயமலை விலங்கியல் பூங்கா.
    - விளைவுக் கூறுகளில் சிறந்து விளங்கும் உயிரியல் பூங்கா: பத்மஜா நாயுடு இமயமலை விலங்கியல் பூங்கா.


82% SCORE IN MEE TEST

- Arignar Anna Zoological park **is spread over 502 hectares, housing about 2,300 animals**
- A total of 178 species of birds, mammals and reptiles are in the facility. **Of these, 98 species are birds, 48 are mammals and 32 are reptiles**
- Some species in the zoo such as Nilgiri langur, lion-tailed macaque, Malabar giant squirrel, fresh water otter, hyena and wild dogs **are found in the Western Ghats of Tamil Nadu**

UNIQUE FEATURES

- Skill development programme for zoo staff, **including animal keepers**
- As part of green initiatives, solar lamps have been installed on all roads inside the zoo and on roads inside the staff quarters. **This helps in reducing electricity charges**
- More than 200 cameras installed in key enclosures **to monitor the health of the wildlife**

## கிருதக்யா 3.0




- ❖ பயிர் உற்பத்தி மேம்பாட்டிற்காக "அதிவேக இனப்பெருக்கத்தை" ஊக்குவிப்பதற்காக இந்திய வேளாண் ஆராய்ச்சிச் சபையினால் கிருதக்யா 3.0 என்ற முன்னெடுப்பானது தொடங்கப்பட்டது.
- ❖ இந்த முன்னெடுப்பானது மாணவர்கள், ஆசிரியர்கள், தொழில்முனைவோர், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் இதரப் பிரிவினருக்கு பயிர் மேம்பாட்டிற்கான புதுமையான அணுகுமுறைகள் மற்றும் தொழில்நுட்பத் தீர்வுகளை விளக்கிக் காட்டுவதற்கான வாய்ப்புகளை வழங்கும்.
- ❖ KRITAGYA என்பதில் KRI என்பது வேளாண்மை என பொருள்படும் கிரிஷி என்பதனையும்; TA என்பது தொழில்நுட்பம் என பொருள்படும் தக்னிக் என்பதனையும்; மற்றும் GYA என்பது அறிவு என பொருள்படும் க்யான் என்பதனையும் குறிக்கிறது.

## ஐஎன்எஸ் அஜய் கப்பல் படையிலிருந்து ஓய்வு

- ❖ ஐஎன்எஸ் அஜய் கப்பலானது 1990 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் தேதியன்று முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் ஜார்ஜியாவின் போட்டி எனும் நகரில் படையில் இணைக்கப் பட்டது.
- ❖ 32 ஆண்டுகள் நம் நாட்டிற்கு மகத்தானச் சேவை வழங்கிய இந்தக் கப்பல் பின்னர் படையிலிருந்து நீக்கப்பட்டது.
- ❖ கார்கில் போரின் போது நடைபெற்ற தல்வார் நடவடிக்கை மற்றும் 2001 ஆம் ஆண்டில் நடைபெற்ற பராக்கிரம் நடவடிக்கை உட்பட பல கடற்படை சார்ந்த நடவடிக்கைகளில் இந்தக் கப்பல் பங்கேற்றது.

## பெண்களால் இயக்கப்படும் முதலாவது ஒட்டக படைப்பிரிவு

- ❖ எல்லைப் பாதுகாப்புப் படையின் பெண்களால் இயக்கப்படும் முதலாவது ஒட்டக படைப் பிரிவானது ராஜஸ்தான் மற்றும் குஜராத் பகுதிகளை ஒட்டிய இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் நிலை நிறுத்தப்பட உள்ளது.
- ❖ டிசம்பர் 01 ஆம் தேதி நடைபெற உள்ள எல்லைப் பாதுகாப்புப் படையின் எழுச்சித் தின அணி வகுப்பில் இந்த அணி முதல் முறையாக பங்கேற்க உள்ளது.

- இந்தப் படையானது உலகிலேயே இது போன்ற முதல் வகை படைப் பிரிவாகும்.



## இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய பட்டியலிடப்பட்ட சாதியினர் நிலை

- இந்து, பௌத்தம் மற்றும் சீக்கியம் அல்லாத பிற மதங்களுக்கு மாறிய பட்டியலிடப் பட்ட சாதியினர் அல்லது தலித்துகளின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலையை ஆய்வு செய்ய மத்திய அரசு ஒரு தேசிய ஆணையத்தை அமைக்க உள்ளது.
- தற்போதைய பட்டியலிடப்பட்ட சாதியினர் பட்டியலில் அதிக உறுப்பினர்களைச் சேர்ப்பதால் ஏற்படும் பாதிப்புகளையும் இது ஆய்வு செய்யும்.
- இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த உறுப்பினர்கள் இந்த ஆய்வில் சேர்க்கப் படவில்லை.

### Matter of Fact

**Three-member** panel likely to be chaired by a Cabinet minister and have on board a member from the judiciary and another retired central government secretary

---

**The Ranganath** Mishra Commission in 2007 had recommended that the Constitution (Scheduled Castes) Order, 1950, should be deleted to delink SC status with religion and grant religion-neutral status to all Dalits, like Scheduled Tribes

- 341வது விதியின் கீழான 1950 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (பட்டியலிடப்பட்ட சாதிகள்) ஆணையானது இந்து மதம், சீக்கியம் அல்லது பௌத்தம் தவிர வேறு எந்த மதத்தைச் சேர்ந்த தனிநபரையும் பட்டியலிடப்பட்ட சாதியினர் வகுப்பின் கீழ் ஒரு உறுப்பினராக அங்கீகரிக்க முடியாது என்று கூறுகிறது.
- முதலில் வெளியிடப்பட்ட ஆணையானது இந்து மதத்தை மட்டுமே சேர்ந்த பட்டியலிடப்பட்ட சாதியினர் வகுப்பினரை மட்டுமே அவ்வாறான உறுப்பினர்களாக வகைப்படுத்தியது.
- இது பின்னர் 1956 ஆம் ஆண்டில் சீக்கியர்களையும், 1990 ஆம் ஆண்டில் பௌத்தர்களையும் சேர்ப்பதற்காகத் திருத்தியமைக்கப்பட்டது.

## தேசியத் தொழில்நுட்ப ஜவுளித்துறை திட்டம்




- ஜவுளி அமைச்சகமானது சிறப்பு வகை இழைகள், நிலையான ஜவுளி வகை, புவிசார் ஜவுளித் துறை, இயக்கவியல் தொழில்நுட்பம் மற்றும் விளையாட்டுத் துறை சார்ந்த ஜவுளி ஆகிய துறைகளில் 23 உத்திசார் ஆராய்ச்சித் திட்டங்களுக்கு அனுமதி அளித்து உள்ளது.
- இந்த உத்திசார் ஆராய்ச்சித் திட்டங்கள் முதன்மைத் திட்டமான 'தேசியத் தொழில் நுட்ப ஜவுளித் துறை திட்டத்தின்' கீழ் மேற்கொள்ளப்படுகிறது.
- இந்த 23 ஆராய்ச்சித் திட்டங்களில், வேளாண்மை, திறன்மிகு ஜவுளித் தொழில், சுகாதார நலன், உத்திசார் பயன்பாடு மற்றும் பாதுகாப்புக் கவச உடைகள் ஆகியவற்றில் பயன்பாட்டுக் கூறுகளைக் கொண்ட சிறப்பு வகை இழைகளுக்கான 12 திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டன.
- வேளாண்மை மற்றும் சுகாதாரத் துறையில் பயன்பாட்டுக் கூறுகளைக் கொண்ட நிலையான ஜவுளிகளுக்கான 4 திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- மேலும், புவிசார் ஜவுளித் தொழிலில் 5 திட்டங்களும், இயக்கவியல் ஜவுளித் தொழிலில் 1 திட்டமும், விளையாட்டுத் துறை சார்ந்த ஜவுளித் தொழிலில் 1 திட்டமும் இதன் மூலம் அனுமதிக்கப் பட்டுள்ளன.

## மாவட்ட மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு மையங்கள்

- நாடு முழுவதும் உள்ள ஒன்பது மாவட்ட மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு மையங்கள் பேச்சு, பார்வை சார்ந்த சிகிச்சை மற்றும் உளவியலாளர்களை உள்ளடக்கிய மையமாக மேம்படுத்தப் பட்டுள்ளன.
- மேம்படுத்தப்பட்ட மாதிரி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு மையங்கள் படான், பிலிபித், பரேலி, பாலகாட், கோலாகாட், அகமதாபாத், அமராவதி, குலு மற்றும் ராம்பூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.
- மாவட்ட மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு மையங்கள் என்பது மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் ஒரு முன்னெடுப்பாகும்.
- இந்தியாவின் கிராமப்புறப் பகுதிகளில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு (PwDs) விரிவான சேவைகளை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.




## சியாச்சினில் செயற்கைக்கோள் அடிப்படையிலான இணைய சேவை

- இந்திய இராணுவமானது சமீபத்தில் லடாக்கில் சியாச்சின் பனிப்பாறை பகுதியில் செயற்கைக் கோள் அடிப்படையிலான இணைய சேவையைச் செயல்படுத்தியது.
- இது உலகின் மிக உயரமான போர்க்களமான 19,061 அடி உயரத்தில் உள்ள சியாச்சின் பனிப்பாறைப் பகுதியில் செயல்படுத்தப்பட்டது.
- பிராட்பேண்ட் நெட்வொர்க் லிமிடெட் (BBNL) நிறுவனம் மூலமாக இந்தச் சேவையானது வழங்கப் படுகிறது.



## சமர்த் ரோந்துக் கப்பல்


- கடலோரப் பாதுகாப்பு அமைப்பை மேம்படுத்துவதற்காக, இந்தியக் கடலோரக் காவல் படையானது தனது கடற்படையில் சமர்த் எனும் ஒரு ரோந்துக் கப்பலினை இணைத்து உள்ளது.
- இந்தக் கப்பலில் ஒரு அதிநவீனக் கண்காணிப்பு அமைப்பானது பொருத்தப் பட்டு உள்ளதோடு, இந்தக் கப்பல் கடல் எண்ணெய்க் கசிவை கட்டுப்படுத்தும் திறனையும் கொண்டுள்ளது.



## முக்கிய காரீஃப் பருவப் பயிர்களின் உற்பத்தி குறித்த முதலாவது முன்கூட்டிய மதிப்பீடுகள்

- முக்கிய காரீஃப் பருவப் பயிர்களின் உற்பத்திக்கான முதல் முன்கூட்டிய மதிப்பீடுகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.
- சமீபத்தில் வெளியிடப்பட்ட மதிப்பீடுகள் நாட்டில் 149.92 மில்லியன் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்படும் என்று கணித்துள்ளது.
- இது 2022-23 காரீஃப் பருவத்திற்கான இலக்கான 163.15 மில்லியன் டன் மற்றும் கடந்த காரீஃப் பருவத்தில் (2021) உற்பத்தியான 156.04 மில்லியன் டன் உற்பத்தியை விட குறைவாகும்.
- கடந்த காரீஃப் பருவத்தில் பதிவான மொத்த காரீஃப் உணவு தானிய உற்பத்தி 150.58 மில்லியன் டன்களாக இருந்தது.
- அரிசி உற்பத்தியானது 104.99 மில்லியன் டன்களாகப் பதிவாகும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- 2016-17 ஆம் ஆண்டு முதல் 2020-21 ஆம் ஆண்டு வரையிலான கடந்த ஐந்து ஆண்டுகளில் பதிவான காரீஃப் பருவ அரிசியின் சராசரி உற்பத்தியை விட இது 4.40 மில்லியன் டன்கள் அதிகமாகும்.
- இருப்பினும், கடந்தப் பருவத்தில் 111.76 மில்லியன் டன் ஆக பதிவான உற்பத்தியை விட இது 6 சதவீதம் குறைவாகும்.
- மக்காச்சோள உற்பத்தியானது 23.10 மில்லியன் டன்களை எட்டும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியானது 23.57 மில்லியன் டன்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- ❖ மொத்தப் பருப்பு உற்பத்தியானது 8.37 மில்லியன் டன்களை எட்டும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- ❖ 2022-23 ஆம் ஆண்டில் மொத்த கரும்பு உற்பத்தி 465.05 மில்லியன் டன்களை எட்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- ❖ இது சராசரி கரும்பு உற்பத்தியான 373.46 மில்லியன் டன்களை விட 91.59 மில்லியன் டன்கள் அதிகமாகும்.




## மருத்துவச் சாதனங்களுக்கான ஏற்றுமதி மேம்பாட்டுச் சபை

- ❖ புதிய ஏற்றுமதி மேம்பாட்டுச் சபையானது, உத்தரப் பிரதேசத்தின் கிரேட்டர் நொய்டாவில் உள்ள யமுனா விரைவுச் சாலை தொழில்துறை மேம்பாட்டு ஆணையத்தில் (YEIDA) தனது தலைமையகத்தினை நிறுவ உள்ளது.
- ❖ அதன் பிராந்திய அலுவலகங்கள் விசாகப்பட்டினம் மற்றும் ஹைதராபாத் ஆகிய இடங்களில் அமைய உள்ளன.
- ❖ இது அரசு மற்றும் மருத்துவச் சாதனங்கள் துறையில் இருந்து நியமனம் செய்யப்பட்ட மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோர் இடம் பெற்ற ஒரு நிர்வாகக் குழுவினால் மேற்பார்வையிடப்படும்.
- ❖ ஏற்றுமதி மேம்பாட்டுச் சபையானது உலகளாவியச் சந்தையில் மருத்துவ சாதனங்கள் மீதான ஏற்றுமதியை மேம்படுத்துவதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் அவற்றின் மேம்பாட்டிற்கு உதவும்.
- ❖ இது வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழான மருந்துத் துறையின் கீழ் இயங்கும்.
- ❖ 2022 ஆம் நிதியாண்டில் ரூ.23,766 கோடி மதிப்புள்ள மருத்துவச் சாதனங்களை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது.
- ❖ இது முந்தைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூ.19,736 கோடி என்ற மதிப்புடன் ஒப்பிடச் செய்கையில் அதிகமாகும்.




## 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம்

- இந்தியாவில், 2020 ஆம் ஆண்டில் 35 ஆக இருந்த 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதமானது 32 ஆகக் குறைந்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் 1,000 பிறப்புகளுக்கு 35 ஆக இருந்த 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதமானது 2020 ஆம் ஆண்டில் 1,000 பிறப்புகளுக்கு 32 ஆகக் குறைந்துள்ளது.
- உத்தரப் பிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இந்த மதிப்பீட்டில் மிகப் பெரியச் சரிவானது பதிவாகியுள்ளது.
- இது கிராமப்புறங்களில் 36 ஆகவும், நகர்ப்புறங்களில் 21 ஆகவும் மாறுபடுகிறது.
- கேரளாவில் (6) குறைந்த அளவு பச்சிளம் குழந்தை இறப்பு விகிதமும், மத்தியப் பிரதேசத்தில் (43) அதிகமான பச்சிளம் குழந்தை இறப்பு விகிதமும் பதிவாகியுள்ளது.
- கேரளா (8), தமிழ்நாடு (13) மற்றும் பிற ஒன்பது மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் ஏற்கனவே 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் தொடர்பான நிலையான மேம்பாட்டு இலக்கினை (2030 ஆம் ஆண்டிற்குள் 25க்கும் குறைவாகவோ அல்லது சமமாகவோ) எட்டியுள்ளன.
- 2020 ஆம் ஆண்டிற்கான தோராயமான தேசியப் பிறப்பு விகிதமானது (CBR) 19.5 ஆகும்.
- 2019 ஆம் ஆண்டில் பதிவான அளவை விட 0.2 சதவீதப் புள்ளிகள் குறைந்துள்ளதை இது குறிக்கிறது.



## இந்தியாவின் முதல் முழு கை மாற்று அறுவைச் சிகிச்சை

- இந்தியாவின் முதல் முழு கை மாற்று அறுவைச் சிகிச்சையானது கேரளாவில் உள்ள அமிர்தா மருத்துவமனையில் மேற்கொள்ளப் பட்டது.
- இது உலகின் இது போன்ற மூன்றாவது வகை அறுவைச் சிகிச்சையாகும்.
- இது போன்ற மாற்று அறுவைச் சிகிச்சையானது இதற்கு முன்பு மெக்சிகோ மற்றும் பிரான்சு ஆகிய நாடுகளில் மட்டுமே மேற்கொள்ளப் பட்டன.
- 2015 ஆம் ஆண்டில், அமிர்தா மருத்துவமனையானது 30 வயது நபருக்கு நாட்டின் முதல் கை மாற்று அறுவைச் சிகிச்சையினை நடத்தியது.

## லோக் மாந்தன் திட்டம்

- மூன்றாவது லோக் மாந்தன் நிகழ்வானது, குவஹாத்தியில் உள்ள ஸ்ரீமந்த சங்கர்தேவா கலாசேத்திராவில் தொடங்கியது.
- லோக் மாந்தனுக்கான இந்த ஆண்டிற்கான கருத்துரு லோக் பரம்பரா (லோக மரபுகள்) என்பதாகும்.
- லோக் மரபுகள் என்பவை நமது கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை உயிர்ப்புடனும் நிலையாகவும் வைத்துள்ளன என அது வலியுறுத்தும்.
- தேசிய சுயாதீனத்தினை நோக்கிய நமது உணர்வுகளையும் இது வலுப்படுத்தியுள்ளது.

## நிஸ்டார் & நிபுண் கப்பல்கள்

- இரண்டு ஆழ்கடல் ஆய்வு உதவிகரக் கப்பல்களான (DSV), நிஸ்டார் மற்றும் நிபுண் ஆகியவை விசாகப் பட்டினத்தில் இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்டன.
- இவை இந்தியக் கடற்படைக்காக உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு கட்டமைக்கப் பட்ட இது போன்ற முதல் வகை கப்பல்களாகும்.


## தேசியச் சுற்றுச்சூழல் அமைச்சர்கள் மாநாடு

- தேசியச் சுற்றுச்சூழல் அமைச்சர்கள் மாநாடானது குஜராத்தில் நடைபெற்றது.
- இந்த மாநாட்டின் நோக்கம் சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றம் தொடர்பானப் பிரச்சினைகளில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் ஒருங்கிணைந்தப் பணியை ஊக்குவிப்பதன் மூலம் கூட்டுறவுக் கூட்டாட்சி முறையை மேம்படுத்துவதாகும்.
- இந்த மாநாட்டில் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டிய துறைகளுடன் 6 கருத்துரு கொண்ட அமர்வுகள் மேற்கொள்ளப் பட்டன.
    - LiFE, பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்தல் (உமிழ்வைத் தணித்தல் மற்றும் பருவ நிலைத் தாக்கங்களுக்கு ஏற்ப மாற்றியமைத்தல் ஆகியவற்றிற்காக, பருவநிலை மாற்றம் குறித்த அரசு செயல் திட்டங்களைப் புதுப்பித்தல்);
    - பரிவேஷ் (ஒருங்கிணைந்தப் பசுமை சார்ந்தத் திட்ட அனுமதிகளுக்கான ஒற்றைச் சாளர அமைப்பு);
    - வன மேலாண்மை;

- மாசுபாடு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு;
- வனவிலங்கு மேலாண்மை;
- நெகிழி மற்றும் கழிவு மேலாண்மை.

## மாதிரிப் பதிவு முறை (SRS) புள்ளியியல் அறிக்கை 2020

- இந்த அறிக்கையினை இந்தியத் தலைமை பதிவாளர் அலுவலகமானது சமீபத்தில் வெளியிட்டது.
- பின்வரும் குறிகாட்டிகளில் 2014 ஆம் ஆண்டிலிருந்து குறிப்பிடத்தக்க சரிவு காணப் படுவதையும், 2030 ஆம் ஆண்டிற்குள் நிலையான மேம்பாட்டு இலக்குகளை (SDGs) அடைவதற்கான பாதையில் இந்தியா தற்போது உள்ளது என்பதையும் இந்த அறிக்கை வெளிப்படுத்தியது.
    - குழந்தை இறப்பு விகிதம் (IMR),
    - 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் (U5MR),
    - பச்சிளம் குழந்தை இறப்பு விகிதம் (NMR).
- 2019 ஆம் ஆண்டில் 1,000 பிறப்புகளுக்கு 30 ஆக இருந்த குழந்தை இறப்பு விகிதமானது, 2020 ஆம் ஆண்டில் 2 புள்ளிகள் குறைந்து 1,000 பிறப்புகளுக்கு 28 ஆக குறைந்துள்ளது.



- இதன் ஆண்டு சரிவு விகிதமானது 6.7 சதவீதம் ஆகும்.
- இதில் கிராமப்புற நகர்ப்புற வேறுபாடு 12 புள்ளிகளாக குறைந்துள்ளது.
- 5 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளின் இறப்பு விகிதமானது ஆண் குழந்தைகளை விட அதிகமாக உள்ளது.
- 5 வயதிற்குட்பட்ட ஆண் குழந்தைகளின் இறப்பு விகிதத்தில் 4 புள்ளிகளும், 5 வயதிற்கு உட்பட்ட பெண் குழந்தைகளின் இறப்பு விகிதத்தில் 3 புள்ளிகளும் குறைந்துள்ளன.
- உத்தரப் பிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் அதிகபட்சமாக 5 புள்ளிகள் சரிவினைக் கண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் 1,000 பிறப்புகளுக்கு 22 ஆக இருந்த பச்சிளம் குழந்தைகளின் இறப்பு விகிதமானது, 2020 ஆம் ஆண்டில் 1,000 பிறப்புகளுக்கு 20 ஆக குறைந்தது.
- இது 9.1 சதவீத வருடாந்திரச் சரிவாகும்.
- ஆறு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் ஏற்கனவே 2030 ஆம் ஆண்டிற்குள் 1,000 பிறப்புகளுக்கு 12 இறப்புகள் என்ற அளவிற்கு குறைவான பச்சிளம் குழந்தைகள் இறப்பு விகிதத்தினை அடைய வேண்டும் என்ற ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த மற்றும் நிலையான மேம்பாட்டு இலக்குகளை அடைந்துள்ளன.
- இதில் கேரளா (4), டெல்லி (9), தமிழ்நாடு (9), மகாராஷ்டிரா (11), ஜம்மு காஷ்மீர் (12) மற்றும் பஞ்சாப் (12) ஆகியவை அடங்கும்.

## பாதுகாப்புப் படைகளின் புதியத் தலைவர்

- பாதுகாப்புப் படைகளின் புதியத் தலைவராக லெப்டினன்ட் ஜெனரல் அனில் சௌஹான் அவர்களை (ஓய்வு பெற்றவர்) அரசாங்கம் நியமித்துள்ளது.
- 40 ஆண்டுகள் இராணுவத்தில் பணியாற்றிய அனில் சவுகான் அவர்கள் கடந்த ஆண்டு ஓய்வு பெற்றார்.
- நாட்டின் முதலாவது பாதுகாப்புப் படைகளின் முதலாவது தலைவரான ஜெனரல் பிபின் ராவத் அவர்கள் கடந்த ஆண்டு டிசம்பர் 8 ஆம் தேதியன்று நடைபெற்ற விமான விபத்தில் உயிரிழந்ததை அடுத்து அந்தப் பதவி காலியாக இருந்தது.



### SRESTHA-குஜராத் திட்டம்

- உலக வங்கியானது SRESTHA-G திட்டத்திற்காக 350 மில்லியன் அமெரிக்க டாலர் நிதி உதவியினை வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.
- SRESTHA-G என்பது "மாற்றப்பட்ட சுகாதாரச் சாதனைகளுக்கான அமைப்பு சார்ந்த சீர்திருத்த முயற்சிகள்"- குஜராத் என்பதன் விரிவாக்கமாகும்.
- இந்தத் திட்டமானது குஜராத்தில் உள்ள முக்கியச் சுகாதார வழங்கீட்டு அமைப்புகளை மாற்றி அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது மாநிலத்தில் உள்ள அனைத்துப் பருவ வயதுப் பெண்களுக்கான ஆரம்பச் சுகாதாரச் சேவைகளின் சமத்துவம், தரம் மற்றும் உள்ளடக்கத் தன்மையை மேம்படுத்துவதற்கான முக்கியத் துறைகளிலும் கவனம் செலுத்த உள்ளது.
- இந்தத் திட்டமானது நோய்க் கண்காணிப்பு அமைப்புகளின் திறன் மேம்பாட்டிலும் கவனம் செலுத்த உள்ளது.

## சர்வதேசச் செய்திகள்

### பாராளுமன்றச் சங்க மாநாடு

- உத்தரப் பிரதேசத்தின் ஜான்சி-லலித்பூர் பாராளுமன்றத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுராக் சர்மா, கனடாவின் ஹாலிஃபாக்ஸில் நடைபெற்ற 65வது காமன்வெல்த் பாராளுமன்றச் சங்க மாநாட்டில், பாராளுமன்றச் சங்க மாநாட்டின் (CPA) சர்வதேசப் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இதன் மூலம் உலகின் மிகப் பெரிய மற்றும் பழமையான சர்வதேசப் பாராளுமன்றச் சங்கத்தில் இடம் பெறும் இரண்டாவது இந்திய அதிகாரியாக சர்மா பொறுப்பினை ஏற்றுள்ளார்.
- காமன்வெல்த் பாராளுமன்றச் சங்கமானது (CPA) 1911 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது காமன்வெல்த் அமைப்பின் 55 உறுப்பினர் நாடுகளைச் சேர்ந்த 180க்கும் மேற்பட்ட தேசிய, மாநில, மாகாண மற்றும் பிராந்தியப் பாராளுமன்றங்கள் மற்றும் சட்டமன்றங்களைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற ஊழியர்களை அதன் வலையமைப்பின் மூலம் ஒன்றிணைக்கிறது.

### 10வது பெரிய ஆயுள் காப்பீட்டு நிறுவனம்

- உலகின் 10வது பெரிய ஆயுள் காப்பீடு வழங்கும் நாடாக உருப்பெற்று இந்தியா, சீனா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளைப் பின்னுக்குத் தள்ளியுள்ளது
- ஆயுள் காப்பீட்டுக் கழகமானது, உலகளவில் மூன்றாவது வலுவான மற்றும் பத்தாவது மதிப்பு மிக்க காப்பீட்டு நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
- இத்தாலியின் Poste Italiane நிறுவனமானது வலுவான காப்பீட்டு நிறுவனமாகும்.
- அதைத் தொடர்ந்து இந்தியாவின் ஆயுள் காப்பீட்டுக் கழக நிறுவனம் இடம் பெற்று உள்ளது.
- சீனாவின் பிங் ஆன் காப்பீட்டு நிறுவனம் மிகவும் மதிப்புமிக்க நிறுவனமாக உள்ளது

## குஷியாரா நதி

- ❖ இந்தியா மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகள் குஷியாரா நதியின் நீரைப் பகிர்ந்து கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வரைவை இறுதி செய்தன.
- ❖ இந்தியா-வங்காளதேச கூட்டு நதிகள் ஆணையத்தின் 38வது அமைச்சர்கள் கூட்டத்தின் போது இது கையெழுத்தானது.
- ❖ குஷியாரா நதியானது, பராக் நதியின் கிளையாக இந்திய-வங்காளதேச எல்லையை உருவாக்குகிறது.
- ❖ சுர்மாவில் இருந்து பிரியும் போது, அது பராக் நதியின் கிளையாக உருவெடுக்கிறது.
- ❖ வங்காள தேசத்தில் சிறிது தூரம் பாய்ந்த பிறகு, அது மீண்டும் சுர்மா நதியுடன் இணைகிறது.
- ❖ இந்த ஒருங்கிணைந்த நதி இங்கு மேக்னா நதி என்று அழைக்கப்படுகிறது.
- ❖ இந்தியாவில் மணிப்பூர், மிசோரம் மற்றும் அஸ்ஸாம் ஆகிய மாநிலங்கள் இந்த நதியின் மூலம் தண்ணீரைப் பெறுகின்றன.
- ❖ இந்தியாவும் வங்காளதேசமும் தங்களுக்கு இடையே 54 நதிகளைப் பகிர்ந்து கொள்ளச் செய்கின்றன.
- ❖ வங்காள தேசத்தின் அனைத்து ஆறுகளும் இந்தியாவில் உற்பத்தியாகின்றன அல்லது அதன் வழியாக பாய்கின்றன.

## வோஸ்டாக் இராணுவப் பயிற்சி 2022

- ❖ பலதரப்பு உத்திசார் மற்றும் வழிகாட்டுப் பயிற்சியான 2022 ஆம் ஆண்டு வோஸ்டாக் என்றப் பயிற்சியில் பங்கேற்பதற்காக இந்திய இராணுவத்தின் கோர்க்கா ரைபிள்ஸ் படைப் பிரிவு ரஷ்யா வந்தடைந்தது.
- ❖ இந்தப் பயிற்சியில் இந்தியா, சீனா, லாவோஸ், மங்கோலியா, நிகரகுவா, சிரியா மற்றும் முன்னாள் சோவியத் நாடுகளைச் சேர்ந்த 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்க உள்ளனர்.
- ❖ விளாடிவோஸ்டாக் ரஷ்யாவின் தொலைதூரக் கிழக்குப் பகுதியில் ஜப்பான் கடலில் அமைந்துள்ளது.

## சீனாவின் சின்ஜியாங் பிராந்தியம் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்தின் அறிக்கை


- ❖ சின்ஜியாங் மாகாணத்தில் சீன அரசு நடத்திய முறைகேடுகள் குறித்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.
- ❖ சின்ஜியாங்கில் வாழும் உய்குர்கள் மற்றும் பிற முஸ்லீம் இனக் குழுக்கள் சிறை வைக்கப் பட்டிருப்பதனை "மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள்" என்று ஐக்கிய நாடுகள் சபை கூறுகிறது.
- ❖ இந்த அறிக்கை வெளியிடப்பட்ட போது மிச்செல் பச்லெட் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பின் உயர் ஆணையராக இருந்தார்.
- ❖ ஆனால் இந்த அறிக்கையில் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தையும் சீனா மறுத்துள்ளது.




## ஐக்கிய நாடுகள் சபையின் ஆழ்கடல் ஒப்பந்தம்

- இது 'பாரீஸ் பெருங்கடல் ஒப்பந்தம்' என்றும் குறிப்பிடப்படுகிறது.
- இது தேசிய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பல்லுயிரியலைக் கையாள்வதற்கான ஒரு ஒப்பந்தமாகும்.
- இது பெருங்கடலைப் பாதுகாப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் ஒப்பந்தத்திற்கு ஒரு அங்கீகாரம் வழங்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது.
- இது ஐரோப்பிய ஒன்றியம் உட்பட 168 நாடுகளை உள்ளடக்கிய ஒரு பேச்சுவார்த்தை ஆகும்.
- ஆனால் இது பேச்சு வார்த்தையின் முடிவில் முற்றிலும் தோல்வியடைந்தது.
- கடந்த ஜூன் மாதத்தில் போர்ச்சுகலின் லிஸ்பன் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பெருங்கடல் மாநாட்டில் ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் "கடல்சார் அவசரநிலையினை" அறிவித்தார்.
- இது பிரத்தியேக பொருளாதார மண்டலங்களுக்கு அப்பால் இருக்கும் கடல் பகுதியைப் பற்றியது ஆகும்.
- ஒரு நாட்டின் கடற்கரையிலிருந்து சுமார் 200 நாட்டிகல் மைல் அல்லது கடலுக்குள் 370 கிமீ தொலைவு வரையில், அதாவது ஆய்வு செய்வதற்கான சிறப்பு உரிமைகளைக் கொண்டிருக்கும் வரையிலான தொலைவில் அந்த மண்டலம் அமைந்துள்ளது.
- அதற்கு அப்பால் உள்ள நீர் தடைகளற்ற கடல் அல்லது ஆழ்கடல் எனப்படும்.
- 1982 ஆம் ஆண்டின் கடல்சார் சட்டங்கள் மீதான ஐக்கிய நாடுகள் சபையின் மீதான உடன்படிக்கையின் (UNCLOS) கீழ் இந்த ஒப்பந்தம் குறித்தப் பேச்சுவார்த்தையானது நடத்தப்பட வேண்டும்.

- கடல் வளங்கள் மீதான நாடுகளின் உரிமைகளை கடல்சார் சட்டங்கள் மீதான ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கை நிர்வகிக்கிறது.
- கடல்சார் சட்டங்கள் மீதான ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கை என்பது கடற்கரையில் இருந்து 22 கிமீ வரையிலான கடல் எல்லை வரை, எந்தவொரு நாடும் முழு இறையாண்மையுடன் பிராந்திய உரிமைகளைக் கோரலாம் என்பதை நிறுவ வழி வகுத்ததுடன் 200 நாட்டிகல் கடல் மைல்கள் வரையிலான பிரத்தியேகப் பொருளாதார மண்டலத்தின் வரம்பு ஆகியவற்றையும் தீர்மானிக்கிறது.
- இது சர்வதேசக் கடற்பகுதி ஆணையம் மற்றும் பிற மோதல்-தீர்வு வழிமுறைகளையும் உருவாக்கியது.
- ஆனால், பூமியின் பெருங்கடல் பகுதிகளின் பரந்த நிலப்பரப்புகளின் வளத்தினைப் பாதுகாப்பதற்கான ஒரு ஒப்பந்தம் இதுவரையில் இல்லை.
- மாறாக, ஒவ்வொரு நாட்டிற்கும் தடையற்ற கடல் பகுதியினை அணுக உரிமை உண்டு
- இது வணிக நோக்கங்களுக்காக மீன் மற்றும் பிற கடல்சார் உயிரினங்களைப் பிடிப்பதற்காக பெரிய அளவிலான மீன்பிடித்தல் மற்றும் பெரிய வலையைப் பயன்படுத்தி மீன் பிடித்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு வழி வகுக்கும்.
- இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட நாடுகளின் பங்கேற்புடன் உயர் இலட்சியக் கூட்டணி உருவாக்கப்பட்டது.
- இது '30×30' இலக்குகளில் கவனம் செலுத்துவதோடு, 2030 ஆம் ஆண்டிற்குள் 30% கடல் பகுதிகளைப் பாதுகாக்கும்.




## சுகாதார நல வசதிகளில் WASH சேவையின் முன்னேற்றம் 2000-2021

- UNICEF மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவை இணைந்து WASH சேவை குறித்த (தண்ணீர், துப்புரவு மற்றும் ஆரோக்கியம்) முன்னேற்றத்தைக் காண்பதற்காக இந்த அறிக்கையை வெளியிட்டன.
- உலகில் 50 சதவீதத்திற்கும் அதிகமான சுகாதார மையங்களில் அடிப்படை சுகாதாரச் சேவைகள் இல்லாததால் கிட்டத்தட்ட 4 பில்லியன் மக்கள் ஒரு ஆபத்தான நிலையில் உள்ளனர்.
- 2030 ஆம் ஆண்டிற்குள், 46 குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளில் பொதுவான அடிப்படை WASH சேவைகளை 10 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கும் குறைவான செலவில் பெற முடியும்.

- இந்தியாவில் 38 சதவீத மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகளில் மட்டுமே அடிப்படை சுகாதார வசதிகள் உள்ளன.
- உலக சராசரியை விட இந்தியாவில் 12 சதவீதம் குறைவான அடிப்படை சுகாதார வசதிகளே உள்ளன.
- அரசு சாரா சுகாதார நிறுவனங்கள் இந்த அம்சத்தில் தெளிவான கண்காணிப்பினைக் கொண்டுள்ளன.
- அரசு நிறுவனங்களில் உள்ள 32 சதவீத வசதிகளுடன் ஒப்பிடுகையில், 69 சதவீத வசதிகளுடன் தனியார் அடிப்படைச் சுகாதார அமைப்புகள் சிறப்பானச் சேவையைக் கொண்டுள்ளன.
- சுகாதார நிலையங்களில் பாதுகாப்பான தண்ணீர் கிடைப்பதில் கிராமப்புறம்-நகர்ப் புறம் என்ற வேறுபாடு இருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.
- 90 சதவீத நகர்ப்புற சுகாதார மையங்கள் பாதுகாப்பான தண்ணீரை வழங்குகின்ற அதே நேரத்தில் கிராமப்புறங்களில் 10 சதவீத மையங்கள் மட்டுமே இந்த வசதியை வழங்கச் செய்கின்றன.




## ரமோன் மகசேசே விருது 2022


- 2022 ஆம் ஆண்டு ரமோன் மகசேசே விருது பெற்றவர்கள் சொதேரா சிம் (கம்போடியா), பெர்னாடெட் மாட்ரிட் (பிலிப்பைன்ஸ்), தடாஷி ஹட்டோரி (ஜப்பான்) மற்றும் கேரி பெஞ்சேகிப் (இந்தோனேசியா) ஆகியோர் ஆவர்.
- சொதேரா சிம் கம்போடியாவைச் சேர்ந்த மனநல ஆலோசகர் ஆவார்.
- தடாஷி ஹட்டோரி ஜப்பானைச் சேர்ந்த ஒரு பார்வை நல மற்றும் உடல் நல மருத்துவர் ஆவார்.
- பெர்னாடெட் மாட்ரிட் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த ஒரு குழந்தைகள் உரிமை ஆர்வலர் ஆவார்.
- கேரி பெஞ்செகிப் இந்தோனேசியாவைச் சேர்ந்த ஒரு நெகிழி மாசுபாட்டு எதிர்ப்புப் போராளி ஆவார்.
- இது பிலிப்பைன்ஸின் ரமோன் மகசேசே விருதுகள் அறக்கட்டளையினால் (RMAF) அறிவிக்கப் பட்டது.

- 1957 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த விருதானது பிலிப்பைன்ஸின் மூன்றாவது அதிபரான ரமோன் மகசேசேயின் பெயரால் அழைக்கப்படுகிறது.
- இது "ஆசியாவின் அமைதிக்கான நோபல் பரிசு" என்று பரவலாகக் கருதப்படுகிறது.




## இந்தியாவில் கோவிட்-19 பெருந்தொற்று கால கொள்முதல்: சவால்கள், புத்தாக்கங்கள் மற்றும் அதன் மூலம் கற்ற பாடங்கள்

- இது உலக வங்கியினால் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையாகும்.
- இதில், கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில் இந்தியா மேற்கொண்ட பயனுள்ளச் செயல்பாடுகளை உலக வங்கி பாராட்டுகிறது.
- நாட்டில் பொது சுகாதார அவசரநிலையின் போது ஏற்றுமதி மீதான ஆரம்பகாலக் கட்டுப்பாடுகள் அதற்குச் சாதகமாக செயல்பட்டன.
- மையப்படுத்தப்பட்டக் கொள்முதல், நீண்ட காலச் சந்தை மேம்பாட்டிற்கான ஆதரவு மற்றும் அவசர மருத்துவ உபகரணங்களின் (EME) உற்பத்தி போன்ற இந்திய அரசாங்கத்தின் முடிவை உலக வங்கி அங்கீகரித்தது.




- ஒரு வலுவான அமைச்சகங்களுக்கு இடையேயான அமைப்புகளை உருவாக்கியதன் மூலம், மாநிலங்களுக்கு உதவுவதற்காக வேண்டி ஒரு மையப்படுத்தப்பட்ட கொள்முதல் முறையைக் கொண்டு வருவது குறித்து விரைவாக முடிவெடுக்க அரசாங்கத்திற்கு உதவியது.

- "கோவிட்-19 அவசரகாலச் செயல்பாடு மற்றும் சுகாதார அமைப்புகளை வலுப்படுத்தும் திட்டத்திற்கு" உலக வங்கி மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) ஆகியவை இணைந்து 1.5 பில்லியன் டாலர் தொகையை நிதியளித்தன.

## உலக சமூகப் பாதுகாப்பு அறிக்கை 2020-22

- சர்வதேச தொழிலாளர் அமைப்பு சமீபத்தில் ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளுக்கான பிரத்தியேக அறிக்கையை வெளியிட்டது.
- இதன்படி உலக மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 53% பேருக்குச் சமூகப் பாதுகாப்பு கிடைப்பதில்லை.
- ஆசிய-பசிபிக் பகுதியில் 56% மற்றும் இந்தியாவில் 76%க்கும் அதிகமானோர் சமூகப் பாதுகாப்பினை பெறுவதில்லை.
- இந்தியாவின் சமூகப் பாதுகாப்புச் செலவினமானது தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5%க்கும் குறைவாக உள்ளது.
- சர்வதேச தொழிலாளர் அமைப்பு என்பது ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு சிறப்பு நிறுவனமாகும்.
- 187 உறுப்பினர் நாடுகளின் அரசாங்கங்கள், முதலாளிகள் மற்றும் தொழிலாளர்களை ஒன்றிணைக்கும் ஒரே முத்தரப்பு ஐ.நா. அமைப்பு இதுவாகும்.

## ஐக்கிய இராஜ்ஜியத்தின் புதிய பிரதமர்

- லிஸ் டிரஸ் என்பவர் ஆளும் பழமைவாதக் கட்சியின் தலைவராகவும், ஐக்கிய இராஜ்ஜியத்தின் புதியப் பிரதமராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக்கைத் தோற்கடித்தார்.
- மார்கரெட் தாட்சர் மற்றும் தெரசா மே ஆகியோருக்குப் பிறகு ஐக்கிய இராஜ்ஜியத்தின் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்றாவதுப் பெண்மணி லிஸ் டிரஸ் ஆவார்.
- இந்த மூவரும் பழமைவாதக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- இவர் போரிஸ் ஜான்சனுக்குப் பிறகு பிரிட்டனின் தலைவராக பொறுப்பேற்க உள்ளார்.



## உலகப் பொருளாதார மற்றும் காப்பீட்டுக் கண்ணோட்ட அறிக்கை

- சுவிஸ் ரீ என்ற நிறுவனமானது இந்த அறிக்கையினை வெளியிட்டது.
- 2021 ஆம் ஆண்டில் 10வது பெரிய காப்பீட்டுச் சந்தையாக உள்ள இந்தியா 2032 ஆம் ஆண்டில் 6வது பெரிய காப்பீட்டுச் சந்தையாகத் திகழும் என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- இந்தியாவில் ஆயுள் காப்பீட்டு தவணைகள் 2022 ஆம் ஆண்டில் முதன்முறையாக 100 பில்லியன் அமெரிக்க டாலர்களைக் கடக்க உள்ளது.
- பணவீக்கம் மற்றும் பணவியல் கொள்கை நெருக்கீடுகள் ஆகியவை நீண்ட கால சவரன் தங்கப் பத்திர இலாப வழங்கீடுகளை அதிகப்படுத்துகின்றன.
- இது அதிக உண்மையான வழங்கீடுகள் மற்றும் பணவீக்கக் கணிப்புகள் ஆகிய இரண்டிலும் சந்தை விலை நிர்ணயம் செய்ய உதவுகிறது.
- காப்பீட்டாளர்கள் காலப்போக்கில் அதிக உரிமைக் கோரல் செலவை ஈடு செய்ய உதவும் வகையில் அதிக முதலீட்டு வருவாயிலிருந்துப் பயனடைவார்கள்.

## யுனெஸ்கோ அமைப்பின் உலகளாவியக் கற்றல் நகரங்களின் வலையமைப்பு 2022

- யுனெஸ்கோவின் கூற்றுப் படி, இந்த வலையமைப்பானது "உத்வேகம், அறிவு மற்றும் சிறந்தப் பயிற்சி" ஆகியவற்றினை வழங்கும் உலகளாவியக் கொள்கை சார்ந்த வலை அமைப்பு ஆகும்.
- இந்தியாவின் மூன்று நகரங்கள்: அதாவது தெலுங்கானாவின் வாரங்கல், கேரளாவின் திருச்சூர் மற்றும் நிலாம்பூர் ஆகியவை இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.
- இவை யுனெஸ்கோ அமைப்பின் உலகளாவிய கற்றல் நகரங்களின் வலையமைப்பில் இடம் பெற்ற முதல் இந்திய நகரங்கள் ஆகும்.
- தெலுங்கானாவில் யுனெஸ்கோ அமைப்பின் அங்கீகாரத்தினைப் பெற்ற இரண்டாவது நகரம் வாரங்கல் ஆகும்.
- முன்னதாக, தெலுங்கானா மாநிலத்தின் முலுகு மாவட்டத்தில் உள்ள இராமப்பா கோயில் யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரியச் சின்னங்களின் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளது.
- 44 நாடுகளைச் சேர்ந்த 77 நகரங்களில் மூன்று இந்திய நகரங்களும் இடம் பெற்று உள்ளன.
- கற்றல் நகரம் என்பதனை வரையறுக்கும் ஆறு அம்சங்கள் உள்ளன: அவையாவன
    - உள்ளார்ந்தக் கற்றலை வழங்கச் செய்வதற்காக ஒவ்வொரு துறையிலும் அதன் வளங்களைத் திறம்பட திரட்டுதல்
    - குடும்பங்கள் மற்றும் சமூகங்களில் கற்றல் முறைக்குப் புத்துயிர் அளிக்கிறது
    - பணியிடங்களில் கற்றலை எளிதாக்குதல்
    - நவீன கற்றல் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை விரிவுபடுத்துதல்
    - கற்றலில் தரமாகவும் சிறந்தும் விளங்குதல்
    - வாழ்க்கை முழுவதும் கற்றல் கலாச்சாரத்தை மேம்படுத்துதல்

## மைத்ரீ திறன்மிகு அனல் மின் நிலையத் திட்டம்

- பிரதமர் நரேந்திர மோடி மற்றும் வங்காளதேசப் பிரதமர் ஷேக் ஹசீனா ஆகியோர் இணைந்து மைத்ரீ திறன்மிகு அனல் மின் நிலையத்தின் முதல் அலகினைச் சமீபத்தில் தொடங்கி வைத்தனர்.
- இது வங்காளதேசத்தின் குல்னா பிரிவின் பாகர்ஹாட் மாவட்டத்தில் ராம்பால் என்ற இடத்தில் அமைந்துள்ளது.
- இது இந்தியாவின் சலுகை நிதித் திட்டத்தின் கீழ் உருவாக்கப் படுகிறது.

## 7வது கிழக்குப் பொருளாதார மன்றம்

- இது ரஷ்யாவின் விளாடிவோஸ்டோக் நகரில் நடைபெற்றது.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு, 'பல்முனை உலகத்திற்கான பாதையில்' என்பதாகும்.
- ரஷ்யாவின் தொலைதூர கிழக்குப் பகுதிகளில் முதலீட்டை ஊக்குவிக்கும் ஒரு நோக்கத்திற்காக 2015 ஆம் ஆண்டில் இந்த மன்றமானது நிறுவப்பட்டது.
- ரஷ்யாவின் தொலைதூர கிழக்குப் பகுதிகளில் இந்தியாவிற்குத் தேவையான பல பெட்ரோலிய வளங்கள் உள்ளன.
- இந்நகரில் தனது தூதரகத்தைத் நிறுவிய முதல் நாடு இந்தியாவாகும்.




## சர்வதேச சுற்றுலா விருது 2023

- பசிபிக் பகுதி சுற்றுலா எழுத்தாளர் சங்கத்தினால் வழங்கப்படும் (PATWA) 2023 ஆம் ஆண்டிற்கான கலாச்சாரம் சார்ந்த சிறந்த சுற்றுலாத் தளத்திற்கான சர்வதேசப் பயண விருதினை மேற்கு வங்காளம் பெற உள்ளது.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் உலகச் சுற்றுலா அமைப்பின் (UNWTO) ஒரு துணை உறுப்பினர் அமைப்பாகும்.
- 2023 ஆம் ஆண்டு மார்ச் 09 ஆம் தேதியன்று ஜெர்மனியின் பெர்லின் நகரில் நடைபெற உள்ள உலகச் சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்துத் தலைவர்களின் உச்சி மாநாட்டில் இந்த விருதானது வழங்கப்படும்.
- தொடர்ந்து இரண்டாவது முறையாக, உலகப் பயண விருதுகளில், 2022 ஆம் ஆண்டின் கரீபியன் பகுதியின் முன்னணிக் கலாச்சாரச் சுற்றுலாத் தளமாக கியூபா குடியரசுத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

## உலகப் பால்வள உச்சி மாநாடு 2022

- சர்வதேசப் பால் பண்ணைக் கூட்டமைப்பின் 2022 ஆம் ஆண்டு உலகப் பால்வள உச்சி மாநாட்டினைத் தேசியத் தலைநகரப் பிராந்தியத்தில் உள்ள கிரேட்டர் நொய்டாவில் இந்திய அரசு நடத்தவுள்ளது.
- 1974 ஆம் ஆண்டில் புது டெல்லியில் நடைபெற்ற உலகப் பால்வள உச்சி மாநாட்டிற்குப் பிறகு இந்தியாவில் இந்த மாநாடு நடைபெற உள்ளது.
- உலகப் பால் உற்பத்தியில் இந்தியா 23% பங்களிப்பை வழங்கி, உலகின் மிகப்பெரிய பால் உற்பத்தியாளராக உள்ளது.
- பால் உற்பத்தியில் முன்னணியில் உள்ள முதல் 3 மாநிலங்கள் உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகியனவாகும்.

## இராணி இரண்டாம் எலிசபெத்

- இராணி இரண்டாம் எலிசபெத் அவர்கள் தனது 96 வயதில் ஸ்காட்லாந்தின் பால்மோரலில் காலமானார்.
- இவர் 1952 ஆம் ஆண்டு முதல் 70 ஆண்டுகள் வரை இங்கிலாந்தில் ஆட்சி செய்தார்.
- இவர் உலகின் மிக வயதான மன்னர் மற்றும் பிரிட்டனின் நீண்ட காலம் ஆட்சி செய்த மன்னர் ஆவார்.
- 2015 ஆம் ஆண்டில், இராணி எலிசபெத் தனது முப்பாட்டி இராணி விக்டோரியா அவர்களின் ஆட்சிக் காலத்தினை விஞ்சி, நீண்ட காலம் பணியாற்றிய பிரிட்டிஷ் மன்னர் என்ற பெருமையைப் பெற்றார்.
- இந்த ஆண்டு, அவர் உலகிலேயே நீண்ட காலம் ஆட்சி செய்த இரண்டாவது மன்னர் ஆனார்.
- இவர் காமன்வெல்த் அமைப்பின் தலைவராகவும், இங்கிலாந்து தேவாலயத்தின் ஒரு உயர்நிலை ஆளுநராகவும் பணியாற்றினார்.
- இராணியின் மரணச் சடங்குகள் மற்றும் பிரிட்டிஷ் அரியணையில் சார்லஸ் (73) அவர்களை நியமிப்பதற்கானத் திட்டங்கள் முறையே ஆபரேஷன் இலண்டன் ப்ரிஜ் மற்றும் ஆபரேஷன் ஸ்பிரிங் டைட் என்று பெயரிடப்பட்டுள்ளன.
- இரண்டாம் எலிசபெத் மகாராணியின் நினைவாக செப்டம்பர் 11 ஆம் தேதியன்று முழு நாளும் அரசத் துக்க நாளாக இந்திய அரசு அறிவித்தது.



## இந்தியா-வங்காளதேசம் விரிவான பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தம்

- இந்தியா மற்றும் வங்காளதேசம் ஆகியவை விரைவில் இருதரப்பு விரிவான பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளைத் தொடங்க உள்ளன.
- 2021-22 ஆம் ஆண்டில், தெற்காசியாவில் இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்குதாரராகவும், உலகளவில் இந்திய ஏற்றுமதிக்கான நான்காவது பெரிய நாடாகவும் வங்காளதேசம் உருவெடுத்துள்ளது.
- இந்தியா வங்காளதேசத்தின் இரண்டாவது பெரிய வர்த்தகப் பங்குதாரராகவும், ஆசியாவிலேயே அதன் மிகப்பெரிய ஏற்றுமதிச் சந்தையாகவும் உள்ளது.
- விரிவான பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தம் ஆனது இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக இடைவெளியைக் குறைப்பதை ஒரு முக்கிய நோக்கமாக கொண்டு அத்துடன் சரக்குகள், சேவைகள் மற்றும் முதலீட்டு வர்த்தகத்தில் கவனம் செலுத்தவும் வாய்ப்பு உள்ளது.





## கோக்ரா-வெந்நீர் ஊற்றுப் பகுதி

- கிழக்கு லடாக்கின் கோக்ரா-வெந்நீர் ஊற்றுப் பகுதியில் உள்ள 15வது ரோந்துப் பகுதியில் (PP-15) இருந்து இந்திய மற்றும் சீனப் படைகள் வெளியேறத் தொடங்கி உள்ளன.
- உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) உச்சி மாநாட்டை முன்னிட்டு இந்த நடவடிக்கையானது எடுக்கப்பட்டுள்ளது.
- PP-15 என்பது லடாக்கில் உள்ள 65 ரோந்துப் பகுதிகளில் ஒன்றாகும்.
- வெந்நீர் ஊற்றுப் பகுதியானது சாங் சென்மோ ஆற்றின் வடக்கே உள்ளதோடு அது கோக்ரா பாதுகாப்பு எல்லைப் பகுதியானது ரோந்துப் பகுதிக்குக் கிழக்கே உள்ளது.
- இந்தப் பகுதி பாங்கோங் த்சோ ஏரிக்கு வடக்கேயும், கல்வான் பள்ளத்தாக்கின் தென் கிழக்கேயும் அமைந்துள்ள காரகோரம் மலைத்தொடருக்கு வடக்கே உள்ளது.





## IRENA அறிக்கை

- சர்வதேசப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனம் (IRENA), "ஆற்றல் மாற்றத்திற்கான உயிரி ஆற்றல்: நிலைத் தன்மையை உறுதி செய்தல் மற்றும் தடைகளைச் சமாளித்தல்" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இது நிலையான உயிரி ஆற்றல் மேம்பாட்டின் நிலையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உயிரி ஆற்றல் என்பது நாம் உயிரி எரிபொருளை எரிக்கும் போது உருவாகும் புதுப்பிக்கத் தக்க ஆற்றலின் ஒரு வடிவமாகும்.
- தற்போது உலகளவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் நுகர்வில் மூன்றில் இரண்டு பங்கு உயிரி ஆற்றல் ஆகும்.
- உயிரி ஆற்றல் ஆனது, பல்லுயிர் இழப்பு, உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் காடழிப்பு போன்ற எதிர்மறையான சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் பொருளாதாரத் தாக்கங்களை ஏற்படுத்தலாம் என்று இந்த அறிக்கை கூறுகிறது.



## இலண்டன் பிரிட்ஜ் நடவடிக்கை

- பிரிட்டனில் நீண்ட காலம் ஆட்சி செய்த அரசியான இரண்டாம் எலிசபெத் செப்டம்பர் 08 ஆம் தேதியன்று காலமானார்.
- திட்டமிட்டச் சடங்குகள் மற்றும் அரசியல் நிகழ்வுகள் மற்றும் அரச சிம்மாசனத்தின் அடுத்த உரிமையாளர் உள்ளிட்ட நெறிமுறைகள் இலண்டன் பிரிட்ஜ் நடவடிக்கை என்று அழைக்கப்படுகிறது.
- ஆனால் அரசி ஸ்காட்லாந்தில் இருந்த போது இறந்தால் யூனிகார்ன் நடவடிக்கை எனப்படும் சிறப்பு ஏற்பாடுகள் அப்போது நடைமுறையில் இருந்தன.
- யூனிகார்ன் நடவடிக்கை என்ற சொல் ஆனது முதன்முதலில் 2017 ஆம் ஆண்டில் வெளியான எடின்பர்க் பாராளுமன்ற இணைய ஆவணங்களில் பயன்படுத்தப்பட்டது.




## ஐக்கியப் பேரரசின் அரியணை

- இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவைத் தொடர்ந்து, மூன்றாம் சார்லஸ் ஐக்கியப் பேரரசின் அரியணையில் பதவி ஏற்கிறார்.
- 73 ஆம் வயதில், பிரிட்டிஷ் அரியணையில் ஏற்றப் பட்ட மிக வயதான பிரிட்டிஷ் மன்னராக சார்லஸ் இருப்பார் எனக் கருதப் படுகின்றார்.
- பிரிட்டிஷ் வரலாற்றில் அரியணை ஏறுவதற்காக இவர் மிக நீண்ட காலம் காத்திருந்து உள்ளார்.

- ஐக்கியப் பேரரசைத் தவிர, ஆஸ்திரேலியா, கனடா, ஜமைக்கா, நியூசிலாந்து மற்றும் பப்புவா நியூ கினியா உள்ளிட்ட 14 நாடுகளின் அரசுத் தலைவராகவும் சார்லஸ் பணி ஆற்றுகிறார்.
- சார்லஸின் மூத்த வாரிசான இளவரசர் வில்லியம், தற்போது அரியணை ஏறுவதற்கான வாரிசு வரிசையில் முதலிடத்தில் உள்ளார்.
- இவர் வேல்சின் இளவரசர், கார்ன்வால் பிரபு, கேம்பிரிட்ஜ் பிரபு ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார்.




## பயிர் மற்றும் உணவுப் பாதுகாப்பு மதிப்பீட்டுத் திட்ட அறிக்கை


- உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) மற்றும் உலக உணவுத் திட்டம் (WFP) ஆகியவை இணைந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளன.
- 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், வருடாந்திர உணவுப் பண வீக்கம் சுமார் 94 சதவீதமாக இருந்தது.



- ❖ முக்கியப் பிரதான உணவான அரிசியின் உற்பத்தி 2022 ஆம் ஆண்டில் 3 மில்லியன் மெட்ரிக் டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ இது 2017 ஆம் ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட அறுவடைக்குக் காலத்திற்குப் பிறகு மிகக் குறைவான அளவாகும்.
- ❖ இலங்கையில் வாழும் சுமார் 6.3 மில்லியன் மக்கள் மிதமான மற்றும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர் கொண்டு வருகின்றனர்.
- ❖ கால்நடைத் தீவனமாகப் பயன்படுத்தப்படும் மக்காச் சோளத்தின் உற்பத்தி கடந்த 5 ஆண்டுகளின் சராசரியை விட 40 சதவீதம் குறைவாக உள்ளது.

## "நவீன கால அடிமைத்தனத்தின் உலகளாவிய மதிப்பீடுகள்" அறிக்கை

- ❖ நவீன கால அடிமைத் தனத்திற்கான 2021 ஆம் ஆண்டு உலகளாவிய மதிப்பீடுகள், சர்வதேசத் தொழிலாளர் அமைப்பினால் சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- ❖ 2021 ஆம் ஆண்டில், 50 மில்லியன் மக்கள் நவீன கால அடிமைத்தனத்தில் வாழச் செய்கின்றனர்.
- ❖ அவர்களில் 28 மில்லியன் பேர் கட்டாய உழைப்பு முறையிலும், 22 மில்லியன் பேர் கட்டாயத் திருமண வாழ்வியல் முறையிலும் சிக்கியுள்ளனர்.
- ❖ அனைத்து கட்டாயத் தொழிலாளர்களில் 52 சதவீதம் பேர் மேல்-நடுத்தர அல்லது உயர் வருமானம் உள்ள நாடுகளில் காணப்படுகின்றனர்.
- ❖ 86 சதவீத அளவிலான கட்டாய உழைப்பு முறை தனியார் துறையில் காணப்படுகிறது.
- ❖ வணிக ரீதியிலான பாலியல் சுரண்டல் தவிர மற்ற துறைகளில் காணப்படும் கட்டாய உழைப்பு முறையானது அனைத்து வகையான கட்டாய உழைப்பு முறையில் 63 சதவீதம் ஆக உள்ளது.
- ❖ 2016 ஆம் ஆண்டின் உலகளாவிய மதிப்பீடுகளுடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டில் 6.6 மில்லியன் மக்கள் கட்டாயத் திருமண முறையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- ❖ புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் புலம்பெயர்ந்தோர் அல்லாத வயது வந்த தொழிலாளர்களை விட மூன்று மடங்கு அதிகமாகக் கட்டாய உழைப்பு முறையில் உள்ளனர்.



## JIMEX 2022

- இந்தியக் கடற்படையால் நடத்தப்படும் ஜப்பான் மற்றும் இந்தியா ஆகியவற்றுக்கு இடையிலான ஆறாவது கடல்சார்ப் பயிற்சியானது (JIMEX 22) வங்காள விரிகுடா கடல் பகுதியில் தொடங்கியது.
- JIMEX 22 விசாகப்பட்டினத்தில் கடல் பரப்பில் நடைபெறும் பயிற்சிகள் மற்றும் துறைமுகப் பகுதியில் நடைபெறும் பயிற்சிகள் என்று இரண்டு கட்டப் பயிற்சிகளை உள்ளடக்கியது.
- இந்த ஆண்டிற்கானப் பயிற்சியானது JIMEX பயிற்சியின் 10வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- இந்தக் கடல்சார் பயிற்சியானது ஜப்பானில் 2012 ஆம் ஆண்டில் தொடங்கியது.
- இந்தியாவிற்கும் ஜப்பானுக்கும் இடையிலான அரசுமுறை உறவுகளின் 70வது ஆண்டு விழாவுடன் இந்தப் பயிற்சியானது ஒன்றிணைந்து நடைபெறுகிறது.




## ககாடு பயிற்சி – 2022




- இது ஆஸ்திரேலியாவின் வடக்குப் பிரதேசத்தின் தலைநகரான டார்வினில் ஆஸ்திரேலியக் கடற்படையால் நடத்தப் படும் ஒரு பன்னாட்டுப் பயிற்சியாகும்.

- இந்தியக் கடற்படை சார்பாக ஐஎன்எஸ் சத்புரா கப்பல் மற்றும் P8 I ரக கடல்சார் ரோந்து விமானங்கள் இந்தப் பயிற்சியில் பங்கேற்கின்றன.
- இந்த சர்வதேசப் பயிற்சியின் கருத்துரு, 'கூட்டாண்மை, தலைமை மற்றும் நட்பு' என்பது ஆகும்.
- முதலாவது ககாடு பயிற்சியானது 1993 ஆம் ஆண்டில் நடைபெற்றது.

## 22வது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு நாடுகளின் அரசத் தலைவர்களின் உச்சி மாநாடு

- 22வது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு நாடுகளின் அரசத் தலைவர்களின் உச்சி மாநாடானது சமர்கண்டில் நடைபெற்றது.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பானது தனது முதலாவது நேரடி உச்சி மாநாட்டை இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு உஸ்பெகிஸ்தான் நாட்டில் நடத்தியது.
- உஸ்பெகிஸ்தான் அரசானது எட்டு உறுப்பினர்களைக் கொண்ட ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் சுழற்சி முறையிலான தலைமைப் பதவியை இந்தியாவிடம் ஒப்படைத்தது.
- இந்த உச்சி மாநாட்டில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 2022-2023 ஆண்டிற்கான முதலாவது சுற்றுலா மற்றும் கலாச்சாரத் தலைநகரமாக வாரணாசி நகரம் பெயரிடப் பட்டுள்ளது.
- இது இந்தியா மற்றும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பினர் நாடுகளுக்கு இடையே சுற்றுலா, கலாச்சாரம் மற்றும் மனிதாபிமானம் சார்ந்தத் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதை ஊக்குவிக்கும்.
- அந்த அமைப்பின் தலைவராக இந்தியா 2023 ஆம் ஆண்டில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் அடுத்த உச்சி மாநாட்டை நடத்த உள்ளது.



## கிரீன் ஃபின்ஸ் மையம்

- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு மற்றும் ஐக்கிய இராஜ்ஜியத்தினைச் சேர்ந்த தொண்டு நிறுவனமான ரீஃப் வோர்ல்டு அறக்கட்டளை ஆகியவை இணைந்து நிலையான கடல்சார் சுற்றுலாவை மேம்படுத்தச் செய்வதற்காக வேண்டி கிரீன் ஃபின்ஸ் என்ற மையத்தினைத் தொடங்கியுள்ளன.
- இதுவே இம்மாதிரியிலான முதல் வகையான உலகளாவியக் கடல்சார் சுற்றுலாத் துறை தளமாகும்.
- உலகெங்கிலும் உள்ள கடலில் மூழ்குதல் மற்றும் சுவாசக் குழாய் மூலம் உள்நீச்சல் மேற்கொள்ளுதல் போன்ற சாகச வசதிகளை வழங்கும் நிறுவனங்கள், கடல்சார் சுற்றுலாவின் நிலைத்தன்மையை மேம்படுத்தும் சர்வதேச அளவிலான சிறந்த நடைமுறைகளைச் செயல்படுத்துவதன் மூலம் அவற்றின் அன்றாட நடைமுறைகளில் எளிமையான, செலவு குறைந்த மாற்றங்களை மேற்கொள்ள இது உதவும்.
- இது ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்புடன் இணைந்து ரீஃப் வோர்ல்டு அறக்கட்டளை மூலம் உருவாக்கப்பட்டது.


## இந்திய பசிபிக் முத்தரப்பு மேம்பாட்டு கூட்டுறவு நிதி

- இந்திய பசிபிக் முத்தரப்பு மேம்பாட்டுக் கூட்டுறவினை நிறுவுவதற்கு இந்தியா மற்றும் பிரான்சு ஆகிய நாடுகள் ஒப்புக் கொண்டுள்ளன.
- இது குறிப்பாக சர்வதேச சூரியசக்திக் கூட்டணியின் கட்டமைப்பில் மேம்பாட்டுத் திட்டங்களை எளிதாக்க வழி வகுக்கும்.
- இது இந்தியப் புத்தாக்க மற்றும் புத்தொழில் நிறுவனங்களுக்கு, மற்றச் சமூகங்களின் தேவைகளுடன் அவற்றிற்குள்ள தொடர்புகளை விளக்குவதற்காக என்று ஒரு தளத்தை வழங்குகிறது.
- பூடான், பப்புவா நியூ கினியா மற்றும் செனகல் ஆகிய நாடுகளில் இந்தியா மற்றும் பிரான்சு ஆகியவை இணைந்து ஏற்படுத்தும் தாக்கத்தை வெளிக்காட்டும் மூன்று நாடுகளில் சர்வதேச சூரியசக்தி கூட்டணி தற்போது திட்டங்களை உருவாக்கியுள்ளது.

## மேம்படுத்தப் பட்ட வேதி செல் ஆற்றல் சேமிப்புக்கான தேசியத் திட்டம்

- மேம்படுத்தப் பட்ட வேதி செல் மின்கல அடுக்குகள் துறையில் தற்போதைய நிலை மற்றும் எதிர்காலப் போக்குகள் குறித்த ஒரு அறிக்கையை நிதி ஆயோக் அமைப்பு சமர்ப்பித்தது.
- உள்நாட்டுப் பொருளாதார மதிப்பை உருவாக்குவதில் மேம்படுத்தப் பட்ட வேதி செல் ஆற்றல் சேமிப்பு மீதான உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டத்தின் சாத்தியமானப் பங்கினை இந்த அறிக்கை வலியுறுத்துகிறது.
- இந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் சலுகைகள் முன்னணி மின்கல அடுக்கு உற்பத்தியாளர்கள் இந்தியாவில் முதலீடு செய்ய வழி வகுக்கும்.
- கனரகத் தொழில் துறை மற்றும் பொது நிறுவனங்கள் துறை அமைச்சகம் ஆனது மேம்படுத்தப் பட்ட வேதியியல் செல் (ACC) ஆற்றல் சேமிப்பு மீதான தேசியத் திட்டத்திற்கான முதன்மை அமைச்சகமாகும்.


- ❖ மேம்பட்ட வேதி செல்களின் உற்பத்தியானது மின்சார வாகனங்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை எளிதாக்கும்.




## உலக ஆற்றல் வேலைவாய்ப்பு அறிக்கை

- ❖ சர்வதேச எரிசக்தி முகமையானது (IEA) உலக எரிசக்தி ஆற்றல் அறிக்கையை வெளியிட்டது.
- ❖ இந்த முதலாவது உலக ஆற்றல் வேலைவாய்ப்பு அறிக்கையானது, உலகளாவிய ஆற்றல் செயல்பாட்டு அமைப்பின் முதல் விரிவான அறிக்கையாகும்.
- ❖ 2019 ஆம் ஆண்டில், எரிசக்தி துறை மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற துறைகளில் 65 மில்லியன் மக்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.
- ❖ உலகெங்கிலும் உள்ள முறைசார் வேலைவாய்ப்புகளில் இது இரண்டு சதவிகிதம் ஆகும்.
- ❖ இந்தத் துறையில் நேரடியாக 41 மில்லியன் மக்கள் வேலைவாய்ப்புப் பெற்றதோடு, 24 மில்லியன் பேர் வாகன உற்பத்தி போன்ற ஆற்றலின் இறுதிப் பயனர் பயன்பாட்டுத் துறைகளிலும் வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.
- ❖ 2021 ஆம் ஆண்டில் ஆற்றல் துறை முழுவதும் பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 1.3 மில்லியன் ஆக அதிகரித்துள்ளது.
- ❖ 2022 ஆம் ஆண்டில் இது 6 சதவீதம் அதிகரிக்கலாம்.
- ❖ 2019 ஆம் ஆண்டில், 50 சதவீத ஆற்றல் துறை சார்ந்த பணியாளர்கள் தூய்மையான எரி சக்தித் தொழில்நுட்பங்களை உருவாக்குவதில் பணியமர்த்தப்பட்டனர்.
- ❖ புதைபடிவ எரிபொருட்களில், 2019 ஆம் ஆண்டில் எண்ணெய் விநியோகத் துறையில் 8 மில்லியன் தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளதால் அதிகளவுத் தொழிலாளர்ப் பங்கேற்பினை இத்துறை கொண்டுள்ளது.

- இது 2021 ஆம் ஆண்டில் 7.1 மில்லியன் ஆக குறைந்துள்ளதோடு 2022 ஆம் ஆண்டில் இது சற்று அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.
- எரிசக்தி முதலீடு 2022 ஆம் ஆண்டில் எட்டு சதவிகிதம் அதிகரித்து 2.4 டிரில்லியன் டாலர்களைத் தொடும் என எதிர்பார்க்கப் படுகிறது.




## முதலாவது முத்தரப்பு அமைச்சர்கள் சந்திப்பு

- இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் தங்களது முதலாவது முத்தரப்பு அமைச்சர்கள் சந்திப்பினை நடத்தின.
- அவை உத்திசார் பங்குதார நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் உறுப்பினர் நாடுகளுக்கு இடையேயான கருத்துகளின் "அவ்வப்போது பரிமாறிக் கொள்ளுதல்" மீது கவனம் செலுத்துவதன் மூலம் உத்தி சார்ந்த சில நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான புதிய மற்றும் சமகால வழிமுறைகள் பற்றி விவாதித்தன.



## ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 77வது அமர்வு

- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 77வது அமர்வானது செப்டம்பர் 13 ஆம் தேதி அன்று நடைபெற்றது.
- இந்த அமர்வின் கருத்துரு, "ஒரு முக்கியத் தருணம்: ஒன்றோடொன்று பிணைந்த சவால்களுக்கு ஏற்ப மாறி வரும் தீர்வுகள்" என்பதாகும்.
- இந்த வருடாந்திரப் பொது விவாதத்தில் பங்கேற்று முதலில் உரையாற்றும் உரிமை உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர் நாடு பிரேசில் ஆகும்.
- 1955 ஆம் ஆண்டில் நடைபெற்ற 10வது ஐக்கிய நாடுகள் சபையின் அமர்விலிருந்து கிட்டத்தட்ட 70 ஆண்டுகளாக இந்த நாடு முதன்மைப் பேச்சாளராக உள்ளது.
- இந்த அமர்வினை ஏற்பாடு செய்கின்ற அமெரிக்க நாடானது இந்த அமர்வில் இரண்டாவதாக உரையாற்றும் ஒரு நாடாகும்.

## கிழக்காசிய உச்சி மாநாடு

- கம்போடியாவின் சீம் ரீப் நகரில் நடைபெற்ற கிழக்காசிய உச்சி மாநாட்டின் பொருளாதார அமைச்சர்கள் சந்திப்பில் இந்தியாவின் வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் அனுப்ரியா படேல் பங்கேற்றார்.
- இந்தச் சந்திப்பில் ஆசியான் அமைப்பின் 10 உறுப்பினர் நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் ஆஸ்திரேலியா, சீனா, இந்தியா, ஜப்பான், நியூசிலாந்து, தென் கொரியா, ரஷ்யா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட எட்டு பங்குதார நாடுகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.
- கிழக்காசிய உச்சி மாநாடு (EAS) என்பது இந்திய-பசிபிக் பிராந்திய நாடுகளின் உத்தி சார் பேச்சுவார்த்தைக்கான முதன்மை மன்றமாகும்.

## இந்திய-பசிபிக் இராணுவ மேலாண்மை கருத்தரங்கம்

- இந்திய-பசிபிக் பிராந்தியத்தின் மிகப்பெரிய தரைப்படை மாநாடானது வங்காள தேசத்தின் பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையில் நடத்தப்பட்டது.
- இந்திய-பசிபிக் பிராந்தியத்தில் அமைந்துள்ள 24 நாடுகளைச் சேர்ந்த இராணுவத் தலைவர்கள் டாக்கா நகரில் நடைபெற்ற இந்திய-பசிபிக் இராணுவ மேலாண்மைக் கருத்தரங்கில் (IPAMS) பங்கேற்றனர்.
- 47வது இந்திய-பசிபிக் இராணுவ மேலாண்மை கருத்தரங்கமானது, இந்தியாவில் நடைபெற உள்ள நிலையில், இரண்டு ஆண்டிற்கு ஒரு முறை நடைபெறும் இந்திய-பசிபிக் இராணுவத் தலைவர்கள் மாநாட்டில் இந்தியா அதன் தலைமைத்துவத்தினைப் பகிர்ந்து கொள்ள உள்ளது.

## உலக தூய்மை ஆற்றல் நடவடிக்கை மன்றம்

- அமெரிக்காவில் உள்ள பிட்ஸ்பர்க் நகரில் நடைபெற்ற உலகத் தூய்மை ஆற்றல் நடவடிக்கை மன்றத்தில் பங்கேற்க உள்ள இந்தியக் குழுவிற்கு மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் ஜிதேந்திர சிங் அவர்கள் தலைமை தாங்குகிறார்.

- தூய்மையான எரிசக்தி கண்டுபிடிப்பு மற்றும் செயலாக்கத்தினை விரைவு படுத்தச் செய்வதற்கான வழிகளைப் பற்றி விவாதிக்க 30 நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்க உள்ளனர்.

## வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு சாராத முக்கிய நட்பு நாடு அந்தஸ்து

- அமெரிக்க அதிபர் ஜோ பிடன், வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு சாராத முக்கிய நட்பு நாடு என்ற அந்தஸ்திலிருந்து ஆப்கானிஸ்தான் நாட்டினை விலக்கியுள்ளார்.
- தாலிபான்கள் அமைப்பானது, ஒரு வருடத்திற்கு முன்பு காபூல் நகரில் அதிகாரத்தைக் கைப்பற்றியது.
- 2012 ஆம் ஆண்டில் அமெரிக்கா, ஆப்கானிஸ்தான் நாட்டினை ஒரு முக்கிய வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பினைச் சாராத நட்பு நாடாக அறிவித்தது.
- இது இரு நாடுகளும் பாதுகாப்பு மற்றும் பொருளாதார உறவைப் பேணுவதற்கான வழியினை வகுத்தது.
- இந்த அந்தஸ்தானது ஆப்கானிஸ்தான் நாட்டிற்குப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான உதவி மற்றும் உபகரணங்களின் அடிப்படையில் பல வசதிகள் மற்றும் சலுகைகளை வழங்கியது.
- வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு சாராத முக்கிய நட்பு நாடு என்ற அந்தஸ்தானது முதன்முதலில் 1987 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- ஆப்கானிஸ்தான் நாட்டிற்கு வழங்கப்பட்ட இந்த அந்தஸ்து திரும்பப் பெறப் பட்டால், 18 முக்கிய வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு சாராத முக்கிய நட்பு நாடுகளை அமெரிக்கா கொண்டிருக்கும்.




## லச்சின் வழித் தடத்தில் மோதல்

- சமீபத்தில் எல்லையில் நடந்த மோதலில் அர்மீனியா மற்றும் அஜர்பைஜான் நாட்டு வீரர்கள் கொல்லப் பட்டனர்.


- இந்த இரண்டு முன்னாள் சோவியத் குடியரசு நாடுகளும் நாகோர்னோ-கராபாக் பிராந்தியத்தின் சர்ச்சைக்குரியப் பிரதேசத்தின் மீது நீண்ட காலமாக மோதல்களில் ஈடுபட்டுள்ளன.
- இந்தச் சர்ச்சைக்குரியப் பிரதேசமானது சர்வதேச அளவில் அஜர்பைஜானின் ஒரு பகுதியாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- ஆனால் தற்போது இந்தப் பகுதியானது அர்மீனிய நாட்டின் பிரிவினைவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.
- லச்சின் வழித்தடமானது அஜர்பைஜானின் லச்சின் மாவட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- ஆனால் 2020 ஆம் ஆண்டு முதல் நாகோர்னோ-கராபாக் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் படி ரஷ்யாவின் அமைதி காக்கும் படையின் கட்டுப்பாட்டின் கீழ் இது இருந்து வந்தது.
- லச்சின் மாவட்டம் 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26 ஆம் தேதியன்று அஜர்பைஜானின் கட்டுப்பாட்டின் கீழ் திரும்பியது.
- சமீபத்திய மோதலானது, 2020 ஆம் ஆண்டு மோதல்களுக்குப் பிறகு அர்மீனியா மற்றும் அஜர்பைஜான் ஆகியவற்றுக்கு இடையே பிளவு ஏற்படுவதற்கான ஒரு கெடுவாக இருந்தது.
- ரஷ்யாவால் ஏற்படுத்தப்பட்ட ஒரு சமாதான ஒப்பந்தமானது இந்த இரு அண்டை நாடுகளுக்கு இடையேயான 2020 ஆம் ஆண்டின் போரினை முடிவுக்குக் கொண்டு வந்தது.
- மேலும், இது அஜர்பைஜானில் உள்ள சில ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து அர்மீனியா தனது படைகளை திரும்பப் பெற வழி வகுத்தது.




## கிகாலி திருத்தம்

- அமெரிக்க மேலவையானது கடந்த 30 ஆண்டுகளில் முதல் முறையாக சர்வதேசப் பருவ நிலை ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- குளிர்பதனப் பெட்டிகள் மற்றும் குளிரூட்டும் சாதனங்களில் பொதுவாகக் காணப் படும் புவி வெப்பமயமாக்கலுக்குக் காரணமான தொழில்துறை இரசாயனங்களைப் பயன்படுத்துவதை இந்த ஒப்பந்தம் படிப்படியாக நீக்க முயல்கிறது.

- கிகாலி ஒப்பந்தம் என்பது பூமியின் ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு முக்கிய ஒப்பந்தமான மாண்ட்ரீல் நெறிமுறையின் 2016 ஆம் ஆண்டு திருத்தமாகும்.
- தற்போது, ஹைட்ரோபுளோரோ கார்பன்கள் அல்லது HFCகளின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டைக் கடுமையாகக் குறைப்பதற்கு ஒப்புக் கொண்ட 137 பிற நாடுகளுடன் சேர்ந்து, 2016 கிகாலி திருத்தத்தில் அமெரிக்க நாடும் இணைந்துள்ளது.
- இந்த இரசாயனங்கள் ஆற்றல்மிக்க பசுமை இல்ல வாயுக்களாக இருப்பதால், கார்பன் டை ஆக்சைடை விட 1,000 மடங்கு வெப்பப் பிடிப்புத் திறனைக் கொண்டுப் புவியை அதிகமாக வெப்பமாக்குகிறது.
- கிகாலி ஒப்பந்தம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப் பட்டால், இந்த நூற்றாண்டின் இறுதியில் 0.5 டிகிரி செல்சியஸ் அல்லது தோராயமாக 1 டிகிரி பாரன்ஹீட் வெப்ப மயமாதலை அது தடுக்கும் என்று அறிவியலாளர்கள் மதிப்பிட்டுள்ளனர்.





## மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண கூட்டாண்மை வழிகாட்டுதல்கள்

- மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண (HADR) கூட்டாண்மை வழி காட்டுதல்களில் குவாட் அமைப்பின் உறுப்பினர் நாடுகள் சமீபத்தில் கையெழுத்து இட்டுள்ளன.
- இது குவாட் கூட்டணியின் விரிவாக்கத்தை உறுதி செய்கிறது.
- 2004 ஆம் ஆண்டின் தற்காலிக சுனாமி மையக் குழுவிலிருந்து இந்த வழிகாட்டுதல்கள் தோன்றின.
- 2004 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமிக்குப் பிறகு, அதற்கான சர்வதேச நடவடிக்கையினை வலுப்படுத்துவதற்காக இவை முயல்கின்றன.
- இந்த வழிகாட்டுதல்கள் இந்திய-பசிபிக் பிராந்தியத்தில் ஏற்படும் பேரழிவுகளுக்கு ஏற்ப நடவடிக்கையினை மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்திய அந்நியச் செலாவணி இருப்பு


- ஆகஸ்ட் 19ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்பானது 6.69 பில்லியன் டாலர் குறைந்து 564 பில்லியன் டாலராக உள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள தரவுகளின்படி, வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் 5.8 பில்லியன் டாலர் என்ற அளவிற்கும், தங்கத்தின் கையிருப்பு 704 மில்லியன் டாலர் என்ற அளவிற்கும் சரிந்ததன் காரணமாக இந்த வீழ்ச்சியானது ஏற்பட்டது.
- தற்போது அந்நியச் செலாவணி இருப்பானது 2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குப் பிறகு மிகக் குறைவான அளவில் உள்ளது.
- அந்நியச் செலாவணி இருப்பானது 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் 03 ஆம் தேதியன்று முடிவடைந்த வாரத்தில் 642 பில்லியன் டாலர்களை எட்டிய போது எப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்தது.
- அது 2021-22 ஆம் ஆண்டிற்கு என்று கணிக்கப்பட்ட 14 மாதங்களுக்கும் மேலான இறக்குமதிகளுக்குச் சமமானதாகும்.
- தற்போதைய கையிருப்பு நிலையானது 2022-23 ஆம் ஆண்டிற்கு என்று கணிக்கப்பட்ட சுமார் 9 மாத இறக்குமதியை ஈடு செய்யும்.
- இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பானது சீனா, சுவிட்சர்லாந்து மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக உலகளவில் நான்காவது பெரியது என்ற நிலையில் உள்ளது.




## பணவீக்க அட்டவணை


- தெலுங்கானா, மேற்கு வங்காளம் (8.06%) மற்றும் சிக்கிம் (8.01%) ஆகிய மாநிலங்களில், நாட்டின் 6.8% என்ற அளவை விட அதிகப் பணவீக்கம் பதிவாகியுள்ளது.
- கேரளா (4.8%), தமிழ்நாடு (5.01%), பஞ்சாப் (5.35%), டெல்லி (5.56%), மற்றும் கர்நாடகா (5.84%) போன்ற மாநிலங்களில் சில்லறை விற்பனை விலைகள் 6 சதவீதத்திற்கும் குறைவான அளவில் உயர்ந்து வருகிறது.

- ❖ மணிப்பூர், கோவா மற்றும் மேகாலயா போன்ற சிறிய மாநிலங்களின் சராசரிப் பணவீக்கம் முறையே 1.07%, 3.66% மற்றும் 3.84% என்ற நிலையில் 4% என்ற அளவிற்கும் குறைவாக உள்ளது.





## இந்தியாவின் முதல் காலாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி - 2022/2023

- ❖ புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசியப் புள்ளியியல் அலுவலகம் (NSO) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) மதிப்பீடுகளை வெளியிட்டது.
- ❖ இந்தியாவின் முதல் காலாண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ஒரு மேல் நோக்கிய நகர்வினைக் குறிப்பதோடு அது 13.5% என்ற அளவில் வளர்ந்து வருகிறது
- ❖ பெருந்தொற்றிற்குப் பிந்தையப் பாதிப்பில் இருந்து இந்தியப் பொருளாதாரம் தொடர்ந்து மீண்டு வருகிறது.
- ❖ எவ்வாறாயினும், இந்திய ரிசர்வ் வங்கியின் கணித்துள்ள 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்கான 16.2% GDP வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இந்த GDP வளர்ச்சியின் எண்ணிக்கை கணிசமான அளவில் குறைவாக உள்ளது.
- ❖ முந்தைய காலாண்டில் அதாவது 2022 ஆம் ஆண்டு ஜனவரி-பிப்ரவரி-மார்ச் காலத்துடன் இதை ஒப்பிடுகையில் ஏப்ரல்-மே-ஜூன் காலாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அளவானது குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது.
- ❖ அதில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 4.1% மட்டுமே வளர்ச்சியடைந்தது
- ❖ கடந்த ஆண்டு இதே காலாண்டில், அதாவது 2021 ஆம் ஆண்டு ஏப்ரல்-மே-ஜூன் காலத்தில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 20.1 சதவீத வளர்ச்சியைக் கண்டது.
- ❖ இருப்பினும், பெருந்தொற்று ஏற்பட்ட ஆண்டில் உருவான பொருளாதாரச் சுருக்கம் காரணமாக இந்த எண்ணிக்கை பெரிதாக்கப் பட்டது.
- ❖ இந்தக் காலாண்டில், தனியார் நுகர்வு கிட்டத்தட்ட 26 சதவீத வளர்ச்சியைக் கண்டது.
- ❖ தேசியப் புள்ளியியல் அலுவலகமானது ரங்கராஜன் ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் உருவாக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும்.
- ❖ புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகத்தின் (MoSPI) கீழ் தேசிய மாதிரி ஆய்வு அலுவலகம் (NSSO) மற்றும் மத்தியப் புள்ளியியல் அலுவலகம் (CSO) ஆகியவற்றை இணைத்துத் தேசியப் புள்ளியியல் அலுவலகமானது உருவாக்கப் பட்டது.




## ஆகஸ்ட் மாதத்தில் சரக்கு மற்றும் சேவை வரி வசூல்

- ஆகஸ்ட் மாதத்தில் தொடர்ந்து ஆறாவது மாதமாக சரக்கு மற்றும் சேவை வரி வசூல் ரூ.1.4 டிரில்லியனுக்கு மேல் வசூலாகியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சேகரிக்கப்பட்ட மொத்த சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் ஆனது ரூ.1.43 டிரில்லியன் ஆகும்.
- இதில், மத்திய சரக்கு மற்றும் சேவை வரி ரூ.24,710 கோடி, மாநில சரக்கு மற்றும் சேவை வரி ரூ.30,951 கோடி, ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி ரூ.77,782 கோடி (இறக்குமதி செய்யப்பட்டப் பொருட்கள் மீது வசூலான ரூ.42,067 கோடி உட்பட) மற்றும் செஸ் வரி ரூ.10,168 கோடி (இறக்குமதி செய்யப்பட்டப் பொருட்களின் மீதான ரூ.1,018 உட்பட) ஆகியவை அடங்கும்.
- 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத சரக்கு மற்றும் சேவை வரி வசூல் ஆனது ரூபாய் 1.67 டிரில்லியனாக உயர்ந்தது.




## மதிப்புமிக்க முதல் 10 இந்திய நிறுவனங்கள்

- ஆயுள் காப்பீட்டுக் கழக நிறுவனமானது சந்தை மூலதனத்தின் அடிப்படையிலான இந்தப் பட்டியலின் முதல் 10 நிறுவனங்களில் இடம் பெறவில்லை.
- இதற்குப் பதிலாக இதில் பஜாஜ் ஃபைனான்ஸ் மற்றும் அதானி டிரான்ஸ்மிஷன் ஆகிய நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன.
- இப்பட்டியலில் ஆயுள் காப்பீட்டுக் கழக நிறுவனமானது 11வது இடத்தினையும் பஜாஜ் ஃபைனான்ஸ் 10வது இடத்தினையும், அதானி டிரான்ஸ்மிஷன் 9வது இடத்தினையும் பெற்றுள்ளன.
- மதிப்பு மிக்க இந்திய நிறுவனங்களின் பட்டியலில் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் 17.8 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான சந்தை மூலதனத்துடன் முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து டாடா கன்சல்டன்சி சர்வீசஸ், HDFC வங்கி, இன்ஃபோசிஸ், ஹிந்துஸ்தான் யூனிலீவர், ஐசிஐசிஐ வங்கி மற்றும் பாரத ஸ்டேட் வங்கி (SBI) ஆகியவை உள்ளன.

## 15வது வருடாந்திரத் தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு


- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகத்தின் தேசியப் புள்ளியியல் அலுவலகமானது இந்த அறிக்கையினை வெளியிட்டது.
- 2022 ஆம் ஆண்டு ஜனவரி-மார்ச் மாதங்களில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்களுக்கான வேலைவாய்ப்பின்மை விகிதமானது நகர்ப்புறங்களில் 8.2% அளவாக இருந்தது.
- கடந்த 4 ஆண்டுகளில் பதிவான குறைந்த வேலைவாய்ப்பின்மை விகிதம் இதுவாகும்.
- தேசியப் புள்ளியியல் அலுவலகமானது, 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வருடாந்திரத் தொழிலாளர் வளக் கணக்கெடுப்பை (PLFS) வெளியிடத் தொடங்கியது.
- வேலையின்மை அல்லது வேலை வாய்ப்பியின்மை விகிதம் என்பது தொழிலாளர் வளத்தில் உள்ள வேலையில்லாத நபர்களின் சதவீதம் என வரையறுக்கப்படுகிறது.
- நடப்பு வாராந்திர நிலையில் நகர்ப்புறங்களில் மட்டும் மூன்று மாத இடைவெளியில் முக்கிய வேலைவாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மைக் குறிகாட்டிகளை (அதாவது தொழிலாளர் மக்கள் தொகை விகிதம், தொழிலாளர் பங்கேற்பு விகிதம், மற்றும் வேலை வாய்ப்பின்மை விகிதம்) மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆண்டுதோறும் கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் வழக்கமான நிலை மற்றும் தற்போதைய வாராந்திர நிலை ஆகிய இரண்டிலும் வேலைவாய்ப்பு மற்றும் வேலை வாய்ப்பின்மை குறிகாட்டிகளை மதிப்பிடுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நடப்பு வாராந்திர நிலையின் கீழ், ஒரு நபர் ஒரு வாரத்தில் எந்தவொரு நாளிலும் ஒரு மணி நேரம் கூட வேலை செய்யாமல், ஆனால் அந்த காலக் கட்டத்தில் எந்தவொரு நாளிலும் குறைந்தபட்சம் ஒரு மணி நேரம் கூட வேலை தேடினால் அல்லது வேலை செய்யத் தயாராக இருந்தால் அவர் வேலையற்றவராகக் கருதப்படுவார்.




## இந்தியாவில் அட்டைச் சந்தை

- இந்தியாவின் மிகப்பெரிய வங்கியான பாரத ஸ்டேட் வங்கி (SBI), 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை பற்று அட்டைச் சந்தையில் அதன் முன்னணி நிலையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- இதில் பேங்க் ஆஃப் பரோடா இரண்டாவது இடத்தையும், பாங்க் ஆஃப் இந்தியா, கனரா வங்கி யூனியன் வங்கி மற்றும் பஞ்சாப் நேஷனல் வங்கி ஆகியவை அடுத்தடுத்த இடங்களையும் பெற்றன.
- கடன் அட்டைச் சந்தையில் HDFC வங்கி முதலிடத்தில் உள்ளது.
- இதைத் தொடர்ந்து பாரத் ஸ்டேட் வங்கி, ஐசிஐசிஐ வங்கி, ஆக்சிஸ் வங்கி, ஆர்பிஎல் வங்கி மற்றும் கோடக் மஹிந்திரா வங்கி ஆகியவை உள்ளன.
- பாரத் ஸ்டேட் வங்கி மற்றும் HDFC வங்கி ஆகியவை கடன் அட்டைச் செலவினத்தில் சாதனையைப் படைத்துள்ளன.
- PGA Labs நிறுவனம் தொகுத்தத் தரவுகளின்படி, தனியார் வங்கிகளை விட பொதுத் துறை வங்கிகள் பற்று அட்டைச் சந்தையில் அதிக சதவீதப் பங்கினைக் கொண்டு உள்ளன.
- இந்த நிலைமை கடன் அட்டைச் சந்தையில் தலைகீழாக உள்ளது.

Market Share of Banks in Credit Cards



## இந்தியாவின் விமானப் போக்குவரத்து

- 2040 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் விமானப் போக்குவரத்து ஆண்டிற்கு ஏறக் குறைய 7 சதவீதம் அதிகரிக்கும் என்று விமானத் தயாரிப்பு நிறுவனமான போயிங் நிறுவனம் கணித்துள்ளது.
- தென்கிழக்கு ஆசியச் சந்தையின் வளர்ச்சி 5.5 சதவீதம், சீனா (5.4 சதவீதம்), ஆப்பிரிக்கா (5.4 சதவீதம்) மற்றும் லத்தீன் அமெரிக்கா (4.8 சதவீதம்) என மதிப்பிடப் பட்டுள்ளது.
- இந்தியா தற்போது வேகமாக வளர்ந்து வரும் சந்தைகளில் ஒன்றாகும்.
- தற்போது, பட்டியலிடப்பட்ட இரண்டு இந்தியச் சரக்கு விமான நிறுவனங்களான ஸ்பைஸ் ஜெட் மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் ஆகியவை போயிங் சரக்கு விமானங்களைப் பயன்படுத்துகின்றன.

## உலகின் 5வது பெரிய பொருளாதாரம்

- ப்ளூம்பெர்க் நிறுவன அறிக்கையின்படி, இந்தியா இங்கிலாந்தை விஞ்சி 5வது பெரிய பொருளாதாரமாக மாறியது.
- இந்தக் கணக்கீடானது அமெரிக்க டாலர்களை (தற்போதைய விலைகள்) அடிப்படையாகக் கொண்டதாகும்.
- மார்ச் வரையிலான காலாண்டில் "சாதாரண" பண மதிப்பின் அடிப்படையில் இந்தியப் பொருளாதாரத்தின் மதிப்பு 845.7 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது.
- பொருளாதாரத்தில் இந்தியா தற்போது அமெரிக்கா, சீனா, ஜப்பான் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு அடுத்த இடத்தில் உள்ளது.
- பத்தாண்டுகளுக்கு முன்பு, உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடுகளில் இந்தியா 11வது இடத்தில் இருந்தது.





## அகில இந்திய வீட்டு விலைக் குறியீடு

- இது 2022-2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் ஆண்டிற்கு 3.5% அதிகரித்துள்ளது.
- இது இந்திய ரிசர்வ் வங்கியால் வெளியிடப்படுகிறது.
- அகமதாபாத், பெங்களூரு, சென்னை, டெல்லி, ஜெய்ப்பூர், கான்பூர், கொச்சி, கொல்கத்தா, லக்னோ மற்றும் மும்பை ஆகியவை மத்திய வங்கி கணக்கிடும் பரிவர்த்தனை அளவிலான தரவை வழங்குவதற்கான நகரங்களாகும்.

## இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் - மார்ச் 2022

- ❖ நிதி அமைச்சகத்தின் கூற்றுப்படி, இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் தொகையானது ஆண்டிற்கு 8.2 சதவீதம் அதிகரித்து 620.7 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளது.
- ❖ அதில் 53.2 சதவீதம் அமெரிக்க டாலர்கள் மதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ 31.2 சதவீதம் என மதிப்பிடப்பட்டுள்ள இந்திய ரூபாய் மதிப்பிலானக் கடனானது இரண்டாவது பெரிய மதிப்பீடாக உள்ளது.
- ❖ மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெளிநாட்டுக் கடன் விகிதம் 19.9 சதவீதமாக உள்ள நிலையில் வெளிநாட்டுக் கடன் மற்றும் கையிருப்பு விகிதம் 97.8 சதவீதமாக இருந்தது.
- ❖ நீண்ட காலக் கடன் ஆனது மொத்த அளவில் 80.4% ஆக மொத்தம் 499.1 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளது.
- ❖ குறுகிய கால கடன் ஆனது மொத்த அளவில் 19.6% ஆக மொத்தமாக 121.7 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளது.
- ❖ சர்வதேச நாணய நிதியம் (IMF) ஆனது, 2021-22 ஆம் ஆண்டில், சிறப்பு வரைவு உரிமைகள் (SDR) மூலம் கூடுதல் ஒதுக்கீடு செய்ததன் காரணமாக, அரசின் இறையாண்மைக் கடன் ஆண்டிற்கு 17.1% அதிகரித்து 130.7 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது.
- ❖ 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் இறுதிக் கட்ட நிலவரப்படி அரசின் இறையாண்மை சாராதக் கடன் 6.1% அதிகரித்து 490.0 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளது.
- ❖ வணிகக் கடன்கள், வெளிநாடு வாழ் இந்தியர்களின் வைப்புத் தொகைகள் மற்றும் குறுகிய கால வர்த்தகக் கடன் ஆகியவை மொத்த அளவில் 95.2 சதவீதம் வரை உள்ளது.
- ❖ வெளிநாடு வாழ் இந்தியர்களின் வைப்புத் தொகைகள் 2% குறைந்து 139.0 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ள நிலையில், வணிகக் கடன்கள் (209.71 பில்லியன் டாலர்கள்) மற்றும் குறுகிய கால வர்த்தகக் கடன் (117.4 பில்லியன் டாலர்கள்) ஆகியவை முறையே 5.7% மற்றும் 20.5% அதிகரித்துள்ளன.
- ❖ முந்தைய ஆண்டில் 8.2 சதவீதமாக இருந்த கடன் சேவை விகிதமானது 2021-22 ஆம் ஆண்டில் மிதமான நடப்பு வருவாய்கள் மற்றும் வெளிப்புறக் கடன் சேவை வழங்கீடுகளைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில் குறிப்பிடத் தக்க அளவில் 5.2 சதவீதமாகக் குறைந்துள்ளது.



## நொய்யல் அரிசி ஏற்றுமதிக்கு இந்தியாவில் தடை

- நொய்யல் அரிசியின் ஏற்றுமதிக்கு இந்தியா தடை விதித்துள்ளது.
- பாசுமதி அரிசி தவிர, பல்வேறு தர அரிசிகளின் ஏற்றுமதிக்கு இந்தியா 20 சதவீத வரி விதித்தது.
- உலகின் மிகப்பெரிய அரிசி ஏற்றுமதியாளராக இந்தியா உள்ளது.

## கிரித் பரிக் குழு

- மத்திய அரசானது கிரித் பரிக் தலைமையிலான ஒரு குழுவைச் சமீபத்தில் அமைத்தது.
- திரவமாக்கப்பட்டப் பெட்ரோலிய எரிவாயு விலை தொடர்ந்து அதிகரித்து வருவதைக் கட்டுப்படுத்துவதையும், அதனைக் குறைப்பதையும் இது நோக்கமாக உள்ளது.
- நகர எரிவாயு விநியோகத்தில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவனங்கள், பொது எரிவாயு நிறுவனமான GAIL இந்தியா லிமிடெட், இந்தியன் எண்ணெய் உற்பத்திக் கழகம் மற்றும் உரத் துறை அமைச்சகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்தக் குழுவில் இடம் பெற்று உள்ளனர்.
- இந்தக் குழு வீட்டு உபயோக எரிவாயு உற்பத்திக்காக வேண்டி சிறந்த விலைக்கானச் சூத்திரத்தை முடிவு செய்ய உள்ளது.
- ONGC மற்றும் ரிலையன்ஸ் போன்ற நிறுவனங்கள் தயாரிக்கும் எரிவாயு விலையை நிர்ணயம் செய்வதற்கானச் சூத்திரத்தையும் இந்தக் குழு ஆய்வு செய்ய உள்ளது.




## வங்கி இல்லாத பகுதிகளில் 300 வங்கிக் கிளைகள்

- பொதுத்துறை வங்கிகளானது 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள், பல்வேறு மாநிலங்களில் வங்கி இல்லாத பகுதிகளில் கட்டிடங்களுடன் கூடிய சுமார் 300 வங்கி கிளைகளைத் தொடங்க உள்ளது.
- இந்தப் புதிய கிளைகள் 3,000க்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட, எஞ்சியுள்ள வங்கிகள் இல்லாத அனைத்து கிராமங்களையும் உள்ளடக்கி அதற்கான சேவைகளை வழங்கும்.

- ராஜஸ்தானில் அதிகபட்சமான அளவில் 95 கிளைகளும், அதைத் தொடர்ந்து மத்தியப் பிரதேசத்தில் 54 கிளைகளும் திறக்கப்படும்.
- பொதுத் துறை வங்கிகள் குஜராத்தில் 38 கிளைகளையும், மகாராஷ்டிராவில் 33 கிளைகளையும், ஜார்க்கண்டில் 32 கிளைகளையும் மற்றும் உத்தரப் பிரதேசத்தில் 31 கிளைகளையும் திறக்க உள்ளது.

## வாகனங்களில் வங்கிச் சேவை

- HDFC வங்கியானது குஜராத்தில் தனது அதிநவீன 'வாகனங்களில் வங்கிச் சேவையினை' அறிமுகப் படுத்தியுள்ளது.
- வாகனங்களில் வங்கிச் சேவையானது வங்கிச் சேவைகளை வங்கி இல்லாதக் கிராமங்களுக்கு எடுத்துச் செல்லும்.
- வாகனங்களில் வங்கிச் சேவைக்கான வாகனமானது அருகிலுள்ள கிளையிலிருந்து 10 முதல் 25 கி.மீ. தொலைவில் உள்ள தொலைதூரக் கிராமங்களுக்குச் சென்றடையும்.

## நிலக்கரி உற்பத்தி இலக்கு

- 2024-25 ஆம் நிதியாண்டிற்குள் நிலக்கரி உற்பத்தியை ஒரு இலட்சிய இலக்கான 1.23 பில்லியன் டன்னாக (BT) அதிகரிக்கும் பணியில் நிலக்கரி அமைச்சகம் ஈடுபட்டுள்ளது.
- இது நாட்டின் ஆற்றல் பாதுகாப்பை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தொலைநோக்குத் திட்டத்தினை ஆதரிப்பதற்காக, கோல் இந்தியா லிமிடெட் நிறுவனம் ஒரு பில்லியன் டன் உற்பத்திக்கான வெளியேற்ற உள்கட்டமைப்பை வலுப் படுத்துவதன் மூலமும், இறுதிப் பயனர்களுக்கு தடையற்ற நிலக்கரியைக் கொண்டு செல்வதன் மூலமும் ஒருங்கிணைந்தத் திட்டமிடல் அணுகுமுறையை மேற் கொண்டது.

## இந்தியாவின் முதல் மின்னணு வங்கி உறுதிப் பத்திரத் திட்டம்


- HDFC வங்கியானது, மின்னணு வங்கி உறுதிப் பத்திரத்தினை (e-BG) வழங்கிய இந்தியாவின் முதல் வங்கி ஆக மாறியது.
- மின்னணு வங்கி உறுதிப் பத்திரத் திட்டமானது தேசிய மின் ஆளுமைச் சேவைகள் நிறுவனத்துடன் (NeSL) இணைந்து தொடங்கப்பட்டது.
- இது காகிதம் சார்ந்த நேர விரயமாகும் செயல்முறையின் தேவையை நீக்குகிறது.
- வங்கியில் இருந்து நேரடியாகப் பெற்று, பயனாளிக்கு விரைவு அஞ்சல் மூலம் அனுப்பப் பட்டு, முத்திரையிடல் மற்றும் மறு சரிபார்ப்பு ஆகியவற்றின் காரணமாக இந்த செயல் முறைக்கு பெரும்பாலும் 3 முதல் 5 நாட்கள் வரை மட்டுமே ஆகிறது.

## 2022 ஆம் ஆண்டில் அதிகபட்ச தொழில்துறை முதலீடு

- 2022 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் தொழில்துறை முதலீடுகளை ஈர்க்கும் மாநிலங்களின் பட்டியலில் ஆந்திரப் பிரதேசம் முதலிடத்தில் உள்ளது.

- ஆந்திரப் பிரதேச மாநிலமானது 40,361 கோடி ரூபாய் முதலீட்டை ஈட்டியுள்ளது.
- கர்நாடக மாநிலமானது 3712 கோடி ரூபாய் முதலீட்டை ஈட்டியது.
- குஜராத் மாநிலம் 2969 கோடி ரூபாய் முதலீட்டை ஈட்டியது.
- ஒடிசா மாநிலம் 1493 கோடி ரூபாய் முதலீட்டை ஈட்டியது.

## தேசிய தளவாடக் கொள்கை 2022





- அரசானது 2022 ஆம் ஆண்டிற்கான தேசிய தளவாடக் கொள்கையினை (NLP) அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது 'விரைவான தொலைதூர விநியோகம்', போக்குவரத்து தொடர்பான சவால்களை முடிவுக்கு கொண்டு வருதல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- "தளவாடங்கள்" என்ற சொல்லானது, வளங்களைப் பெறுதல், சேமித்தல் மற்றும் அதற்குத் தொடர்புடைய குறிப்பிட்ட இடத்திற்கு கொண்டு செல்லுதல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் மொத்தச் செயல்முறையை விவரிக்கிறது.
- செயல்முறை மறு வடிவமைப்பு, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் பல்முனை சரக்குப் போக்குவரத்து போன்ற முக்கியப் பிரிவுகளில் இந்தக் கொள்கை கவனம் செலுத்துகிறது.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14 முதல் 18 சதவீதம் வரை தளவாடச் செலவுகளைக் குறைப்பதன் மூலம் 2030 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய அளவுருக்களுக்கு நெருங்கிய மதிப்புகளுக்கு ஒப்ப தளவாடச் செலவினங்கள் பாதியாகக் குறைக்கப்பட வேண்டும்.
- உலகளாவிய சிறந்த நடைமுறைகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8% ஆகும்.
- அமெரிக்கா, தென் கொரியா, சிங்கப்பூர் மற்றும் சில ஐரோப்பிய நாடுகள் போன்ற நாடுகள் குறைந்த தளவாடச் செலவினம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தைக் கொண்டுள்ளன.
- தற்போதையச் செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 16% ஆகும்.

- 2030ஆம் ஆண்டிற்குள், தளவாடச் செயல்திறன் குறியீட்டின் முதல் 10 இடங்களுக்குள் இந்தியா இடம்பிடிக்க வேண்டும்.
- 2018 ஆம் ஆண்டில், இந்தியா தளவாடச் செயல்திறன் குறியீட்டில் 44வது இடத்தைப் பிடித்தது.

## நிகர நேரடி வரி வசூல்

- மத்திய நேரடி வரிகள் வாரியம் (CBDT) வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், இந்த நிதி ஆண்டில் இதுவரை வசூலான நிகர நேரடி வரி வசூல் ஆனது ₹700,669 கோடியாக உள்ளது.
- முந்தைய நிதியாண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் இது 23% அதிகமாகும்.
- நிகர நேரடி வரி வசூல் (திருப்பிச் செலுத்துதலை மதிப்பிடுவதற்கு முன்) முந்தைய நிதி ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், ₹642,287 கோடியாக இருந்த நிலையில், இது வரையில் 30% வளர்ச்சியுடன் ₹836,225 கோடியாக உள்ளது.




## இந்தியாவிற்கு அதிகளவில் கச்சா எண்ணெய் விநியோகிக்கும் இரண்டாவது நாடு

- இந்தியாவிற்கு அதிகளவில் கச்சா எண்ணெய் விநியோகிக்கும் இரண்டாவது நாடாக சவுதி அரேபியா உருவெடுத்துள்ளது.
- சவுதி அரேபியா ஒரு சிறிய வித்தியாசத்தில் ரஷ்யாவை முந்தியுள்ள நிலையில், அதே சமயம் ஈராக் தனது முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- இதில் ஐக்கிய அரபு அமீரகம் 4வது இடத்தில் உள்ளது.
- குவைத் நாட்டினைப் பின்னுக்குத் தள்ளி, இந்தியாவிற்கு அதிகளவில் எண்ணெய் விநியோகிக்கும் ஐந்தாவது நாடாக கஜகஸ்தான் மாறியது.
- அதைத் தொடர்ந்து அமெரிக்கா இடம் பெற்றுள்ளது.
- இந்தியா உலகிலேயே அதிகளவில் எண்ணெய் இறக்குமதி செய்கின்ற, அதிகளவில் எண்ணெய்ப் பயன்பாடு உள்ள மூன்றாவது நாடாகும்.

## 12வது மஹாரத்னா நிறுவனம்

- REC (ஊரக மின்சார வசதியளிப்புக் கழகம்) லிமிடெட் நிறுவனத்திற்கு ‘மஹாரத்னா’ மத்திய பொதுத்துறை நிறுவன அந்தஸ்து ஆனது வழங்கப்பட்டுள்ளது.
- இது அந்த நிறுவனத்திற்கு என்று அதிகச் செயல்பாட்டு மற்றும் நிதி சார்ந்தச் சுயாட்சி அதிகாரத்தினை வழங்குகிறது.
- 'மஹாரத்னா' அந்தஸ்து வழங்கப்படுதல் என்பது ஒரு நிறுவனத்தின் வாரியமானது நிதி சார்ந்த முடிவுகளை எடுக்கும் போது அதிக மேம்பட்ட அதிகாரங்கள் அதற்கு வழங்கப் படுதல் என்பதாகும்.
- REC லிமிடெட் நிறுவனமானது, மஹாரத்னா அந்தஸ்து பெற்ற 12வது நிறுவனமாகும்.
- தேவையான கூறுகள்
    - தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு 5,000 கோடி நிகர இலாபம் ஈட்டுகின்ற மத்திய பொதுத் துறை நிறுவனம்
    - தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு, ரூ.25,000 கோடி சராசரி ஆண்டு வருவாய் ஈட்டும் நிறுவனம் மற்றும்
    - தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு சராசரியாக ரூ.15,000 கோடி நிகர மதிப்பைப் பதிவு செய்யும் நிறுவனம்.

## தாவர வகையினைச் சார்ந்த முதல் இறைச்சி வகை


- ஒரு முன்னணி தாவரப் புரத உணவுத் தயாரிப்பு நிறுவனமான கிரீனெஸ்ட் நிறுவனம், தாவர வகையைச் சார்ந்த இறைச்சி வகைகள் அடங்கிய இந்தியாவின் முதல் சரக்குப் பொதிகளை குஜராத்தில் இருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்து உள்ளது.
- 5000 கிலோ எடை கொண்ட, தாவர அடிப்படையிலான இந்த சரக்குப் பொதிகள் ஆனது, சிறிய வகை சமோசாக்கள், சூடான மற்றும் காரமான திண்பண்டங்கள் மற்றும் பிற சைவ உணவு வகைகளைக் கொண்டுள்ளது.
- தாவர வகையினைச் சார்ந்த புரதப் பொருட்களின் உற்பத்தியில் இந்தியாவின் ஒரு முன்னணி நிறுவனமாக கிரீனெஸ்ட் நிறுவனம் உள்ளது.



# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## தேஜாஸ் 2.0

- பிரதமர் அவர்களின் தலைமையிலான பாதுகாப்பு மீதான அமைச்சரவைக் குழு (CCS) தேஜாஸ் மார்க்-2 திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.
- தேஜாஸ் 2.0 விமானமானது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தேஜாஸ் இலகுரக போர் விமானத்தின் (LCA) அதிக திறன் கொண்ட வடிவமாக இருக்கும்.
- இந்தப் புதிய ஜெட் விமானத்தில் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட செயல்திறன் கொண்ட மின்னணு உரலி நிரல் (AESA) ரேடார் ஆனது பொருத்தப்பட்டிருக்கும்.
- தேஜாஸ் விமானமானது இந்திய விமானப்படையின் போர்க் கப்பற்படையில் உள்ள மார்க்-2, மிராஜ்-2000, ஜாகுவார்ஸ் மற்றும் மிக்-29 போன்ற போர் விமானங்களுக்கு ஒரு மாற்றாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- GE-404 எந்திரங்கள் பொருத்தப்பட்ட தேஜாஸ் மார்க்-1, மற்றும் வழக்கற்றுப் போன MiG-21 போன்றவைகளுக்கு மாற்றாக வடிவமைக்கப்பட்டது.
- தேஜாஸ் மார்க்-1 விமானமானது முதன்மையாக இந்திய விமானப் படையின் வான் பாதுகாப்புத் திறன்களை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது.
- ஆனால் மார்க்-2 ரகமானது தாக்குதல் நடவடிக்கைகளிலும் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்.




## HIP 65426

- ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியானது HIP 65426 புறக்கோளின் முதல் புகைப்படத்தை எடுத்துள்ளது.
- இது நமது சூரியக் குடும்பத்தின் எல்லைக்கு வெளியே அமைந்துள்ள ஒரு கிரகம் போன்ற அமைப்பாகும்.
- இது வியாழனை விட 12 மடங்கு பெரியதாகும்.

- பூமியுடன் ஒப்பிடும் போது இது இளமையானது, ஆனால் அளவின் அடிப்படையில் அது பெரியதாகும்.
- இது பால்வெளி அண்டத்தில் உள்ள மிகப்பெரிய கோளாகும்.
- இது பாறை போன்ற மேற்பரப்பு இல்லாத ஒரு வாயு நிறைந்த கோளாக கருதப் படுவதால் இக்கோள் உயிர்கள் வாழக் கூடியதாக உள்ளது.
- ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி ஆனது உலகின் மிக சக்திவாய்ந்தத் தொலைநோக்கி ஆகும்.




## இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட முதல் வெடிமருந்து

- போர்க்கப்பல்களில் பொருத்தப்பட்ட AK-630 ரக துப்பாக்கிகளுக்கான இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட வெடிமருந்துகளின் முதல் தொகுதியை இந்தியக் கடற்படை பெற்றுள்ளது.
- இது வெறும் 12 மாதங்களில் உருவாக்கப்பட்டுள்ளதோடு இதன் அனைத்துக் கூறுகளும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டவையாகும்.
- கடற்படைச் சேவைகள் அமைப்பானது, முழுமையாக துப்பாக்கி வெடிமருந்துகளை வழங்கச் செய்வதற்கான வாய்ப்பினை முதன்முறையாக ஓர் இந்தியத் தனியார் தொழிற்சாலைக்கு வழங்குவதாகக் கடற்படை தெரிவித்துள்ளது.
- இது சூரியசக்தித் தொழில்துறை இந்தியா லிமிடெட் என்ற நிறுவனத்தின் துணை நிறுவனமான மகாராஷ்டிராவின் நாக்பூரிலுள்ள இந்தியப் பொருளாதார வெடி பொருள் லிமிடெட் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டது.



## இரவு வான் சரணாலயம்

- இந்தியா தனது முதல் இரவு வான் சரணாலயத்தினை ஹன்லே என்னுமிடத்தில் அமைக்க உள்ளது.
- லடாக் ஒன்றியப் பிரதேச நிர்வாகம், லே நகரில் உள்ள லடாக் தன்னாட்சி மலைப்பகுதி மேம்பாட்டுச் சபை (LAHDC) மற்றும் இந்திய வானியற்பியல் நிறுவனம் (IIA) ஆகியவற்றுக்கு இடையே ஒரு கரும்பொருள் காப்பகத்தினை நிறுவுவதற்காக ஒரு முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் சமீபத்தில் கையெழுத்தானது.
- இது சாங்தாங் வனவிலங்கு சரணாலயத்தின் ஒரு பகுதியாகும்.
- ஹன்லே லடாக்கின் குளிர் பாலைவனப் பகுதியில் அமைந்துள்ளதால் இந்தத் திட்டத்திற்கு மிகவும் பொருத்தமானதாகும்.
- இது எந்த விதமான மனித இடையூறுகளும் இல்லாத பகுதியில் உள்ளது.
- மேலும், தெளிவான வான் நிலைகள் மற்றும் வறண்ட வானிலை ஆகியவை ஆண்டு முழுவதும் இங்கு காணப்படுகின்றன.
- இது இந்தியாவில் வானியல் சார்ந்தச் சுற்றுலாவினை மேம்படுத்தும்.
- இது ஒளியியல், அகச்சிவப்பு மற்றும் காமா-கதிர் தொலைநோக்கிகளுக்கான உலகின் மிக உயரமான தளங்களில் ஒன்றாக இருக்கும்.
- சரஸ்வதி மலையில் அமைந்த ஒரு உயரமான நிலையமாக ஹன்லே பகுதி ஏற்கனவே ஒரு இந்திய வானியல் ஆய்வகத்தைக் கொண்டுள்ளது.



## வளிமம் நிரப்பப்பட்ட காற்றியக்க வேக ஒடுக்கி

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) ஆனது திருவனந்தபுரத்தில் உள்ள தும்பா பூமத்திய ரேகை ஏவுதளத்தில் இருந்து ரோகிணி-300 (RH300 Mk II) எனப்படும் ஆய்வு ஏவுகலத்தில் வளிமம் நிரப்பப்பட்ட ஒரு காற்றியக்க வேக ஒடுக்கி தொழில் நுட்பத்தைப் பொருத்தி வெற்றிகரமாகச் சோதித்துள்ளது.
- இது வளிமண்டல நுழைவு விண்வெளிப் பொருள்களுக்காகப் பயன்படுத்தப்படும் ஒரு தொழில்நுட்பமாகும்.
- இது இஸ்ரோவின் விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தால் (VSSC) வடிவமைக்கப் பட்டு உருவாக்கப்பட்டது.

- வளிமண்டலத்தின் வழியாக கீழே விழும் ஒரு பொருளின் வேகத்தை குறைக்க வளிமம் நிரப்பப்பட்ட காற்றியக்க வேக ஒடுக்கி உதவுகிறது.
- இது காற்றியக்க இழுவை மூலம் ஒரு விண்வெளிப் பொருளின் வேகத்தைச் சரியான அளவில் குறைத்தது.




## ஸ்மார்ட் பாக்ஸர்

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கர்நாடகாவில் உள்ள இன்ஸ்பயர் விளையாட்டுக் கல்வி நிறுவனம் ஆகியவை இணைந்து "ஸ்மார்ட்பாக்ஸர்" என்ற பகுப்பாய்வுத் தளத்தை உருவாக்கியுள்ளனர்.
- 2024 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் இந்திய அணி பெற உள்ள குத்துச்சண்டை போட்டிகளுக்கான மொத்தப் பதக்கங்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதன் நோக்குடன், இந்த மேம்பட்ட குத்துச்சண்டைப் பகுப்பாய்வு மென்பொருள் ஆனது உருவாக்கப் படுகிறது.

## ஊசியின்றி நாசி வழி உட்செலுத்தக் கூடிய இந்தியாவின் முதலாவது கோவிட்-19 தடுப்பூசி

- பாரத் பயோடெக் நிறுவனமானது ஊசியின்றி நாசி வழி உட்செலுத்தக் கூடிய இந்தியாவின் முதலாவது கோவிட்-19 தடுப்பூசிக்கான அவசரகாலப் பயன்பாட்டு அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.
- இதற்கு ChAd36-SARS-CoV-S கோவிட்-19 (சிம்பன்சி அடினோவைரஸ் வெக்டார்டு) இனக் கலப்பு நாசிவழித் தடுப்பூசி என்று பெயரிடப்பட்டுள்ளது.
- தற்போதைய நிலவரப்படி, 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஊசியின்றி நாசி வழி உட்செலுத்தக் கூடிய தடுப்பூசியினை வழங்குவதற்குக் கட்டுப்பாடுகளுடன் கூடிய அவசரகாலப் பயன்பாட்டிற்கு இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பானது ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்திய சீரம் நிறுவனத்தின் கோவிஷீல்டு மற்றும் பாரத் பயோடெக் நிறுவனத்தின் கோவாக்சின் ஆகியவை இயல்பில் நரம்பு வழியே உட்செலுத்தக்கூடிய தடுப்பூசிகள் ஆகும்.


## கிமிங்சிங்-50

- மார்னிங் ஸ்டார்-50 என்றும் பெயரிடப்பட்டுள்ள இந்த வாகனமானது, முழுவதுமாக சூரிய சக்தியில் இயங்கும் சீனாவின் ஒரு ஆளில்லா வான்வழி வாகனமாகும்.
- அனைத்து உள்செயல்பாட்டு அமைப்புகளும் சிறப்பாகச் செயல்படுவதன் மூலம் அதன் முதல் சோதனைப் பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.
- இந்த ஆளில்லா விமானமானது 20 கிமீ உயரத்திற்கு மேல் மேகங்கள் இல்லாமல் நிலையான காற்றோட்டம் உள்ள பகுதியில் இயங்குகிறது.
- இதனால் இந்த ஆளில்லா விமானங்கள் நீண்ட காலத்திற்குச் செயல்பட சூரிய சக்தியினால் இயங்கும் கருவிகளை அதிகபட்சமாக பயன்படுத்த உதவுகிறது.
- இந்த ஆளில்லா விமானமானது பூமியின் மேற்பரப்பிலிருந்து 20 கிமீ முதல் 100 கிமீ தொலைவில் உள்ள விண்வெளிப் பரப்பில் இயங்க முடியும்.
- இது செயற்கைக்கோள் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ளும் திறன் கொண்டவை.




## ஐன்ஸ்டீன் வளையம்

- ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியின் மத்திய அகச்சிவப்பு கருவியானது (MIRI) "ஐன்ஸ்டீன் வளையத்தின்" சரியான படத்தைப் பிடித்துள்ளது.
- ஐன்ஸ்டீன் வளையம் ஆனது சவோல்சன் வளையம் என்றும் அழைக்கப்படுகிறது.
- ஐன்ஸ்டீன் வளைய நிகழ்வானது முதன்முதலில் 1988 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப் பட்டது.
- இது ஒரு விண்மீன், நட்சத்திரம் அல்லது பிற ஒளி உமிழும் அண்ட பொருட்களிலிருந்து வரும் ஒளியானது பூமியை அடையும் முன் ஒரு மாபெரும் பொருளின் அருகே செல்லும் போது உருவாக்கப் படுகின்ற ஒரு ஒளி வளையமாகும்.
- இது நிகழும் போது, ஈர்ப்புக் குவியமானது ஒளி திசை திருப்பப்படுவதற்குக் காரணம் ஆகிறது.
- மேலும் மூலம், குவிய வில்லை மற்றும் ஆய்வு செய்யும் பொருள் ஆகிய அனைத்தும் சரியான சீரமைப்பில் இருந்தால், இந்த ஒளி ஒரு வளையமாகத் தோன்றும்.
- எனவே, இந்த வளையம் என்பது விண்வெளியில் உள்ள உண்மையான ஒரு அமைப்பு அல்ல.
- ஆனால் ஈர்ப்புக் குவிய விளைவின் காரணமாக ஒளி மற்றும் ஈர்ப்பு விசையினால் ஏற்படும் ஒரு நிகழ்வாகும்.





## இந்நூயி சூரியத் தொலைநோக்கி

- இந்நூயி சூரியத் தொலைநோக்கியானது 18 கிலோமீட்டர் தொலைவிலான ஒளிப்புகு சூரியப் புறவெளி மண்டலத்தின் தெளிவான படத்தினைப் பிடித்துள்ளது.
- இது ஹவாய் தீவான மௌய்யில் உள்ள ஹலேகலா ஆய்வகத்தில் அமைந்துள்ளது.
- சூரியனின் வளிமண்டலத்தில் உள்ள மூன்று முக்கிய அடுக்குகளில் ஒளிப்புகு சூரியப் புறவெளி மண்டலம் இரண்டாவது அடுக்காகும்.
- இது ஒளி அடுக்கிற்கு மேலேயும், சூரியப் பரிமாற்ற மண்டலம் மற்றும் கரோனா அடுக்கிற்குக் கீழேயும் அமைந்துள்ளது.



## நாசாவின் MOXIE பரிசோதனை

- ❖ மதிய உணவுப் பெட்டியின் அளவுள்ள ஒரு கருவியானது செவ்வாய்க் கிரகத்தில் உட் சுவாசிக்கக் கூடிய ஆக்ஸிஜனை வெற்றிகரமாக உருவாக்கி வருகிறது.
- ❖ MOXIE என்பது செவ்வாய்க் கிரக ஆக்சிஜன் குறித்த ஒரு கள வளப் பயன்பாட்டுப் பரிசோதனையைக் குறிக்கிறது.
- ❖ இது செந்நிறக் கிரகத்தில் கார்பன் டை ஆக்சைடு நிறைந்த வளிமண்டலத்தில் இருந்து ஆக்ஸிஜனை வெற்றிகரமாகத் தயாரித்து வருகிறது.
- ❖ இது ஒவ்வொரு ஓட்டத்திலும் ஒரு மணி நேரத்திற்கு 6 கிராம் ஆக்ஸிஜனை உற்பத்தி செய்யும் இலக்கை எட்டியது.
- ❖ இது பூமியில் உள்ள ஒரு சாதாரண மரத்தின் உற்பத்தி வீதத்தைப் போன்றது.




## டரான்டுலா விண்மீன் முகிற்படலம்



- ❖ ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியானது விண்வெளியில் உள்ள டரான்டுலா விண்மீன் முகிற்படலத்தின் (நெபுலாவின்) படத்தைப் பகிர்ந்துள்ளது.
- ❖ இதன் நீண்ட மற்றும் இருள் சூழ்ந்த இழைகளால் இது டரான்டுலா எனப் பெயர் பெற்றது.

- இந்த விண்வெளிப் பகுதியானது ஒரு இழைகள் நிறைந்த சிலந்தியின் கால்களை ஒத்திருக்கின்ற அதன் தூசி நிறைந்த இழைகளால் வகைப்படுத்தப் படுகிறது.
- இது 161,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.

## திட்டம் 17A - தாராகிரி

- தாராகிரி என்பது இந்தியக் கடற்படையின் திட்டம் 17A என்ற திட்டத்தின் கீழ் மூன்றாவது ரேடாருக்குப் புலப்படாத திறன் கொண்ட போர்க் கப்பல் ஆகும்.
- இந்த நவீன 'திட்டம் 17A' ஆனது 2015 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் மீண்டும் அங்கீகரிக்கப் பட்டது.
- ரேடாருக்குப் புலப்படாத திறன் கொண்ட ஏழு போர் கப்பல்களைக் கட்டமைப்பது இந்தத் திட்டத்தில் அடங்கும்.
- இது, பிரம்மோஸ் எனப்படும் மீயொலி வேகம் கொண்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளைக் கொண்டுள்ளது.
- இதில் கட்டமைக்கப்படும் மூன்று ரேடாருக்குப் புலப்படாத திறன் கொண்ட போர் கப்பல்களில் ஹிம்கிரி முதன்மையானதாகும்.
- இத்திட்டத்தின் கீழ் கட்டமைக்கப்படும் 'உதயகிரி' வகுப்பின் இரண்டாவது கப்பலின் கட்டுமானப் பணிகள் மே மாதம் தொடங்கப்பட்டது.




## முதல் வணிக செயற்கைக் கோள் அகலப் பட்டை அலைக்கற்றைச் சேவை


- ஹியூஸ் கம்யூனிகேஷன்ஸ் இந்தியா (HCI) நிறுவனமானது இஸ்ரோவுடன் இணைந்து அதன் முதல் உயர் செயல்திறன் செயற்கைக்கோள் (HTS) மூலமான அகலப் பட்டை அலைக்கற்றை இணையச் சேவையை அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தியது.
- இது இஸ்ரோவின் Ku-கற்றைத் திறன் கொண்ட ஜிசாட்-11 மற்றும் ஜிசாட்-29 ஆகிய செயற்கைக் கோள்களைப் பயன்படுத்துகிறது.
- இது வழக்கமான செயற்கைக்கோளின் அதே அளவு சுற்றுப்பாதைக்கான அலைக் கற்றையினைப் பயன்படுத்துவதால் ஒரு பிட் என்ற இணையச் சேவைக்கு ஆகும் செலவைக் குறைக்கும் அளவுக்கு அதன் திறனை அதிகரிக்கிறது.

- இது இந்தியாவின் முதல் வணிக ரீதியிலான செயற்கைக்கோள் அகலப் பட்டை அலைக் கற்றைச் சேவையாகும்.
- இது மிகவும் குறைந்த விலை அலைவரிசை மற்றும் அதிக பயனர் அனுபவத்தை வழங்குகிறது.
- இது வடகிழக்குப் பகுதி முதல் லே மற்றும் லடாக்கின் தொலைதூரப் பகுதிகள் வரை இந்தியா முழுவதும் உள்ள தொலைதூர இடங்களுக்கு அதிவேக செயற்கைக்கோள் அகலப் பட்டை அலைக்கற்றைச் சேவைகளை வழங்குகிறது.

## இந்தியாவில் சோவா வைரஸ் தாக்குதல்

- CERT-IN அமைப்பானது சோவா வைரஸ் குறித்த எச்சரிக்கையை அளித்துள்ளது.
- இது தற்போது இந்திய வாடிக்கையாளர்களைக் குறி வைக்கின்ற ஒரு புதுமையான கைபேசி வழியான வங்கிச் சேவை தொடர்பான "ட்ரோஜன்" வைரஸ் ஆகும்.
- இது பணம் பறிப்பதற்காக ஆண்ட்ராய்டு ரக கைபேசிகளில், எந்தப் பாதுகாப்பு அமைப்புகளுக்கும் புலப்படாமல் திருட்டுத்தனமாக உள்நுழைந்து அதன் தகவல்களை பெறும் திறன் கொண்டது.
- இந்தத் தடை ஏற்படுத்தும் மென்பொருள் ஆனது ஸ்மிஷிங் என்ற செயல்முறை (குறுஞ் செய்தி வழியாக உள்நுழையச் செய்தல்) தாக்குதல்கள் மூலம் உடசெலுத்தப்படுகிறது.
- இது முக்கியமான வாடிக்கையாளர்களுடைய தரவுகளின் தனியுரிமை மற்றும் பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளதோடு இது பெரிய அளவிலான நிதி மோசடிகள் மற்றும் இணையவெளித் தாக்குதல்களையும் ஏற்படுத்தலாம்.

## வைரஸ் கண்டறியும் முகக்கவசம்





- காற்றில் நீர்த்துளிகள் அல்லது தூசுப்படலங்களாகக் காணப்படும் இன்ஃப்ளுயன்ஸா மற்றும் கோவிட்-19 போன்ற பொதுவான சுவாசம் சார்ந்த வைரஸ்களைக் கண்டறியும் முகக் கவசத்தினை அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

- சில குறிப்பிட்ட வைரஸ்கள் சுற்றுப்புறத்தில் உள்ள காற்றில் இருந்தால், மிக அதிக உணர்திறன் கொண்ட இந்த முகக்கவசமானது அதை அணிபவர்களுக்கு அவர்களின் கைபேசி சாதனங்கள் மூலம் 10 நிமிடங்களுக்குள் அது குறித்தத் தகவல்களை தெரிவிக்கும்.
- ஒரு முறை தும்மும் போது உற்பத்தி செய்யப்படும் திரவத்தின் அளவை விட 70 முதல் 560 மடங்கு குறைவான, வைரஸ் புரதங்களைக் கொண்ட 0.3 மைக்ரோலிட்டர் அளவு திரவத்திலும் இந்த உணர்வி சிறப்பான முறையில் வைரஸ்களைக் கண்டறிந்தது.

## நிலவில் புதிய வகை கனிமங்கள்

- நிலவின் அருகாமைப் பகுதிகளில் இருந்து ஒரு புதிய வகைப் படிகத்தைச் சீன ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் படிகத்திற்கு சீனாவின் சந்திரத் தெய்வமான சாங்கெ என்பதன் பெயரால் சாங்கேசைட்-(Y) என்று பெயரிடப்பட்டது.
- இந்த சிறிய மற்றும் வெளிப்படையான படிகமானது நிலவின் அருகில் உள்ள எரிமலைக் குப்பைகளுக்கு மத்தியில் காணப்பட்டது.
- இது ஒரு பில்லியன் ஆண்டுகளுக்கும் மேல் பழமையானதோடு அதன் அகலம் கிட்டத் தட்ட மனித முடியுடன் ஒப்பிடத்தக்கது ஆகும்.
- இது ஒரு தனித்துவமான கலவையைக் கொண்டுள்ளதோடு, இது சந்திர மேற்பரப்பில் அல்லது விண்கற்களில் மட்டுமே காணப்படும் பிற கனிமங்களுடன் தொடர்புடையது.
- 2020 ஆம் ஆண்டில் சாங்கே-5 ஆய்வுக் கலத்தின் மூலம் பூமிக்குக் கொண்டு வரப்பட்ட 1.8 கிமீ சந்திரப் பாறைகளில் இந்தப் படிகம் கண்டுபிடிக்கப்பட்டது.
- இந்த மாதிரிகள் 1976 ஆம் ஆண்டிற்குப் பிறகு நிலவில் இருந்து பூமிக்கு அனுப்பப்பட்ட முதல் மற்றும் சீனாவால் சேகரிக்கப்பட்ட முதல் சந்திர மாதிரிகள் ஆகும்.
- சாங்கேசைட்-(Y) என்ற படிகமானது சந்திரனில் கண்டுபிடிக்கப்பட்ட ஆறாவது புதிய கனிமம் என்பதோடு இது சீனாவால் முதலில் அடையாளம் காணப்பட்ட படிகமாகும்.
- முந்தைய 5 கண்டுபிடிப்புகள் என்பவை அமெரிக்கா அல்லது ரஷ்யா ஆகியவற்றால் மேற்கொள்ளப் பட்டவையாகும்.



## ஐக்கிய அரபு அமீரகத்தின் முதலாலது சந்திர உலாவி

- ஐக்கிய அரபு அமீரகமானது, ரஷித் என்று பெயரிடப்பட்ட தனது முதல் சந்திர உலாவிக் கலத்தினை புளோரிடாவில் உள்ள கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் விண்ணில் ஏவ உள்ளது.
- இந்த உலாவிக் கலமானது, அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் ஜப்பானின் ispace ஹகுடோ-R என்ற தரையிறங்கும் கலத்தின் மூலம் சந்திர மேற்பரப்பை அடையும்.
- இந்த சந்திர ஆய்வுப் பணி வெற்றியடைந்தால், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஜப்பான் ஆகியவை சந்திரனின் மேற்பரப்பில் விண்கலத்தைத் தரையிறக்கிய நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா ஆகியவை அடங்கியப் பட்டியலில் இடம் பெறும்.
- அதன் இலக்கு சந்திரனின் பூமத்திய ரேகைக்கு அருகில் அமைந்துள்ள கனவுகளின் ஏரி என்று அழைக்கப் படும் லாகஸ் சோம்நியோரம் என்ற ஏரியாகும்.
- ரஷித் உலாவிக் கலமானது சந்திரனின் மேற்பரப்பு, நிலவின் மேற்பரப்பில் உள்ள இயக்கம் மற்றும் நிலவில் உள்ள துகள்களுடன் வெவ்வேறு மேற்பரப்புகள் எவ்வாறு தொடர்பு கொள்கின்றன என்பதை ஆய்வு செய்யும்.
- துபாயின் முன்னாள் அரசர் ஷேக் ரஷித் பின் சயீத் அல் மக்தூமின் நினைவாக இந்தக் கலத்திற்கு இப்பெயரிடப் பட்டது.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## காடியானா த்விவர்ணா

- இது கர்நாடகாவில் உத்தர கன்னட மாவட்டத்தின் யெல்லாபூர் என்ற ஒரு தாலுகாவில் இருந்து கண்டு பிடிக்கப் பட்டுள்ள ஒரு புதிய நண்டு இனமாகும்.
- த்விவர்ணா இந்தியாவில் காணப்படும் 75வது நண்டு இனமாகும்.
- காடியனா குடும்பத்தினைச் சேர்ந்த காடியானா த்விவர்ணா ஒரு நன்னீர் வாழ் நண்டு இனமாகும்.
- இந்த நண்டின் மிகவும் குறிப்பிடத்தக்க உடல் அம்சம் அதன் நிறமாகும்.
- இந்த நண்டு வெள்ளை நிற தலையும் ஊதா நிற உடலும் கொண்டது.
- இது ஒரு விஷத்தன்மை கொண்ட நண்டு என்பதோடு, நிச்சயமாக இது உண்ணத்தக்க நண்டு வகையைச் சேர்ந்ததும் அல்ல.
- த்விவர்ணா இனம் கண்டுபிடிக்கப்பட்டதன் மூலம் உலகில் உள்ள நண்டு இனங்களின் மொத்த எண்ணிக்கை 125 ஆக உயர்ந்துள்ள நிலையில், அவற்றில் 75 இனங்கள் இந்தியாவில் காணப்படுகின்றன.
- 75 இந்திய நண்டு இனங்களில், 13 இனங்கள் இந்தியாவில் உள்ள காடியானா இனத்தைச் சேர்ந்தவை ஆகும்.
- த்விவர்ணா இனமானது காடியானா இனத்தின் கீழ் காணப்படும் 14வது நன்னீர் வாழ் நண்டு ஆகும்.




## அக்ரோகாந்தோசரஸ்

- அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் ஏற்பட்ட ஒரு மாபெரும் வறட்சியானது அக்ரோகாந்தோசரஸின் கால்தடங்களை வெளிப்படுத்தியுள்ளது.
- இது 113 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பழங்கால டைனோசர் இனம் ஆகும்.
- டைரனோசொரஸ் ரெக்ஸைப் போலவே, தோராயமாக 4 மெட்ரிக் டன் எடை கொண்ட அக்ரோகாந்தோசொரஸ் ஒரு உச்சநிலையில் வேட்டையாடும் விலங்காகும்.
- இருப்பினும், அக்ரோகாந்தோசரஸ் ஆனது டி.ரெக்ஸ் இனம் வாழ்ந்ததற்கு 50 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, ஆரம்ப கால கிரெட்டேசியஸ் காலத்தில் வாழ்ந்ததாகும்.

## பருவநிலை தொடர்பான உறுதிமொழிகள் குறித்த ஆய்வு

- பல்வேறு நாடுகளின் பருவநிலை தொடர்பான உறுதிமொழிகள் அல்லது தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்டப் பங்களிப்புகள் (NDC) குறித்த புதிய ஆய்வறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இந்த ஆய்வில் இந்தியா, அமெரிக்கா, சீனா, ஆஸ்திரேலியா, சவுதி அரேபியா, ரஷ்யா, ஆஸ்திரேலியா மற்றும் பிரேசில் ஆகிய எட்டு நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை அடங்கும்.
- இந்த ஆய்வு, பாரீஸ் ஒப்பந்தத்திற்கான இந்தியாவின் புதுப்பிக்கப்பட்டப் பருவநிலை உறுதிமொழிகளை இலட்சிய நோக்கில் 4வது இடத்திலும், அதன் இணக்கத்தில் 5வது இடத்திலும் தரவரிசைப் படுத்துகிறது.
- ஐரோப்பிய ஒன்றியம் (EU) ஆனது இந்த அறிக்கையில் முன்னிலை வகித்த அதே சமயம், அமெரிக்கா இந்த ஒப்பந்தத்திற்கான இணக்கத்தில் கடைசி இடத்திலும், இலட்சிய நோக்கில் கடைசி இடத்திற்கு முந்தைய இரண்டாவது இடத்திலும் இருந்தது.





## இந்தியாவின் முதல் உயிரிக் கிராமங்கள்

- திரிபுரா மாநிலமானது வெற்றிகரமாக ஐந்து உயிரிக் கிராமங்களை அமைத்துள்ளது.
- இவை நாட்டிலேயே முதல்முறையாக நிறுவப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றலை ஒருங்கிணைத்து இவை அமைக்கப்பட்டுள்ளன.
- உயிரி எரிவாயு, மேம்படுத்தப்பட்ட கால்நடை வளர்ப்பு, சூரிய சக்தியில் இயங்கும் வேளாண் உபகரணங்கள் மற்றும் ஆற்றல் சேமிப்புத் திறன்மிக்க மின் சாதனங்கள் போன்ற கூறுகள் இந்தத் திட்டத்தின் பரவலை விரிவுபடுத்தச் செய்வதற்காக வேண்டி இதனுள் சேர்க்கப் பட்டுள்ளன.

- ❖ செபஹிஜாலா மாவட்டத்தின் சாரிலம் தொகுதியில் உள்ள தாஸ்பராவில் முதல் உயிரிக் கிராமம் ஆனது அமைக்கப்பட்டுள்ளது.
- ❖ திரிபுரா மாநில அரசானது, மாநிலத்தில் மொத்தம் 100 உயிரிக் கிராமங்களை அமைக்க இலக்கு நிர்ணயித்துள்ளது.

## இந்திய நாட்டினை நிகர சுழிய உமிழ்வு நிலைக்குக் கொண்டு செல்தல்

- ❖ இந்தியா 2050 ஆம் ஆண்டிற்குள் இலக்கை எட்ட வேண்டுமென்றால் 13.5 டிரில்லியன் டாலர் முதலீடு தேவைப்படும் என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- ❖ இந்தியா 2070 ஆம் ஆண்டிற்குள் அதன் நிகர-சுழிய உமிழ்வு இலக்கை அடைய வேண்டுமென்றால், இப்போதிலிருந்துப் பொருளாதாரத்திற்கு 10.1 டிரில்லியன் டாலர் என்ற அளவிலான முதலீடு தேவைப்படும்.
- ❖ 2070 ஆம் ஆண்டில் நிகர சுழியம் என்ற ஒரு இலக்கை அடைவதன் மூலம், 2036 ஆம் ஆண்டில் வருடாந்திர மொத்த உள்நாட்டு உற்பத்தியை 4.7% வரை உயர்த்தி 2047 ஆம் ஆண்டிற்குள் 15 மில்லியன் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்றும் இந்த அறிக்கை கூறுகிறது.
- ❖ 2015 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இந்தியாவின் தேசிய அளவில் நிர்ணயிக்கப் பட்டப் பங்களிப்பு (NDC) இலக்குகள் தற்போதையக் கொள்கைகள் மூலம் அடுத்த சில ஆண்டுகளுக்குள் முன்கூட்டியே எட்டப்படும்.
- ❖ 2030 ஆம் ஆண்டிலேயே இந்தியா உமிழ்வுகளில் உச்சத்தை எட்டக்கூடும் என்று இந்த அறிக்கை கூறுகிறது.




## சீனாவில் வெப்பம் மிகுந்த ஆகஸ்ட் மாதம்

- ❖ வெப்பப் பதிவு முறைகள் தொடங்கியதில் இருந்து, சீன நாட்டில் ஆகஸ்ட் மாதமானது வெப்பம் மிகுந்த மாதமாகப் பதிவாகியுள்ளது.
- ❖ கடந்த மாதம் தெற்கு சீனாவில் ஏற்பட்ட வெப்ப அலை உலக வரலாற்றில் மிக மோசமான வெப்ப அலைகளில் ஒன்றாக இருப்பதாக நிபுணர்கள் கருதுகின்றனர்.
- ❖ சிச்சுவான் மாகாணம் மற்றும் சோங்கிங் நகரின் சில பகுதிகளில், சில நாட்களாக 40 டிகிரி செல்சியசைத் தாண்டி வெப்பநிலையானது பதிவாகியுள்ளது.

- ஆகஸ்ட் மாதத்தில் நாடு முழுவதும் சராசரி வெப்பநிலை 22.4C ஆக இருந்தது.
- இது வழக்கத்தை விட 1.2 செல்ஸியஸ் அதிகமாக உள்ளது.
- இந்த மாதமானது, சீனாவின் மூன்றாவது வறண்ட ஆகஸ்ட் மாதம் ஆகும்.
- தற்போது பதிவான சராசரி மழைப் பொழிவானது வழக்கத்தை விட 23.1 சதவீதம் குறைவாகும்.




## உலகத் தொழில்துறை கார்பன் நீக்கக் கூட்டணி - GAID

- சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனமானது சில முக்கிய நிறுவனங்களுடன் இணைந்து உலகத் தொழில்துறை கார்பன் நீக்கக் கூட்டணியினைத் தொடங்கி உள்ளது.
- இது நிகர சுழிய அளவில் இலட்சிய இலக்குகளை விரைவுபடுத்தச் செய்வதையும், தொழில்துறை மதிப்புச் சங்கிலிகளில் கார்பன் நீக்கம் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கார்பன் நீக்கம் என்ற சொல்லுக்கு கார்பன் குறைப்பு என்று பொருளாகும்.
- இந்தக் கூட்டணியானது பேசசுவார்த்தை மற்றும் ஒருங்கிணைந்த செயல்பாடுகளுக்கு வழி வகை செய்யும்.
- இதன் முதல் கூட்டமானது எகிப்தில் உள்ள ஷர்ம் எல் ஷேக்கில் 27வது பங்குதாரர் மாநாட்டில் நடைபெறும்.
- IRENA என்பது ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும், அறிவை மேம்படுத்துவதற்கும், புதுப்பிக்கத் தக்க ஆற்றலை ஏற்றுக் கொள்வதற்கும் அதன் நிலையான பயன்பாட்டை மேம்படுத்துவதற்கும் வலியுறுத்தப்பட்ட ஒரு அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும்.

## சிவிங்கிப் புலிகள் மறு அறிமுகம்

- மத்தியப் பிரதேசத்தில் உள்ள குனோ தேசியப் பூங்காவில் அறிமுகம் செய்வதற்காக முதல் கட்ட அளவில் சிவிங்கிப் புலிகள் நமீபியாவில் இருந்து தற்போது கொண்டு வரப் படுகிறது.
- செப்டம்பர் 17 ஆம் தேதியன்று பிரதமரால் தேசியப் பூங்காவில் 8 சிவிங்கிப் புலிகள் விடப் பட்டன.

- ஆப்பிரிக்கச் சிவிங்கிப் புலிகள் ஆசிய சிவிங்கிப் புலிகளை விட சற்று பெரியவை ஆகும்.
- அவை ஆப்பிரிக்கா முழுவதும் காணப்படுவதோடு, அவை IUCN அமைப்பின் சிவப்பு நிறப் பட்டியலில் பாதிக்கப் படக்கூடிய இனங்களாக பட்டியலிடப் பட்டுள்ளன.
- 1952 ஆம் ஆண்டில் இந்தியாவில் அழிந்து போனதாக அறிவிக்கப்பட்ட சிவிங்கிப் புலிகளை மீண்டும் அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.
- தற்போது, உலகிலேயே ஆசிய சிவிங்கிப் புலிகள் வாழும் ஒரே நாடு ஈரான் மட்டுமே ஆகும்.
- மத்தியப் பிரதேசத்தில் உள்ள குனோ தேசியப் பூங்கா 1981 ஆம் ஆண்டில் ஒரு வன விலங்குச் சரணாலயமாக நிறுவப்பட்டு பின்னர் 2018 ஆம் ஆண்டில் இதற்கு தேசியப் பூங்கா என்ற அந்தஸ்து வழங்கப்பட்டது.
- சம்பல் ஆற்றின் முக்கிய கிளை நதிகளில் ஒன்றான குனோ நதியின் பெயரால் இதற்கு இப்பெயரிடப்பட்டது.
- இந்த நதி அந்தத் தேசியப் பூங்காவை இரண்டாகப் பிரித்து அதன் முழு நீளப் பகுதிகளில் பாய்கிறது.




### காங்கோ வடிநிலக் காடுகள் – காடுகளின் நிலை குறித்த அறிக்கை 2021

- இந்த அறிக்கையானது மத்திய ஆப்பிரிக்க வன ஆணையத்தால் சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- மத்திய காங்கோ நதிப்படுகையில் உள்ள மட்கரி நிலங்களைப் பாதுகாப்பதற்கு அதிக முதலீடு மற்றும் ஆராய்ச்சி தேவை என்று இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
- ஹைட்ரோகார்பன் ஆய்வு, நீர் உட்புகுதல், பாமாயில் தோட்டம், நீர்மின் ஆற்றல் நிலைய அணைகள் மற்றும் பருவநிலை மாற்றம் ஆகியவற்றால் இந்தப் பகுதி தற்போது அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.
- ஒரு மட்கரியில் சுமார் 30 ஜிகா டன் அளவு கார்பனைச் சேமித்து வைக்கும் திறன் இருப்பதால், இந்த மட்கரி நிலங்களைப் பாதுகாப்பது மிகவும் முக்கியமானதாகும்.
- இது முழு காங்கோ வடிநிலக் காடுகளிலும் உள்ள மரங்களின் நிலத்தடி உயிரிப் பொருளுக்குச் சமம்.

- இவை சுமார் 20 ஆண்டுகள் அமெரிக்கா வெளியிடும் புதைபடிவ எரிபொருள் உமிழ்வுகளுக்கு இணையான கார்பனைச் சேமிக்கும் திறன் கொண்டவையாகும்.




## தென்மேற்கு பருவக்காற்று மீதான அறிக்கை

- உள்நாட்டு இடப்பெயர்வு கண்காணிப்பு மையம் (IDMC) மற்றும் ஆசிய மேம்பாட்டு வங்கி ஆகியவை இணைந்து சமீபத்தில் ஒரு கூட்டு அறிக்கையை வெளியிட்டன.
- தென்மேற்கு பருவக்காற்று காலமானது அதன் பருவ காலத்தை விட நீண்ட காலம் நீடிப்பதாக இந்த அறிக்கை கண்டறிந்துள்ளது.
- இது வடகிழக்கு பருவக் காற்றுடன் இணைந்து, தெற்காசியாவில் கடுமையான மழைப் பொழிவு, வெள்ளம் மற்றும் புயல்களை ஏற்படுத்தலாம்.
- தென்மேற்கு பருவக்காற்றானது சரியான நேரத்தில் இந்தியாவின் தீபகற்பப் பகுதியினை அடைந்ததோடு, செப்டம்பர் மாதத்தின் பருவகால எல்லைக்கு அப்பாலும் அது அங்கு நிலை கொண்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில், வடகிழக்குப் பருவக்காற்றுடன் இணைந்து இது அக்டோபர் வரை நீடித்தது.
- இந்த காலகட்டத்தில் ஏற்பட்ட பேரழிவுகளால் தெற்காசியாவில் சுமார் 61.4 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்ததாக இந்த அறிக்கை கண்டறிந்துள்ளது.
- இதில் 58.6 மில்லியன் மக்கள் வானிலை தொடர்பான பேரிடர்களால் இடம் பெயர்ந்து உள்ளனர்.
- வெள்ளம் மற்றும் புயல்கள் காரணமாக 90 சதவீத இடப்பெயர்வுகள் ஏற்படுத்தப் பட்டு உள்ளன.

- வெள்ளத்தினால் 37.4 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்ததோடு, பெரிய வெப்ப மண்டலச் சூறாவளிகள் உள்ளிட்ட புயல் போன்ற காரணிகள் 21 மில்லியன் அளவிற்கு உள்நாட்டு இடப்பெயர்வுகளை ஏற்படுத்தின.
- ஒட்டு மொத்த ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில், 2010-2021 ஆகிய காலகட்டத்தில் சுமார் 225 மில்லியன் நபர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.
- ஒவ்வோர் ஆண்டும், பேரழிவு காரணமாக கிட்டத்தட்ட 19 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.
- இது இடப்பெயர்வு குறித்த மொத்த உலகளாவிய எண்ணிக்கையில் 75 சதவீதத்திற்கும் அதிகமாகும்.
- ஆசிய பசிபிக் பகுதியில் ஏற்படும் அனைத்து பேரிடர் சார்ந்த இடப்பெயர்வுகளில் 95 சதவீதம் பருவ மழை, வெள்ளம் மற்றும் புயல்கள் ஆகியவற்றினால் ஏற்படுகின்றன.




## எல்லைக்கு அப்பாற்பட்ட செந்நிறப் பாண்டா பாதுகாப்பு

- SBI அறக்கட்டளை மற்றும் WWF இந்தியா ஆகியவை இணைந்து மேற்கு வங்காளத்தின் கலிம்போங் மாவட்டம், சிக்கிம் மற்றும் டார்ஜிலிங் ஆகிய பகுதிகளில் செந்நிறப் பாண்டாக்களைப் பாதுகாக்கச் செய்வதற்காக எல்லைக்கு அப்பாற்பட்டப் பாதுகாப்பு முயற்சியில் ஒன்றிணைந்து ஈடுபட்டுள்ளன.
- SBI அறக்கட்டளை என்பது பாரத ஸ்டேட் வங்கியின் பெருநிறுவனச் சமூகப் பொறுப்பு சார்ந்த பிரிவாகும்.
- WWF இந்தியா, இந்தியாவின் சுற்றுச்சூழல் அமைப்புகளையும் வளமான பல்லுயிர்ப் பெருக்கத்தையும் பாதுகாக்க உதவும் நடைமுறை சார்ந்தத் தீர்வுகளை உருவாக்கச் செய்வதற்கும் விளக்கிக் காட்டுவதற்கும் உறுதி பூண்டுள்ளது.




## ஜெர்மனியில் Fridays for Future பிரச்சாரம்

- Fridays for Future ஆர்வலர்கள் ஜெர்மனி மற்றும் பிற நாடுகளில் பருவநிலை மாற்றம் தொடர்பான எதிர்ப்புப் பிரச்சாரங்களைத் தொடங்கியுள்ளனர்.
- ஜெர்மனி முழுவதும் உள்ள 270க்கும் மேற்பட்ட நகரங்கள் மற்றும் புறநகரங்கள் இந்த ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்கின்றன.
- 36,000க்கும் மேற்பட்ட மக்கள் பருவநிலை சார்ந்தப் போராட்டங்களை நடத்தச் செய்வதற்காக ஒன்று கூடிய நிலையில் பெர்லின் நகரில் மிகப்பெரிய பேரணி ஒன்று நடத்தப் பட்டது.
- இந்த போராட்டக்காரர்கள் புவி வெப்பமடைதலைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும், புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பயன்பாட்டை விரிவுபடுத்தச் செய்வதற்காக 100 பில்லியன் யூரோ நிதியை நிறுவுமாறும் ஜெர்மானிய அரசாங்கத்திடம் கோரிக்கை ஒன்றை விடுத்து உள்ளனர்.
- வளர்ந்து வரும் நாடுகளுக்கான நிதி மற்றும் பருவநிலைக் கடன்களை ரத்து செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
- எகிப்தின் ஷர்ம் எல்-ஷேக் என்னுமிடத்தில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பருவநிலை உச்சி மாநாடு (COP27) தொடங்குவதற்கு 6 வாரங்களுக்கு முன்னர் இந்தப் போராட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.
- இத்தாலி, தென் கொரியா, அமெரிக்கா மற்றும் காங்கோ ஜனநாயகக் குடியரசு போன்ற நாடுகளிலும் இதே போன்ற போராட்டங்கள் எழுந்துள்ளன.

# மாநிலச் செய்திகள்

## உலகின் மிகப்பெரிய மத நினைவுச்சின்னம்

- உலகின் மிகப்பெரிய மத நினைவுச் சின்னம் மேற்கு வங்காளத்தில் உள்ள வேத கோளரங்கம் ஆகும்.
- இது சர்வதேச கிருஷ்ணா மத உணர்வுச் சங்கத்தின் (ISKCON) தலைமையகமாகச் செயல்படும்.
- இது கட்டி முடிக்கப்பட்டால், வாடிகன் நகரில் உள்ள செயின்ட் பால் கதீட்ரல் தேவாலயம் மற்றும் தாஜ்மஹால் ஆகியவற்றை விடப் பெரியதாக இருக்கும்.
- இது மிகப்பெரிய மத நினைவுச் சின்னமாக விளங்கும் கம்போடியாவிலுள்ள 400 ஏக்கர் பரப்பளவில் அமைந்த மிகப்பெரிய அங்கோர் வாட் கோவில் வளாகத்திற்குப் பதிலாக இடம் பெறும் என்று கூறப்படுகிறது.




## ஆலப்புழா - முழுவதும் டிஜிட்டல்மயமாக்கப்பட்ட வங்கி முறையைக் கையாளும் 5வது மாவட்டம்

- கேரள மாநிலத்தில் முழுவதும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட வங்கி முறையைக் கையாளும் 5வது மாவட்டமாக ஆலப்புழா மாறியுள்ளது.
- இந்த முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, மாவட்டத்தில் உள்ள 29 வங்கிகளில் 26 லட்சம் சேமிப்பு/நடப்பு வங்கிக் கணக்குகளில் குறைந்தபட்சம் ஒரு டிஜிட்டல் பரிவர்த்தனை வசதி செயல்படுத்தப்பட்டுள்ளது.
- ஒரு டிஜிட்டல் பரிவர்த்தனை வசதியில் பணம் பெறும் அட்டை - கடன் அட்டை, இணைய வழி வங்கி முறை, கைபேசி வழியான வங்கி வசதி, ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகம் மற்றும் பல உள்ளன.
- இது தொடர்பான ஒரு அறிவிப்பை இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டது.
- திருச்சூர், கோட்டயம், பாலக்காடு மற்றும் காசர்கோடு ஆகிய இடங்களில் வங்கிச் சேவைகள் ஏற்கனவே டிஜிட்டல் மயமாக்கப் பட்டுள்ளன.

## 68வது நேரு டிராபி படகுப் போட்டி

- சமீபத்தில், கேரளாவின் ஆலப்புழா மாவட்டத்தில் உள்ள புன்னமடா ஏரியில் நடத்தப் பட்ட 68வது நேரு டிராபி படகுப் போட்டியில் பள்ளத்துருத்தி படகுக் குழுமம் வெற்றி பெற்றது.
- இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்தப் பகுதிக்கு விஜயம் செய்ததையும், ஆலப்புழா ஏரியில் அவர் படகுச் சவாரி செய்ததையும் நினைவு கூரும் வகையில் 1952 ஆம் ஆண்டு நேரு டிராபி படகுப் போட்டி நிறுவப் பட்டது.

## மலைப்பகுதி சைக்கிள் பந்தயத்திற்கான முதலாவது உலகக் கோப்பை போட்டி

- லடாக்கில் உள்ள லே நகரம் இந்த விளையாட்டுப் போட்டியினை நடத்தத் தயாராக உள்ளது.
- இதற்கு 'UCI MTB எலிமினேட்டர் உலகக் கோப்பை' என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இது லடாக் ஒன்றியப் பிரதேச நிர்வாகம் மற்றும் இந்திய சைக்கிள் ஓட்டுதல் சங்கத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட உள்ளது




## கிராமப்புற பண்ணைமுறை பன்றி வளர்ப்பு திட்டம்

- மேகாலயா முதல்வர் கான்ராட் கே சங்மா இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இது வெவ்வேறு கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகள் மூலம் அம்மாநில விவசாயிகள் நிலையான வாழ்வாதாரத்தை ஈட்டுவதை உறுதி செய்வதற்கான ஒரு திட்டமாகும்.
- பன்றி இறைச்சி உற்பத்தியில் அம்மாநிலம் தன்னிறைவு பெற, அம்மாநில அரசு மிகப்பெரிய பன்றி வளர்ப்புத் திட்டங்களில் ஒன்றான 'மேகாலயா பன்றி வளர்ப்புத் திட்டத்தினை' செயல்படுத்தி வருகிறது.

## ஒவ்வொரு வீட்டிலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்

- ஒவ்வொரு வீட்டுக்கும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (RO) வழங்கிய ஒரு கிராமம் என்றச் சிறப்பை எட்டிய உத்தரப் பிரதேசத்தின் முதல் கிராமமாக பர்தாவுல் ஆனது.
- ஆதர்ஷ் கிராமப் பஞ்சாயத்து முன்னெடுப்பின் கீழ் ஒரு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (RO) வழங்கும் அமைப்பு நிறுவப்பட்டதன் மூலம் அந்தக் கிராமம் சுத்தமான குடிநீரைப் பெற அது வழிவகை செய்கிறது.

## 100 நாட்கள் நகர்ப்புற வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்

- நகர்ப்புறங்களில் உள்ள ஏழைக் குடும்பங்களுக்கு 100 நாட்கள் வேலை வாய்ப்பு அளிக்கும் ஒரு இலட்சியத் திட்டத்தை ராஜஸ்தான் அரசு தொடங்கியுள்ளது.
- இது இந்திரா காந்தி வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் என்று அழைக்கப் படுகின்றது.
- இது கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதித் திட்டமான மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் படி உருவாக்கப்பட்டுள்ளது.
- 18 வயது முதல் 60 வயது வரை உள்ளவர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியானவர்கள் ஆவர்.

## இந்தியாவின் மிக நீளமான இரப்பர் அணை



- பீகாரில் உள்ள கயாவில் ஃபால்கு ஆற்றின் மீது கட்டமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் மிக நீளமான இரப்பர் அணையான 'கயாஜி அணையானது சமீபத்தில் திறக்கப்பட்டது.
- ரூர்க்கி இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் நிபுணர்கள் இந்தத் திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
- ஃபால்கு நதியில் மழைக்காலத்தில் மட்டுமே தண்ணீர் இருப்பதால், மீதமுள்ளக் காலத்திற்கு அது வறண்டு காணப்படும்.
- இந்த அணையானது ஆண்டு முழுவதும் ஆற்றில் நீர்ச் சேமிப்பை உறுதி செய்யும்.

## நாக மிர்ச்சா திருவிழா

- நாகாலாந்தில் உள்ள கோஹிமா மாவட்டத்தில் உள்ள செய்ஹாமா கிராமத்தில் நாகா மிர்ச்சா திருவிழா ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.
- இது முதலாவது நாகா மிர்ச்சா (கிங் மிளகாய் வகை) திருவிழாவாகும்.
- நாகா மிர்ச்சா ரகமானது ராஜா மிர்ச்சா (கிங் மிளகாய்) என்று பிரபலமாக அறியப் படுகிறது.
- இது ஸ்கோவில் கார அலகுகள் (SHUs) பட்டியலில் இடம் பெற்றுள்ள முதல் ஐந்து வெப்பமான மிளகாய் ரகங்களில் ஒன்றாகும்.
- இது 2008 ஆம் ஆண்டில் நாகாலாந்து மாநிலத்தைச் சேர்ந்த விளை பொருளுக்கான புவிசார் குறியீட்டினைப் பெற்றது.

- இது பூட் ஜோலோகியா என்றும் கோஸ்ட் பெப்பர் என்றும் அழைக்கப்படுகிறது.
- இது சோலனேசி குடும்பத்தைச் சேர்ந்த கேப்சிகம் இனத்தைச் சேர்ந்தது.

## முதலாவது சினிமா சுற்றுலாக் கொள்கை 2022-2027

- குஜராத்தின் முதலாவது சினிமா சுற்றுலாக் கொள்கையை குஜராத் முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.
- இந்தப் புதிய கொள்கையானது, குஜராத்தில் திரைப்படத் தயாரிப்புக்கான சாத்தியமான வாய்ப்புகளை உருவாக்குவதோடு உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்புகளையும் வழங்கும்.
- குஜராத்தில் கட்ச் வெண்ணிறப் பாலைவனம், சிவராஜ்பூர் கடற்கரை போன்ற பல இடங்கள் படப் பிடிப்பு தளங்களாக மாறுவதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.

## மதச் சுதந்திர உரிமை மசோதா

- கர்நாடக மாநிலச் சட்ட மேலவையில் 'கர்நாடக மதச் சுதந்திர உரிமைப் பாதுகாப்பு மசோதாவானது' சமீபத்தில் நிறைவேற்றப்பட்டது.
- கர்நாடகாவின் மதமாற்ற எதிர்ப்பு மசோதா 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அதன் சட்டப் பேரவையில் நிறைவேற்றப் பட்டது.
- நேரடி அல்லது மறைமுக வழிகள் மூலமாக கட்டாய மத மாற்றங்கள் மேற்கொள்ளப் படுவதை இந்த மசோதா தடை செய்கிறது.
- இது மத மாற்றத்தை மேற்கொள்வதற்காக சில குறிப்பிட்ட நடைமுறைகளை வழங்கச் செய்கிறது.
- இந்தச் சட்டத்தின் கீழ், எந்த ஒரு தனிநபரும் தாங்கள் மதம் மாறுவதற்கு குறைந்த பட்சம் 30 நாட்களுக்கு முன்னதாக மாவட்ட ஆட்சியரிடம் ஒரு அறிக்கையினைச் சமர்ப்பிக்க வேண்டும்.


## உணவுப் பாதுகாப்பு தொடர்பான வரைபடம்

- பீகார் மற்றும் ஒடிசாவிற்கு அடுத்தபடியாக, கிழக்கு இந்தியாவில் ஜார்க்கண்ட் தனது கிராமப் புறங்களுக்கான உணவுப் பாதுகாப்பு வரைபடத்தினைக் கொண்ட மூன்றாவது மாநிலமாக மாறியுள்ளது.
- ஒடிசா மற்றும் பீகார் ஆகியவை 2018 ஆம் ஆண்டில் தமது உணவுப் பாதுகாப்பு வரைபடத்தினை வெளியிட்டன.
- ஜார்க்கண்ட் கிராமப்புற உணவுப் பாதுகாப்பு வரைபடமானது 2022 ராஞ்சியில் தொடங்கப் பட்டது.
- இந்த வரைபடமானது மாநிலத்தின் உணவுப் பாதுகாப்பு நிலைமையை வரைபடம் ஆக்குவதற்கான ஒரு முயற்சியாகும்.
- இது டெல்லியைச் சேர்ந்த மனித மேம்பாட்டு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது.





## அம்ரித் சரோவர் திட்டம்

- இந்தியாவில் 8,642 அம்ரித் சரோவர் (ஏரிகள்) கட்டிய இந்தியாவின் முதல் மாநிலமாக உத்தரப் பிரதேசம் திகழ்கிறது.
- அம்ரித் சரோவர் என்பது எதிர்காலத்திற்காக தண்ணீரைச் சேமிப்பதை நோக்கமாகக் கொண்டு பிரதமர் அவர்களால் தொடங்கப்பட்ட ஒரு இலட்சிய நோக்கத் திட்டமாகும்.
- இதில் மத்தியப் பிரதேசம் இரண்டாவது இடத்திலும், ஜம்மு காஷ்மீர் மூன்றாவது இடத்திலும், ராஜஸ்தான் நான்காவது இடத்திலும், தமிழ்நாடு ஐந்தாவது இடத்திலும் உள்ளன.
- இதில் 256 அமிர்த சரோவரைக் கட்டியதன் மூலம் உத்தரப் பிரதேசத்தின் லக்கிம்பூர் கேரி மாநிலத்திலேயே முதல் இடத்தைப் பிடித்தது.
- இதில் 245 ஏரிகளைக் கட்டியதன் மூலம் கோரக்பூர் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.
- இதில் 231 ஏரிகளைக் கட்டி பிரதாப்கர் மூன்றாவது இடத்தைப் பிடித்தது.




## சர்தார் சரோவர் அணை

- குஜராத்தின் முக்கிய நதியாக விளங்கும் நர்மதா நதியில் உள்ள சர்தார் சரோவர் அணை அதன் அதிகபட்ச கொள்ளளவு வரை நிரம்பியது.
- அணையின் நீர்மட்டமானது வரலாற்றுச் சிறப்புமிக்க அளவில் 138.68 மீட்டரை எட்டி உள்ளது.
- இது அணையின் அதிகபட்ச கொள்ளளவை விட அதிகமாக உள்ளது.
- 2019 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்குப் பிறகு அணை அதிகபட்ச கொள்ளளவிற்கு நிரம்புவது வரலாற்றில் இது மூன்றாவது முறையாகும்.





## பட்டியலிடப்பட்ட சாதியினர் & பழங்குடியினர் மற்றும் இதரப் பிரிவினருக்கான இட ஒதுக்கீடு

- தனது மாநில அரசு வேலைகளில் 77 சதவீத இட ஒதுக்கீடு வழங்குவதற்கான முன் மொழிதலுக்கு ஜார்க்கண்ட் அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.
- இது பட்டியலிடப்பட்ட சாதியினர் & பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், இதரப் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய இதரப் பிரிவினருக்கான இட ஒதுக்கீடாகும்.
- அம்மாநிலம் இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டை தற்போது உள்ள 14 சதவீதத்தில் இருந்து 27 சதவீதமாக உயர்த்தியுள்ளது.
- இது உள்மாநிலப் பட்டியலிடப்பட்டச் சாதியினர் சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கு 12 சதவிகிதம் மற்றும் உள்மாநில பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர்ச் சமூகங்களுக்கு 28 சதவிகிதம் என்று இட ஒதுக்கீடு வழங்குகிறது.
- இதில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 15 சதவீத இட ஒதுக்கீடு மற்றும் இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 12 சதவீத இடஒதுக்கீடு வழங்கப் படுகிறது.
- அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையில் இந்த மசோதாவைச் சேர்க்குமாறு மத்திய அரசிடம் கோரிக்கை வைக்க அந்த மாநில அரசு முடிவு செய்துள்ளது.




## தௌலதாபாத் கோட்டையின் பெயர் மாற்றம்

- மகாராஷ்டிர அரசானது ஔரங்காபாத் பெயரை மாற்றியதையடுத்து, தௌலதாபாத் கோட்டையின் பெயரினைத் தற்போது தேவகிரி எனப் பெயர் மாற்றம் செய்ய முடிவு செய்துள்ளது.
- முன்னதாக ஔரங்காபாத் சம்பாஜி நகர் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- இது முன்னர் யாதவ வம்சத்தின் தலைநகராகவும், பின்னர் சிறிது காலம் டெல்லி சுல்தானியத்தின் தலைநகராகவும் விளங்கியது.
- 14 ஆம் நூற்றாண்டில் முகமது துக்ளக் அவர்களால் இக்கோட்டை தௌலதாபாத் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- இக்கோட்டை பின்னர் குபத்துல் இஸ்லாம் என்று அழைக்கப்பட்டதோடு, இந்தக் கோட்டையின் பெயரில் நாணயங்கள் அச்சிடப்பட்டன.



## மகளிர் மட்டும் பேசும் தினம்

- உத்தரப் பிரதேச சட்டப் பேரவையில் பெண்களை மையமாகக் கொண்ட பிரச்சனைகளைப் பற்றி பேசுவதற்கும், உரையாற்றுவதற்கும் பெண் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு நாள் ஒதுக்கப்பட்டுள்ளது.

- இது அரசின் பிரச்சினைகள் & சாதனைகள் மற்றும் பிற முக்கியப் பிரச்சனைகளை அந்தச் சபையில் முன்வைக்க வழி வகுக்கும்.
- உத்தரப் பிரதேச சட்டப் பேரவையில் 403 உறுப்பினர்கள் உள்ளனர்.
- அதில் முதல் முறையாக வெற்றி பெற்ற 22 நபர்கள் உட்பட 47 பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

## பனிச்சரிவு கண்காணிப்பு ரேடார் கருவி

- சிக்கிம் மாநிலத்தின் வடக்குப் பகுதியில், இந்திய இராணுவம் மற்றும் பாதுகாப்புப் புவிசார் தகவலியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவை இணைந்து இந்தியாவின் முதல் பனிச்சரிவு கண்காணிப்பு ரேடார் கருவியினை நிறுவியுள்ளன.
- இந்த ரேடார் கருவியானது, இந்தியாவிலேயே இது போன்ற முதல் வகை கருவியாகும்.
- இந்தக் கருவியானது பனிச்சரிவு ஏற்பட்ட மூன்று வினாடிகளுக்குள் அதனைக் கண்டு அறியும் திறன் கொண்டது.
- இது படை வீரர்களின் உயிரைக் காப்பாற்றவும், மிக உயரமானப் பகுதிகளில் உள்ள கட்டிடங்களுக்கு சேதம் ஏற்படுவதைக் குறைக்கவும் உதவும்.
- பனிச்சரிவு ரேடார் கருவியானது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் பாதுகாப்பு புவிசார் தகவலியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தினால் செயலாக்கப் பட்டது.

## உலக சுற்றுலா தின விருது

- உலக சுற்றுலா தினத்தையொட்டி, உத்தரகாண்ட் மாநிலத்திற்கு இரண்டு பிரிவுகளில் முதல் பரிசு வழங்கப்பட்டது.
- சிறந்த சாகசச் சுற்றுலாத் தலத்திற்கான விருதுகள் மற்றும் சுற்றுலாவின் முழு மேம்பாட்டிற்கான விருதுகளை இந்த மாநிலம் வென்றுள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## அபிஜித் சென்

- புகழ்பெற்ற பொருளாதார நிபுணரும் திட்டக்குழு ஆணையத்தின் முன்னாள் உறுப்பினருமான அபிஜித் சென் தனது 72வது வயதில் காலமானார்.
- இவர் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களின் ஆட்சிக் காலத்தில், 2004 முதல் 2014 ஆம் ஆண்டு வரை திட்டக்குழு ஆணையத்தில் உறுப்பினராக இருந்தார்.
- சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ள பிரிவினைச் சேர்ந்த நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக தானியங்களுக்கான பொது விநியோகத் திட்டத்தினை அறிமுகம் செய்வதற்கு இவர் பரிந்துரைத்தார்.




## மைக்கேல் கோர்பச்சேவ்

- பனிப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த சோவியத் தலைவரான மைக்கேல் கோர்பச்சேவ் தனது 91வது வயதில் காலமானார்.
- சோவியத் ஒன்றியத்தில் 1985 மற்றும் 1991 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் பதவியில் இருந்த இவர் சோவியத் அரசின் கடைசித் தலைவர் ஆவார்.
- இவர் அமெரிக்க-சோவியத் உறவுகளை ஒரு ஆழ்ந்த முடக்கத்திலிருந்து வெளியே கொண்டு வர உதவினார்.
- இவர் தான் கடைசியாக எஞ்சியிருக்கும் பனிப் போர் காலத்தியத் தலைவர் ஆவார்.
- இவர் 1990 ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசை வென்றார்.




## திவா பிரபஞ்ச அழகி போட்டி 2022

- கர்நாடகாவைச் சேர்ந்த 23 வயதான திவிதா ராய், 2022 ஆம் ஆண்டின் திவா பிரபஞ்ச அழகி என்ற மதிப்புமிக்கப் பட்டத்தை வென்றார்.
- தெலுங்கானாவைச் சேர்ந்த பிரகன்யா அய்யாகரி மிஸ் திவா சூப்பர்நேஷனல் 2022 என்ற பட்டத்தினை வென்றார்.




## ஜேம்ஸ் ஆண்டர்சன்

- சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் 950 விக்கெட்டுகளை கடந்த முதல் வேகப்பந்து வீச்சாளர் என்ற பெருமையை இங்கிலாந்தின் ஜேம்ஸ் ஆண்டர்சன் பெற்றுள்ளார்.
- ஆஸ்திரேலியாவின் கிளென் மெக்ராத்தின் (949 விக்கெட்) சாதனையை இவர் முறியடித்தார்.
- சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் மிகவும் வெற்றிகரமான பந்துவீச்சாளர்களாகத் திகழ்பவர்கள், இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் (1,347 விக்கெட்கள்), மறைந்த ஆஸ்திரேலியச் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வார்ன் (1,001 விக்கெட்கள்) மற்றும் இந்தியச் சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ப்ளே (956 விக்கெட்கள்) ஆகியோர் ஆவர்.

## திறன் மிக்க தீர்வுகள் சவால் & உள்ளார்ந்த நகரங்கள் விருது 2022

- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை மற்றும் பெட்ரோலியம் & இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி இந்த விருதுகளை வழங்கினார்.
- இந்த விருதுகள் மாற்றுத் திறனாளிகள் (PwD), பெண்கள் மற்றும் பெண்கள் மற்றும் முதியோர்கள் எதிர்கொள்ளும் நகர அளவிலான அணுகல் மற்றும் உள்ளடக்கச் சவால்களை எதிர்கொள்ள இந்தியாவில் உள்ள தேசிய நகர்ப்புற விவகார நிறுவனம் (NIUA) மற்றும் ஐக்கிய நாடுகள் (UN) ஆகியவை மேற்கொண்ட ஒரு முன்னெடுப்பாகும்.


## சைரஸ் மிஸ்திரி (54)

- டாடா குழுமத்தின் முன்னாள் தலைவர் மகாராஷ்டிராவின் பால்கர் அருகே நிகழ்ந்த ஒரு விபத்தில் உயிரிழந்தார்.
- இவர் இந்தியாவில் பிறந்த ஓர் அயர்லாந்து தொழிலதிபர் ஆவார்.
- இவர் கட்டுமானத் தொழில் துறை அதிபரான பல்லோன்ஜி மிஸ்திரியின் இளைய மகன் ஆவார்.
- ஜோராஸ்ட்ரிய மதத்தைச் சேர்ந்த அவரது பெற்றோர்கள் இருவரும் இந்தியாவில் தங்களது பூர்வீகத்தினைக் கொண்டுள்ளனர்.
- ரத்தன் டாடா தான் ஓய்வு பெறுவதாக அறிவித்த பிறகு, 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை டாடா குழுமத்தின் தலைவராக இவர் பணியாற்றினார்.

- இவர் இக்குழுமத்தின் ஆறாவது தலைவராகப் பணியாற்றினார்.
- டாடா என்ற குடும்பப் பெயரைப் பெற்றிராத இரண்டாவது குழுமத் தலைவர் (நவ்ரோஜி சக்லத்வாலாவுக்குப் பிறகு) இவரே ஆவார்.
- மிஸ்திரி ஒரு அயர்லாந்து நாட்டுக் குடிமகன் மற்றும் இந்தியாவில் நிரந்தர குடியுரிமைப் பெற்றவர் (இந்தியாவின் வெளிநாட்டு குடியுரிமையைப் பெற்றவர்) ஆவார்.

## 31வது வியாஸ் சம்மான்

- 31வது வியாஸ் சம்மான் விருதானது பிரபல இந்தி எழுத்தாளர் டாக்டர் அஸ்கர் வஜாஹத்துக்கு வழங்கப்பட்டது.
- மகாபலி நாடகத்திற்காக இந்த மதிப்புமிக்க விருதிற்கு அவர் தேர்வு செய்யப் பட்டு உள்ளார்.
- கடந்த 10 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட ஓர் இந்தியக் குடிமகன் எழுதிய இந்தி மொழியின் சிறந்த இலக்கியப் படைப்புகளுக்காக K.K.பிர்லா அறக்கட்டளையினால் வியாஸ் சம்மான் விருது வழங்கப்படுகிறது.
- ராம் விலாஸ் ஷர்மா தனது ‘பாரத் கே பிரச்சீன் பாஷா பரிவார் அவுர் ஹிந்தி’ என்றப் படைப்பிற்காக 1991 ஆம் ஆண்டு முதலாவது வியாஸ் சம்மான் விருதினைப் பெற்றார்.




## சிறந்த சேவைக்கானப் பதக்கம்

- இந்தியாவின் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் சுனில் லம்பாவுக்கு சிங்கப்பூரின் மதிப்பு மிக்க இராணுவ விருது வழங்கப்பட்டுள்ளது.
- இந்த விருதானது பிங்கட் ஜசா ஜெமிலாங் (டென்டெரா) அல்லது சிறந்தச் சேவைப் பதக்கம் (இராணுவம்) என அறியப்படுகிறது.
- இந்தியக் கடற்படைக்கும் சிங்கப்பூர் கடற்படைக்கும் இடையே வலுவான மற்றும் நீண்ட கால இருதரப்புப் பாதுகாப்பு உறவை மேம்படுத்துவதில் அவர் ஆற்றிய சிறந்தப் பங்களிப்புகளுக்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

## கமல் நாராயண் சிங்

- இந்தியாவின் முன்னாள் தலைமை நீதிபதி கமல் நரேன் சிங் காலமானார்.
- நீதிபதி நரேன் அவர்கள் தலைமை நீதிபதியாக 17 நாட்கள் மட்டுமே பதவி வகித்தார்.
- இது அவரை மிகக் குறுகிய பதவிக் காலம் கொண்ட தலைமை நீதிபதி என்று குறிப்பிட அவருக்கு வாய்ப்பளித்தது.
- இவர் இந்தியாவின் 22வது இந்தியத் தலைமை நீதிபதியாகப் பணியாற்றினார்.
- இவரது பதவிக்காலம் 1991 ஆம் ஆண்டு நவம்பர் 25 ஆம் தேதி முதல் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் 12 ஆம் தேதி வரையாகும்.
- கங்கை நதி மாசுபாடு வழக்கு, மரண தண்டனையின் செல்லுபடித் தன்மையை எதிர்த்து மேற்கொண்ட வழக்கு உள்ளிட்ட பல முக்கிய தீர்ப்புகளில் இவர் ஒரு முக்கிய அங்கத்தினை வகித்தார்.

## பணமோசடி தடுப்புச் சட்டத்தின் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவர்

- பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவராக நீதிபதி முனீஸ்வர் நாத் பண்டாரி நியமிக்கப்பட்டுள்ளார்.
- நீதிபதி பண்டாரி அவர்கள், சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி பதவியில் இருந்து செப்டம்பர் 12 ஆம் தேதியன்று ஓய்வு பெற்றார்.
- SAFEMA (கடத்தல்காரர்கள் மற்றும் அந்நியச் செலாவணி மோசடி செய்பவர்கள் சட்டம்) சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சொத்துப் பறிமுதல் தீர்ப்பாயம் மற்றும் பண மோசடித் தடுப்புச் சட்டத்தின் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் ஆகியவை 2016 ஆம் ஆண்டு நிதிச் சட்டத்தின் மூலம் 2016 ஆம் ஆண்டில் ஒன்றாக இணைக்கப்பட்டன.

## அன்வி விஜய் ஜான்ஸாருகியா

- 'இரப்பர் கேர்ள்' என்று அழைக்கப்படும் அன்வி விஜய் சன்ஸாருகியா டெல்லியில் சமீபத்தில் பிரதமர் அவர்களைச் சந்தித்தார்.
- 75 சதவீத அறிவுத்திறன் குறைபாடுள்ள மன நலிவு நோயால் பாதிக்கப்பட்ட இந்த 14 வயது சிறுமியின் வாழ்க்கையை யோகா மாற்றியுள்ளது.
- இவர் இந்த ஆண்டு ஜனவரி 24 ஆம் தேதியன்று பிரதான் மந்திரி ராஷ்ட்ரிய பால் புரஸ்கார் விருதினை வென்றார்.



## இந்தியத் தலைமை வழக்கறிஞர்

- K.K. வேணுகோபால் பதவி விலகியதை அடுத்து, இந்தியாவின் 14வது தலைமை வழக்கறிஞராக மூத்த வழக்கறிஞர் முகுல் ரோஹத்கி நியமிக்கப்பட உள்ளார்.
- தலைமை வழக்கறிஞராகப் பதவி ஆற்ற உள்ள ரோஹத்கிக்கு இது இரண்டாவது முறையாகும்.
- அவரது முதல் பதவிக் காலம் 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை ஆகும்.
- இந்தியாவின் தலைமை வழக்கறிஞர் பதவியானது மத்திய நிர்வாகத்தின் ஒரு அங்கமாக உள்ளது.
- தலைமை வழக்கறிஞர் நாட்டின் மிக உயரியச் சட்ட அதிகாரி ஆவார்.
- அரசியலமைப்பின் 76வது பிரிவானது இந்தியத் தலைமை வழக்கறிஞர் பதவியினை வழங்குகிறது.
- இந்தியாவின் சொலிசிட்டர் வழக்கறிஞர் மற்றும் இந்தியாவின் கூடுதல் சொலிசிட்டர் வழக்கறிஞர் ஆகியோர் அதிகாரப்பூர்வ பொறுப்புகளை நிறைவேற்றுவதில் தலைமை வழக்கறிஞருக்கு உதவுகிறார்கள்.

## 'Water Heroes: Share Your Stories' போட்டி

- ஜல் சக்தித் துறை அமைச்சகமானது "நீர் வளங்கள், நதி மேம்பாடு மற்றும் கங்கை மறு சீரமைப்பு 'நீர்வள நாயகர்கள்: உங்கள் கதைகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள்' (Water Heroes: Share Your Stories)" என்ற போட்டியைத் தொடங்கியது.
- மூன்றாவது 'Water Heroes: Share Your Stories' போட்டியானது 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 01 ஆம் தேதியன்று தொடங்கியது.
- இது MyGov தளத்தில் 2022 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் தேதியன்று முடிவடையும்.
- முதல் போட்டியானது 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 01 ஆம் தேதி முதல் 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30 ஆம் தேதி வரை நடைபெற்றது.
- இரண்டாவது 'Water Heroes: Share Your Stories' போட்டியானது 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் 19 ஆம் தேதி முதல் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் தேதி வரை நடைபெற்றது.

## மலேசிய அமைச்சரவையின் அமைச்சர் சாமிவேலு

- மலேசிய அமைச்சரவையில் நீண்ட காலம் பணியாற்றிய அமைச்சர்களில் ஒருவரான S.சாமிவேலு அவர்கள் சமீபத்தில் காலமானார்.
- அவர் பாரிசான் நேசனலின் முக்கிய அங்கமான மலேசிய இந்திய காங்கிரஸ் அமைப்பின் தலைவராக 2010 ஆம் ஆண்டு வரை 31 ஆண்டுகள் காலத்திற்குப் பணியாற்றிச் சாதனை படைத்தார்.
- இவர் 1959 ஆம் ஆண்டில் கட்சியில் சேர்ந்த பிறகு பல தசாப்தங்களாக மலேசியாவின் இந்திய அரசியலில் ஆதிக்கம் செலுத்தினார்.

## உலகின் இரண்டாவது பணக்காரர்

- ப்ளூம்பெர்க் பில்லியனர்கள் குறியீட்டின் படி, அமேசான் நிறுவனத்தின் நிறுவனர் ஜெஃப் பெசோஸை விஞ்சி, கௌதம் அதானி உலகின் இரண்டாவது பணக்காரர் ஆனார்.
- அதானியின் நிகரச் சொத்து மதிப்பு 147 பில்லியன் டாலர் ஆகும்.
- உலகின் மிகப் பெரிய பணக்காரர் மற்றும் டெஸ்லாவின் நிறுவனர் எலோன் மஸ்க்கிற்கு அடுத்த இடத்தில் இவர் இடம் பெற்றுள்ளார்.
- எலோனின் நிகர சொத்து மதிப்பு 264 பில்லியன் டாலராகும்.
- அம்பானி 88.7 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் இந்தப் பட்டியலில் பத்தாவது இடத்தைப் பிடித்துள்ளார்.
- மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் நிறுவனர் பில்கேட்ஸ், 112 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் 5வது பணக்காரராக இப்பட்டியலில் இடம் பிடித்துள்ளார்.
- வாரன் பஃப்பெட் 96 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் ஆறாவது இடத்தில் உள்ளார்.

## INSPIRE விருதுகள்

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சகமானது சமீபத்தில் INSPIRE திட்டத்தின் கீழ் சுமார் 53,000 மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கியுள்ளது.
- INSPIRE என்பது The Innovation in Science Pursuit for Inspired Research என்பதன் பெயர் சுருக்கம் ஆகும்.
- இது இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் செயல் படுத்தப் பட்டுள்ளது.
- இது மூன்று கூறுகளைக் கொண்டுள்ளது.
    - திறமையை முன்கூட்டியே ஊக்கப்படுத்துவதற்கானத் திட்டம் (SEATS),
    - உயர் கல்விக்கான உதவித் தொகை (SHE) மற்றும்
    - ஆராய்ச்சிப் பணிகளுக்கான உறுதியான வாய்ப்பு (AORC).
- ஒவ்வோர் ஆண்டும் SEAT திட்டத்தின் கீழ் இந்திய அரசு INSPIRE விருது - MANAK விருதுகளை வழங்குகிறது.
- MANAK என்பது தேசிய இலட்சியங்கள் மற்றும் அறிவுகளை மிகைப்படுத்துவதற்கான மில்லியன் மைண்ட்ஸ் திட்டம் என்பதைக் குறிக்கிறது.

## மரபணு படியெடுத்தல் மூலம் பிறந்த உலகின் முதல் ஆர்க்டிக் ஓநாய்

- சீனா முதன்முறையாக ஆர்க்டிக் வன ஓநாய் வகையினை மரபணு படியெடுத்தல் (குளோனிங்) மூலம் வெற்றிகரமாக உருவாக்கியுள்ளது.
- இந்த உயிரினமானது அழிந்து போவதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு இது மேற்கொள்ளப்பட்டது.
- புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இந்த ஓநாய்க்கு நல்ல ஆரோக்கியம் என்று பொருள் படும் மாயா என்று பெயரிடப்பட்டது.
- இந்த ஓநாயின் செல் ஆனது, ஒரு ஆர்க்டிக் வன பெண் ஓநாயின் தோல் மாதிரியிலிருந்து பெறப்பட்டது.

- இதன் கருமுட்டையானது ஒரு பெண் நாயிடமிருந்துப் பெறப்பட்டது.
- இந்த ஆர்க்டிக் ஓநாய் ஆனது வெள்ளை ஓநாய் அல்லது துருவ ஓநாய் என்றும் அழைக்கப் படுகிறது.
- இது கனடாவின் குயின் எலிசபெத் தீவுகளின் உயர்மட்ட ஆர்க்டிக் துந்திரா காடுகளைத் தாயகமாகக் கொண்டதாகும்.
- இது சாம்பல் நிற ஓநாயின் ஒரு துணை இனமாகும்.



## சோவியத் விண்வெளி வீரர் வலேரி பாலியகோவ்

- விண்வெளியில் அதிக நேரம் வசித்தவர் என்ற ஒரு சாதனையைப் படைத்த வலேரி பாலியாகோவ் சமீபத்தில் காலமானார்.
- 1994 ஆம் ஆண்டு ஜனவரி 08 ஆம் தேதி முதல் 437 நாட்கள் விண்வெளியில் அவர் தங்கியிருந்தார்.
- அவர் 1995 ஆம் ஆண்டு மார்ச் 22 ஆம் தேதியன்று பூமிக்குத் திரும்புவதற்கு முன்பு 7,000 முறைக்கு மேல் பூமியைச் சுற்றி வந்தார்.




- முன்னதாக, 1988-89 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒரு பயணத்தில் பாலியாகோவ் 288 நாட்கள் விண்வெளியில் வசித்திருந்தார்.
- இவர் 1999 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட SFINCSS-99 என்ற (விண்வெளி நிலையத்திற்கான சர்வதேசக் குழுவினரின் விமானத்தின் மாதிரியினை உருவாக்குதல்) ஒரு பரிசோதனையில் பங்கேற்றார்.

- 1999 ஆம் ஆண்டில், செர்ஜி அவ்தேயேவ் என்ற விண்வெளி வீரர் 747 நாட்கள் விண்வெளியில் தங்கியிருந்து, 678 நாட்கள் விண்வெளியில் வசித்த பாலியகோவின் மிக நீண்ட காலச் சாதனையை முறியடித்தார்.

## ஸ்மிதா பாட்டீல் நினைவு விருது

- மதிப்புமிக்க பிரியதர்ஷினி அகாடமியின் ஸ்மிதா பாட்டீல் நினைவு விருது வழங்கும் விழாவில் ஆலியா பட் சிறந்த நடிகைக்கான விருதைப் பெற்றுள்ளார்.
- இந்தியத் திரையுலகில் அவர் ஆற்றியப் பாராட்டுக்குரியப் பங்களிப்பிற்காக இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- பிரியதர்ஷினி அகாடமியானது முதன்மையான இலாப நோக்கமற்ற, சமூக-கலாச்சார மற்றும் கல்வி நிறுவனமாகும்.




## சிறந்த பிரெஞ்சு குடிமகன் கௌரவ விருது

- பிரமல் குழுமத்தின் துணைத் தலைவர் ஸ்வாதி பிரமலுக்கு செவாலியர் டி லா லெஜியன் டி'ஹானுர் (நைட் ஆஃப் தி லெஜியன் ஆஃப் ஹானர்-மாவீரர்) பட்டமானது வழங்கப்பட்டது.
- தேசியம் மற்றும் சர்வதேச அளவில் வணிகம் மற்றும் தொழில், அறிவியல், மருத்துவம், கலை மற்றும் கலாச்சாரம் ஆகிய துறைகளில் பிரமல் குழுமம் ஆற்றியச் சிறந்தச் சாதனைகள் மற்றும் பங்களிப்பிற்கான அங்கீகாரமாக இந்த விருதானது வழங்கப் பட்டது.
- 2006 ஆம் ஆண்டில், பிரான்சின் இரண்டாவது மிக உயரிய குடிமகன் கௌரவ விருதான செவாலியர் டி எல்'ஆர்ட்ரே நேஷனல் டு மெரிட் (நைட் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் மெரிட்) விருதும் அவருக்கு வழங்கப்பட்டது.
- இவர் பத்மஸ்ரீ விருதினையும் பெற்றவர் ஆவார்.

## ஆண்டின் 13வது சமூக தொழில்முனைவோர் விருது

- ❖ குடிமக்கள் பயன்பெற தகுதியான அரசு நலத்திட்டங்களுடன் அவர்களை இணைக்கும் தொழில்நுட்பத் தளமான ஹக்தர்ஷக் தளத்தின் நிறுவனர் அனிகேத் டோகர், ஆண்டின் 13வது சமூக தொழில்முனைவோர் (SEOY) விருதைப் பெற்றுள்ளார்.
- ❖ இந்த விருதினை ஜூபிலண்ட் பார்தியா அறக்கட்டளை மற்றும் சமூக தொழில் முனைவோருக்கான ஸ்வாப் அறக்கட்டளை ஆகியவை இணைந்து நிறுவின.
- ❖ ஹக்தர்ஷக் 24 மாநிலங்களில் 22,800 முகவர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளது.




## ஆசியாவில் உள்ள சிறந்தப் பணியிடங்கள் 2022

- ❖ 2022 ஆம் ஆண்டிற்கான ஆசியாவில் உள்ள சிறந்த பணியிடங்கள் பட்டியலில் ஃபெடரல் வங்கி 63வது இடத்தைப் பிடித்துள்ளது.
- ❖ பணியிடக் கலாச்சாரம் குறித்த சர்வதேச ஆணையமான சிறந்தப் பணியிடம் என்ற அமைப்பினால் பட்டியலிடப்பட்ட இந்தியாவின் ஒரே வங்கி இதுவாகும்.
- ❖ நம்பிக்கை, புதுமை, நிறுவனத்தின் மதிப்புகள் மற்றும் தலைமைத்துவம் ஆகிய கூறுகளின் அடிப்படையில் ஊழியர் அனுபவங்களை இந்த அறிக்கை மதிப்பிடுகிறது.
- ❖ அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கியப் பணியிட அனுபவத்தை நிறுவனங்கள் எவ்வளவு சிறப்பாக உருவாக்குகின்றன என்பதையும் இந்த அறிக்கை மதிப்பீடு செய்கின்றது.

## 'ராஜ்பாஷா கீர்த்தி புரஸ்கார்'

- ❖ கொல்கத்தாவில் உள்ள கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ் அண்ட் இன்ஜினியரிங் லிமிடெட் (GRSE) நிறுவனமானது, 'ராஜ்பாஷா கீர்த்தி புரஸ்கார்' விருதினைப் பெற்றுள்ளது.
- ❖ 2021-22 ஆம் ஆண்டிற்கான 'C' பகுதியில், பொதுத் துறை நிறுவனங்களின் கீழ் அலுவல் மொழியைச் சிறப்பாகச் செயல்படுத்தியதற்காக இந்த விருதானது வழங்கப்பட்டது.
- ❖ அலுவல் மொழி அமலாக்கத் துறையில் இந்திய அரசால் வழங்கப்படும் உயரிய விருது இதுவாகும்.
- ❖ GRSE நிறுவனம் ஆனது 2011-2012, 2012-2013, 2014-2015, 2015-2016 மற்றும் 2016-2017 ஆகிய ஆண்டுகளில் சிறந்த அலுவல் மொழி அமலாக்கத்திற்கான 'ராஜ்பாஷா கீர்த்தி புரஸ்கார்' விருதினைப் பெற்றுள்ளது.

## வடக்குக் கால்வாயைக் கடந்த முதுமையான இந்தியர்

- இந்திய நீச்சல் வீரர் எல்விஸ் அலி ஹசாரிகா, வடக்கு கால்வாயைக் கடந்த முதல் வட கிழக்குப் பிராந்தியத்தினைச் சேர்ந்த நபர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- வடக்குக் கால்வாய் என்பது வடக்கு அயர்லாந்தின் வடகிழக்குப் பகுதிக்கும் தென் மேற்கு ஸ்காட்லாந்திற்கும் இடையே உள்ள ஒரு ஜலசந்தி ஆகும்.
- இதன் மூலம், வடக்குக் கால்வாயை கடந்த அதிக வவயதான இந்திய நீச்சல் வீரர் என்ற பெருமையை எல்விஸ் பெற்றுள்ளார்.
- 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், கேடலினா கால்வாயை வெற்றிகரமாகக் கடந்த முதல் அசாமிய நீச்சல் வீரர் என்றப் பெருமையையும் இவர் பெற்றார்.

## இலக்குக் காவலர்களுக்கான உலகளாவிய இலக்கு விருதுகள்

- பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையானது 2022 ஆம் ஆண்டிற்கான இலக்குக் காவலர்களுக்கான உலகளாவிய இலக்கு விருதுகளை வழங்கி அதன் மூலம் மாற்றத்தினைக் கொண்டு வந்த 4 நபர்களைக் கௌரவித்தது.
- ஐக்கிய நாடுகளின் நிலையான மேம்பாட்டு இலக்குகளை (SDGs) நோக்கி முன்னேறச் செய்வதற்கான பாதையில் அவர்களைச் சுற்றியுள்ள சமூகங்கள் மற்றும் உலகம் முழுவதிலும் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளை இந்த விருதானது அங்கீகரிக்கச் செய்கிறது.
- கேட்ஸ் அறக்கட்டளையின் "முன்னேற்றத்தின் எதிர்காலம்" எனப்படும் ஆறாவது வருடாந்திர இலக்குக் காவலர் அறிக்கையானது வெளியிடப்பட்டது.

| Name of the Award | Awarded by | Awardee | Country |
|---|---|---|---|
| 2022 Global Goalkeeper Award | Bill Gates and Melinda French Gates | Ursula von der Leyen | Germany |
| 2022 Campaign Award | Malala Yousafzai | Vanessa Nakate | Uganda |
| 2022 Changemaker Award | Angelina Jolie | Zahra Joya | Afghanistan |
| 2022 Progress Award | Lilly Singh | Dr. Radhika Batra | India |

## முதலாவது இரண்டாம் எலிசபெத் இராணி விருது

- பிரிட்டனின் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த உள்துறைச் செயலர் சுயெல்லா பிரேவர்மேன், ஆண்டின் சிறந்தப் பெண்மணிக்கான இரண்டாம் எலிசபெத் இராணி விருதினை வென்றார்.
- இந்த விருதுகள், பொதுப் பரிந்துரைகள் மூலம் பிரிட்டனின் தெற்காசியச் சமூகம் முழுவதும் உள்ள தனிநபர்களின் சாதனைகளை அங்கீகரிக்கின்றன.

## பிரேக்த்ரூ பரிசுகள் 2023

- டேனியல் A. ஸ்பீல்மேன் 2023 ஆம் ஆண்டிற்கான கணிதத்திற்கான ப்ரேக்த்ரூ என்ற பரிசினைப் பெற்றுள்ளார்.

- கோட்பாட்டுக் கணினி அறிவியல் மற்றும் கணிதத் துறையில் அவர் மேற்கொண்ட பல கண்டுபிடிப்புகளுக்காக இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- இந்த விருதானது "அறிவியல் துறையின் ஆஸ்கார்" என்று அழைக்கப்படுகிறது.
- அடிப்படை இயற்பியல், வாழ்க்கை அறிவியல் மற்றும் கணிதம் ஆகியவற்றில் அறிவியலாளர்கள் மேற்கொண்ட மாற்றம் நிறைந்தக் கண்டுபிடிப்புகளுக்காகவும், ஆரம்பகாலத் தொழில்துறை அறிவியலாளர்களுடன் சேர்ந்து அவரவர் துறைகளில் குறிப்பிடத் தக்கப் பங்களிப்பை வழங்கியுள்ள அறிவியலாளர்களுக்காகவும் இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- இது 2012 ஆம் ஆண்டில் செர்ஜி பிரின், பிரிஸில்லா சான் மற்றும் மார்க் ஜக்கர்பெர்க் யூரி மற்றும் ஜூலியா மில்னர் மற்றும் அன்னி வோஜ்சிக்கி ஆகியோரால் நிறுவப் பட்டது.

| Award | Awardee |
|---|---|
| **Breakthrough Prizes in Life Sciences** | • Clifford P. Brangwynne<br>• Anthony A. Hyman<br>• Demis Hassabis<br>• John Jumper<br>• Emmanuel Mignot<br>• Masashi Yanagisawa |
| **Fundamental Physics** | • Charles H. Bennett,<br>• Gilles Brassard,<br>• David Deutsch,<br>• Peter W. Shor |
| **New Horizons in Physics Prize** | • David Simmons-Duffin<br>• Anna Grassellino<br>• Hannes Bernien<br>• Manuel Endres<br>• Adam M. Kaufman<br>• Kang-Kuen Ni<br>• Hannes Pichler<br>• Jeff Thompson |
| **New Horizons in Mathematics Prize** | • Ana Caraiani<br>• Ronen Eldan<br>• James Maynard |
| **Maryam Mirzakhani New Frontiers Prize** | • Maggie Miller<br>• Jinyoung Park<br>• Vera Traub, |

## ஹெர்மன் கெஸ்டன் விருது 2022

- இந்திய ஆர்வலர், ஆசிரியர் மற்றும் கவிஞர் மீனா கந்தசாமி அவர்களுக்கு 2022 ஆம் ஆண்டிற்கான ஹெர்மன் கெஸ்டன் விருது வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டு உள்ளது.
- இது ஜெர்மனியின் டார்ம்ஸ்டாட் நகரில் உள்ள PEN மையத்தினால் வழங்கப்படுகிறது.
- பாதிக்கப்பட்ட எழுத்தாளர்களின் உரிமைகளுக்காக அவர் வழங்கிய ஆதரவை கௌரவிக்கும் விதமாக அவருக்கு இந்த விருதானது வழங்கப் படுகிறது.
- சாதி, இனம் சார்ந்த ஒடுக்குமுறை மற்றும் பாலினம் பற்றிய அவரது படைப்புகளையம் இந்த விருதானது அங்கீகரிக்கிறது.
- இந்த விருதானது ஆரம்பத்தில் 1993 ஆம் ஆண்டு வரையில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்பட்டது.
- 1994 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

# விளையாட்டுச் செய்திகள்

## நீரஜ் சோப்ரா

- ஈட்டி எறிதலில் ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற நீரஜ் சோப்ரா, சமீபத்தில் சுவிட்சர்லாந்தின் லொசேன் டயமண்ட் லீக் போட்டியில் வென்றார்.
- டயமண்ட் லீக் போட்டியில் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை இவர் பெற்றார்.
- சோப்ராவுக்கு முன், வட்டு எறிதல் வீரர் விகாஸ் கௌடா மட்டுமே டயமண்ட் லீக் போட்டியில் முதல் மூன்று இடங்களுக்குள் இடம் பிடித்த ஒரே இந்தியர் ஆவார்.
- நார்மன் பிரிட்சார்டுக்குப் பிறகு இந்தியாவுக்குப் பதக்கம் பெற்றுத் தந்த இரண்டாவது ஒலிம்பிக் தடகள வீரர் மற்றும் இந்தியாவுக்கு ஒலிம்பிக் தங்கப் பதக்கம் பெற்றுத் தந்த முதல் தடகள வீரர் என்றப் பெருமையை நீரஜ் பெற்றுள்ளார்.
- நார்மன் பிரிட்சார்ட் 1900 ஆம் ஆண்டு கோடைக் கால ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவுக்காக இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்றார்.

## ஒளிப்படக் காட்சிப் பதிவு உதவி நடுவர் தொழில்நுட்பம்

- இந்தியாவில் நடைபெறவிருக்கும் 17 வயதுக்குட்பட்டோருக்கான 2022 ஆம் ஆண்டின் மகளிர் உலகக் கோப்பைப் போட்டியில் ஒளிப்படக் காட்சிப் பதிவு உதவி நடுவர் (VAR) தொழில்நுட்பமானது பயன்படுத்தப்பட உள்ளது.
- 17 வயதுக்குட்பட்ட மகளிர் உலகக் கோப்பைப் போட்டியில் இந்தத் தொழில்நுட்பம் முதல் முறையாக அறிமுகப் படுத்தப் பட்டுள்ளது.
- இது புவனேஸ்வர் (கலிங்கா மைதானம்), மார்கோ (JLN மைதானம்) மற்றும் நவி மும்பை (DY பாட்டீல் மைதானம்) ஆகிய இடங்களில் 2022 ஆம் ஆண்டு அக்டோபர் 11 முதல் 30 வரை நடைபெற உள்ளது.
- ஒளிப்படக் காட்சிப்பதிவு உதவி நடுவர் தொழில்நுட்பமானது விளையாட்டுச் சூழலை மாற்றியமைக்கும் வகையில் ஒரு கோல் அடித்திட வழி வகுக்கும் இலக்குகள் மற்றும் குற்றங்கள், பெனால்டி முடிவுகள் மற்றும் தண்டனைக்கு வழி வகுக்கும் குற்றங்கள், நேரடிச் சிவப்பு அட்டை வழங்கீட்டுச் சம்பவங்கள் மற்றும் தவறாக அடையாளம் காணுதல் போன்ற நான்கு சூழ்நிலைகளில் நடுவரின் முடிவெடுக்கும் செயல்முறைக்கு உதவுகிறது.



## அகில இந்தியக் கால்பந்துக் கூட்டமைப்பு

- இது புதுடெல்லியைத் தலைமையிடமாகக் கொண்டு 1937 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- விளையாட்டுத் துறையின் உலக நிர்வாக அமைப்பான FIFA அமைப்பினுடைய தொடர்பற்ற வெளிப்புறச் செல்வாக்கின் விளைவாக அதன் 85 ஆண்டுகால வரலாற்றில் முதல் முறையாக இது இடைநிறுத்தம் செய்யப் பட்டது.
- ஆனால் பின்னர் அகில இந்தியக் கால்பந்து கூட்டமைப்பின் தடையானது உடனடியாக அமலுக்கு வரும் வகையில் FIFA சபை வாரியத்தினால் நீக்கப்பட்டது.
- இது 2022 ஆம் ஆண்டில் FIFA 17 வயதிற்குட்பட்டோருக்கான மகளிர் உலகக் கோப்பை போட்டியினை நடத்த இந்தியாவிற்கு அனுமதியளிக்கும்.
- அகில இந்தியக் கால்பந்துக் கூட்டமைப்பின் புதியத் தலைவராக முன்னாள் கால்பந்து வீரர் கல்யாண் சவுபே தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இவர் கொல்கத்தாவில் உள்ள மோகன் பகான் குழு மற்றும் கிழக்கு வங்காளக் கால்பந்து குழு ஆகிய அணிகளில் கோல்கீப்பராக இருந்தார்.

## அபேக்சா பெர்னாண்டஸ்

- WJS (ஜூனியர்களுக்கான உலக இறுதிப் போட்டி) சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதிப் போட்டியை எட்டிய முதல் இந்தியப் பெண்மணி என்ற பெருமையை இவர் பெற்று உள்ளார்.
- ஒட்டு மொத்தமாக எட்டாவது இடத்தைப் பிடித்ததன் மூலம் ஜூனியர் உலக இறுதிப் போட்டிக்கு வந்த முதல் இந்தியப் பெண்மணி ஆக இவர் மாறியுள்ளார்.
- 8வது உலக ஜூனியர் நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டியானது பெருவில் உள்ள லிமா நகரில் நடைபெற்று வருகிறது.




## செரீனா வில்லியம்ஸ்

- இவர் அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் பங்கேற்ற பிறகு டென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார்.
- இவர் ஒரு அமெரிக்கத் தொழில்முறை டென்னிஸ் வீராங்கனை ஆவார்.
- பெண்கள் டென்னிஸ் சங்கத்தினால் (WTA) ஒற்றையர் பிரிவில் குறிப்பிடப்பட்டப் பட்டியலில் உலகளவில் முதல் இடத்தை 319 வாரங்களுக்குத் தக்க வைத்திருந்தார்.

- இவர் ஓபன் போட்டிகளின் சகாப்தத்தில் எந்த வீரரும் இதுவரை வென்றிராத அளவில் 23 கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் பட்டங்களை வென்றுள்ளார்.
- 2012 ஆம் ஆண்டில், இவர் ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தினை வென்றார்.
- இவ்வகையில் ஒற்றையர் மற்றும் இரட்டையர் ஆகிய இரண்டு பிரிவுகளிலும் கேரியர் கோல்டன் ஸ்லாம் வென்ற முதல் டென்னிஸ் வீராங்கனை என்ற ஒரு பெருமையை இவர் பெற்றார்.



## 36வது தேசிய விளையாட்டுப் போட்டிகள்

- இது 2022 ஆம் ஆண்டு குஜராத் விளையாட்டுப் போட்டிகள் என்றும் அழைக்கப் படுகிறது.
- அகமதாபாத், காந்திநகர், சூரத், வதோதரா, ராஜ்கோட் மற்றும் பாவ்நகர் ஆகிய ஆறு நகரங்களில் இப்போட்டியானது நடைபெற உள்ளது.
- குஜராத் மாநிலம் ஒரு தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டியை நடத்துவது இதுவே முதல் முறையாகும்.
- 35வது தேசிய விளையாட்டுப் போட்டிகளானது கேரளாவில் 2015 ஆம் ஆண்டில் நடைபெற்றது.
- முதலாவது இந்திய ஒலிம்பிக் போட்டிகளானது 1924 ஆம் ஆண்டில் இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு லாகூர் நகரில் நடத்தப் பட்டது.
- இரண்டு புதியப் போட்டிகளாக யோகாசனம் மற்றும் மல்லகம்பா ஆகியவையும், கோ-கோ மற்றும் கபடி போன்ற உள்நாட்டு விளையாட்டுப் போட்டிகளும் இதில் சேர்க்கப் பட்டுள்ளன.
- கர்ஜனை செய்வது போன்ற சிங்க உருவமானது (ரோர் சவாஜ்) இந்தப் போட்டிக்கான ஒரு சின்னமாகும்.
- இந்தப் போட்டிக்கான கீதமானது ஏக் பாரத் ஷ்ரேஸ்தா பாரத் என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- "ஒற்றுமைக்கான விளையாட்டு" என்ற முழக்கத்துடன் 36வது தேசிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

## துபாய் ஓபன் சதுரங்கப் போட்டி

- 22வது துபாய் ஓபன் சதுரங்கப் போட்டியில் கிராண்ட்மாஸ்டர் அரவிந்த் சிதம்பரம் வெற்றி பெற்றார்.
- இதில் R. பிரக்ஞானந்தா இரண்டாவது இடத்தினைப் பெற்றார்.




## லிந்தோய் சனம்பம்

- மணிப்பூரைச் சேர்ந்த 16 வயது லிந்தோய் இந்தியாவின் முதலாவது உலக ஜூடோ பட்டத்தை வென்றார்.
- போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினாவின் தலைநகரான சரஜேவோவில் நடைபெற்ற உலக கேடட் சாம்பியன்ஷிப் போட்டியில் சனம்பம், பிரேசில் நாட்டினைச் சேர்ந்த ரெய்ஸ் பியான்காவைத் தோற்கடித்துத் தங்கப் பதக்கத்தினை வென்றார்.

## UEFA விருதுகள்

- கரீம் பென்ஸெமா மற்றும் அலெக்ஸியா புடெல்லாஸ் ஆகியோர் துருக்கியின் இஸ்தான்புல் நகரில் நடைபெற்ற விழாவில் UEFA ஆடவர் மற்றும் மகளிர்களுக்கான ஆண்டின் சிறந்த வீரருக்கான பரிசுகளை வென்றதன் மூலம் தொடர் போட்டிகளுக்கான சிறந்த வீரர்கள் என்ற அங்கீகாரத்தினைப் பெற்றனர்.
- பிரான்ஸ் கால்பந்து வீரர் பென்சிமா ரியல் மாட்ரிட் அணியின் தலைவர் ஆவார்.
- ஸ்பெயினின் புட்டெல்லாஸ் மகளிர் சாம்பியன்ஸ் லீக் போட்டியில் அதிக கோல் அடித்த வீராங்கனை ஆவார்.



## டயமண்ட் லீக் போட்டி

- சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் நடைபெற்ற டயமண்ட் லீக் இறுதிப் போட்டியில் ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா தங்கப் பதக்கம் வென்றார்.
- இந்தச் சாம்பியன்ஷிப் போட்டியில் வென்ற முதல் இந்தியர் இவர் ஆவார்.
- இவரது இந்த வெற்றியானது, 2023 ஆம் ஆண்டு ஹங்கேரியின் புடாபெஸ்ட் நகரில் நடைபெற உள்ள உலகத் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் வைல்டு கார்டு நுழைவைப் பெற்றுத் தந்தது.
- டயமண்ட் லீக் இறுதிப் போட்டிகள் ஆனது ஒலிம்பிக் மற்றும் உலக சாம்பியன்ஷிப் போட்டிகளுக்கு அப்பால் மிகவும் மதிப்புமிக்கப் போட்டியாகக் கருதப்படலாம்.




## நிகழ்ச்சி நிதியளிப்பு உரிமைகள்

- மாஸ்டர்கார்டு நிறுவனமானது இந்தியப் பார்வையாளர்கள் மத்தியில் அதன் மூலோபாய ரீதியிலானப் பரவலை விரிவுபடுத்தச் செய்வதற்காக வேண்டி இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்துடன் ஒரு ஒத்துழைப்பை மேற்கொள்ள உள்ளதாக அறிவித்துள்ளது.
- இனி உள்நாட்டு மைதானத்தில் நடைபெறும் ஆடவர் மற்றும் மகளிருக்கான அனைத்து சர்வதேசப் போட்டிகளுக்கும், துலீப் கோப்பை, ரஞ்சிக் கோப்பை மற்றும் இரானிக் கோப்பை போன்ற உள்நாட்டு கிரிக்கெட் போட்டிகளுக்கும் மாஸ்டர்கார்டு நிகழ்ச்சி நிதியளிப்பு நிறுவனமாக விளங்கும்
- மேலும், இது இந்தியாவில் நடத்தப்படுகின்ற அனைத்து ஜூனியர் கிரிக்கெட் போட்டிகளுக்கும் நிதி வழங்கும்.

## அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி 2022

- 2022 ஆம் ஆண்டு அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியானது 142வது அமெரிக்க ஓபன் போட்டியாகும்.
- இது 2022 ஆம் ஆண்டின் நான்காவது மற்றும் கடைசி கிராண்ட்ஸ்லாம் போட்டியாகும்.
- இதில் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை ஸ்பெயின் நாட்டின் கார்லோஸ் அல்கரேஸ் வென்றுள்ளார்.

- ஏடிபி தரவரிசையில் முதல் இடத்தைப் பிடித்த இளம் வீரர் என்றப் பெருமையை இவர் பெற்றுள்ளார்.
- உலகின் முன்னணி வீராங்கனையான போலந்து நாட்டின் இகா ஸ்வியாடெக் மகளிர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.
- அமெரிக்க ஓபன் பட்டத்தை வென்ற முதல் போலந்து வீராங்கனை ஸ்வியாடெக் ஆவார்.
- அவர் இதுவரை தனது வாழ்க்கையில் மூன்று கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் உட்பட 10 பட்டங்களை வென்றுள்ளார்.
- ஆடவர் இரட்டையர் பிரிவில் அமெரிக்காவின் ராஜீவ் ராம் மற்றும் இங்கிலாந்தின் ஜோ சாலிஸ் பரி இணை வெற்றி பெற்றது.
- மகளிர் இரட்டையர் பிரிவில் செக் நாட்டைச் சேர்ந்த பார்போரா கிரெஜ்சிகோவா மற்றும் கேடரினா சினியாகோவா இணை சாம்பியன் பட்டம் வென்றது.
- கலப்பு இரட்டையர் பிரிவில் ஆஸ்திரேலிய இணையான ஸ்டோர்ம் சாண்டர்ஸ் மற்றும் ஜான் பியர்ஸ் ஜோடி சாம்பியன் பட்டம் வென்றது.



## 3 ரஞ்சிக் கோப்பைப் போட்டிகள்

- சிக்கிம் அரசானது முதல் முறையாக மூன்று ரஞ்சிக் கோப்பைப் போட்டிகளை நடத்த உள்ளது.
- ரஞ்சி டிராபிப் போட்டிகளுடன், இரண்டு கூச் பெஹார் டிராபி போட்டிகளையும், மூன்று கர்னல் CK நாயுடு டிராபி போட்டிகளையும் சிக்கிம் நடத்த உள்ளது.

## உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி 2022

- 2022 ஆம் ஆண்டு உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவருக்கான 65 கிலோ எடைப் பிரிவில் பஜ்ரங் புனியா வெண்கலப் பதக்கத்தினை வென்றார்.
- இது உலக சாம்பியன்ஷிப் போட்டியில் பஜ்ரங் புனியா பெறும் நான்காவது பதக்கம் ஆகும்.
- வினேஷ் போகட், மகளிருக்கான 53 கிலோ எடைப் பிரிவு போட்டியில் வெண்கலப் பதக்கத்தினை வென்றார்.
- உலக சாம்பியன்ஷிப் போட்டியில் இரண்டு பதக்கங்களை வென்ற முதல் இந்தியப் பெண் மல்யுத்த வீராங்கனை என்ற பெருமையை வினேஷ் பெற்றுள்ளார்.



## ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) ஓய்வு

- லண்டனில் அடுத்த வாரம் நடைபெற உள்ள லேவர் கோப்பையைத் தொடர்ந்து ATP சுற்றுப் பயணம் மற்றும் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக ரோஜர் பெடரர் அறிவித்துள்ளார்.
- 24 ஆண்டுகளில் 1500க்கும் மேற்பட்ட போட்டிகளில் இவர் விளையாடியுள்ளார்.
- இவர் 20 கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் பட்டங்களை வென்றுள்ளார்.



# முக்கிய தினங்கள்

## உலக தேங்காய் தினம் – செப்டம்பர் 02

- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "சிறந்த எதிர்காலம் மற்றும் சிறந்த வாழ்க்கைக்காக தேங்காய் வளர்ப்பது" என்பதாகும்.
- முதல் உலக தேங்காய் தினமானது 2009 ஆம் ஆண்டு செப்டம்பர் 02 ஆம் தேதியன்று ஆசிய பசிபிக் தேங்காய்ச் சமூகத்தினால் (APCC) கொண்டாடப்பட்டது.
- தென்னை மரம் பனை மரக் குடும்பத்தைச் சேர்ந்ததோடு அது கோகோஸ் இனத்தைச் சேர்ந்த ஒரே இனமாகும்.
- தேங்காய் என்பது உள்ளோட்டு குடும்பத்தைச் சேர்ந்ததோடு பெரும்பாலும் வெப்ப மண்டல நாடுகளில் மட்டுமே அது காணப்படுகிறது
- இந்தியாவில், கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா, கோவா, மேற்கு வங்காளம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் ஒடிசா போன்ற மாநிலங்களில் தென்னை வளர்ச்சி வாரியத்தின் ஆதரவுடன் இந்தத் தினம் கொண்டாடப்படுகிறது.
- தென்னை வளர்ச்சி வாரியம் (CDB) என்பது விவசாய அமைச்சகத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- இதன் தலைமையகம் கேரளாவின் கொச்சியில் அமைந்துள்ளது.
- உலகளவில் அதிக அளவில் தேங்காய் உற்பத்தி செய்யும் மூன்று நாடுகள் இந்தியா, இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகியனவாகும்.
- தேங்காய் ஏற்றுமதியில் இந்தோனேசியா (1வது), இந்தியா (2வது), பிலிப்பைன்ஸ் (3வது), பிரேசில் (4வது) மற்றும் இலங்கை (5வது) ஆகிய நாடுகள் முன்னணியில் உள்ளன.

## தேசிய ஊட்டச்சத்து வாரம் 2022

- இது செப்டம்பர் 01 முதல் செப்டம்பர் 07 வரை கொண்டாடப்படுகிறது.
- இந்த ஆண்டின் இந்தத் தினத்திற்கான கருத்துரு என்பது ‘சுவைகளின் உலகைக் கொண்டாடுங்கள்’ என்பதாகும்.
- தேசிய ஊட்டச்சத்து வாரமானது 1975 ஆம் ஆண்டில் அமெரிக்க உணவுக் கழகத்தின் (ADA) உறுப்பினர்களால் நிறுவப்பட்டது.
- இந்தியா 1982 ஆம் ஆண்டு முதல் தேசிய ஊட்டச்சத்து வாரத்தைக் கொண்டாடத் தொடங்கியது.
- இந்திய அரசாங்கத்தின் உணவு மற்றும் ஊட்டச்சத்து வாரியமானது தேசிய ஊட்டச் சத்து வாரத்தின் வருடாந்திர வார அளவிலான இந்தக் கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்கிறது.
- இந்த வாரியமானது பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்குகிறது.

## சர்வதேச கழுகு விழிப்புணர்வு தினம் - செப்டம்பர் 03

- இந்தியாவில் மொத்தம் ஒன்பது வகையான கழுகுகள் காணப்படுகின்றன.

- ❖ இவற்றுள் ஆறு இனங்கள் உள்நாட்டு வகை (வெண்முதுகுக் கழுகு, இந்தியக் கழுகு, மெலிந்த அலகுடையக் கழுகு, செந்தலைக் கழுகு, எலும்புண்ணிக் கழுகு மற்றும் எகிப்தியக் கழுகு) மற்றும் மூன்று இனங்கள் புலம்பெயர்ந்தவை (சாம்பல் நிறக் கழுகு, கிரிஃபோன் கழுகு மற்றும் இமயமலை கழுகு) ஆகும்.
- ❖ இந்தியாவில் உள்ள ஒன்பது கழுகு இனங்களில் ஏழு இனங்கள் மகாராஷ்டிராவில் காணப் படுகின்றன.
- ❖ கால்நடைகளின் வலி நிவாரணத்திற்குப் பயன்படுத்தப்படும் டைக்ளோஃபெனாக் என்ற கால்நடை மருந்தானது, கழுகுகள் அழிக்கப் படுவதற்கு ஒரு முக்கியக் காரணம் ஆகும்.
- ❖ 2006 ஆம் ஆண்டு முதல் இந்த மருந்தானது இந்தியாவில் கால்நடை மருத்துவப் பயன்பாட்டிற்குத் தடை செய்யப்பட்டது.
- ❖ இந்தியாவில் கழுகுப் பாதுகாப்புக்கான செயல் திட்டம் 2020-2025 ஆனது சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தால் வெளியிடப்பட்டது.

## சர்வதேச அறக்கட்டளை தினம் - செப்டம்பர் 05

- ❖ இத்தினமானது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் (UNGA) 2012 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- ❖ இது அன்னை தெரசா அவர்களின் நினைவு நாள் ஆகும்.
- ❖ அன்னை தெரசா அவர்கள் 1979 ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார்.
- ❖ அவர் தனது 87வது வயதில் 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் 05 ஆம் தேதியன்று கொல்கத்தாவில் காலமானார்.
- ❖ 1950 ஆம் ஆண்டில் கொல்கத்தாவில் அறக்கட்டளை குழுமம் ஒன்றை அவர் நிறுவினார்.

## ஆசிரியர் தினம் – செப்டம்பர் 05

- ❖ இந்த ஆண்டு ஆசிரியர் தினத்திற்கான கருத்துரு 'நெருக்கடியில் முன்னணி, எதிர் காலத்தை மறுசீரமைப்பு செய்தல்' என்பதாகும்.
- ❖ நாட்டின் இரண்டாவது குடியரசுத் தலைவர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாள் ஆனது 1962 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப் படுகிறது.
- ❖ 1888 ஆம் ஆண்டு செப்டம்பர் 05 ஆம் தேதி பிறந்த இவர், இந்தியாவின் முதல் குடியரசு துணைத் தலைவராகவும் (இரண்டு முறை 1952/62) மற்றும் இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவராகவும் (1962/67) பணியாற்றினார்.
- ❖ 1954 ஆம் ஆண்டில் ராஜாஜி மற்றும் சர்.சி.வி.ராமன் ஆகியோருடன் இணைந்து இவருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது.

## நீல வானத்துக்கான தூயக் காற்றிற்கான சர்வதேச தினம் – செப்டம்பர் 07

- ❖ ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பினால் (UNEP) இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- ❖ இது முதன்முதலில் 2019 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 74வது அமர்வில் நிறுவப்பட்டது.

- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு (UNEP) மற்றும் குறுகிய காலப் பருவ நிலை மாசுபாட்டைக் குறைப்பதற்கான பருவநிலை மற்றும் தூயக் காற்று கூட்டணி (CCAC) ஆகியவை அன்றைய முன்னணி ஒருங்கிணைப்புப் பங்குதாரர் அமைப்புகள் ஆகும்.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு, 'நாம் பகிர்ந்து கொள்ளும் காற்று' என்பதாகும்.

## சர்வதேச எழுத்தறிவு தினம் – செப்டம்பர் 08

- இந்தத் தினமானது ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பினால் (UNESCO) 1966 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- 1965 ஆம் ஆண்டு இதே நாளில், ஈரானின் தெஹ்ரானில் நடைபெற்ற உலகக் கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் முதல் முறையாக சர்வதேச அளவில் கல்வித் திட்டம் பற்றி விவாதிக்கப்பட்டது.
- இந்த ஆண்டு 54வது சர்வதேச எழுத்தறிவு தினமாகும்.
- இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "எழுத்தறிவினைக் கற்கும் தளங்களை மாற்றுதல்" என்பதாகும்.

## உலக முடநீக்க மருத்துவ தினம் – செப்டம்பர் 08

- இந்தத் தேதியானது 1996 ஆம் ஆண்டில் உலக முடநீக்க மருத்துவ தினமாக தேர்ந்தெடுக்கப் பட்டது.
- முட நீக்க மருத்துவத்திற்கான உலகக் கூட்டமைப்பானது 1951 ஆம் ஆண்டில் இந்த நாளில் நிறுவப்பட்டது.
- 1952 ஆம் ஆண்டு பிசியோதெரபி இந்தியாவில் முதன்முதலில் தொடங்கப்பட்டது.
- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது இந்திய அரசாங்கத்துடன் இணைந்து மும்பையில் முதல் முடநீக்க மருத்துவ மையத்தைத் தொடங்கியது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, ‘முடக்க வாதத்தைத் தடுத்தல் மற்றும் சிகிச்சையளித்தல்’ என்பதாகும்.
- மூட்டுவலி என்பது மூட்டுகள், மூட்டைச் சுற்றியுள்ள திசுக்கள் மற்றும் பிற இணைப்பு திசுக்களைப் பாதிக்கப்பட்ட நிலையைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படும் பொதுவான சொல்லாகும்.

## உலக மின்சார வாகன (EV) தினம் – செப்டம்பர் 09

- உலக மின்சார வாகன தினமானது 2020 ஆம் ஆண்டில் முதல்முறையாக அனுசரிக்கப் பட்டது.
- இது Greet TV என்ற நிலையான ஊடக நிறுவனத்தின் ஒரு முன்னெடுப்பாகும்.
- மின்சார வாகனப் போக்குவரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- உலகின் மிகப்பெரிய மின்சார வாகனச் சந்தை சீனாவாகும்.

- தற்போது, இந்தியாவின் வாகனத் தொழில்துறையானது உலகளவில் ஐந்தாவது இடத்தில் உள்ளதோடு 2030 ஆம் ஆண்டில் அது மூன்றாவது இடத்திற்கு முன்னேற உள்ளது.
- இந்தியாவில் டாடா நிறுவனமானது மின்சார வாகன உற்பத்தியில் முன்னணி நிறுவனமாக உள்ளது.
- டெஸ்லா நிறுவனமானது, ஏற்கனவே அதன் துணை நிறுவனமான டெஸ்லா இந்தியா மோட்டார்ஸ் நிறுவனத்தினைப் பெங்களூரு நகரில் நிறுவியுள்ளது.

## மோதல் நிலைகளிலிருந்து கல்வியைப் பாதுகாப்பதற்கான சர்வதேச தினம் - செப்டம்பர் 09

- இது 2020 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு மனதான முடிவால் நிறுவப்பட்ட ஒரு சர்வதேச தினமாகும்.
- யுனெஸ்கோ மற்றும் UNICEF ஆகியவை, ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு அப்பாற்பட்டப் பங்குதார அமைப்புகளின் ஒத்துழைப்புடன் ஆண்டுதோறும் இந்தத் தினத்தை அனுசரிக்க உதவும்.
- மோதலால் பாதிக்கப்பட்ட நாடுகளில் வாழும் மில்லியன் கணக்கான குழந்தைகளின் அவல நிலையைப் பற்றிய விழிப்புணர்வினை இத்தினம் ஏற்படுத்துகிறது.

## இமயமலை தினம் – செப்டம்பர் 09

- இது இமயமலையின் சுற்றுச்சூழல் மற்றும் பிராந்தியத்தைப் பாதுகாகாகச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2015 ஆம் ஆண்டில், உத்தரக்காண்ட் மாநிலத்தின் அப்போதைய முதல்வரால் இது அதிகாரப் பூர்வமாக இமயமலை தினமாக அறிவிக்கப்பட்டது.
- தேசியத் தூய்மை கங்கைத் திட்ட அமைப்பானது இதை ஏற்பாடு செய்தது.
- இமயமலையில் வசிப்பவர்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் போதுதான் இமயமலை பாதுகாப்பாக இருக்கும் என்பது இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு ஆகும்.

## உலக தற்கொலைத் தடுப்பு தினம் - செப்டம்பர் 10



- இது சர்வதேச தற்கொலை தடுப்புச் சங்கத்தினால் (IASP) ஏற்பாடு செய்யப்பட்டு உலக சுகாதார நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டது.
- உலகளவில் தற்கொலை தடுப்பு பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்தத் தினத்தின் ஒட்டு மொத்த நோக்கமாகும்.
- 2022 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "நடவடிக்கை மூலம் நம்பிக்கையை உருவாக்குதல்" என்பதாகும்.
- 2021 முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான மூன்று ஆண்டுகளின் உலக தற்கொலைத் தடுப்பு தினத்திற்கான கருப்பொருளாக இது திகழ்ந்து வருகிறது.

## உலக முதலுதவி தினம் - செப்டம்பர் 10

- உலக முதலுதவி தினம் ஒவ்வோர் ஆண்டின் செப்டம்பர் மாதத்தின் இரண்டாவது சனிக் கிழமையன்று அனுசரிக்கப்படுகிறது.
- ஒரு முக்கியமான அடிப்படைத் திறனான முதலுதவியின் முக்கியத்துவத்தை மேம்படுத்துவதற்கும், அது எவ்வாறு விலை மதிப்பற்ற உயிர்களைக் காப்பாற்றுவது குறித்து உலக அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் இந்த நாள் உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறை சங்கங்களால் இந்தத் தினமானது முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'வாழ்நாள் முழுவதுமான முதலுதவி' என்பதாகும்.





## சர்வதேச சினைப்பை நீர்க்கட்டிகள் நோய் விழிப்புணர்வு மாதம்

- செப்டம்பர் மாதமானது சர்வதேச சினைப்பை நீர்க்கட்டிகள் நோய் (PCOS) குறித்த விழிப்புணர்வு மாதமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- சினைப்பை நீர்க்கட்டிகள் நோய் என்பது பெண்களுக்கு ஏற்படும் பொதுவான ஒரு ஹார்மோன் கோளாறு என்பதோடு இது பெண்களின் மலட்டுத் தன்மைக்கு ஒரு முக்கிய காரணமாகும்.

- இது பெண்களையும் சிறுமிகளையும் பாதிக்கும் ஒரு தீவிரமான மரபணு, ஹார்மோன், வளர்சிதை மாற்றம் மற்றும் இனப்பெருக்கக் கோளாறு ஆகும்.




## தேசிய வன தியாகிகள் தினம் - செப்டம்பர் 11




- காடுகளையும் வனவிலங்குகளையும் பாதுகாக்க தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்தவர்களுக்கு இத்தினம் அஞ்சலி செலுத்துகிறது.
- மோசமான கெஜர்லி படுகொலை ஆனது 1730 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் தேதியன்று நடைபெற்றது.
- இந்தத் தினமானது தேசிய வன தியாகிகள் தினமாக அங்கீகரிக்கப்பட்டது.
- காட்டில் உள்ள கெஜர்லி மரங்களை வெட்ட ராஜஸ்தானின் மகாராஜா அபய் சிங் உத்தரவிட்டார்.

- கெஜர்லி மரங்களைப் புனிதமானதாகக் கருதி பிஷ்னோய் சமூகத்தினர் இந்த உத்தரவிற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.
- அமிர்தா தேவி என்ற பெண் கெஜர்லி மரங்களை வெட்டுவதைத் தடுக்க, தனது எதிர்ப்பின் அடையாளமாகத் தன் தலையைப் பலியாகக் கொடுத்தார்.

## தெற்கு தெற்கு ஒத்துழைப்புக்கான சர்வதேச தினம் - செப்டம்பர் 12

- இது உலகளாவிய தெற்கு நாடுகளில் உள்ள மக்கள் மற்றும் நாடுகளிடையே ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தென் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியல் முன்னேற்றங்கள் குறித்து ஒரு விழிப்புணர்வைப் பரப்பச் செய்வதையும் இந்தத் தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தில் ஒரு சிறப்புப் பிரிவாக UNOSSC என்ற அமைப்பினை உருவாக்குவது குறித்த முன்மொழிவானது 1974 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் முன்னிலைப்படுத்தப்பட்டது.

## இந்தி மொழி தினம் - செப்டம்பர் 14

- இந்நாளில் இந்திய அரசியலமைப்புச் சபையானது இந்தி மொழியினை மத்திய அரசின் அலுவல் மொழியாக மாற்ற முடிவெடுத்தது.
- ஆங்கில மொழியானது 15 ஆண்டுகள் இணை மொழி அந்தஸ்தைக் கொண்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டது.
- இது முன்ஷி-அய்யங்கார் சூத்திரம் என்றுப் பிரபலமாக அழைக்கப்படும் ஒரு சமரசம் ஆகும்.
- இது வரைவுக் குழுவின் உறுப்பினர்களான K M முன்ஷி மற்றும் N கோபாலசுவாமி அய்யங்கார் ஆகியோரின் பெயரால் அழைக்கப்படுகிறது.
- இந்தி மொழியானது, மத்திய அரசின் இரண்டு அதிகாரப்பூர்வ மொழிகளில் ஒன்று ஆகும்.
- 8வது அட்டவணையில் உள்ள 22 மொழிகளில் இது இடம் பெற்றுள்ளது.
- 52.8 கோடி தனிநபர்கள் அல்லது 43.6% மக்கள் தங்கள் தாய்மொழியாக கருதும் வகையில் இந்தி மொழி மிகவும் பரவலாகப் பேசப்படுகிறது.
- அடுத்த இடத்தில், 9.7 கோடி (8%) மக்களுக்குத் தாய்மொழியாக உள்ள வகையில் அதிக பட்சமாகப் பேசப்படும் மொழி வங்காள மொழியாகும்.
- கிட்டத்தட்ட 13.9 கோடி மக்கள் (11%க்கும் அதிகமானோர்) இந்தி மொழியினைத் தங்களது இரண்டாவது மொழியாக அறிவித்துள்ளனர்.

## உலக நிணநீர்ச் சுரப்பிப் புற்றுநோய் விழிப்புணர்வு தினம் - செப்டம்பர் 15

- இந்தத் தினமானது புற்றுநோயின் பொதுவான வடிவமான அதிகளவில் உருவாகும் நிணநீர்ச் சுரப்பிப் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.

- இது நிணநீர்ச் சுரப்பிப் புற்றுநோய்க் கூட்டணியால் மேற்கொள்ளப்படும் உலகளாவிய முன்னெடுப்பாகும்.
- நிணநீர்ச் சுரப்பிப் புற்றுநோய் மற்றும் பல்வேறு வகையான நிணநீர்ச் சுரப்பிப் புற்று நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் மற்றும் அவர்களின் பராமரிப்பாளர்கள் எதிர்கொள்ளும் குறிப்பிட்ட உணர்ச்சி மற்றும் உளவியல் சார்ந்த சவால்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வேண்டி இந்தத் தினமானது அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.
- நிணநீர்ச் சுரப்பிப் புற்றுநோய் என்பது உடலின் கிருமிகளை எதிர்த்துப் போராடும் வலையமைப்பின் ஒரு பகுதியான நிணநீர் மண்டலத்தில் ஏற்படும் ஒருவகை புற்று நோயாகும்.

## தேசியப் பொறியாளர் தினம் - செப்டம்பர் 15

- இந்தத் தினமானது சிறந்தப் பொறியாளர் மோக்சகுண்டம் விஸ்வேஸ்வரய்யா அவர்களின் சாதனைகளை அங்கீகரித்துக் கௌரவிக்கிறது.
- இந்திய நாட்டுடன் சேர்த்து, விஸ்வேஸ்வரய்யா அவர்களின் மகத்தானப் படைப்புகளுக்காக இலங்கை மற்றும் தான்சானியா ஆகிய நாடுகளிலும் செப்டம்பர் 15 ஆம் தேதியன்று பொறியாளர் தினமாக கொண்டாடப்படுகிறது.
- புனேவுக்கு அருகிலுள்ள நீர்த் தேக்கத்தில் நீர் வழங்கல் மற்றும் சேமிப்பு நிலையை உயர்த்துவதற்கு காப்புரிமை பெற்று நீர்ப் பாசன அமைப்பை அவர் நிறுவினார்.
- குவாலியரின் டைக்ரா அணை மற்றும் மைசூருவின் கிருஷ்ணராஜ சாகர் (KRS) போன்ற அணைகளில் இந்தப் பாசன அமைப்பு பின்னர் நிறுவப்பட்டது.
- இந்தியத் தேசத்தினைக் கட்டியெழுப்ப அவர் ஆற்றிய சிறப்பானப் பங்களிப்பிற்காக 1955 ஆம் ஆண்டில் அவருக்கு 'பாரத ரத்னா' விருது வழங்கப்பட்டது.
- இவருக்கு பிரிட்டிஷ் நைட்ஹூட் பட்டமும் வழங்கப்பட்டுள்ளது.
- மேலும் 1912 முதல் 1918 வரை மைசூர் திவானாகவும் இவர் பணியாற்றினார்.



## சர்வதேச மக்களாட்சித் தினம் - செப்டம்பர் 15

- 2007 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இந்த தினமானது நிறுவப்பட்டது.
- இத்தினத்திற்கான கருத்துரு, "மக்களாட்சி, அமைதி மற்றும் நிலையான மேம்பாட்டு இலக்குகளை அடைவதற்கான ஊடகச் சுதந்திரத்தின் முக்கியத்துவம்" என்பதின் மீது கவனம் செலுத்துகிறது.
- சர்வதேச மக்களாட்சித் தினத்தைக் கொண்டாடும் கருத்தானது, மக்களாட்சி குறித்த உலகளாவியப் பிரகடனத்திலிருந்து உருவானது.
- 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் 16 ஆம் தேதியன்று நடைபெற்ற 161வது அமர்வில் பாராளுமன்றங்களுக்கு இடையிலான குழுவால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.


## ஓசோன் அடுக்கைப் பாதுகாப்பதற்கான சர்வதேச தினம் - செப்டம்பர் 16

- ஓசோன் படலத்தின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்தத் தினமானது கொண்டாடப்படுகிறது.
- ஓசோன் என்பது பூமியின் வளிமண்டலத்தில் உள்ள ஒரு பாதுகாப்பு அடுக்கு ஆகும்.
- இது சூரியனிலிருந்துப் பூமியை அடையும் புற ஊதா கதிர்வீச்சின் பெரும்பகுதியை உறிஞ்சுகிறது.
- இது சுமார் 10 கிமீ (6.2 மைல்) உயரத்தில் ஓசோனின் அதிகச் செறிவைக் கொண்டு அமைந்துள்ளது.
- உலக ஓசோன் தினம் முதன்முதலில் 1995 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டிற்கான உலக ஓசோன் தினத்தின் கருத்துரு, 'பூமியில் உயிர்களைப் பாதுகாப்பதற்கான உலகளாவிய ஒத்துழைப்பு' என்பதாகும்.

## உலக நோயாளிப் பாதுகாப்பு தினம் - செப்டம்பர் 17

- நோயாளிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நோயாளிகள் எதிர்கொள்ளும் அபாயங்கள், பிழைகள் மற்றும் தீங்குகளைத் தடுப்பதிலும் குறைப்பதிலும் இந்தத் தினம் கவனம் செலுத்துகிறது.
- இந்த ஆண்டிற்கான உலக நோயாளிப் பாதுகாப்புத் தினத்தின் கருத்துரு ‘மருத்துவப் பாதுகாப்பு’ என்பதாகும்.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் முழக்கம், ‘அறிந்து, சரி பார்த்து & கேள்’ என்ற நடவடிக்கைக்கான அழைப்புடன், ‘தீங்கு இல்லாத மருந்து’ என்பதாகும்.
- இது 2019 ஆம் ஆண்டில் 72வது உலகச் சுகாதாரச் சபையால் நிறுவப் பட்டது.

## மராத்வாடா விடுதலை நாள் - செப்டம்பர் 17




- இந்திய ஒன்றியத்துடன் ஹைதராபாத் இணைக்கப் படுவதற்கு வழி வகுத்த போலோ நடவடிக்கையின் ஆண்டு நினைவாக இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- இன்றைய மகாராஷ்டிராவின் மராத்வாடா பகுதியானது, நிஜாமின் ஆட்சியின் கீழ் இருந்த அன்றைய ஹைதராபாத் சமஸ்தானத்தின் ஒரு பகுதியாக இருந்தது.
- ஹைதராபாத் நிஜாம், மிர் ஒஸ்மான் அலி கான், ஒரு சுயராஜ்ய முடியாட்சியாகவோ அல்லது பிரிட்டிஷ் பேரரசின் பாதுகாவலின் கீழ் மட்டுமே தனது ஆட்சியைத் தொடர விரும்பினார்.
- மேலும் அவர் இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ சேர விரும்பவில்லை.
- மறுபுறம் பிரிட்டிஷ் அரசாங்கமானது ஹைதராபாத்திற்கு எந்த விதமான இறையாண்மையையும் வழங்க மறுத்தது.
- ஹைதராபாத் மக்கள் பெரும்பாலும் இந்துக்கள் என்பதால் அவர்கள் இந்தியாவுடன் மீண்டும் இணைய விரும்பினர்.
- நிஜாம் ஒரு முஸ்லீம் என்பதால் அவர் இந்திய ஒன்றியத்தில் சேர தயங்கினார்.
- அதிகாரத்தைத் தக்க வைக்க, ரசாகர்கள் என்று அழைக்கப்படும் ஒரு தனியார் போராளிக் குழுவை உருவாக்குவதற்கும் அவர் அனுமதி வழங்கினார்.
- இறுதியில் இந்தியா மற்றும் ஹைதராபாத் இடையேயான பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது.
- இந்தியா ஹைதராபாத் மீது ஆபரேஷன் போலோ என்ற ஒரு இராணுவ நடவடிக்கையினைத் தொடங்கியது.
- 1948 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் தேதியன்று நிஜாமின் இராணுவம் அடிபணிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.
- மேலும் ஹைதராபாத் மாநிலம் இந்திய ஒன்றியத்தின் ஒரு பகுதியாக மாறியது.

## சர்வதேசக் கடலோரத் தூய்மை நாள் - செப்டம்பர் 17

- இந்தத் தினமானது பாரம்பரியமாக செப்டம்பர் மாதம் மூன்றாவது சனிக்கிழமை அன்று கொண்டாடப்படுகிறது.
- கடலோரத் தூய்மை தினமானது கடல் பாதுகாப்பு அமைப்பால் நிறுவப்பட்டது.
- 1986 ஆம் ஆண்டில் முதலாவது சர்வதேசக் கடலோரத் தூய்மை தினம் அனுசரிக்கப் பட்டது.
- பெருங்கடல் பகுதிகள், கடற்கரையோரங்கள் மற்றும் கடற்கரைகளில் குப்பைகள் குவிந்து கிடப்பது மற்றும் அவற்றால் ஏற்படும் எதிர்மறையான தாக்கங்கள் குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வை அதிகரிக்கச் செய்வதை இந்தத் தினம் ஒரு நோக்கமாகக் கொண்டு உள்ளது.




## உலக மூங்கில் தினம் - செப்டம்பர் 18

- மிகவும் பயனுள்ள இந்த தாவரத்தைப் பாதுகாப்பது குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலக மூங்கில் அமைப்பால் இந்த தினம் குறித்த கருத்தானது உருவாக்கப்பட்டது.
- இந்தத் தினமானது மூங்கில் தொழில் துறைக்கு அதில் உள்ள சிக்கல்களை எடுத்து உரைத்து அத்துறையினை ஊக்குவிக்கிறது.
- 2009 ஆம் ஆண்டில் பாங்காக்கில் நடைபெற்ற 8வது உலக மூங்கில் மாநாட்டில் இந்தத் தினம் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

## சர்வதேச சம ஊதிய தினம் - செப்டம்பர் 18

- இந்தத் தினமானது முதன்முதலில் 1996 ஆம் ஆண்டில் தேசிய சம ஊதியக் குழுவால் அனுசரிக்கப் பட்டது.
- இது பாலினம் மற்றும் இனம் அடிப்படையிலான ஊதிய முறையினை அகற்றுவதில் பணியாற்றி வருகிற பெண்கள் மற்றும் குடிமக்கள் உரிமைகள் அமைப்புகளின் ஒரு கூட்டணியாகும்.
- முதலாவது சர்வதேச சம ஊதிய தினமானது 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் 18 ஆம் தேதி அன்று அனுசரிக்கப்பட்டது.

## உலக தண்ணீர் வளக் கண்காணிப்பு தினம் - செப்டம்பர் 18

- உலகெங்கிலும் நீர் வளக் கண்காணிப்பு மற்றும் நீர் ஆதாரங்களைப் பாதுகாப்பதில் பொது விழிப்புணர்வையும் ஈடுபாட்டையும் அதிகரிப்பதை இது நோக்கமாக கொண்டு உள்ளது.
- 2021 ஆம் ஆண்டிற்கான உலக தண்ணீர் தினத்தின் கருத்துரு, தண்ணீருக்கு மதிப்பு அளித்தல் என்பதாகும்.
- அமெரிக்காவின் தூய நீர் அறக்கட்டளை (ACWF) அமைப்பு மூலம் 2003 ஆம் ஆண்டில் ஒரு உலகளாவியக் கல்வி மேம்பாட்டுத் திட்டமாக இந்தத் தினமானது நிறுவப்பட்டது.
- குடிமக்கள் தங்கள் உள்ளூர்களில் உள்ள நீர்நிலைகளின் மீது ஒரு அடிப்படைக் கண்காணிப்பை மேற்கொள்ள இது ஊக்குவிக்கிறது.


## சர்வதேச உலக பாம்புக்கடி விழிப்புணர்வு தினம் - செப்டம்பர் 19

- இது உலகின் மிகப்பெரிய மறைக்கப்பட்ட சுகாதார நெருக்கடிகளில் ஒன்றினைக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஒவ்வோர் ஆண்டும் தோராயமாக 5.4 மில்லியன் மக்கள் பாம்புக் கடியினால் பாதிக்கப் படுவதோடு, அவர்களில் 2.7 மில்லியன் பேர்களுக்கு விஷம் உள்ளேறி அதனால் அவர்களுக்குப் பாதிப்பும் ஏற்படச் செய்கிறது.
- ஆண்டுதோறும், இதனால் 400,000 பேர் நிரந்தரமாக ஊனமாக்கப்படுகின்றனர் அல்லது பாதிக்கப்படுகின்றனர் என்பதோடு இது 83,000 முதல் 138,000 வரையிலான இறப்பு எண்ணிக்கைக்கும் இட்டுச் செல்கிறது.
- இந்த விழிப்புணர்வு தினமானது உலகப் பாம்புக் கடி முன்னெடுப்பு அமைப்பு, சர்வதேச சுகாதார நடவடிக்கை அமைப்பு மற்றும் லில்லியன் லிங்கன் அறக்கட்டளை மூலமாக 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- உலகளவில் பதிவாகும் பாம்புக் கடியால் ஏற்படும் இறப்புகளில் ஏறத்தாழப் பாதியளவு இந்தியாவில் பதிவாகியுள்ளதோடு, ஒவ்வோர் ஆண்டும் 2.97 மில்லியன் பாம்புக் கடி வழக்குகளும் இங்குப் பதிவாகின்றன.
- இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் பாதிக்கும் மேலான மக்கள் தொகை எண்ணிக்கையினைக் கொண்ட பீகார், ஜார்க்கண்ட், மத்தியப் பிரதேசம், ஒடிசா, உத்தரப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் (தெலுங்கானா உட்பட), ராஜஸ்தான் மற்றும் குஜராத் போன்ற எட்டு மாநிலங்களில் 70 சதவீத இறப்புகள் பதிவாகியுள்ளன.

## இரயில்வே பாதுகாப்புப் படையின் 38வது எழுச்சி தினம்

- இரயில்வே பாதுகாப்புப் படை (RPF) ஆனது 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் தேதி அன்று தனது 38வது எழுச்சி தினத்தைக் கொண்டாடியது.
- இரயில்வே பாதுகாப்புப் படையின் தேசிய அளவிலான அணிவகுப்பு புது டெல்லிக்கு வெளியே வேறு ஒரு பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டது இதுவே முதல் முறையாகும்.
- இரயில்வே சொத்துக்களுக்குப் பாதுகாப்பை வழங்குவதற்காக 1957 ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் இரயில்வே பாதுகாப்புப் படையானது உருவாக்கப் பட்டது.

- பாராளுமன்றமானது 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் தேதியன்று, இரயில்வே பாதுகாப்புப் படைச் சட்டத்தைத் திருத்தியதன் மூலம் 'மத்திய அரசின் ஆயுதப்படை' என்ற அந்தஸ்தானது இப்படைக்கு வழங்கப்பட்டது.




## சர்வதேச செந்நிறப் பாண்டா தினம் - செப்டம்பர் 17

- செப்டம்பர் மாதத்தின் ஒவ்வொரு மூன்றாவது சனிக்கிழமையும் சர்வதேச செந்நிறப் பாண்டா தினமாகக் கொண்டாடப்படுகிறது.
- செந்நிறப் பாண்டாக்கள், கிழக்கு இமயமலைப் பகுதி மற்றும் தென்மேற்கு சீனாவைப் பூர்வீகமாகக் கொண்டவையாகும்.




- இவை இந்தியா, நேபாளம், பூடான் மற்றும் சீனா போன்ற நாடுகளில் சட்டப் பூர்வமாக பாதுகாக்கப் படும் ஒரு அழிந்து வரும் உயிரினமாகும்.
- இந்த அழகான விலங்குகளைப் பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த செய்வதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தினமானது முதன்முதலில் 2010 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.

- மேலும், இந்த விலங்குகளின் பாதுகாப்பிற்காகப் பிரத்தியேகமாக நிறுவப்பட்ட ஒரு அமைப்பான செந்நிறப் பாண்டா வலையமைப்பினால் இத்தினம் அனுசரிக்கப்படத் தொடங்கப் பட்டது.

## உலக அல்சைமர் தினம் - செப்டம்பர் 21

- இந்தத் தினம் நரம்பியல் கோளாறு நோய் பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அல்சைமர் நோய் மறதி நோய்க்கான மிகப் பொதுவான ஒரு காரணமாகும்.
- மேலும், ஒரு நபரின் நினைவாற்றல், மன திறன் மற்றும் எளிய பணிகளைச் செய்யும் திறனை இது பாதிக்கிறது.
- இந்தத் தினமானது முதன் முதலில் 1994 ஆம் ஆண்டு செப்டம்பர் 21 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்டது.

## உலக அமைதி தினம் - செப்டம்பர் 21

- சர்வதேச அமைதி தினமானது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் 1981 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- முதலாவது சர்வதேச அமைதி தினமானது1982 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது
- சந்தேகம் மற்றும் வெறுப்பு போன்ற உணர்வுகளை வெல்கின்ற இரக்கமும் பச்சா தாபமும் நிறைந்த ஓர் உலகத்தை உருவாக்கச் செய்வதனை நோக்கமாகக் கொண்டு இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டின் இத்தினமானது "இனவெறியை முடிவுக்குக் கொண்டு வருதல் மற்றும் அமைதியைக் கட்டியெழுப்புதல்" என்ற கருத்துருவுடன் அனுசரிக்கப்பட்டது.

## உலக மகிழுந்துப் பயன்பாடு இல்லா தினம் – செப்டம்பர் 22

- மகிழுந்து இல்லாமல் வாழ்வதால் ஏற்படும் பல நன்மைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- இந்த நன்மைகளுள் மாசுபாட்டைக் குறைத்தல், சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேம்படுத்துதல் மற்றும் சமூகத் தொடர்புகளை மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும்.
- 2000 ஆம் ஆண்டில் கார்ப்ஸ்டர்களால் இந்தத் தினமானது தொடங்கப்பட்டது.
- ஐரோப்பியப் போக்குவரத்து வாரமானது, செப்டம்பர் 16 முதல் 22 வரை ஐரோப்பிய ஒன்றியத்தினால் கொண்டாடப்படுகிறது.

## உலக காண்டாமிருக தினம் – செப்டம்பர் 22

- ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா ஆகிய கண்டங்களில் வாழும் 5 காண்டாமிருக இனங்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த தினமானது கொண்டாடப்படுகிறது.

- முதலாவது உலக காண்டாமிருக தினமானது 2010 ஆம் ஆண்டில் உலக வனவிலங்கு நிதியத்தின் தென்னாப்பிரிக்கப் பிரிவினால் அறிவிக்கப்பட்டது.
- IUCN பட்டியலில் ஐந்து காண்டாமிருக இனங்களின் நிலை
    - ஜாவா காண்டாமிருகங்கள்: மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளன
    - சுமத்ரா காண்டாமிருகங்கள்: மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளன
    - கருப்பு காண்டாமிருகங்கள்: மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளன
    - வெள்ளை காண்டாமிருகங்கள்: அச்சுறுத்தலுக்கு உள்ளாகக் கூடிய நிலையில் உள்ளன
    - பெரிய ஒற்றை கொம்பு காண்டாமிருகம்: பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளன
- உலகில் உள்ள பெரிய ஒற்றைக் கொம்பு காண்டாமிருகத்தின் மொத்த எண்ணிக்கையில் 80 சதவீத காண்டாமிருகங்கள் இந்தியாவில் காணப்படுகின்றன.

## சர்வதேச சைகை மொழிகள் தினம் – செப்டம்பர் 23

- காது கேளாதவர்களின் மனித உரிமைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட சைகை மொழிகள் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- சைகை மொழிகள் என்பது தினசரி அடிப்படையில் பேசப்படும் மொழியிலிருந்து அமைப்பு ரீதியாக வேறுபட்ட நிலையில் அவை திறம் மிக்க இயற்கை மொழிகளாகும்.
- முதலாவது சர்வதேச சைகை மொழிகள் தினமானது 2018 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு என்பது, 'சைகை மொழி நம்மை ஒன்றிணைக்கும்' என்பதாகும்.

## தேசிய திரைத்துறை தினம் – செப்டம்பர் 23

- பலதிரை கொண்ட இந்தியத் திரையரங்கக் கூட்டமைப்பினால் இந்தத் தினமானது அறிவிக்கப் பட்டது.
- திரைப்படத்திற்குச்' செல்பவர்களுக்கு 'நன்றி கூறுவது' போன்றும், கோவிட்-19 பெருந் தொற்றுக் காலத்திற்குப் பிறகு மீண்டும் சினிமாத் துறையில் நுழைய இயலாமல் போனவர்களுக்குமான அழைப்பாகவும் இத்தினமானது கொண்டாடப்பட்டது.
- பலதிரை கொண்ட இந்தியத் திரையரங்கக் கூட்டமைப்பு என்பது இந்தியா முழுவதும் உள்ள திரைத்துறை இயக்குநர்களின் குழுவாகும்.
- இது 2022 ஆம் ஆண்டில் இந்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை கூட்டமைப்பின் கீழ் நிறுவப் பட்டது.


## சர்வதேச காதுகேளாதோர் வாரம் 2022 – செப்டம்பர் 19 முதல் 25 வரை

- ஒவ்வோர் ஆண்டும், செப்டம்பர் மாதத்தின் கடைசி ஞாயிற்றுக் கிழமையில் முடிவடையும் முழு வாரமானது சர்வதேச காது கேளாதோர் வாரமாக அனுசரிக்கப் படுகிறது.
- 2022 ஆம் ஆண்டிற்கான சர்வதேச காதுகேளாதோர் வாரத்தின் கருத்துரு, "அனைவருக்குமான உள்ளார்ந்தச் சமூகங்களை உருவாக்குதல்" என்பதாகும்.

- இது உலக காது கேளாதோர் கூட்டமைப்பின் (WFD) முன்னெடுப்பாகும்.
- இது முதன்முதலில் 1958 ஆம் ஆண்டில் இத்தாலியின் ரோம் நகரில் தொடங்கப்பட்டது.
- உலக காது கேளாதோர் கூட்டமைப்பின் முதலாவது உலக மாநாடு நடைபெற்ற மாதத்தை நினைவுபடுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## அந்த்யோதயா திவாஸ் - செப்டம்பர் 25

- இது இந்தியத் தலைவர் பண்டித தீன்தயாள் உபாத்யாயா அவர்களின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- அந்த்யோதயா என்றால் ஏழை எளியவர்களின் நிலையை உயர்த்துவது என்று பொருள் ஆகும்.
- இந்தத் தினமானது சமூகத்தின் நலிந்தப் பிரிவினரைச் சென்றடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## உலக நுரையீரல் தினம் - செப்டம்பர் 25

- இந்தத் தினமானது நுரையீரல் ஆரோக்கியம் குறித்து தகவல் பரப்புதல் மற்றும் அது குறித்த விழிப்புணர்வைப் பரப்புகிறது.
- நுரையீரலில் எழும் எந்தவொருப் பிரச்சனையும், மற்றும் நுரையீரல் சரியாக வேலை செய்யாமல் தடுக்கின்ற எந்தவொருப் பிரச்சனையும் நுரையீரல் நோய் எனப்படும்.
- நுரையீரல் நோய் காற்றுப்பாதை நோய்கள், நுரையீரல் திசு நோய்கள் மற்றும் நுரையீரல் சுழற்சி நோய்கள் என்று மூன்று முக்கிய வகைகளாகப் பிரிக்கப் பட்டு உள்ளது.

## உலக மருந்தாளுநர்கள் தினம் - செப்டம்பர் 25

- கருணை மற்றும் புரிதலுடன் தங்கள் சேவைகளை வழங்கும் அனைத்து மருத்துவ நிபுணர்களையும் கௌரவிப்பதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சர்வதேச மருந்துக் கூட்டமைப்புச் சபையானது, 2009 ஆம் ஆண்டில் துருக்கியின் இஸ்தான்புல் நகரில் நடைபெற்ற உலக மருந்தியல் மற்றும் மருந்து அறிவியல் மாநாட்டில் உலக மருந்தாளுநர் தினத்தை முதன்முதலில் அறிவித்தது.

- 1912 ஆம் ஆண்டில் இந்த நாளில் தான் சர்வதேச மருந்துக் கூட்டமைப்புச் சபையானது நிறுவப் பட்டது.

## சர்வதேச மகள்கள் தினம் - செப்டம்பர் 25

- இந்தத் தினமானது ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மாதத்தின் நான்காவது ஞாயிற்றுக் கிழமையன்று அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டில் இந்தத் தினமானது செப்டம்பர் 25 ஆம் தேதியன்று ஞாயிற்றுக் கிழமை அன்று கொண்டாடப்பட்டது.
- நம் வாழ்வில் அன்பையும் மகிழ்ச்சியையும் கொண்டு வரும் நம் மகள்களைப் போற்றுவதற்காக இந்தத் தினமானது கொண்டாடப்படுகிறது.

## உலகக் கருத்தடை தினம் - செப்டம்பர் 26

- இது குடும்பக் கட்டுப்பாடு மற்றும் கருத்தடைத் தகவல் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது பிறப்புக் கட்டுப்பாட்டுக்கான வாய்ப்புகள் குறித்தத் தகவல்களை அளிப்பதோடு, இனப் பெருக்க ஆரோக்கியத்தின் மதிப்பை வலியுறுத்தும் வருடாந்திர உலகளாவியப் பிரச்சாரமாகும்.
- இந்தத் தினம் 2007 ஆம் ஆண்டில் செப்டம்பர் 26 ஆம் தேதியன்று முதன்முறையாக அனுசரிக்கப் பட்டது.

## அணு ஆயுதங்களை முற்றிலும் ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - செப்டம்பர் 26

- அணு ஆயுதங்களால் மனித குலத்திற்கு ஏற்படும் அச்சுறுத்தல் மற்றும் அவற்றை முற்றிலுமாக அகற்ற வேண்டியதன் அவசியத்தைப் பற்றிய பொது விழிப்புணர்வை மேம்படுத்துவதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 1959 ஆம் ஆண்டில் பொது மற்றும் முழுமையான ஆயுதக் குறைப்பு குறிக்கோளினை அங்கீகரித்தது.
- ஆயுதக் குறைப்புக்காக அர்ப்பணிக்கப்பட்ட பொதுச் சபையின் முதல் சிறப்பு அமர்வு என்பது 1978 ஆம் ஆண்டில் நடைபெற்றது.
- 2017 ஆம் ஆண்டு ஜூலை 07 ஆம் தேதியன்று அணு ஆயுதங்களைத் தடை செய்வதற்கான ஒப்பந்தமானது ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- 20 ஆண்டுகளில், இது வரை பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்ட அணு ஆயுதக் குறைப்புக்கான முதல் பன்னாட்டுச் சட்டப்பூர்வக் செயற்கருவி என்பதால் இந்த ஒப்பந்தம் மிகவும் முக்கியமானதாகும்.

## உலகச் சுற்றுலா தினம் - செப்டம்பர் 27

- உலகின் பல்வேறு பகுதிகளில் சுற்றுலாவை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் வகையில் இந்தத் தினமானது ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடப் படுகிறது.

- இது ஐக்கிய நாடுகளின் உலகச் சுற்றுலா அமைப்பினால் (UNWTO) தொடங்கப் பட்டது.
- 2022 ஆம் ஆண்டு உலகச் சுற்றுலா தினத்தின் கருத்துரு, 'சுற்றுலாத் துறையினை மறு பரிசீலனை செய்தல்' என்பதாகும்.
- உலகச் சுற்றுலா அமைப்பானது (UNWTO) 1979 ஆம் ஆண்டில் உலகச் சுற்றுலா தினத்தைத் தொடங்கியது.
- இதற்கானக் கொண்டாட்டங்கள் அதிகாரப் பூர்வமாக 1980 ஆம் ஆண்டில் தொடங்கின.
- இந்தத் தேதியானது ஐக்கிய நாடுகள் சபையின் உலகச் சுற்றுலா அமைப்பின் சட்டங்களை ஏற்றுக் கொண்ட ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.

## உலக நதிகள் தினம் - செப்டம்பர் 25

- நீர்நிலைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், அவற்றின் பாதுகாப்பை மேம்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.
- இத்தினமானது ஒவ்வோர் ஆண்டின் செப்டம்பர் மாதத்தின் நான்காவது ஞாயிற்றுக் கிழமையன்று அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டு செப்டம்பர் 25 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு 'பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு நதிகளின் முக்கியத்துவம்' என்பதாகும்.

## உலக சுற்றுச்சூழல் சுகாதார தினம் - செப்டம்பர் 26

- இது நமது சுற்றுச்சூழலின் நலம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்தினமானது சர்வதேச சுற்றுச்சூழல் நலக் கூட்டமைப்பினால் (IFEH) 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் 26ஆம் தேதியன்று இந்த தினமானது நிறுவப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "நிலையான மேம்பாட்டு இலக்குகளை செயல்படுத்துவதற்கான சுற்றுச்சூழல் நல அமைப்புகளை வலுப்படுத்துதல்" என்பது ஆகும்.

## சர்வதேச பொதுத் தகவல் அணுகல் தினம் - செப்டம்பர் 28

- யுனெஸ்கோ அமைப்பானது 2015 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் தேதியன்று, செப்டம்பர் 28 ஆம் தேதியினை சர்வதேச பொதுத் தகவல் அணுகல் தினமாக அறிவித்துள்ளது.
- பொதுத் தகவல் அணுகல் என்பது வளமான மற்றும் உள்ளார்ந்த அறிவுசார் சமூகங்களுக்காகத் தகவல்களைத் தேட, பெற மற்றும் வழங்குவதற்கு அனைவருக்கும் உரிமை உள்ளது என்று பொருளாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "செயற்கை நுண்ணறிவு, மின் ஆளுமை மற்றும் தகவல் அணுகல்" என்பதாகும்.

## உலக வெறிநாய்க்கடி நோய் தினம் - செப்டம்பர் 28

- இது வெறிநாய்க்கடி நோய்க்கான உலகின் முதலாவது திறன்மிக்க தடுப்பூசியைக் கண்டுபிடித்த லூயிஸ் பாஸ்டர் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக அனுசரிக்கப் படுகிறது.
- வெறிநாய்க்கடி நோய்க்கு எதிரான போராட்டத்தை மேம்படுத்தவும், அதைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், இந்த கொடிய நோய்க்கு எதிராக உலகம் மேற் கொண்ட சாதனைகளைக் கொண்டாடவும் இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'வெறிநாய்க்கடி நோய்: ஒரு சுகாதாரம், சுழிய அளவு மரணம்' என்பதாகும்.
- முதலாவது உலக வெறிநாய்க்கடி நோய் தினப் பிரச்சாரமானது 2007 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.
- வெறிநாய்க்கடி நோய் என்பது ஒரு ஆபத்தான ஆனால் தடுக்கக்கூடிய ஒரு வைரஸ் நோயாகும்.
- இது பாதிக்கப்பட்ட விலங்குகளின் உமிழ்நீரில் இருந்து மக்களுக்குப் பரவுகிறது.




## உலக இதய தினம் - செப்டம்பர் 29

- இது இருதய நோய்கள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதையும், உலகளவில் அவை ஏற்படுத்தியத் தாக்கத்தை கட்டுப்படுத்துவது பற்றியும், அவற்றை எவ்வாறு கட்டுப் படுத்துவது என்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டின் உலக இதய தினத்தின் கருத்துரு, 'Use heart for every heart' என்பது ஆகும்.
- இந்தத் தினமானது 2000 ஆம் ஆண்டு செப்டம்பர் 24 ஆம் தேதியன்று முதன்முதலில் கொண்டாடப் பட்டது.

## சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் - செப்டம்பர் 30

- மொழிபெயர்ப்புத் தொழில் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், மொழிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இத்தினத்தின் நோக்கமாகும்.

- இந்தத் தினமானது மொழித் துறை வல்லுனர்களின் பணிக்குக் கௌரமளிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மொழிபெயர்ப்பாளர்களின் புரவலராகக் கருதப்படும் வேதாகமத்தின் மொழி பெயர்ப்பாளர் புனித ஜெரோம் அவர்களின் நினைவாக ஐக்கிய நாடுகள் சபை இந்தத் தினத்தினைக் கொண்டாடுகிறது.
- கி.பி. 420 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதியன்று பெத்லகேம் அருகே ஜெரோம் நகரில் அவர் உயிரிழந்தார்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'தடைகள் இல்லாத உலகம்' என்பதாகும்.




# இதரச் செய்திகள்

## நீர்வாழ்ப் பரிமாற்றச் செயல்திட்டம் (2022-2030)

- உணவு மற்றும் விவசாய அமைப்பானது, சமீபத்தில் ஒரு நீர்வாழ்ப் பரிமாற்றச் செயல் திட்டத்தினை (2022-2030) வெளியிட்டது.
- வேலைவாய்ப்பு, உள்ளார்ந்த வளர்ச்சி, நிலையான மேம்பாட்டு இலக்குகள் மற்றும் சுற்றுச்சூழல் மீட்பு ஆகியவற்றின் இயக்கியாக ஒரு நீர்வாழ் உணவு முறைக்கு இது முக்கியத்துவம் அளிக்கிறது.
- உணவுப் பாதுகாப்பிற்கு நீர்வாழ் (நன்னீர் மற்றும் உப்புநீர்) உணவு முறைகளின் பங்களிப்பை அதிகரிக்கப் பல்வேறு நாடுகள், சமூகங்கள் மற்றும் முகமைகளின் முயற்சிகளை ஒருங்கிணைப்பு செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மீன்பிடி தொடர்பான குழுவின் நிலையான மீன்பிடி மற்றும் மீன்வளர்ப்புக்கான 2021 ஆம் ஆண்டு பிரகடனத்தை இது மீண்டும் வலியுறுத்துகிறது.




## பாலினம் குறித்த அறிக்கை 2022

- "நிலையான மேம்பாட்டு இலக்குகளின் முன்னேற்றம் (SDG): பாலினம் குறித்த அறிக்கை 2022" என்ற தலைப்பிலான அறிக்கையானது சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் (UN) பெண்கள் அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் பொருளாதாரம் மற்றும் சமூக விவகாரங்கள் துறை (UN DESA) ஆகியவற்றால் தயாரிக்கப் பட்டது.
- 2022 ஆம் ஆண்டின் இறுதியில், 368 மில்லியன் ஆண்கள் மற்றும் சிறுவர்களுடன் ஒப்பிடுகையில் சுமார் 383 மில்லியன் பெண்கள் மற்றும் சிறுமிகள் தீவிர வறுமையில் வாழ்வார்கள் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.
- தற்போதைய முன்னேற்ற விகிதத்தில் முழு பாலினச் சமத்துவத்தை அடைய 300 ஆண்டுகள் ஆகும்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் குழந்தைத் திருமணத்தை ஒழிக்க, கடந்த தசாப்தத்தின் முன்னேற்றத்தை விட 17 மடங்கு வேகமாக முன்னேற வேண்டும்.
- 2021 ஆம் ஆண்டில், போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் ஆண்கள் தலைமையிலானக் குடும்பங்களில் உள்ள 20% அளவை ஒப்பிடுகையில், சுமார் 38% பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மிதமான அல்லது கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர் கொண்டுள்ளன.
- சில நாடுகளில் 1.2 பில்லியனுக்கும் அதிகமான பெண்கள் மற்றும் இனப்பெருக்க வயதுடையப் பெண்கள் (15-49) பாதுகாப்பான கருக்கலைப்புக்கான அணுகலில் சில கட்டுப்பாடுகளுடன் வாழ்கின்றனர்.




## பார்ச்சூன் இந்தியா நிறுவனங்களின் பணக்காரர்கள் பட்டியல் 2022

**INDIA'S TEN RICHEST IN 2022**

| Rank | Name | Value (₹trn) | $bn |
|---|---|---|---|
| 1 | Gautam Adani | 10.29 | 129.16 |
| 2 | Mukesh Ambani | 7.55 | 94.57 |
| 3 | Shapoor Mistry & Cyrus Mistry family | 2.57 | 32.35 |
| 4 | Radhakishan Damani | 2.19 | 27.53 |
| 5 | Azim Premji | 1.74 | 21.94 |
| 6 | Cyrus Soli Poonawalla | 1.62 | 20.42 |
| 7 | Shiv Nadar | 1.57 | 19.73 |
| 8 | Kumar Mangalam Birla | 1.53 | 19.25 |
| 9 | Adi Godrej & family | 1.40 | 17.60 |
| 10 | Shekhar Bajaj, Niraj Bajaj, Rajiv Bajaj & Sanjiv Bajaj | 1.21 | 15.21 |

Note: The wealth estimate is based on stock prices as on August 16, 2022; the rupee-dollar exchange rate considered is 79.74, as of August 12

- இந்தியாவில் உள்ள 142 பில்லியனர்களின் சொத்து மதிப்பு 832 பில்லியன் அமெரிக்க டாலர்கள் (ரூ 66.36 டிரில்லியன்) ஆகும்.

- ஆசியாவின் மிகப் பெரிய பணக்காரரான கௌதம் அதானி, அமேசான் நிறுவனர் ஜெஃப் பெசோஸைப் பின்னுக்குத் தள்ளி உலகின் 3வது பணக்காரர் ஆனார்.
- இவர் 129.16 பில்லியன் அமெரிக்க டாலர்கள் (ரூ. 10.29 டிரில்லியன்) சொத்து மதிப்புடன் இந்தியாவின் மிகப் பெரிய பணக்காரர் ஆனார்.

## உலகப் பாரம்பரியப் பட்டியலுக்கான பரிந்துரை




- 2022-2023 ஆம் ஆண்டிற்கான உலகப் பாரம்பரியத் தளங்களாகப் பரிசீலிப்பதற்காக இந்தியாவின் பரிந்துரையாக கர்நாடகாவில் உள்ள பேலூர், ஹலபேடு மற்றும் சோமநாதபுரத்தின் ஹொய்சாலா கோவில்கள் ஆகியவை இறுதி செய்யப்பட்டுள்ளன.
- இந்த மூன்று ஹொய்சாலா கோயில்களும் இந்தியத் தொல்லியல் துறையின் பாதுகாக்கப் பட்ட நினைவுச் சின்னங்களாகும்.
- ஹொய்சாலா கோவில்கள் இந்தத் தகுதிநிலையினை அடைந்தால், இந்த நினைவுச் சின்னங்கள் மாநிலத்தின் உலகப் பாரம்பரியத் தளங்களின் பட்டியலில் நான்காவது இடத்தில் இருக்கும்.
- இப்பட்டியலில் இடம் பெற்ற மற்ற மூன்று தளங்கள்
  - விஜயநகரத்தின் ஹம்பி நினைவுச் சின்னங்கள்
  - சாளுக்கியர் காலத்தினைச் சேர்ந்த பட்டாடக்கல் கோயில் வளாகம் மற்றும்
  - மேற்குத் தொடர்ச்சி மலைகள்
- உலகப் பாரம்பரியத் தளம் என்பது சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த கட்டமைப்பு மற்றும் சிறப்புப் பாதுகாப்பு தேவைப்படுகின்ற, இயற்கையான அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு பகுதி அல்லது இடமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட ஏவுகல எந்திரத்திற்கான காப்புரிமை

- அக்னிகுல் காஸ்மோஸ் நிறுவனமானது, முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட அதன் ஏவுகல எந்திரத்தின் வடிவமைப்பு மற்றும் உற்பத்திக்கான முதல் காப்புரிமையைப் பெற்றுள்ளது.

- அதன் அக்னிலெட் ஏவுகல எந்திரத்திற்காக வேண்டி அந்த நிறுவனத்திற்கு காப்புரிமை அளிக்கப் பட்டுள்ளது.
- இது இந்த ஆண்டின் இறுதியில் ஏவப்பட உள்ள அந்நிறுவனத்தின் அக்னிபான் ஏவுகல எந்திரத்தினை இயக்கும்.
- அக்னிகுல் காஸ்மோஸ் இந்தியாவின் தனியார் விண்வெளி சார்ந்த புத்தொழில் நிறுவனங்களில் ஒன்றாகும்
- அக்னிலெட் ஒரு ஒற்றைப் பொருள் இயந்திரம் ஆகும்.
- இது இந்தியாவில் முழுமையாக வடிவமைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்ட உலகின் முதல் ஒற்றைப் பொருளாலான முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட ஏவுகல எந்திரமாகும்.
- இது 2021 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வெற்றிகரமாகச் சோதனை செய்யப்பட்டது.




## IBM குவாண்டம் வலையமைப்பு

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது (IIT - Madras) IBM குவாண்டம் வலையமைப்பில் இணைந்த முதல் இந்திய நிறுவனம் ஆகும்.
- இது இந்தியாவில் குவாண்டம் கணினி முறை திறன் மேம்பாடு மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- IBM குவாண்டம் வலையமைப்பின் ஒரு உறுப்பினராக இருப்பதால், சென்னையின் இந்தியத் தொழில்நுட்ப கல்வி நிறுவனம் IBM நிறுவனத்தின் மிகவும் மேம்பட்ட குவாண்டம் கணினி அமைப்புகளுக்கு மேகக் கணிமை அடிப்படையிலான ஒரு அணுகலைப் பெறும்.
- IBM குவாண்டம் வலையமைப்பு நமது ஆசிரியர்களுக்கு அதிநவீன குவாண்டம் வன் பொருள் மற்றும் மென்பொருள்களை நேரடியாக அணுகுவதற்கான ஒரு வாய்ப்பினை வழங்கும்.

## முதுநிலை மேலாண்மைக் கல்வித் தரவரிசை 2022

- பைனான்சியல் டைம்ஸ் இதழானது அதன் 2022 ஆம் ஆண்டு பைனான்சியல் டைம்ஸ் முதுநிலை மேலாண்மைக் கல்வித் தரவரிசையினை (MiM) வெளியிட்டுள்ளது.
- இது உலகின் சிறந்த வணிகக் கல்வி நிறுவனங்களை 16 வெவ்வேறு அளவுருக்களின் அடிப்படையில் தரவரிசைப்படுத்துகிறது.

- முதுகலை கல்விப் படிப்பிற்கான உலகின் 100 சிறந்த வணிகக் கல்வி நிறுவனங்களை இந்தப் பட்டியல் குறிப்பிடுகிறது.
- சுவிட்சர்லாந்தின் செயின்ட் கேலன் பல்கலைக்கழகம் தொடர்ந்து 12வது ஆண்டாக இந்தப் பட்டியலில் முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- நெதர்லாந்தின் எராஸ்மஸ் பல்கலைக்கழகம், HEC பாரீஸ் மற்றும் ரோட்டர்டாம் மேலாண்மைக் கல்வி நிறுவனம் ஆகியவை முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பிடித்தன.
- 25 நிறுவனங்கள் இதில் இடம் பெற்றதன் மூலம் இந்தப் பட்டியலில் பிரான்ஸ் அதிக பிரதிநிதித்துவம் பெற்ற நாடுகளில் ஒன்றாக உள்ளது.
- இந்தப் பட்டியலில் இந்தியாவினைச் சேர்ந்த 7 நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன.
- பெங்களூருவில் உள்ள இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் இந்திய நிறுவனங்களில் 31வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இந்த நிறுவனம் 2021 ஆம் ஆண்டில் 47வது இடத்தில் இருந்து முன்னேறியுள்ளது.
- இந்தப் பட்டியலில் உள்ள பிற இந்தியக் கல்வி நிறுவனங்களில் SP ஜெயின் மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (SPJIMR) 44வது இடத்திலும், லக்னோ இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் (IIM-L) 64வது இடத்திலும், உதய்ப்பூர் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் (IIM-U) 81வது இடத்திலும், இந்தூர் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் (IIM-I) 89வது இடத்திலும், மும்பை தேசிய மேலாண்மைக் கல்வி நிறுவனம் 96வது இடத்திலும் மற்றும் புது தில்லி சர்வதேச மேலாண்மைக் கல்வி நிறுவனம் 97வது இடத்திலும் உள்ளன.




## உலகளாவிய இணையச் சங்கேதப் பண ஏற்புக் குறியீடு 2022

- 2022 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய இணையச் சங்கேதப் பண ஏற்புக் குறியீட்டினை செயின் அனாலிசிஸ் என்ற அமைப்பு வெளியிட்டது.
- இணையச் சங்கேதப் பண ஏற்பில் வியட்நாம் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக முதலிடத்தில் உள்ளது.
- இதில் கடந்த ஆண்டை விட இரண்டு இடங்கள் கீழிறங்கி இந்தியா 4வது இடத்தில் உள்ளது.
- "தனது 20 முன்னணி நாடுகளில், 10 நாடுகள் குறைந்த நடுத்தர வருமானம் கொண்ட நாடுகள்" என இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
- இந்த ஆண்டு ஜூலை 01 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்த 30% அளவிலான இணையச் சங்கேதப் பண வரியைத் தவிர, இணையச் சங்கேதப் பணம் சார்ந்தத் தொழிலுக்கான சரியான ஒழுங்குமுறைக் கட்டமைப்பை இந்திய அரசாங்கம் இன்னும் அமைக்கவில்லை.

| Country | Overall index ranking | Overall index score | Centralized service value received ranking | Retail centralized service value received ranking | P2P exchange trade volume ranking | DeFi value received ranking |
|---|---|---|---|---|---|---|
| Vietnam | 1 | 1.000 | 5 | 5 | 2 | 7 |
| Philippines | 2 | 0.753 | 4 | 4 | 66 | 13 |
| Ukraine | 3 | 0.694 | 6 | 6 | 39 | 10 |
| India | 4 | 0.663 | 1 | 1 | 82 | 1 |
| United States | 5 | 0.653 | 3 | 3 | 111 | 3 |
| Pakistan | 6 | 0.609 | 10 | 10 | 50 | 22 |
| Brazil | 7 | 0.562 | 7 | 7 | 113 | 8 |
| Thailand | 8 | 0.560 | 12 | 12 | 61 | 5 |
| Russia | 9 | 0.541 | 8 | 8 | 109 | 11 |
| China | 10 | 0.535 | 2 | 2 | 144 | 6 |
| Nigeria | 11 | 0.521 | 18 | 18 | 17 | 20 |
| Turkey | 12 | 0.519 | 9 | 9 | 121 | 19 |

## நாட்டின் சிறந்த உயிரியல் பூங்கா




- மேற்கு வங்க மாநிலத்தின் டார்ஜிலிங்கில் உள்ள பத்மஜா நாயுடு இமயமலை விலங்கியல் பூங்காவானது நாட்டிலேயே சிறந்த உயிரியல் பூங்காவாக தேர்வு செய்யப் பட்டுள்ளது.

- நாடு முழுவதும் சுமார் 150 உயிரியல் பூங்காக்கள் உள்ளன.
- கொல்கத்தாவின் அலிப்பூர் விலங்கியல் பூங்கா நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது.
- இந்தப் பட்டியலில் சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.
- அதைத் தொடர்ந்து கர்நாடகாவின் மைசூரில் உள்ள ஸ்ரீ சாம்ராஜேந்திரா விலங்கியல் பூங்கா இடம் பெற்றுள்ளது.

## உலகப் புதைபடிவ எரிபொருள்கள் பதிவேடு

- உலகப் புதைபடிவ எரிபொருள்கள் பதிவேடு என்பது புதைபடிவ எரிபொருள்களின் இருப்பு, உற்பத்தி மற்றும் உமிழ்வு பற்றிய உலகின் முதல் பொது தரவுத் தளமாகும்.
- உலகப் புதைபடிவ எரிபொருள்கள் பதிவேடு என்பது உலகெங்கிலும் உள்ள புதைபடிவ எரிபொருட்களைக் கண்காணிக்கும் "முதல் முழுமையான வெளிப்படையான" பொது தரவுத் தளமாகும்.
- இது கார்பன் கண்காணிப்பு மற்றும் உலக ஆற்றல் கண்காணிப்பு அமைப்பு ஆகிய அமைப்புகளால் தொடங்கப்பட்டது.
- செப்டம்பர் 13 ஆம் தேதியன்று நியூயார்க் நகரில் தொடங்கவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் மாநாடு மற்றும் COP27 ஆகிய இரண்டு முக்கியமான சர்வதேச பருவநிலைப் பேச்சுவார்த்தைகளுடன் ஒத்துப் போகும் வகையில் இது வெளியிடப் பட்டது.
- இது நவம்பர் மாதம் எகிப்தின் ஷர்ம் எல்-ஷேக் நகரில் ஏற்பாடு செய்யப்பட உள்ளது.
- 89 நாடுகளில் உள்ள 50,000 க்கும் மேற்பட்ட எண்ணெய், எரிவாயு மற்றும் நிலக்கரி தளங்களின் தரவுகள் இந்த பதிவேடுகளில் இடம் பெற்றுள்ளன.
- இது உலக உற்பத்தியில் 75 சதவீதம் ஆகும்.





## நிஜாமின் வாள்

- 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஐதராபாத்தில் ஒரு ஆங்கிலேயத் தளபதியிடம் விற்கப்பட்ட 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு பாரம்பரிய வாளானது இந்தியாவிற்குத் திரும்பக் கொண்டு வரப்பட உள்ளது.

- 1903 ஆம் ஆண்டில் நடைபெற்ற டெல்லி அல்லது அரசத் தர்பாரில் ஹைதராபாத் நிஜாம் ஆன மஹ்பூப் அலி கான் ஆறாம் ஆசாப் ஜா அவர்களால் (1896-1911) இந்த வாள் காட்சிப் படுத்தப்பட்டது.
- இந்த தல்வார் (வாள்) ஆனது 1905 ஆம் ஆண்டில் மும்பை படைப்பிரிவின் படைத் தளபதி (1903-1907) ஜெனரல் சர் ஆர்க்கிபால்ட் ஹண்டர் என்பவரால் வாங்கப்பட்டது.
- இந்த வாளானது ஹைதராபாத் பிரதமர் மகாராஜா சர் கிஷன் பெர்ஷாத் பகதூர் யாமின் உஸ்-சுல்தானத் என்பவரால் விற்கப்பட்டது.



## தொற்றாத நோய்கள் பற்றிய உலக சுகாதார அமைப்பின் அறிக்கை




- உலக சுகாதார அமைப்பானது 'புலப்படாத எண்ணிக்கைகள் - தொற்றாத நோய்களின் உண்மையான மதிப்பீடு' என்ற ஓர் அறிக்கையை வெளியிட்டது.
- ஒவ்வோர் இரண்டு வினாடிகளிலும், 70 வயதிற்குட்பட்ட ஒருவர் தொற்றாத நோயால் (NCD) உயிரிழக்கிறார்.

- அந்த இறப்புகளில் 86 சதவீதம் குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் நிகழ்கின்றன.
- இந்தியாவில், 2019 ஆம் ஆண்டில் பதிவான மொத்த இறப்புகளில் 66 சதவீதம் தொற்றாத நோயால் ஏற்பட்டவையாகும்.
- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது இதற்காக ஒரு இணையத் தளத்தினையும் தொடங்கி உள்ளது.
- இந்த இணையதளம் ஆனது 194 நாடுகளுக்காக முதன்முறையாக தொற்றாத நோய்களுடன் தொடர்புடைய அனைத்து உலக சுகாதார அமைப்பின் தரவுகளையும் ஒன்றாக இணைக்கிறது.
- 2019 ஆம் ஆண்டில் இந்தியாவில் 60.46 லட்சத்திற்கும் அதிகமானோர் தொற்றாத நோயால் இறந்துள்ளனர்.
- 2019 ஆம் ஆண்டில் இந்தியாவில் பதிவான 25.66 லட்சத்திற்கும் அதிகமான உயிரிழப்புகள் இருதய நோய்களால் ஏற்பட்டுள்ளன.
- 11.46 லட்சம் பேர் நாள்பட்ட சுவாச நோய்களால் இறந்துள்ளனர்.
- இந்தியாவில் புற்றுநோயால் 9.20 லட்சம் நபர்களும், 3.49 லட்சம் பேர் நீரிழிவு நோயினாலும் உயிரிழந்துள்ளனர்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★